வரலாறு

டவரைக் காவற்பெண்டுகள்

T14292
R005D01
T. 14292

தொலைபேசி : 701728

நல்வாழ்த்துக்களுடன்

22 காரட் தங்க நகைகள்
மற்றும்
வெள்ளி ஆபரணங்களுக்கு



தேவி ஜூவல்லர்ஸ் A/C,
மலைவாசல்
38, சின்னக்கடைவீதி,
திருச்சிராப்பள்ளி - 620 002.

"எண்ணுவது உயர்வு"

வரலாறு 6

ஆய்விதழ்

பிப்ருவரி – ஆகஸ்டு 1996

இரா. கலைக்கோவன்
பொறுப்பாசிரியர்

மு. நளினி
அர. அகிலா
உதவி ஆசிரியர்கள்

இரா. கண்ணையன்
மேலாளர்

வெளியிடுவோர்

டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்

48, புத்தூர் நெடுஞ்சாலை, திருச்சிராப்பள்ளி – 620 017.

எண்ணங்களும் எதிர்பார்ப்புகளும்

இந்த இதழ் 1996ஆம் ஆண்டிற்குரிய பிப்ருவரி, ஆகஸ்டு இதழ்களின் ஒருமித்த வடிவாய் வெளிவருகிறது. சென்ற இதழில் விட்டுப்போன பகுதிகள் இவ்விதழில் இடம்பெறுகின்றன. தளிச்சேரிக் கல்வெட்டுக் கட்டுரை பரவலான வரவேற்பு பெற்றிருப்பதால் ராஜராஜீசுவரத்துக் கல்வெட்டுகள் அனைத்தையுமே மறு ஆய்வுக்கு உட்படுத்தும் அவா எழுந்துள்ளது.

வரலாறு நான்காம் இதழ் ஆசிரிய உரையில் குறிப்பிட்டுள்ளதற் கேற்பத் தென்தமிழகக் குடைவரைகளுள் பெரும்பான்மையன ஆய்வுக் குட்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் குன்னத்தூர்க் குடைவரைகளும், திருக்கோளக்குடிக் குடைவரையும் இவ்விதழில் இடம்பெறுகின்றன. இக்குடைவரை ஆய்வுகள் முற்பாண்டியர் கலைத்திறம் அறியப் பேருதவியாய் அமைந்துள்ளன. தென்தமிழகக் குடைவரைச் சிற்பங் களுக்கும் வடதமிழகக் குடைவரைச் சிற்பங்களுக்கும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உள்ளன. இவை குறித்த விரிவான ஆய்வுக்கட்டுரை வரலாறு எட்டாம் இதழில் இடம்பெறும்.

தமிழகத் திருக்கோயில் ஆய்வுகளில் கடந்த பதினைந்து ஆண்டுகளாக ஈடுபட்டு வரும் மைய ஆய்வர்க்குக் கோயில் வளாகங் களில் கிடைத்திருக்கும், கிடைத்துக்கொண்டிருக்கும் அநுபவங்கள் பல்சுவையானவை. அவற்றையெல்லாம் 'வரலாறு' படிப்போருடன் பகிர்ந்துகொள்ள எண்ணியுள்ளோம். அடுத்த இதழில் அநுபவத் தொடர் 'திரும்பிப் பார்க்கிறோம்' என்ற தலைப்பில் தொடங்குகிறது.

மையத்தின் வரலாற்றாய்வுப் பயணம் பல மனித மாணிக்கங் களைச் சந்திக்கவைத்துள்ளது. மனிதநேயம் மிகக் குறைந்துள்ள இந்தக் காலகட்டத்தில் இப்படிப்பட்ட அரியவர்களின் அறிமுகமும் நட்பும் கிடைத்தமைக்காகப் பெருமிதமடைகிறோம். அந்தப் பண்பாளர் களின் அன்புப் பரிமாணங்களை உள்ளடக்கியதே 'உண்டாலம்ம இவ்வுலகம்'. இவ்விதழில் தொடங்கும் இத்தொடர், வரலாறு வாழும்வரை தொடரவேண்டும் என்பது அவா; எதிர்பார்ப்பு.

நான்காம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ள வரலாறு படிப்போரின் அரவணைப்பைப் பெரிதும் விழைகிறது. இதழ் பதிப்பு எத்தகு அரும்பணி என்பதை வரலாற்றின் அன்பர்கள் அறியா தவர்களல்ல. நெடும்பயணத்தை எதிர்நோக்கியிருக்கும் இந்த ஆய்வு மையம் அன்புள்ளம் கொண்டோரின் பரிவான கொடைகளை நம்பிக்கையுடன் எதிர்நோக்கியுள்ளது.

அன்புடன்,
இரா. கலைக்கோவன்.

"துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை."

இந்த இதழில் . . .

பக்கம்

1. புதிய கல்வெட்டுகள்

1.	திருவிசலூர்க் கல்வெட்டுகள்	1
2.	முக்காணிக் கல்வெட்டு	9
3.	திருச்செந்துறைக் கல்வெட்டுகள்	12
4.	மணத்தி சிவன் கோயில் கல்வெட்டுகள்	13
5.	திருக்கோளக்குடி ஊருணிக் கல்வெட்டுகள்	16
6.	ஆதீண்டு குற்றிக் கல்வெட்டுகள்	19
7.	காராளம்மன் கோயில் கல்வெட்டுகள்	22
8.	தீராத்திகுளம் கல்வெட்டு	23

2. விட்டுப்போன தொடர்ச்சிகள்

திருச்சென்னம்பூண்டிக் கல்வெட்டு 24

3. பதிப்பிக்கப்படாத பாடங்கள்

திருக்கோளக்குடிக் கல்வெட்டுகள் 26

4. ஆய்வுக் கட்டுரைகள்

1.	சங்ககாலத் தமிழகத்தில் முதல் அறிவொளி இயக்கம்	44
2.	குன்னத்தூர்க் குடைவரைகள்	55
3.	ஆனந்தரங்கப்பிள்ளையின் இறுதி நாட்களும் புதுச்சேரியின் வீழ்ச்சியும் (1760 – 1761)	73
4.	மகிபாலன்பட்டிக் குடைவரை	82

5. தென்னிந்தியக் காசுகள் புதிய கண்டுபிடிப்புகள் 89

6. கொற்றவைத்தளி 98

7. கரூர் ஆனிலையப்பர் கோயில் ஆவணம் 115

8. குழந்தைப்பலியும் அறிஞர் கருத்துரையும் 118

9. தளிச்சேரிக் கல்வெட்டு வினாக்களும் விளக்கங்களும் 125

10. திருக்கோளக்குடிக் குடைவரையும் கற்றளிகளும் 134

5. ஆய்வுத் தொடர்

தமிழகக் கோயிற் கட்டடக்கலை வரலாறு – 3 169

6. பொதுப்பகுதி

1. பெருமைச் சுவடுகள் 174

2. நூல் மதிப்புரை 178

3. யாவரும் கேளிர் 184

4. அன்புள்ள உங்களுக்கு 188

5. அங்கும் இங்கும் – 1996 195

6. உண்டாலம்ம இவ்வுலகம் 200

7. கட்டுரையாளர்கள் 205

நன்றி

இந்த இதழ் உருவாகப் பல புதிய கல்வெட்டுகள், கட்டுரைகள் தந்துதவிய ஆய்வர்கட்கும் விளம்பரங்கள் தந்துதவிய அருளாளர்கட்கும் அவற்றை வாங்கித்தந்த அன்புள்ளங்களுக்கும் வரலாற்றின் கனிந்த கைகூப்பு.

1. புதிய கல்வெட்டுகள்

1. திருவிசலூர்க் கல்வெட்டுகள்

இரா. லலிதாம்பாள், மு. நளினி

கும்பகோணத்திலிருந்து பூம்புகார் செல்லும் கிளைச் சாலையில் எட்டுக் கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது திருவிசலூர் என்னும் திருவிசநல்லூர். இவ்வூரிலுள்ள சிவயோகநாதசாமி கோயில் திருச்சுற்றுமாளிகையின் தென்புறத்தே சிறையுண்டு கிடக்கும் பிச்சதேவர் கோயிலிலிருந்து படியெடுக்கப்பட்ட பன்னிரண்டு கல்வெட்டுகள் வரலாறு மூன்றாம், ஐந்தாம் இதழ்களில் பதிப்பிக்கப் பட்டுள்ளன. இவ்விதழில் மேலும் ஆறு கல்வெட்டுகள் பதிப்பிக்கப் படுகின்றன. இக்கல்வெட்டுகளைப் படியெடுக்கப் பல்லாற்றானும் உதவிய கோயில் மணியம், சிவாச்சாரியார் ஆகியோர் நன்றிக்குரிய பெருமக்களாவர்.

முதற் கல்வெட்டு

இடம்: பிச்சதேவர் கோயிலின் தெற்குச் சுவர்.

செய்தி: திருவிசலூர்க் கோயில் இறைவனுக்குச் சிறுகாலைச் சந்தியின் போது மந்திர போனகம் படைக்க அரவிந்தன் உத்தமாண்டி பெற்ற பொன்னுக்கு, அவர் மகன் நீறணிந்தான் பொலியூட்டாகத் தந்த பதினாறு காசுகளைக் கோயில் சிவ அந்தணர்கள் பெற்றுக்கொண்டு மந்திர போனகம் படைத்தனர். திருஅமுது, பருப்பு, பயறு, பொரித்த கறி, அடப்பமுது, நெய்யமுது, வெற்றிலை, பாக்கு என்பன மந்திர போனகத்தில் அடங்கியிருந்தன. கல்வெட்டு முற்றுப்பெற்றிருந்தால் கோயில் சார்ந்த மேலும் சில சிவ அந்தணர்களின் பெயர்கள் கிடைத்திருக்கும்.

காலம்: முதற் குலோத்துங்க சோழரின் நாற்பத்தைந்தாம் ஆட்சியாண்டு; கி.பி. 1115.

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவத்திகள் – –

2 சோழ தேவற்கு யாண்டு நாற்ப[த்*]தஞ்சாவது உடையார் திருவிச

இதற்கான கள ஆய்வுகள் திருமதி. ராஜேசுவரி மரைக்காயர் அறக்கட்டளை உதவியுடன் மேற்கொள்ளப்பட்டன.

3 லூ(ர்)ருடைய மஹாதேவர் கோயிலில் அரவிந்தந் உத்தமாண்டி இ

4 த்தேவ[ர்*]க்கு மந்திர போநகம் சந்திராதித்தவர் மந்திரபோந

5 [க] அமுது செய்தருள கடவதாகவும் பொந் கொண்டு பொலியூட்டாக

6 இவன் மகந் நீறணிந்தான் இத்தேவர் கோயிலில் ஒடுக்கிந காசு பதிநாறு

7 இக்காசு பதிநாறும் உபையஞ் செலுத்துகைக்கு சிறுகாலை ஸந்தியில்

8 மந்திர போநகத்துக்கு திருவமுதரிசி இரு நா

9 ழிக்கு நெல்லு ஐஞ்ஞாழியும் பருப்பு இ

10 ரு நாழிக்கு பயறு முந்

11 நாழிக்கு நெல்லு அறு நா

12 ழியும் பொறிக் கறியமு

13 துக்கு மடப்பமுதுக்கும்

14 நெல்லு நாநாழியும் நெ

15 ய்யமுது செவிடரைக்

16 கு நெல்லு இரு நாழியும் அ

17 டைக்காயமுது வெறும்

18 பாக்கு நாலும் வெற்றிலை

19 பதிநாறுக்கு நெல்லு நா

20 ழியும் ஆக நாள் ஒந்றுக்கு

21 நெல்லு பதக்காக இந்நெல்

22 லு பதக்கும் பலிசையா

23 ல் வேண்டு மந்திர போநக

24 த்துக்கு உபையஞ் செலு

25 த்தக் கடவோமாக காசு கொண்டபடி இக்கோயி

26 லில் காணியுடைய சிவ பிராமணந் பாரதாய

27 ந் திருவியலூர் கங்கைக் கொண்டாநேந் கொண்

28 ட காசு இரண்டும் இபாரதாயந் சிவசோகியேந் கொ

29 ண்ட கா[சு*] இரண்டரையு

30 ம் நம்பந் அண்ட நாய

31 கநுக்கு கொண்ட கா

32 சு இரண்டரையும் ஆக கொண்ட காசு[1]

இரண்டாம் கல்வெட்டு

இடம்: பிச்சதேவர் கோயிலின் மேற்குச் சுவர்.

செய்தி: திருவிசலூர்த் திருக்கோயிலுக்குரிய தீர்த்தக் குளத்தின் வடகரையில் நாற்பத்தெண்ணாயிரவன் திருமடத்தை அரவிந்தன் உத்தமாண்டி எடுப்பித்திருந்தார். இம்மடத்தில் அடியவர்கள் இருபதின்மர்க்கு உணவிட வாய்ப்பாக நூற்றைம்பத்திரண்டு காசுகள் ஒதுக்கப்பட்டன. இக்காசுகளின் நித்தப் பொலிசையாகக் காசொன்றுக்கு நாழி நெல் நிர்ணயிக்கப்பட்டது. இதன்படி நூற்றைம்பத்திரண்டு காசுகளுக்கு நாள் பொலிசையாக ஒரு கலனே எழு குறுணி நெல் கிடைத்தது. இதில் மந்திர போனகத்துக்குப் பதக்கு நெல் நீக்கி எஞ்சிய ஒரு கலனே அய்ங்குறுணி நெல் அடியவர்கள் உணவுக்காகத் தரப்பட்டது. இது கொண்டு உணவிடும் பொறுப்பை அண்டநாயக நம்பியும் அவர் மக்களும் வழியினரும் பெற்றனர்.

கோயில் சார்ந்த பல பணியாளர்களின் பட்டியலும் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட காசுகளின் எண்ணிக்கையும் கிடைக்கின்றன. கல்வெட்டு முற்றுப்பெறாமையால் பிற விவரங்களை அறியக்கூட வில்லை.

காலம்: முதற் குலோத்துங்க சோழரின் நாற்பத்தைந்தாம் ஆட்சியாண்டு; கி.பி. 1115.

1 திரிபுவந சக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்
2 துங்க சோழ தேவற்கு யாண்டு நாற்ப[த்*]
3 தஞ்சாவது விருதராஜப$_4$யங்கர வளநாட்
4 டு மண்ணி நாட்டு சோழமார்த்தாண்ட
5 ச் சதுர்வேதிமங்கலத்து [உடையார் திருவிச]
6 லூருடையார் கோயிலில் சொ . . . . . மு[ன்]
7 பு அரவிந்தந் உத்தமாண்டியும் இவன் மக
8 ந் நீறணிந்தாந் அணிக்க நம்பியும் இத்தே
9 வ[ர்*] தீர்[த்*]த குளத்து வடகரையில் இவன் எ
10 டுப்பித்த நாற்பத்தெண்ணாயிரவன் மட
11 த்துக்கு அமுது செய்யும் ஆண்ட[ார்கள் இ]ரு
12 பதி[ன்*]மற்[க்கு] பலிசைக்கு நூற்றைம்ப[த்திரண்டு] இ
13 வைற்றில் மந்திரம் இகாசு நூற்றை[ம்பத்திரண்]
14 டும் காசொந்றுக்கு நித்தப் பலிசை நெல் நாழிய[ாக] நா
15 ளொந்றுக்கு நெல் க[ல*]நே எழு குறுணிய[ாகவும்]
16 மந்திர போநகத்துக்கு

17 நெல்லு பதக்கு நீக்கி நாற்பத்தெண்ணாயிரவ
18 ந் மடத்துக்கு அமுது செய்யும் ஆண்டா[ர்*]கள் இருப
19 தின்மற்கு நெல்லு கலநே அ[ய்*]ங்குறுநியும் இம்மடம்
20 கைக்கொண்டு சந்திராதித்தவற் மேல்வெட்டி அண்டநாய
21 க நம்பியும் இவர் மக்களும் வற்கத்தாரும்
22 மேய் ஊட்டக் கடவாராக இவர் வசம் வி
23 ட்டோம் அரவிந்தந் உத்தமாண்டியும்
24 இவன் மகந் நீறணிந்தாநும் இவ்விரு
25 வோம்ப் போநகத்துக்கு நீக்கிந காசு பதிநா
26 று நீக்கி மடத்துக்கு அமுது செய்யும்
27 ஆண்டா[ர்*]களுக்குக் காசு நூற்றுமுப்பத்தாறு சிவ
28 ப்பிராமணர் மந்திரப் போநகம் உள்ப்படக் கொ
29 ண்ட காசு அறுபத்தாறே முக்காலே யிருமா மு
30 க்காணியும் நிமந்தக்காறரில் [தூ]மணப்
31 பேரில் கொண்ட காசு பதிநேழரையும் திருமெய்கா
32 ப்பாரும் கணக்கரும் குசவரும் கொண்ட காசு ஒந்பதும் உகை
33 ச்சர் மந்திரப் போநகம் உள்படக் கொண்ட காசு பத்தரையும்
34 திருநந்தவந[ங்*]கட[வாரும்] திருப்பதி
35 யம் பாடுவாரும் உள்ப்பட கொண்ட காசு [முப்]பத்திரண்டும் திருச்சிற்றம்
36 பலநல்லூர் வெள்ளாளரும் உத்தமசோழ மங்கலத்து வெள்ளாள
37 ரும் உள்ப்படக் கொண்ட காசு பதிநாறே மூந்று மா முக்காணியும் ஆ
38 கக் காசு நூற்றம்பத்திரண்டு அபிம்மாநி ராமன் வெண்கலம் உரு இருபது[2]

மூன்றாம் கல்வெட்டு

இடம்: பிச்சதேவர் கோயிலின் தெற்குச் சுவர்.

செய்தி: திருவிசலூர்க் கோயிலில் விளக்கெரிக்க அபைய தாவளன் வகை செய்தார். எதற்காக என்பது விளங்கவில்லை.

காலம்: கி.பி. பத்தாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஶ்ரீ கோராஜகேசரிபன்மற்க்கு யாண்டு 9தாவது வ
2 டகரைத் தேவதான ப்₃ரஹ்மதே₃யம் அமனிநாராயணச் ச
3 துர்வ்வேதிமங்கலத்து திருவிசலூர் பெருமா

4 ளுக்கு அபை$_4$யதாவளன் உடையகப்பட [கழ.

5 யந்து] போக அவனுக்காக அபை$_4$யதாவளன்

6 வைத்த விளக்கு ஒன்று

நான்காம் கல்வெட்டு

இடம்: மேலது.

செய்தி: வைப்பூரைச் சேர்ந்த கவாலி ஒலோகநாதனான கங்கை கொண்ட சோழ மூவேந்த வேளாரின் மனைவி மாறக்கலி திருவிசலூர் மகாதேவர் திருக்கோயிலில் நந்தாவிளக்கொன்று எரிப்பதற்காக நாற்பத்து நான்கு காசுகள் கொடையளித்தார். இக்கொடைத் தொகையைப் பெற்ற சிவ அந்தணர் ஐவர் இதன் பலிசை (வட்டி) கொண்டு கோயிலில் விளக்கெரிக்க ஒப்பினர். தொடக்கப்பகுதிகள் எத்தனை வரிகள் என்றுகூட அறிந்துகொள்ள இயலாத அளவிற்கு மெய்க்கீர்த்திப்பகுதி சிதைந்துள்ளது. அதனால் படிக்க முடிந்த வரியிலிருந்து எண்ணிடப்பட்டுள்ளது.

காலம்: வீரராசேந்திரரின் ஆட்சிக் காலம்; கி.பி. 1063 – 1070

1 கருங்கலி கடிந்து வெண்குடை நிழல் வீரஸிம்ஹா[ஸனத்து வீற்றி]

2 ருந்தருளிய கோவிராஜகேசரிபந்மரான உடையார் ஸ்ரீவீரராஜேந்திர [சோழ தேவர்]

3 க்கு யாண்டு . . ஆவது வடகரை ராஜாதிராஜ வளநாட்டு மண்ணி நாட்டு

4 சோழமார்த்தாண்ட சருப்பேதிமங்கலத்து திருவிசலூர் . . . . .

5–7 – –

8 பாரதாயன் – – நைவோம் கூடி க்ஷத்ரி[ய*]சி

9 காமணி வளநாட்டு வைப்பூருடையாந் கவாலி ஒலோக நாதநாந கங்கை கொண்ட சோழ மூ

10 வேந்த வேளாந் அகமுடையாள் உடையாந் மாறக்கலி . . . . . திருவிசலூருடைய மஹாதேவர்

11 க்குச் சந்த்ராதித்தவல் விளக்கு எரிக்க கடவோமாகக் கொண்ட 44 இவற்றில் புருஷோத்த[ம*]ந்

12 மறைக்காடநேந் இக்கோயிலில் நாந் பிறந்துடைய நாள் கெம ஒற்றி வைத்து கொண்ட திருநொ

13 ந்தாவிளக்கு காலே அரைக்காலுக்கு கொண்ட காசு 16 [நாரா]யணந் முடிகொண்டாநே நாந் பிறந்து

14 டைய நாள் கெம ஒற்றி வைத்துக் கொண்ட விளக்கு காலுக்கு கொண்ட காசு 11ம் காளி இளையா

15 நேந் நாந் பிறந்துடைய நாள் – – கொண்ட விளக்கு அரைக்காலுக்கு கொண்ட காசு

16 5 ½ அடிகள் நத்தாறியேன் நாந் பிறந்துடைய நாள் – – கொண்ட விள[க்*]கு அரைக்கா

17 லுக்கு கொண்ட – –

18 – –

19 – – க்கு கொண்ட காசு 5 ½ம் ஆக பேர் 5 நல்விளக்கு 1க்கு கொண்ட காசு 4

20 4 இக்காசு நாற்பத்து நாலும் கொண்டு இக்காசிநால் வந்த பலிசைக்கு செலவாக நித்த ஆதித்தநா

21 ல் வரக் . . . . யால் வந்த திருநொந்தாவிளக்கு 1மும் சந்த்ராதித்தவல் எரிப்பதற்கு இக்கோயிலி

22 ல் இந்த ஒற்றி[யால்] வந்த நான் கொண்ட . . இவ்விளக்கு எரித்து திரியும் இட்டு இவர்கள் குத்திவிள[க்கு*]

23 எரிக்க கடவோமாகவும் இக்காசு நாற்பத்து நாலும் கொண்டு இந்நிமந்தம் செய்து கு[டு*]த்தோம்

24 இவ்வைப்பூருடையான் கபாலி ஒலோகநாதநாந கங்கை கொண்ட சோழ மூவேந்த வேளாநுக்கு

25 இந்த சிவப்$_3$ராஹ்மணர் புருஷோத்தமந் மறைக்காடந் நாராயணந் முடிகொ[ண்*]டாநும் காளி இ

26 ளையாநும் . . . . கூத்தாடியும் இவந் தம்பி அடிகள் செல்வநும் இவ்வநைவோம் நாங்கள்

27 விளக்கெரி . . . எண்ணை இதே$_3$வகந்மிகள் வசமும் ஸ்ரீமாயேச்$_0$வரரும் காண அட்டி தே$_3$வர்கந்மி

28 கள் எழுத் . . . . பிரிதியும் தர கொள்ள கடவோமாகவும் இது முட்டில் இக்கோயிலில் லோ

29 க – – யேச்$_0$வரருமேக் காத்தும் தண்டியும் தண்டிக் கொண்டும் அட்டுவிக்க கடவா

30 ர்களாகவும் தாங்கள் இட்ட குத்திவிளக்கு 1 நிறை 100 [பலம்][3] இப்படிக்கு பிரமாணம் செய்து குடுத்தோம் இவ்வநைவோம் இது பந்மாஹேச்$_0$வர ரக்ஷை

ஐந்தாம் கல்வெட்டு

இடம்: மேலது.

செய்தி: கங்காதிரன் ஆடவல்லானான ஆண்டநாயக சாக்கை, சதிரசிவன் பேரரியான் நாங்கூர் சாக்கை ஆகிய இருவர்க்கும் திருவிசலூர்க் கோயிலில் மாசித் திருவாதிரை விழாவில் இரண்டு

அங்கமாடவும் வைகாசித் திருநாளில் நான்கு அங்கமாடவும் நிலமும் மனையும் இறையிலிக் காணியாகத் தரப்பட்டன. இந்நிலம் கோயிலின் உவச்சக் காணியாக இருந்து, உவச்சர் பணி தொடராது போனமையில் இறைவன் நிலமாக மாறியதைக் கல்வெட்டு சுட்டுகிறது. கல்வெட்டு தொடர்ச்சியின்றி இருப்பதால் இவ்விரு சாக்கைகளும் ஆடிய கூத்து எது என்பது தெரியவில்லை. கூத்தாடுவார் ஒப்பனைக்கும் ஆட்டத்திற்கான இசைக்கும் 'இன்னின்னவை' தரவேண்டும் என்று கோயில் ஸ்ரீகார்யத்திற்கு சபை ஆணையிட்டிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். ஆடும் ஓரங்கத்துக்கு மை எண்ணெய் நாழியும் பூசும் மாவுக்கென அரிசி நாழியும் மஞ்சள் ஐந்து பலமும் வண்ணார் புடவையும் தரப்பட்டதுடன் இசைக்குக் குடமுழாவும் கோயிலாரால் தரப்பட்டது. குடமுழா இடம்பெறும் முதற் கல்வெட்டாக இதைக் கருதலாம். சாக்கையர் ஆடிய கூத்திற்குக் குடமுழா இசைக்கப்பட்டமை இதனால் புலனாகும்.

காலம்: முதல் இராசேந்திரசோழரின் இருபத்து நான்காம் ஆட்சியாண்டு; கி.பி. 1036.

1–20 திருமன்னி வளர என்று தொடங்கும் மெய்க்கீர்த்திப் பகுதி மிகவும் சிதைந்துள்ளது.

21 – – மாப்பெருந் தண்டால் கொண்[ட*] கோப்பரகேசரிபந்மராந உடை[யார்*] ஸ்ரீராஜேந்த்ரசோழ தேவர்க்கு யாண்டு 24

22 – – மண்ணி நாட்டு சோழமாத்தாண்ட சருப்பேதிமங்கலத்து மஹாஸபை$_4$யோம் இயாட்டை இஷப$_4$ நாயிற்று வெ[ள்ளிக் கிழமை] பெற்ற மூலத்திநான்று நம்மூர் திருவிசலூர் உடையார் திருமுற்றத்தே கூட்ட குறைவற கூடி இருன்து சாக்கை கங்காதிரன் ஆடவல்லா[ந்*] ஆந ஆண்டநாயகச் சாக்கைக்கும் சதிரசிவன் பேரரியாந் நாங்கூர் சாக்கைக்கும் பணிபணியால் பணித்து ஸபா$_4$நியோக$_3$ம் குடுத்த பரிசாவது நம்

23 – – டையார்க்கு முன்பு சாக்கை கூத்து ஆடி அரு[ளு*]ம் நிவந்தம் செதிலாமையில் நம்முடையார்க்கு ஸபை$_4$யோம் இதே$_3$வர் பண்டாரத் – – – கொண்டு போ[கக்] கடவ மாசி திருவாதிரை திருவிழாவில் இரண்டு அங்[க*]ம் ஆட கடவாராகவும் வைகாசி திருநாள் நாலு அங்கமாட கடவாராகவும் இப்பரிசு ஆண்டுதோறும் ஆட கடவார்க் காணியாக இவர்களுக்கு குடுத்த நிலமாவது இதே$_3$வர் நிலங்கள்ளில் முன்பு உவச்ச[ர்*]க்கு இட்ட இஉவச்ச

24 கள் கொட்டாதே முட்ட விட்டு அனுப$_4$வமி[ன்*]றியே தே$_3$வர் அனுப$_4$விக்கிற நிலம் நித்தவிநோத வதிக்கு கிழக்கு அருமொழிதேவ வாக்காலுக்கு தெக்கு முதல் கண்ணாற்று நாலாஞ் சதுரத்து நிலம் அரையும் ச$_0$ரஸ்வதி வதிக்கு கிழக்கு

அருமொழிதேவ வாக்காலுக்கு தெக்கு அஞ்ஞாங் கண்ணாற்றும் ஆறாம் கண்ணாற்றும் நிலம் எழுமாவரையும் ஆக நிலம் முக்கா

25 லே அரைக்கால் இநிலம் முக்காலே – – – இதன்நால் திருஅலகியான் திரு . ளிவன் தமக்கை நிலம் இவர்கள்ளே இறைஇலி அனுப4விக்க பெறுவாராகவும் – – – குடுக்க கட_வோமாகவும் இவர்கள்ளுக்கு குடிஇருக்க காணியாக இட்ட மநையாவது திருமுற்றத்தின் தென்பக்கல் பிச்சதேவர் அறுமாவரை வட . . நில[த்தில்] வந்தொண்டந் இருந்து போந மனையும் மனைப் ப(ட்ட)

26 டப்பும் இந்நில[த்*]தி நின்ற தெங்கும் இவகளே அனு – – – வார்கள் ஆகவும் இவங்கம் ஆ[று*]ம் ஆடும் இடத்து அங்கத்தால் மையி எ[ண்*]ணை நாழியும் மாவுக்கு அரிசி நாழியும் மஞ்சள் ஐபலமு[ம்*] வண்ணார் புடவையும் குடமிழாவும் தே3வர் பண்டாரத்திலே அவ்வாண்டு சிகாரி[ய*]ம் செ[ய்*]வாரே இடக் கடவாராகவும் இப்பரிசு ஆறங்க[ம்*] ஆடி இந்நிலமும் இம்மநையும் சந்திராதிதவலம் இவர்கள்ளும் அனுவயதாரும் இறைஇலியே அனுப4விக்க பெறுவார்கள்ளாக பணிபணியால் பணித்து ஸபா4நி யோக3ம் குடுத்தோம் மஹாஸ[பை*]ப4

27 யாரும் இப்பரிசு ஸ[பை*]ப4இல் நின்று பணி – – – சேரி குரவசரி பொந்விலிப்பட்ட சோமாசியார் பணியால் கருணாகர பிரியன் எழுத்து பல மாஹேச்0வர ரக்ஷை

ஆறாம் கல்வெட்டு

இடம்: பிச்சதேவர் கோயிலின் வடக்குத் தாங்குதளம்.

செய்தி: எதிர்மேற்றி கண்ட பேரரையன் திருவிசலூர் இறைவன் திருமுன் நெய் விளக்கு ஒன்று எரிக்கச் செய்தார்.

காலம்: கி.பி. பத்தாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேஸரிபன்மக்கு யாண்டு 14 ஆவது வடகரை தேவதான ப்3ரஹ்மதே3யம் அமனி நாராயண சதுர்வ்வேதி – – – – பெருமாளுக்கு இ – –

2 தியூர் புழுதியூருடையான் திருவிசலூரன் ஸூர்ய்யந் எதிர்மேற்றி கண்ட பேர்ரரையன் சந்த்ராதி3ச்சவற் எரிய வைத்த நெய் விளக்கு ஒன்று இவூர் மஹாஸபை4யார் ரக்ஷை

அடிக்குறிப்புகள்

1. கல்வெட்டு முற்றுப்பெறவில்லை.
2. மேலது.
3. பலம் குறியீட்டில் தரப்பட்டுள்ளது.

2. முக்காணிக் கல்வெட்டு

எஸ். இராமச்சந்திரன்

இடம்: வ. உ. சிதம்பரனார் மாவட்டம், திருவைகுண்டம் வட்டத்தில் திருச்செந்தூர் தூத்துக்குடி சாலையையொட்டி முக்காணி என்ற ஊர் அமைந்துள்ளது. இவ்வூரின் வட எல்லையில் கச்சிநாச்சி தர்க்கா என வழங்கப்படும் தர்க்கா ஒன்று உள்ளது.[1] இந்த தர்க்காவின் முன் இரு தூண்கள் நிறுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு தூணின் சதுரப் பகுதியில் நான்கு புறங்களிலும் கல்வெட்டு பொறிக்கப் பட்டுள்ளது. தகவல் தந்தவர் குமரி மாவட்டத் தொல்லியல் அலுவலர் திரு.தே.கோபாலன். கல்வெட்டில் பல வரிகள் தேய்ந்து அழிந்துள்ளன.

செய்தி: இக்கல்வெட்டுத் தூண், முக்காணிக்கு வடகிழக்கே 35 கி.மீ. தொலைவிலமைந்துள்ள பட்டினமருதூர் என்ற ஊரைச் சேர்ந்ததாகும். இரண்டாம் சடையவர்மர் குலசேகர பாண்டியரின் இருபதாம் ஆட்சியாண்டில் (கி.பி. 1257) பட்டினமருதூர் நகரத்தார் அவ்வூரில் ஆள்வுடைய பிள்ளையாரை எழுந்தருளுவித்துக் கோயில் எழுப்பியுள்ளனர். ஆள்வுடைய பிள்ளையார் என்பது திருஞானசம்பந்தரைக் குறிக்கும்.[2] அரசரின் பதின்மூன்றாவது ஆட்சி யாண்டின்போது (கி.பி. 1250) நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி பற்றி ஆள்வுடைய பிள்ளையார் திருமுன்பு விசாரித்து நடவடிக்கை மேற்கொண்டனர் என ஊகிக்கமுடிகிறது. திருஞானசம்பந்தர் வாது செய்த வாரணம். ஆகையால், அவர் திருமுன்பில் வழக்கு விசாரணை நடந்தது போலும். வேளான் உய்யவந்தான் என்பவர்க்கும் வேளான் சங்கனார் என்பவர்க்குமிடையில் ஏற்பட்ட இவ்வழக்கு பற்றிய முழு விபரம் கிடைக்காத வண்ணம் எழுத்துகள் தேய்ந்து அழிந்துவிட்டன. வேளான் சங்கனார்க்கு அந்தரம் அற்றமையில் என்ற தொடர் கல்வெட்டில் காணப்படுகிறது. அந்தரம் என்பது, சட்டப்படியான வாரிசுரிமையை அடைவதற்குச் செலுத்தவேண்டிய வரி என்ற பொருளில் திருவிதாங்கூர் கல்வெட்டுகளில் பயன்படுத்தப் பட்டுள்ளது.[3] எனவே, வேளான் சங்கனார்க்கு வாரிசு இல்லாமற் போனதே இவ்வாறு குறிப்பிடப்படுகிறதெனலாம். இந்நடவடிக்கை களுக்குச் சாட்சியாகப் பதினெண்விஷயம், பிள்ளை வலங்கை மீகாமி மடிகை, வீரக்கொடியார் ஆகிய குழுவினர் குறிப்பிடப்படுகின்றனர். வீரக்கொடி வேளாளர் எனத் தற்போது வழங்கப்படும் பண்டாரம் இனத்தவரையே, ‘வீரக்கொடியார்’ குறிப்பிடுகிறது போலும். படையெடுப்பு, அணிவகுப்பு போன்றவற்றின் போது கொடியேந்திச் செல்வது இவர்கள் பணியெனலாம்.

10

காலம்: இரண்டாம் சடையவர்மர் குலசேகர பாண்டியரின் இருபதாம் ஆட்சியாண்டு; கி.பி. 1257.

1 [கோ]ச்சடையபன்மரான திரிபுவ[ன*] சக்கரவத்திகள் ஸிரி குலசேகர தே

2 [தவற்]கு யா[ண்*]டு பதினைஞ்சி னெதிர் நான்காமாண்டி னெதிராமாண்டு சூரங்குடி நாட்டுப் ப

3 ட்டினமருதூரான கேரளாந்தகபுரத்து நகரத்தோம் ஆள்வுடை

4 ய பிள்ளையாரை எழுந்தருழிவித்து பழமயாக எங்கள் நகரத்தில் ஒன்

5 பதாவதினெதிர் நாலாமாண்டு புங்க — — கீழைத் தெருவில் வே

6 ளான் ஊயவந்தேன் கல்லேறுபட்டு — — மேல தெருவில் வேளா

7 ன் சங்கனாரை அயி — — வேளான் சங்கனார் சத்தியஞ் செ

8 இது வைத்தானாகில் [பிளை]யானென்றும் — — யாக இட்ட இடத்தி

9 ல் வேளான் சங்கனாரை சத்தியங் காணாமல் வேளான் சங்கனார்[க்*]கு அந்தர

10 ம் அத்தமையில் வேளான் சங்கனா — — ஆழுடையார் [துவ]ரெடுத்து கூடியடத்தில் ந

11 கரமு[ம்] எங்களுக்கிப்ப — — பதினெண்விசையமும் பிள்ளை

12 வலங்கை மீகாமி மடிகையும் தேசி — — வீரக்கொடி

13 யாரும் ஆமஞ்சந — — எறிவீரபட்டினத்துக்கு மேலை

14 கீழை தெருவிற்பட்ட — — கீழை மேலை [இரு] தெருவிற்ப

15 ட்ட வேளான் சங்க — — ஆதிவேளான் — — சங்கனாரை சத்தியங் கா

16 ணாமல் — — அந்தரம் — —

அடிக்குறிப்புகள்

1. கச்சிநாச்சி என்பவர் ஓர் இஸ்லாமியப் பெண்மணியாவார். இவரது பெயரில், கச்சிநாச்சி விளை என்ற ஊர் திருச்செந்தூர் வட்டத்தில் உள்ளது. அவ்வூர் தற்போது "கச்சிநா விளை" என வழங்குகிறது. கச்சிக்கு வாச்சான், கச்சி கொண்ட பாண்டியன் என்பன முதல் சடையவர்மர் சுந்தரபாண்டியரின் (கி.பி. 1250–84) பட்டப் பெயர் களாகும்.
2. இரண்டாம் சடையவர்மர் குலசேகரர் ஆட்சியின் போது மதுரையில் திருஞானசம்பந்தர் மடம் செல்வாக்குடன் திகழ்ந்தது என்றும் இவ் அரசரது தம்பியான இரண்டாம் மாறவர்மர் சுந்தரபாண்டியர் ஆட்சியின் போது திருநெல்வேலி மேலக் கானக்கரையில் திருஞானசம்பந்தர்க்குக் கோயில் எடுக்கப்பட்டது என்றும் கல்வெட்டுகள் மூலம் தெரிய வருகின்றன (என். சேதுராமன், பாண்டியர் வரலாறு, ப.110).
3. T.A.S. Vol.I, p. 77, f.n.18.

ஞாயிறும் நெருஞ்சியும்

சூரியனைப் பார்த்து நிற்பதாலேயே சூரியகாந்தி என்று பெயர் பெற்ற மலரைப் போல, நெருஞ்சிப் பூவும் கதிரவனுக்கு அணுக்கமாம். சங்கப் பாடல்கள் இந்த அறிவியல் உண்மையை எடுத்துரைக்கின்றன.

'தலைவனின் பரத்தையர், முழவொலிக்கும் துணங்கைக் கூத்து ஆடப்படும் விழாக்காலத்தே சிறப்புடையார் போல் செல்லுதல், நான் அங்கு வராமையினால்தான். நான் மட்டும் அங்கு வருவேனாயின் ஞாயிற்றின் போக்கை நோக்கிச் சுழலும் நெருஞ்சிப் பூப்போல அப்பரத்தையர்களை, நான் செல்லுமிடமெல்லாம் என்னோடு திரியுமாறு செய்வேன். அவ்வாறு செய்யேனாயின், சோழரின் வலிய விற்படை காக்கும் வல்லத்தின் புறத்தேயுள்ள காவற்காட்டை வந்தடைந்த ஆரியப்படை, சோழரிடம் தோல்வியுற்றுச் சிதைந்தது போல என் முன்கை வளைகளும் சிதைந்தொழியட்டும்' என்று சூளுரைக்கும் மருதக் காதலி (அகம் 336) ஓர் அறிவியல் உண்மையையும், ஒரு வரலாற்று நிகழ்வையும், நிலைத்துப்போன சங்கப் பழக்கமொன்றையும் எத்தனை நயமாகக் காதல் சினத்தினூடே கட்டவிழ்த்து விடுகிறாள்!

'தலைவன் கருத்துப்படியே இயங்குபவள் நான்' என்பதைத் தோழிக்குக் குறிப்பால் உணர்த்த விழைந்த மற்றொரு காதலி (குறுந். 315), 'தோழி, தலைவர் ஞாயிறு போன்றவர். என் தோள்களோ அந்த ஞாயிற்றையே நோக்கி நிற்கும் நெருஞ்சி மலர்களைப் போன்றவை' என்றாள். தலைவியின் நெஞ்சுணர்ந்தாள் தோழி. நமக்கோ அறிவியல் செய்தி.

3. திருச்செந்துறைக் கல்வெட்டுகள்

அர. அகிலா

திருச்சிராப்பள்ளி கரூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள சிற்றூர் திருச்செந்துறை (ஜீயபுரம்). இவ்வூர்ப் பேருந்து நிறுத்தத்தின் அருகே உள்ள சவுக்குப் பிள்ளையார் கோயிலில் திருப்பணி மேற்கொண்டபோது இரண்டு கல்வெட்டுகள் கண்டறியப்பட்டன.

முதற் கல்வெட்டு

இடம்: சவுக்குப் பிள்ளையார் கோயிலின் கருவறை முகப்பில் உள்ள வாயில் மேல்நிலை.

செய்தி: கடித்தமகுப்பி நாயக்கர் மகன் அரிதாசு என்பவரால் பிரமாதி ஆண்டு வைகாசித் திங்கள் இருபத்தியோராம் நாள் இக்கோயில் கட்டப்பட்டது. 'அகண்ட காவிரி தீரத்தில் திருச்செந்துறை' என்ற வரி, காவிரி ஆற்றின் நீரோட்டம் அந்நாளில் எப்படி இருந்தது என்பதையும் கி.பி. 1880 வரை இந்தப் பகுதி திருச்செந்துறை என்றே அறியப்பட்டதையும் உணர்த்துகிறது.

காலம்: கி.பி. 1880.

1 பிறமாதி ௵ வைய்யாசி மீ 21 உ திருசிரபுரம்
2 உ கோட்டையிலிருக்கும் கடித்தமகுப்பி
3 னாயக்கர் குமாரன் அரிதாசு அகண்ட காவேரி
4 தீரத்தில் திருச்செந்துறையில் அரிதாசு [செ*]யிவிச்ச
5 பிள்ளையார் கோவில் சுப்பிறமணியர் பா
6 தம் சதாசேர்வை

இரண்டாம் கல்வெட்டு

இடம்: பிள்ளையார் கோயிலின் முகப்புக் கபோதம்.

செய்தி: இந்தப் பிள்ளையார் கோயிலைக் கட்டிய சிற்பாசிரியர் பழனியப்பன்.

காலம்: கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு.

1 யிந்த
2 கோவி
3 ல் கட்டி
4 னது பளைனியப்பன்

4. மணத்தி சிவன் கோயில் கல்வெட்டுகள்

எஸ். இராமச்சந்திரன்

வ. உ. சிதம்பரனார் மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், தென்திருப்பேரைக்கு அருகிலுள்ள மணத்தி குட்டித் தோட்டத்தை யொட்டி, உடைமுள் மரங்களுக்கிடையில் சிவன் கோயிலொன்று வழிபாடின்றி, இடிபாடாகக் காட்சியளிக்கிறது. இக்கோயிலில் படியெடுக்கப்படாத பல கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

முதற் கல்வெட்டு

இடம்: கோயில் மகாமண்டப நுழைவாயிலின் தென்புறச் சுவர்.

செய்தி: 'திருவழுதி வளநாட்டுக் கற்குறிச்சியான மணத்தியில் நாயனார் இடையாற்றீச்வரமுடைய நாயனார்' என இறைவர் குறிப்பிடப்படுகிறார். கற்குறிச்சி என்ற ஊர் 'கல்லாம்பாறை' என்ற பெயரில் தனி ஊராக அருகில் உள்ளது. தாமிரபரணிக்கும் தேரிக்கால்வாய்க்கும் இடையில் அமைந்த கோயில் என்பதால் இடையாற்றீசுவரம் என வழங்கப்பட்டது போலும். மணத்தி, கேரளப் பகுதியிலிருக்கும் வள்ளுவ நாட்டிலிருந்து இப்பகுதிக்குக் குடியேறிய அதிகாரி (அல்லது அரச குலத்தவர்) ஒருவரின் தேசம் எனக் குறிப்பிடப்படுகிறது. அவ் அதிகாரியிடம், இவ்வூர்த் தொடர்பான பணிகளைக் கவனிக்கும் செயலராக இருந்த மலை மண்டலத்துக் கண்ணனூருடையான் ஸ்ரீகயிலாசமுடையானான வீரமழகிய பாண்டிய தேவன் என்பவர், இக்கோயிலில் சந்தியா தீபம் ஒன்று எரிக்க, இக்கோயிலில் மாதத்தின் முப்பது நாள்களும் பூசைப் பணிபுரியும் உரிமை படைத்த சிவ பிராமணர்களிடம் அரை அச்சும் ஒரு காசும் கொடுத்துள்ளார்.

காலம்: கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோமாறபன்[மர்*] திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்கு யாண்

2 டு 11வதின் எதிர் மூவாமாண்டு திருவழுதி வளநாட்டுக் கற்குறிச்சியான மணத்தியில் நாய

3 னா ரிடையாற்றீச்$_0$வர முடைய நாயனாற்கு உடையார் வள்ளுவ நாடாழ்வான் தேசமாய்

4 இம்மணத்திக்குக் காரியஞ் செய்கிற மலை மண்டலத்துக் கண்ணனூருடையான் ஸ்ரீகயி

5 லாஸமுடையானான வீரமழகிய பாண்டியதேவற்கு இந்நாய னார் கோயிலில் முப்பது வட்

6 டத்து சி$_0$வப்$_4$ராஹ்மணரோம் பிடிபாடு குடுத்த பரிசாவது இந்நாயனாற்கு இவர் வைத்த ஸந்த்$_3$யா

7 தீ$_3$பம் ஒன்று இஸந்த்$_3$யா தீ$_3$பம் ஒந்றுக்கு இவர் பக்கல் இவ்வாட்டை ஆடிமாதங் கொண்ட அச்சு அை

8 ரயும் காசு ஒன்றுங் கொண்டு சந்திராதித்தவரை செலுத்துவோமாகக் கைக்கொண்டோம்

இரண்டாம் கல்வெட்டு

இடம்: மேலது.

செய்தி: பூவணூர்த் திருவாய்க்குலம் என்ற பகுதியைச் சேர்ந்த பழமாடத்தடிகளான பஞ்சவன் பிரம்மாதிராயர், இறைவன் சித்திரை விழாவில் திருமஞ்சனமாடி அருளுவதற்கும் பின் அமுதுபடி முதலான படையல் கொள்வதற்கும் அச்சு ஒன்று வழங்கினார். இதனைப் பெற்றுக்கொண்ட சிவ பிராமணர்கள், ஆண்டு ஒன்றுக்கு இரண்டு கலம் நெல்லுக்கு நிகரான பொருள்களைக் கோயிலுக்கு வழங்க ஒப்புக்கொண்டனர். பஞ்சவன் பிரம்மாதிராயர், "பெருமாள் மருத்[து]ச் சரக்கிடுவாரில்" ஒருவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளார். இவர் அரசருக்குரிய குடும்ப மருத்துவராக இருந்திருக்கலாம்.

காலம்: கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஶ்ரீ கோச்சடையபன்மரான – – தேவற்கு இ

2 ரண்டாவது சித்திரை மாதம் நாயனா[ர்*] இடை – – முப்பது வட்டத்

3 து சி$_0$வப்$_4$ராஹ்மணரோம் இந்நாயனாற்கு சித் – – மஞ்சன மாடியருளுவதுக்கும் அமுதுபடி

4 உள்ளிட்ட விஞ்சனங்களுக்கு பெருமாள் மருத்[து]ச் சரக்கிடுவாரில் பூவணூர் திருவாய்க்குலமுடையான் பழ

5 மாடத்தடிகளான பஞ்சவன் ப்$_4$ரஹ்மாதராயர் இட்ட அச்சு ஒன்று இவ்வச்சு ஒன்றும் நாங்கள் கைக்கொ

6 ண்டு ஆண்டு ஒன்றுக்கு இருகல வரை நெல்லுக்கு நேராக சந்திராதித்தவற் செலுத்துவோமாகக் கல்லி[ல்*] வெட்டி

7 க் குடுத்தோம் இக்கோயிலில் சிவப்$_4$ராஹ்மணரோம்

மூன்றாம் கல்வெட்டு

இடம்: மேலது.

செய்தி: இறைவன் திருப்பள்ளியெழுச்சிக்கான கொடை குறிக்கப்பட்டுள்ளது. கல்வெட்டு தொடர்ச்சியின்றிச் சிதைந்துள்ளது.

காலம்: கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு.

1 ச$_0$)))[1] ஸ்வஸ்திஶ்ரீ [சி]கோமாறபன்மரான திரிபுவனச் சக்கரவ[த்திக]ள் ஶ்ரீசுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு 11வது எதிர் – –

2 நாயனார் இடையாற்றீச்$_0$வர முடைய நாயனார் கோயில் திருப்பள்ளி எழுச்சிக்கு மேட நாயிற்று முதல் தியதியும் பூர்வ பக்ஷ – –

நான்காம் கல்வெட்டு

இடம்: மேலது.

செய்தி: கல்வெட்டு சிதைந்துள்ளது. மிழலைக் கூற்றத்து மேல் கூற்றத்து சிகிபுராந்தகநல்லூர் (சிரீபராந்தகநல்லூர்?) கொற்றங்குடிக் கொற்றக்குடையன் சுந்தரத் தோழனான கொற்றவில்லி என்பவர், கோயிலில் சிவராத்திரி பூசைக்காக ஏற்பாடு செய்தார். சிவ பிராமணர்கள், முன் வழக்கப்படி இதன் வட்டித் தொகையில் பூசையை நிறைவேற்ற உறுதியளித்தனர். கொற்றக்குடையன், கொற்றவில்லி என்ற வழக்குகள் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் பாண்டியர் ஆட்சியில் செல்வாக்குப்பெற்று வளர்ந்துவந்த வாணாதிராயர்களை நினைவூட்டுகின்றன. "சுந்தரத் தோழன்" என்பது வன்தொண்டரின் தோழனான சிவனைக் குறிக்கும்.

காலம்: கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஶ்ரீ கோச்சடையபன்மரான [திரிபுவ]னச் சக்கரவத்திகள் ஶ்ரீவீரபாண்டிய தேவற்க்கு

2 யாண்டு 3வது திருவழுதி வளநாட்டு[க் கற்குறிச்சி]யான மணத்தி நாயனா ரிடையாற்றீசுர முடை

3 யார் கோயிலில் முப்பது வட்டத்து சிவபிரா[ம]ணரோ[ம்*] மிழலைக் கூற்றத்து மேல் கூற்றத்து சிகிபு

4 ராந்தகநல்லூர் கொற்றங்குடிக் கொற்றக்குடையன் சுந்தரத் தோழனா – – கொற்றவில்லி

5 க்கு பிடிபாடு பண்ணிக் குடுத்தோம் யிந்நாயனாற் – – சிவராத்தி[ரி] – – க்கு பொலியூட்டு கொ

6 – – டிக்கு முன்பித்தை படியே யமுதுபடி – – யரிசி கலனே

7 – –

8 யிப்படி செலித்திக் – – [கல்]வெட்டிக் குடுத்தோம் முப்பது வட்

9 டத்துச் சிவப்பிராமணரோம் சந்திராதித்த – – க்கு

அடிக்குறிப்பு

1. இக்குறியீட்டின் பொருள் விளங்கவில்லை.

5. திருக்கோளக்குடி ஊருணிக் கல்வெட்டுகள்

ம. ஜான்சி, கோ. வேணிதேவி, மு. நளினி

பொன்னமராவதியிலிருந்து பதின்மூன்று கிலோமீட்டர் தொலைவில், பூலாங்குறிச்சிக்கும் மிதிலைப்பட்டிக்கும் இடையில் அமைந்துள்ளது திருக்கோளக்குடி. இவ்வூரிலுள்ள அனைத்துக் கோயில்களும் ஊரின் சுற்றுப்புறங்களும் களஆய்வுக்கு உட்படுத்தப் பட்டபோது படியெடுக்கப்படாத கல்வெட்டுகள் பல கிடைத்தன. அவற்றுள் எட்டுக் கல்வெட்டுகள் வரலாறு மூன்றாம் இதழிலும் ஆறு கல்வெட்டுகள் வரலாறு நான்காம் இதழிலும் பதிப்பிக்கப்பெற்றன. இவ்விதழில் மேலும் சில கல்வெட்டுகள் இடம்பெறுகின்றன.

முதற் கல்வெட்டு

இடம்: திருக்கோளக்குடி மலைக்குத் தெற்கிலுள்ள ஊருணியின் படித்துறை.

செய்தி: இங்கு இரண்டு கல்வெட்டுகள் வெட்டப்பட்டுள்ளன. முதற் கல்வெட்டு இவ்வூருணியை ஆண்டார் ஊருணி என்றழைப் பதுடன் இவ்வூருணிக்குக் கல்வாயில் நாட்டுச் சுந்தரபாண்டியபுரத்து நன்னெறி பாண்டி உடையானான திருவேகம்பமுடையான் அழகவிடங்கப்பெருமாள் குளப்புற இறையிலியாக நிலப்பகுதிகளும் கிணறுகளும் தந்த தகவலைத் தருகிறது. இவை மன்னரின் பதினேழாம் ஆட்சியாண்டில் இராசசிங்கமங்கலத்து ஊரவரிடமிருந்து வாங்கப்பட்டன.

காலம்: இரண்டாம் மாறவர்மர் குலசேகரர் ஆகலாம்; கி.பி.1346.

1 ஸ்வஸ்திஸ்ரீ [குலசே]கர தேவற்கு யாண்
2 டு முப்பத்திரண்டாவது கல்வாயில் நாட்
3 டுச் சு$_0$ந்தரபாண்டி[ய]புரத்து நன்நெறி
4 பாண்டி உடையான் திருவேகம்பமுடை
5 டயான் அழகவிடங்கப்பெருமாள் எங்
6 கள் தன்மமா[க*] ஆண்டார் ஊருணிக்கு
7 குளப்புறமாக இரா[ச*]சிங்கமங்கலத்
8 து ஊரவர் பக்கல் முன்னாள்ப் பதிே
9 னழாவது இவ்வூர்ப் பற்றான புறதுற
10 ங் [கொட.றட] வயல் யிறையிலியா
11 க நான் கொண்டு இட்ட பெரியா

இதற்கான களஆய்வுகள் திருமதி. கண்ணம்மாள் இராசமாணிக்கனார் அறக்கட்டளை உதவியுடன் மேற்கொள்ளப்பட்டன.

12 ன் வயக்கலும் கிணறும் சோழன்
13 வயக்கலும் கிணறும் இதன் தெற்
14 கில்த் துடவலும் ஆகத் தடி மூன்
15 றும் கிணறிரண்டும் குளப்புறமா
16 க ஊரஞ்சாதி இறையிலியாக கொண்
17 டு இன்னிலங்களுக்கு இவூரவரை இடுவி
18 த்துத் திருச.மான பளமும் பண்ணிக்
19 குடுத்து இவ்வூரணிக்கும் பெரி
20 யாநேன் அழகவிடங்கப் பெருமா
21 னே பன்மாஹேச்$_0$வர ரக்ஷை

இரண்டாம் கல்வெட்டு

இடம்: மேலது.

செய்தி: இராட்சச ஆண்டு அய்ப்பசித் திங்கள் ஐந்தாம் நாள் வெட்டப்பட்டிருக்கும் இக்கல்வெட்டு திருக்கோளக்குடி நாதருக்கு நாள்தோறும் உதயத்தில் திருமுழுக்காட்டிற்கு ஊருணியிலிருந்து நீரெடுத்துச் செல்ல அறக்கட்டளை நிறுவப்பட்ட தகவலைத் தருகிறது. இத்திருப்பணிக்காக ரங்கநாத நாயக்கரின் காரியகர்த்தரான மலைப்பெருமாள் பிள்ளையவர்களும் திருப்பண்டாரக் காரியத்துக்குக் கடவாரும் முள்ளிக்குடியிலுள்ள செட்டிக்காடு என்னும் நிலத்தை சர்வமானியமாக வழங்கினர்.

காலம்: கி.பி. பதினாறு அல்லது பதினேழாம் நூற்றாண்டாகலாம்.

1 கிராக்கிஷ
2 ௴ அற்பசி பு
3 5 உ ஸ்ரீமத் இர
4 ங்கனாத னாயக்
5 கரையன் காரி
6 யத்துக்கு கத்தரான
7 மலைப்பெருமாள்
8 பிள்ளையவர்களும் ஸ்ரீ
9 பண்டார காரியத்துக்கு
10 கடவாரும் சுவாமி தி
11 ருக்கோழ நாதற்கு அ
12 பிஷேக தவளை[1] தின
13 சரி [வூ]ருணி உதையத்
14 திலே அபிஷேக நெய்
15 வேதியமாக பெற கட்ட
16 ளை[2]யிட முள்ளிக்கு
17 [டி] செட்டிகாடு உள்பட நா
18 ன்கெல்லையும் சறு
19 வமானியமாக சந்
20 திராதித்தவரையும்

மூன்றாம் கல்வெட்டு

இடம்: திருக்கோளக்குடி மலையின் மேற்குப்புற ஊருணிக் கரையிலுள்ள கற்பலகை.

செய்தி: தெலிங்க குலகாலபுரத்துப் பாக்கத்தைச் சேர்ந்த அடைய முத்தித்திருவான சோழப்பர் இந்த ஊருணியை அமைத்தார்.

காலம்: கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டு.

1 – –
2 னாட்டு நகரம்
3 தெலிங்க குல
4 காலபுரத்து பாக்
5 கம் உடையான்
6 அடைய முத்திதிரு
7 வான சோழப்பர்
8 தன்மம் இந்த ஊ
9 ரணி நாம் செய்
10 து அடைய மு
11 த்திதிருவான் உ

அடிக்குறிப்புகள்

1. தவலை அல்லது தவணையாக இருக்கலாம்.
2. கட்டளை என்று படிக்கவும்.

உலமந்து வருகம் வா தோழி

துன்பம் நேர்கையில் வயிற்றில் அடித்துக்கொள்வது சங்கப் பழக்கம் என்பதை முன்பே பார்த்தோம் (வரலாறு 4, பக். 138). ஆலங்குடி வங்கனாரின் அகப்பாடலொன்று (அகம் 106) எப்படி அடித்துக்கொண்டார்கள் என்பதையும் படம்பிடித்துக்காட்டுகிறது.

தலைவனின் பரத்தமையால் இல்லத்தில் பூசல். கணவனையும் பரத்தையையும் வெறுத்துப் பேசினாள் மனைவி. ஒட்டுக் கேட்டவர்கள் பரத்தையிடம் ஓதினர். 'அவளைப் போல் நான் பேசேன்; ஆனால் அதற்காக அமைதி காத்தலும் இல்லை', என்றவள், தோழியை அழைத்து, 'வளைகள் நன்கு ஒலிக்குமாறு கைகளை வீசியபடி, நம்மை ஏசியவள் வீட்டுப்பக்கம் சற்று உலமந்து வருகம் (உலாவி வருவோம்) வா தோழி' என்றாள். 'இது தேவையா?' என்ற தோழி, 'காணாதபோதே சினந்து, பழித்து, நம்மை இழித்தவள், நம் மகிழ்வுலா காணின் என்னாவாள்?' என்றாள்.

'சிறந்த வாட்படையை உடைய பாண்டிய மன்னர் ஈடுபடும் போர்களில் எல்லாம், அவர் பெறும் வெற்றி காரணமாய்ப் பாணர்கள் களிறுகளைப் பரிசாகப் பெறுவர். அப்படிப் பெறுங்கால் மகிழ்வு மிகுதியால் தம்மிடமுள்ள தண்ணுமையை நன்கு அடித்து முழக்குவர். அது போல இவளும் நம் உலா காணப்பொறாது வயிற்றில் அடித்துக் கொண்டு துன்பப்படட்டும்' என்றாள் பரத்தை. எத்தனை நல்லெண்ணம்! இவர்களின் உரிமைச் சண்டையில் நமக்குப் பரிசோ வரலாற்றுச் செய்தியும் சமுதாயப் பழக்கமும்!

6. ஆதீண்டு குற்றிக் கல்வெட்டுகள்

எஸ். இராமச்சந்திரன்

வ.உ.சிதம்பரனார் மாவட்டம், ஒட்டப்பிடாரம், கோவில்பட்டி வட்டங்களில் பல ஊர்களில் சாலையோரங்களிலும் ஊர்ப் பொது இடங்களிலும் ஆதீண்டு குற்றிகள் உள்ளன. இவை பற்றிய வரலாறு இப்பகுதி மக்களுக்குத் தெரியவில்லை. இத்தகைய கற்களை மந்தைக்கல் என மக்கள் குறிப்பிடுகின்றனர். சேலம், தருமபுரி மாவட்டங்களில் இத்தகைய மந்தைக் கற்களை மாடுகளுக்கு வரும் கோமாரி நோய் தீர்வதற்காகவும் இனப்பெருக்கம் ஏற்படுவதற்காகவும் ஆண்டில் ஒரு நாள் மக்கள் வழிபடுவர் என்றும் ஆடு வெட்டி அதன் தலையை இத்தகைய கற்களுக்குக் கீழே புதைப்பர் என்றும் கூறப் படுகிறது. அத்தகைய வழக்கம் இப்பகுதியிலும் இருந்திருக்கவேண்டும் என்பது நீர் வழி கல், நீர் வழிந்த கல், நாக்கு தலை நீர் வழிந்த கல் போன்ற தொடர்களால் தெரியவருகிறது.

இக்கல்வெட்டுகளின் காலம் கி.பி.பதின்மூன்று அல்லது பதினான்காம் நூற்றாண்டு. நிறுவியோர் பெயர்களும் நிறுவப்பட்ட கற்களின் பெயர்களும் கல்வெட்டுகளில் தரப்பட்டுள்ளன.

அ. ஒட்டப்பிடாரம் வட்டக் கல்வெட்டுகள்

1. இடம்: பாஞ்சாலங்குறிச்சி வடக்கு ஆவாரங்காடு பாலையா நாடார் தோட்டம்.

1	சிறுவன் குறுமன்	3	ரம்மன் நீர் வ
2	னான மதுரைய	4	ழி கல்லு

2. இடம்: பாஞ்சாலங்குறிச்சி வடக்கு ஆவாரங்காடு செல்லையா நாடார் தோட்டம்.

1	விரஞ்சான் ரெட்	3	டாமொழிய் பேர
2	டையான கோ	4	ரையர் நீர் வழி கல்லு

3. இடம்: காட்டுநாயக்கன்பட்டி முனியசாமி கோயில் அருகில் பாதையோரத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.

1	ஸ்வஸ்திஸ்ரீ புவன	4	கி பே[ரை*][1] யன் தன்ம
2	உடையான்னா	5	தறி
3	ன ஆவணதியா		

4. இடம்: ஒருமாக்குளம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி எதிரில் சாலையோரத்தில் உடைந்துகிடக்கிறது.

1 கண்ணன்
2 தேவனான க
3 ாஞ்சிபுரங்
4 கொண்ட
5 பாண்டிய
6 தேவன்[2] த
7 ன்மத் தறி

5. இடம்: இளவேலங்கால் பேச்சியம்மன் கோயில் திடல்.

1 முதுகுடி நாட்டு இளம்ப
2 னமான இராசபுரந்தரநல்
3 லூர் திருவாய்ப்பாடிகளில் கு
4 றுமன் குப்பையான மளக்குல
5 மாணிக்க நாடாழ்வான் தன்தது

6. இடம்: மேலது.

1 போந்தை
2 தேவனான
3 தென்னவன்
4 சிகாமணி மூ
5 வேந்த வே
6 ள் நாக்கு
7 தலை நீர் வ
8 ழிந்த கல்

7. இடம்: மேலது.

1 பொந்னு
2 லகனான
3 வெண்
4 பைக்கு
5 டி நாடு
6 கிழவன்
7 தலை நீர்
8 வழிந்த கல்

8. இடம்: இளவேலங்கால் பெருமாள் கோயில் திடல்.

1 [யதுகிரி] கீ
2 ள்கள நாட்டில
3 ரையன் தலை நீர்
4 வழிந்த கல்

9. இடம்: கொத்தாளியிலிருந்து கயத்தாறு செல்லும் பாதைக்கு அருகில்.

1	விசுமல்	4	துகான்னு
2	ல . . மின் இ	5	க்கு ஆசிரியம்[3]
3	நகம் கொந்		

ஆ. கோவில்பட்டி வட்டக் கல்வெட்டுகள்

1. இடம்: கடம்பூர் அக்கிரகாரம் என வழங்கப்படும் பகுதியில் பெருங்கணீசுவரர் ஆலயத்துக்குச் செல்லும் வழியில் நீர்த்தேக்கத் தொட்டியருகில்[4].

1	க[ண்ண]ன்	4	தராயன்
2	மாதனா	5	தன்ம்ம
3	ன வத்	6	த்தறி

2. இடம்: கடம்பூர் பறம்புக்கோட்டை மஞ்சக்குளக் கரையில் கருப்பசாமி கோயிற்பகுதி.

1	ஸ்வஸ்திஸ்ரீ நா	4	கைப் பல்லவ
2	தன் சங்[க*]ன்னா	5	தரையன் தன்
3	ந களத்திருக்	6	மத் தறி

3. இடம்: மேலது.

1	கடம்பி	5	ந் மகன்
2	ல் தேடே	6	வீமப்பிள்
3	வந்திர	7	ளைத் தன்
4	ப்பன்ம	8	மத் தறி

அடிக்குறிப்புகள்

1. ஆவணதியாகி பேரரையன் என்பது பட்டப்பெயராகத் தோன்றுகிறது. ஆவணகாரன் எனக் கல்வெட்டுகளில் கூறப்படும் பதவியோடு தொடர்புடைய பட்டமாகக் கொள்ளலாம்.
2. காஞ்சிபுரங் கொண்ட பாண்டியன் என்பது முதல் சடையவர்மர் சுந்தரபாண்டியரைக் (கி.பி. 1250–84) குறிக்கும். இப்பட்டத்தினை அதிகாரி ஒருவர் கொண்டுள்ளார்.
3. கொந்துகான் என்பவருக்கு பிஸ்மில்லாஹி இர்ரஹ்மான் அல்ரஹீம் என்ற இஸ்லாமிய மறைமொழியே துணை எனப் பொருள்படக்கூடும்.
4. கல்வெட்டுப் பாடத்தின் இருபுறமும் குத்துவிளக்குகளின் வடிவம் பொறிக்கப்பட்டுள்ளது.

7. காராளம்மன் கோயில் கல்வெட்டுகள்

மு.ம. கோபாலன், மு. நளினி

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட உறையூர் பாண்டமங்கலத்தில் உய்யக்கொண்டான் ஆற்றின் கரையில் காரா ளம்மன் கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் வளாகத்திலிருந்து இரண்டு கல்வெட்டுகள் கண்டறியப்பட்டன. தகவல் தந்தவர் திரு. இரா.இராசேந்திரதேவன்.

முதற் கல்வெட்டு

இடம்: கோயிலுக்கு முன்னாலுள்ள படிக்கட்டு.

செய்தி: முகமது இசுலா லெப்பை என்ற அருளாளர் சுமை தாங்கிக் கல்லை நிறுவியுள்ளார். இந்த தர்மத்துக்குத் தீங்கிழைத்த வர்கள் கங்கையாற்றின் கரையில் காராம்பசுவைக் கொன்ற பாவத்திற்கு ஆளாவார்கள் என்று முகமதியப் பெரியவர் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

காலம்: கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டு.

1 – –
2 அற்பாசி மீ 1 உ
3 மம்முது யிசுலா லெ
4 [ல]ப்பைய்காற் சீ
5 மை தாங்கி தற்மம்
6 [இ]ந்[த*] தற்ம்மத்துக்கு
7 ஆறாலும் அச்சு
8 த[ம்] பண்ணினால்
9 காசியிலே கெங்கை
10 [க]யில் காறாம் பசுவை
11 கொண்ண பாவத்தி
12 லே போவாறாகவு
13 ம் யிது

இரண்டாம் கல்வெட்டு

இடம்: மகாமண்டபத் தூண்.

செய்தி: கி.பி. 1834 தை பத்தாம் நாள் பாண்டமங்கலம் தட்சிணாமூர்த்தி கோயிலுக்கு ஆறுகால் மண்டபம் ஒன்று பாண்டமங்கலத்துச் சீனிவாச அய்யங்காரால் எழுப்பித்தரப்பட்டது.

காலம்: கி.பி. 1834

1 சொஸ்த்திஸ்ரீ
2 . யாபப . . சா
3 லிவாக(ா)ன சகா
4 ப்த்தகா 175
5 6 கலியப்பத்தகா 4
6 935 யிதின்
7 மேல் செல்லா நி
8 ண்[ற] செய தை
9 மீ 10 தி பாண்டமங்
10 கலம் தெட்சினாமூற்
11 த்தி சுவாமி கோவி
12 லுக்கு ஆருகாலு மண்
13 டபம் உபயம் பண்
14 ணி வச்சது மேல்ப
15 டி . யூறு வுண்டினி[ய]
16 கோத்திர [மாதி]யனும
17 ய்யங்காற் புத்திரன்
18 சீனிவாசய்யங்க
19 ாற் உபயம் உ

---

8. தீராத்திகுளம் கல்வெட்டு

எஸ். இராமச்சந்திரன்

இடம்: வ.உ.சிதம்பரனார் மாவட்டம், திருவைகுண்டம் வட்டம், சேறைக்குளம் ஊருக்குக் கிழக்கே, தீராத்திகுளம் ஊரின் வடக்கு எல்லையில் இலுப்பைக்குளம் செண்பக விநாயகர் கோயிலுக்கு அருகில், தனியார் ஒருவரின் வயலில் நிறுத்தப்பட்டுள்ள திருவாழிக்கல் தூணில் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு பற்றித் தகவல் தந்தவர் வெட்டுக்குளம் கிராமத்தைச் சேர்ந்த வெட்டும் பெருமாள் என்பவர்.

காலம்: கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டு.

1 நயினார் கள்
2 ளப்பிரான் தி
3 ருவிடைஆட்ட
4 ம் அமுத குணவழ
5 நாடு சிராத் கு
6 ளமான வைகுந்
7 தநாதப் பே(ா)ரே
8 ரி

---

2. விட்டுப்போன தொடர்ச்சிகள்

திருச்சென்னம்பூண்டிக் கல்வெட்டு

திருச்சென்னம்பூண்டித் திருச்சடைமுடி மகாதேவர் திருக்கோயில், கல்வெட்டுகளாலும் சிற்பங்களாலும் புகழ்பெற்ற கோயிலாகும். இங்கிருக்கும் கல்வெட்டுகள் 1901இல் படியெடுக்கப்பட்டுத் தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி ஏழில் பாடங்களுடன் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றுள் 520ஆம் எண்ணிட்டுப் பதிப்பிக்கப் பட்டிருக்கும் கல்வெட்டின் பாடம் பத்து வரிகளுடன் முற்றுப்பெறாமல் நிற்கிறது. கல்வெட்டு மிகவும் சிதைந்திருப்பதாகவும் இறுதியில் சில எழுத்துகள் தேவைப்படுவதாகவும் இக்கல்வெட்டிற்கான அடிக்குறிப்பு தெரிவிக்கிறது.

மைய ஆய்வாளர்கள் இத்திருக்கோயிலில் களஆய்வு மேற் கொண்டபோது பதிப்பிக்கப்பட்டிருக்கும் கல்வெட்டுப் பாடத்தின் விட்டுப்போன தொடர்ச்சியைக் கண்டறிந்தனர். கல்வெட்டுத் தொகுதி குறிப்பிடுவது போல இவை 'சில எழுத்துகள்' அல்ல. ஐந்து வரிகள். இவற்றுள் மூன்று வரிகள் பெரிய அளவின. விட்டுப்போன இத்தொடர்ச்சியின் இணைப்பால் கல்வெட்டின் பாடம் முழுமை யடைந்துள்ளது.

பதிப்பிக்கப்பட்டிருக்கும் 1–10 வரிகள்

1 ஸ்வஸ்திஶ்ரீ மதிரை கொண்ட கோப்பரகேசரிபன்மற்கு யா

2 ண்டு 17 ஆவது இடையாற்று நாட்டுத் திருச்சடைமுடி ம

3 ஹாதே₃வர்க்கு சந்திராதி[த்*]தரளவும் ஒரு முழுத் திருவிளக்கினுக்கு பழுவேட்ட

4 ரையர் மகளார் நம்பிராட்டியார் அருமொழிநங்கையார் பரிவாரம் குணவன்

5 சூரதொங்கி வைத்த பொன் பதின் அறு கழஞ்சு பொன்னாலும்

இப்பகுதிக்கான ஆய்வுப்பணி திருமிகு. தேவமணி ரஃபேல் அறக்கட்டளை உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது.

6 இரவும் பகலும் நொந்தாவிளக்கு எரிவதாகவு[ம்*] திருக்கொ.டிக்கு

7 நம்பன் – – சும் செயிற்றி . . . . தாயன் பரமேசுவரன் ஸூ

8 ர்ய்ய க்3ர – – நெயும் பாலும் த[யிரும் அட்]டி அருள வைத்த பொன்

9 – – ருபதின் கழஞ்சு பொ – – வதா

10 – – ர் சவையோம் – – பொன்னுக்கு விற்றுக்கு

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட அதன் தொடர்ச்சி

11 டு[க்*]கின்ற நிலத்துக் கெல்லை கீழ்பாலெல்லை சிறுவாக்காலு[க்கு*] மேக்கு தென்பாற்க்கெல்லை ஆரிதன் நாராயணன் சாத்தனும் தம்பிமாரும் காசுவன் செட்டி நாகன் நிலத்துக்கு வடக்கும் மேல்பால்க்கெல்லை ஆரிதன் நாகன் நீலகண்டனும் தம்பியும் ஏத்த செ[ய்*]க்கு கிழக்கும் அங்காடி வாக்காலுக்கு கிழக்கும் தெற்கு

12 வடபாற்கெல்லை போர்குடை வாக்காலு[க்கு*] தெற்கும் இவிசைத்த பெருநான்கெல்லையில் அகப்பட்ட நிலம் உண்ணிலம் ஒ[ழிவின்]றி இக்காற் செயும் திருக்கடைமுடிப் பெருமான்நடிகளுக்கு இறையிலியாக செ[ந்*]நீர்வெட்டியும் ஆற்றுக்குலையும் முள்ப[ட்ட எ]ப்பேர்ப்பட்டதும் காத்துக் குடுப்போமா

13 நோம் திருப்பேர் சவையோம் இதற்றிறம்பில் சவையாகிலும் தனித்தனி ஆகிலும் ஐஞ் கழஞ்சு பொன் தண்டப்பட ஒட்டி [குடுத்தோம் சவை]வயோம் இகால் செ[ய்*]இல் குணவன் சூரதொங்கி வைத்த செய் நா[லு*] மா நம்பன் காஞ்சி வைத்த நிலம் காணியும் தாயன் பரமேய்சுவரன் வைத்த நிலம் முக்காணியும்

14 ஆக இச்செய் கால் குணவன் சூரதொங்கி வைத்த நிலை விளக்கு ஒ[ன்றும்] இத்த[ம்ம*]ம் ரக்ஷி – – என் தலை மேலந

15 – – ரகைஷ

---

3. பதிப்பிக்கப்படாத பாடங்கள்

திருக்கோளக்குடிக் கல்வெட்டுகள்

அர. அகிலா, மு. நளினி

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகன் மாவட்டத்தில் மிதிலைப்பட்டிக்கு அருகில் அமைந்துள்ளது திருக்கோளக்குடி. திருப்புத்தூரிலிருந்தும் பொன்னமராவதியிலிருந்தும் இவ்வூருக்குப் பேருந்துகள் உண்டு. இச்சிற்றூரின் மேற்கேயுள்ள குன்றில் முற்பாண்டியர் குடைவரையொன்றும் பிற்பாண்டியரின் கற்றளிகள் சிலவும் அமைந்துள்ளன. இத்தளிகளிலிருந்து 1916இல் எண்பத்து மூன்று கல்வெட்டுகளைப் படியெடுத்துள்ள மைய அரசின் கல்வெட்டுத் துறை அவற்றின் செய்திச் சுருக்கங்களை மட்டுமே வெளியிட்டுள்ளது. இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து இவ்வளாகத்தில் களஆய்வு மேற்கொண்டுவரும் டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம் இதுவரை படியெடுக்கப்படாத புதிய கல்வெட்டுகள் பலவற்றை இக்கோயில் வளாகங்களிலிருந்து கண்டறிந்து அவற்றை வரலாறு இதழ்களில் தொடர்ந்து பதிப்பித்து வந்துள்ளது. இந்த இதழிலும் சில புதிய கல்வெட்டுகளின் பாடங்கள் இடம்பெற்றுள்ளன.

மைய அரசு படியெடுத்துள்ள எண்பத்து மூன்று கல்வெட்டுகளில் பதினெட்டுக் கல்வெட்டுகளின் பாடங்கள் இங்கு இடம்பெறுகின்றன. பிற கல்வெட்டுகள் தொடர்ந்து வரும் இதழ்களில் வெளியிடப்பெறும்.

திருக்கோளக்குடிக் கோயில் வளாகத்தில் ஆய்வுப் பணியாற்ற அழைத்ததுடன், முழு ஒத்துழைப்பும் நல்கி வாழ்த்தி மகிழ்ந்த தமிழ் மாமுனிவர் தவத்திரு அடிகளார் பெருமான் அவர்கட்கும் வணக்கத் திற்குரிய தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்கட்கும் குன்றக்குடித் திருமடத்து அன்பர்கள் திரு.மரு.பரமகுரு, திரு.கோ.சங்கரநாராயணன் ஆகியோர்க்கும் திருக்கோளக்குடிக் கோயில் மெய்காவலர் பெருமக் களுக்கும் உணவளித்து உதவிய சிந்தாமணி அம்மை, உடனிருந்து உதவிய அவர்தம் பேத்தி செல்வி. ராதா ஆகியோர்க்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றி என்றும் உரியது.

இப்பகுதிக்கான களஆய்வுகள் திருமதி. தமிழரசி வேலுசாமி, திருமதி. சிவஅரசி முத்துக்காளத்தி ஆகியோர் இணைந்து அமைத்திருக்கும் திருமதி. கண்ணம்மாள் இராசமாணிக்கனார் அறக்கட்டளை உதவியுடன் மேற்கொள்ளப்பட்டன.

1. கல்வெட்டு எண் (க. எண்): ARE 35 - 1916

இடம்: குடைவரை முகப்புத்தூண்.

செய்தி: முதலியார் திருமடத்திற்குத் தேவையான திருவிளக் கெண்ணை, தயிர், பால் ஆகியவற்றிற்காகும் செலவினங்களுக்காக விக்கிரமசிங்கதேவன் தமக்குரிய கடமை, குடிமை போன்ற வரியினங்களைத் தந்தார். 'கேரளன் தவணை' ஆய்வுக்குரிய தொடர்.

காலம்: முதல் மாறவர்மர் சுந்தரபாண்டியரின் இருபத்தோராம் ஆட்சியாண்டு; கி.பி. 1237.

1 ஸ்வஸ்திஸ்ரீ ஸுந்த$_3$ரபாண்டிய தேவற்கு யாண்டு

2 20 ஆவதின் எதிரிரண்டாவது விக்கிரமசிங்

3 கதேவன் ஒலை முதலியார் திருமடத்துக்கு தி

4 ருவிளக்கெண்ணைக்கும் த[யிர]முது

5 பாலமுதுக்கும் கேரளன் த$_4$வணை[ண போ]

6 ந்த வரிப்படி உள்ள கடமை குடிமைக

7 ளும் குடிக்கலமுட்பட்ட மற்றும் எ[ப்*]

8 பேற்பட்டனவும் – –

9 ச$_0$ஷமாகக் குடுத்தோம் இப்படி கல்லிலும்

10 செம்பிலும் சந்த்$_3$ராதி$_3$த்யவற் செல்வதாகக் கல்

11 லிலும் செம்பிலு[ம்*] வெட்டி[க் கொள்க] இவை

12 வ விக்கிரமசிங்கதேவநெழுத்து இப்ப

13 டிக்குத் தெந்நவதரையன் எழுத்து

14 இப்படிக்கு நகுல நாடாழ்வான் எழுத்து

15 ஸ்ரீமாஹே[ச்$_0$வர ரக்ஷை]க்ஷ

2. க. எண்: 36 – 1916

இடம்: மேலது.

செய்தி: கண்டன் சுந்தரவில்லியான துவாரபதி வேளுவன் இறைவனின் அர்த்தயாம உணவிற்காகத் தம்முடைய சோழ பாண்டிய வளநாட்டுக் கீழ்வகையில் அமைந்த செம்பங்குடியை வரியினங் களோடு அளித்தார். கல்வெட்டறிக்கையில் இவர் பெயர் 'துவராபதி வேளான்' என்றுள்ளது.

காலம்: குலசேகரபாண்டியர்; கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபு$_4$வநச் சக்ரவத்

2 திகள் ஸ்ரீகுலசேகர தே$_3$வற்கு

3 ஒன்பதாவதின்னெதிராம்

4 ஆண்டு சோழபாண்டிய வளனா
5 ட்டு கண்ணமங்கலத்து கண்
6 டன் சுந்தரவில்லியான து
7 வாரபதி வேளுவன்னேந் புறம
8 லைநாட்டு திருக்கோளக்குடி
9 சி$_0$வத$_4$ர்ம்மீச்$_0$வரமுடைய ம
10 ஹாதே$_3$வற்கு என்னுடைய
11 சோழபாண்டிய வளனா[ட்*]டுக் கீழ்வ
12 கையில் செம்பங்குடி சூ[ழ்*]ந்த பெரு
13 னான் கெல்லை உண்ணிலம் ஒழிவிஇந்றி கடமை
14 அந்தராயம் எலவை புதியிதுபடி மற்றும் எப்பேர்பட்டிதும்
15 திருஅத்த$_4$யாமம் திருஅமிதுபடி[க்*]கு சந்த்ராதி$_3$த்யவற் செல்வதா
16 க நீர்வாற்த்து கல்வெட்டி திருசூலகல் நாட்டி குடுத்தேந் கண்டன்

3. க.எண்: 37–1916

இடம்: மேலது.

செய்தி: விக்கிரமசிங்கதேவன், மன்னரின் உடல் நலத்திற்காகத் திருக்கோளக்குடி இடையர் குழுக்கள் சிலவற்றிடமிருந்து தமக்கு வரக்கூடிய இறையினங்களை, இவ்வூர் சிவதர்மீசுவரமுடைய நாயனார் முன் நந்தாவிளக்கெரிக்கவும் இறைவர்க்குப் பால், தயிர் படைக்கவும் அளித்தார். 'நாட்டோபாதி' என்ற இறைச்சொல் ஆராயத்தக்கது.

காலம்: முதல் மாறவர்மர் சுந்தரபாண்டியரின் இருபத்தோராம் ஆட்சியாண்டு; கி.பி. 1237.

1 ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீஸுந்த$_3$ரபா
2 ண்டிய தேவற்கு யாண்
3 டு 20ஆவதினெதிரிரண்டாவது விக்
4 கிரமசிங்கதேவ னோலை திருக்கோளக்குடித் தானத்தா
5 ற்கு தங்களூரில் பழய இ[டை*]டயரில் கேரளந் மாத[வ*]
6 னுள்ளிட்டாரும் கேரளன் பொன்னனுள்ளிட்டா
7 ரும் கேரளன் கேரளன் உள்ளிட்டாரும் கேரளந்
8 பெரியானுள்ளிட்டாரு மூவந் தேவனுள்ளிட்
9 டாரும் முந்பு பிள்ளையார்[க்*]கு இந்த கேரளந் பிள்ளா
10 னுள்ளிட்டாரும் மூவந் எழுவனுள்ளிட்டாரும் இவந் மரும

11 கன் அரட்டனும் உடையார் சி$_0$வத$_4$ர்ம்மீச்$_0$வரமுடைய நாயநாற்
12 கு நமக்கிவர்கள் நாட்டோபாதி யிறுக்கக் கடவ இறை குடிமைக
13 ளும் குடிக்கலமுள்பட மற்றும் எப்பேறப்பட்டனவும் உலகு
14 டைய நாயனார் திருமேனிக்கு நன்றாக திருநுந்தா விள[க்*]கும் தயி
15 ரமுது பாலமுதுக்குமாக குடுத்து இப்படிச் சந்த்ராதி$_3$த்யவற் செல்வதாக
16 க் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்க இவை விக்ரம
17 சிங்கதேவன் எழுத்து இப்படிக்குத் தென்னவதரையந் எழுத்து
18 இப்படிக்கு இவை நகுல நாடாழ்வாந் எழுத்து

4. க. எண்: 38 – 1916

இடம்: மேலது.

செய்தி: காரையூர் கீழை மட சந்தானத்தைச் சேர்ந்த ஒருவர் (பெயரின் முதற் பாதிதான் கிடைத்துள்ளது), தாம் மடப்புற இறையிலியாக அநுபவித்துவரும் சோழபாண்டிய வளநாட்டுக் கீழ்வகை சேர்ந்த குளங்காரை என்னும் பகுதியைத் திருக்கோளக்குடி இறைவர்க்கு இறையிலி திருநாமத்துக்காணியாகத் தந்தார்.

காலம்: முதல் மாறவர்மர் குலசேகரரின் ஏழாம் ஆட்சியாண்டு; கி.பி. 1275.

1 ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவன சக்ரவத்தி
2 கள் எம்மண்டலமுங் கொண்
3 டருளிய குலசேகர தேவ[ற்*]கு
4 யாண்டு ஏழாவது புறமலைநாட்
5 டு திருக்கோளக்குடி உடையார் தி
6 ருக்கோளக்குடி உடைய நாயநார்
7 ஆதிசண்டேச்$_0$வர தேவக[ன்மி*] கேரளசிங்
8 க வளநாட்டு காரையூர் கீழை மட
9 சந்தானம் திருவேதலகி . . . . . .
10 ன் இறையிலி திருநாம[த்*]து காணியும்
11 பலபணி தே[வை*] பரிசாவது சோழ
12 பாண்டிய வளநாட்டு கீழ்வகைய்
13 நான் முன்நாள் . . . . . னாட்டு இறை
14 யிலியாக கொண்டு மடபுறமாக
15 அனுபவித்து வருகிற குளங்காரை

16 பெருநான் கெல்லைக் குள்பட்டந நீ[ர்*]நில

17 மும் ந[ஞ்*]செய் பு[ன்*]செயும் ந[த்*]தமுந் தோ

18 ட்டமும் குளமுங் குளபரி[ப்*]பும் மரமுங் கிணறும் மற்றும்

19 எப்பேற்பட்டதும் நாயனா[ற்*]கு இறையிலி திருநாம[த்*]துக்

20 காணியாக குடு[த்*]தேன் ஆதிசண்டேசுர தேவ[ற்*]கு

5. க. எண்: 39 – 1916

இடம்: மேலது.

செய்தி: திருக்கோளக்குடித் திருக்கோயிலில் பள்ளியறை நாயனார்க்கும் பிள்ளையார்க்கும் நிசதராசன் நிலக்கொடை. கல்வெட்டு சிதைந்திருப்பதாகக் கூறும் கல்வெட்டறிக்கை, கொடையாளியின் பெயரையும் கொடை பெற்ற தெய்வங்களின் பெயர்களையும் தரவில்லை.

காலம்: முதற் குலோத்துங்க சோழரின் பதினான்காம் ஆட்சியாண்டு; கி.பி. 1084.

1 ஸ்வஸ்திஸ்ரீ திருபுவனச் சக்கரவத்

2 திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ

3 தேவற்கு ஆண்டு பதிநா[ல]ாவ

4 து பு[றமலை] நாட்டு திருக்கோள[க்*]கு

5 டி நாயநார் ப[ள்*]ளி அறை நாயநாற்கு

6 திரு – – விட்ட நி

7 லம் . . மாவும் பிள்ளையாற்

8 கு விட்ட நிலம் பத்து மாவும்

9 நிஸதராயநேந் பன்மா[ஹே*]ச்$_0$வர

10 [ர*]க்ஷை

6. க. எண்: 40–1916

இடம்: குடைவரை முகப்பிற்கு முன்னுள்ள வடசுவர்.

செய்தி: சிவதர்மீசுவரமுடைய மகாதேவர்க்குத் தேவதானமாக நிலக்கொடை அளிக்கப்பட்டது.

காலம்: முதற் குலோத்துங்க சோழரின் பதினாறாம்[1] ஆட்சியாண்டு; கி.பி. 1086.

1 ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவநச் சக்ரவத்திகள் ஸ்ரீ கு[லோத்து]

2 ங்க சோழதே$_3$வற்கு யாண்டு 16வது ராஜராஜ [பா]

3 ண்டிநாட்டு [ராஜே]ந்தர சோழ வளநாட்டுப் பு[றமலை]

4 நாட்டுப் பெ[ான்னம]ராபதியில் ராஜேந்தர சோழ . .

5 ன் நிஷதரா – – நாட்டுத் திருக்கோளக்கு . . . .

6 ல் உடைய[ார்] சி$_0$வத$_4$நம்மீச்$_0$வரமுடைய மஹாதே$_3$வற்கு தே

7 வதாநமாகக் . . . . விருதரைய கால்லுக்குக் கிழக் – – – –

8 க் கெல்லை திருக்கோளக்குடிக் குளத்து நீர் – – – –

9 மேற்கும் – – – –

10–27 மிகவும் சிதைந்துள்ளன.

7. க. எண்: 41–1916

இடம்: மேலது, கிழக்குச் சுவர்.

செய்தி: கிரேத, திரேத, துவாபர யுகங்களில் யமன், கும்பபாவா (அகத்தியர்) ஆகியோரால் இக்கோயில் கடவுள் வணங்கப்பட்டார். கல்வெட்டின் பாடம் நான்கு வரிகளில் கிரந்த எழுத்துக்களில் அமைந்துள்ளது.

காலம்: கி.பி. பதினாறாம் நூற்றாண்டு.

8. க. எண்: 42 – 1916

இடம்: மேலது, தென்சுவர்.

செய்தி: இறைவன் திருமேனியொன்று எழுந்தருளுவிக்கப்பட்ட தகவல் கிடைக்கிறது.

காலம்: முதற் குலோத்துங்க சோழரின் பதினான்காம் ஆட்சியாண்டு; கி.பி. 1084.

1 ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபு$_4$வந சக்ரவத்திகள் ஸ்ரீகொ

2 லோத்துங்க சோழ தேவற்கு யாண்டு பதினாலாவ

3 து ராஜராஜப் பாண்டிநாட்டு ராஜேந்த்ர சோழ வளநாட்

4 டு புறமலை [நாட்டுத் திருக்]கோளக்குடி சி$_0$வத$_4$ர்மீச்$_0$வர முடைய மஹா

5 தேவர் – – ருத்$_3$ர ஸ்ரீமாஹேச்$_0$வரரோம் இதேவ

6 – – இத்தே$_3$வரை எழுந்தருளுவித்து

7–10 மிகவும் சிதைந்துள்ளன.

9 க.எண்: 43 – 1916

இடம்: குடைவரைக்குத் தென்புறம் உள்ள பிள்ளையார் திருமுன்.

செய்தி: சிவதர்மீசுவரமுடைய நாயனார்க்குப் பொன்னமரா வதியைச் சேர்ந்த கேரளன் திருக்கொடுங்குன்றமுடையானான நிசத ராஜன் இறையிலித் தேவதானமாக நிலக்கொடை அளித்தார்.

கல்வெட்டறிக்கையில் 'கேரளன்' என்ற சொல் 'கோளன்' எனத் தரப் பட்டுள்ளது.

காலம்: இரண்டாம் இராசாதிராசரின் ஏழாம் ஆட்சியாண்டு; கி.பி. 1170.

1 ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவநச் சக்கரவத்திகள் ஸ்ரீஇராசாதி$_4$ராஜ தேவற்கு

2 யாண்டு ஏழாவது ராஜராஜ பாண்டிநாட்டு ராஜேந்த்ர சோழ

3 வளநாட்டு புறமலைநாட்டு பொந்நமராபதியில் கேரளன்

4 திருகொடு[ங்*]குன்றமுடையாநாந நிஷத$_4$ராஜநேந் இனாட்

5 டு திருகோளகுடி சி$_0$வத$_4$[ம்*]மீச்$_0$வரர் உடைய மஹாதே$_3$வற்

6 கு திருகோளகுடி வயலில் பழைய தேவதாநம் மூன்றதொன்று

7 நீக்கி நின்ற நிலம் அடங்க சூழ்ந்த பெருநாந் கெல்லை உள் அக

8 பட்ட உண்நிலம் ஒழிவின்றியே நீர்வா[ர்*]த்து கல்லுவெட்டி

9 குடு[த்*]தேன் இறையிலி தேவதானமாக திருக்கொடு[ங்*] குன்றமுடை

10 யாநாந நிஷத$_4$ராஜநேந் திருக்கோளகுடி நாயநாற்கு பன்மாஹே

11 ச்$_0$வர ரகைக்ஷ

10. க.எண்: 44–1916

இடம்: மகாமண்டப மேற்குச் சுவர்; வெளிப்புறம்.

செய்தி: தட்டார் திருமணக் கன்னிமலை ஆசாரி உள்ளிட்டார்க்குத் திருக்கோளக்குடித் திருக்கோயில் ஸ்ரீ பண்டார காரியத்துக்குக் கடவார், காணியாட்சி விலைப் பிரமாணம் செய்து தந்தனர். கல்வெட்டு அக்காலச் சச்சரவொன்றையும் அது தொடர்பாக நிகழ்ந்த வன்முறைகளையும் சுட்டுகிறது. திருக்கோளக்குடிக் கொல்லர்க்கும் ஆற்றூரைச் சேர்ந்த திருக்கை வேலன் மகன் உலகன் உள்ளிட்டார்க்கும் ஏற்பட்ட சச்சரவொன்றைத் (கல்வெட்டு சிதைந்துள்ளதால் என்ன சச்சரவு என்பதை அறியக்கூடவில்லை) தீர்க்கக் கருதிய கோயில் தானத்தாரும், பூச்சைய நாயக்கர் ஆள் தேகனும் ஆற்றூருக்குச் சென்று ஊராரை அழைத்து நடந்தது கேட்டபோது, உலகன் ஆற்றூரார்க்குக் கைக்கூலி தந்து, தானத்தாரைத் தாக்குமாறு செய்தான். இவ்வன்முறைக்குப் பின் நடந்தவற்றை அறிய முடியாதபடி கல்வெட்டின் வரிகள் மிகச் சிதைந்துள்ளன. இவ்வன்முறையின் தீர்வாகவே காணியாட்சி விலைப் பிரமாணம் செய்து தரப்பட்டதாகக் கருத இடமுண்டு.

காலம்: கி.பி. 1525.

1 ஸ்வஸ்திஸ்ரீ ச$_0$காத்த[ம்*] 1447 மேல் செ

2 ல்லா நின்ற பார்த்திப வருஷம் மாசி மீ ஏழு

3 புறமலைநாட்டு திருக்கோழக்குடி ஆண்

4 ட நயினார் கோயில் ஸ்ரீபண்டார கா

5 ரியத்துக்கு கடவார் இவூர் தட்டான் திரு

6 மண கன்னிமலை ஆசாரி உள்ளிட்டார்க்கு காணி ஆச்சி விலைப் பிரமாணம்

7 பண்ணிக் குடுத்த பரிசாவது இவூர் கொல்லர் ஆத்தூரிலே கூலி குடுக்கச்

8 சென்ற இடத்திலே திருக்கைய் வேல்லந் மகன் உலகன் உள்ளிட்டார்

9 — — என்று மன்றாடி

10 வேண்டுகையில் தானத்தாரும் பூச்சைய நாயக்கர் ஆள் தே

11 கனும் ஆகச் சென்று ஊராரை அளைத்து நடு கேக்க என்

12 று இருக்க . . . . . உலகன் ஆற்றூராற்கு கைகூலிக் கு

13 டுத்து தானத்தாரை தான் சங்கை கெடம் அடித்து

14 — —

15 உலகன் உள்ளிட்டார் பாதி கொல்ல காணி தட்டார் கா

16 ணி மன்[றாடி வன]பாடு காடு . . . . . யிறையிலி மற்று

17 . . . . கைபடாதே வந்த நம்பி கன்னிமலை ஆசாரி தருமற்

18 உள்ளிட்டாற்[கு*] விற்று விலைப் பிரமாணம் பண்ணி குடு[த்தோ]

19 ம் சிறிபண்டாரக் காரியத்துக்கு கடவாரோம் . . . .

20 யிப்படிக்கு சந்திராதித்தவற் செல்ல

21 க் கடவராகவும் — — வந்து வேண்டுமனைத்து வகுத்தர

22 வும் . . . குருகு[ல*] பிரமாரா[யர்*] எழுத்து ஆலால சுந்தரபட்டந் எழுத்

23 து சுந்தரபாண்டிய பி[ர*]மாதர[ா*]யர் எழுத்து உ

11. க. எண்: 45 – 1916

இடம்: மகாமண்டப வடசுவர்; வெளிப்புறம்.

செய்தி: இளையாத்தக்குடி நகரத்தார் திருக்கோளக்குடி இறைவனுக்குச் செய்தளித்த பழந்தேர் பழுதுற்றதால் புதிய தேரொன்று அமைத்துத்தந்தனர். இத்தேரோடும் விழாநாள் செலவுகளைக் கோயில்

பண்டாரமே ஏற்று நடத்துவதெனவும் இதற்காகக் கோயில் தேவதானமான பெருநல்லூரிலிருந்து வரும் வருமானத்தில் ஆண்டுதோறும் ஐம்பது பொன்னும், ஐந்நூறு கலம் நெல்லும் பெறுவது எனவும் பெருநல்லூர் விளைச்சல் இல்லாது போகுமானால் தேவிமண்டலம் பற்றிலே விளைந்த கிராமத்தின் முதலில் ஐம்பது பொன்னும் ஐந்நூறு கலம் நெல்லும் கொள்வது எனவும் ஒப்புதலானது.

காலம்: கி.பி. 1597.

1 உ ஸ்வஸ்திஸ்ரீ சகாத்தம் 1519ன் மேல்
2 செல்லா நின்ற துன்முகி ௵ ஆனி மீ 5 உ சுவாமியார்
3 திருக்கோளக்குடி யாண்ட தம்பிரானார் கோயிற்
4 ஸ்ரீபண்டாரக் காரியத்துக்கு கடவாரும் சிதம்பரநா
5 த முதலியாரய்யன் காரியத்துக்கு கத்தரான எல்ல பட்ட
6 ரும் இளையாத்தக்குடி நகரத்தாற்குத் தந்ம [சா*]சனப்
7 பட்டையம் பிடிபாடு பண்ணிக் குடுத்தபடிக்கு சுவாமி
8 யாற்கு முன்னாள் தாங்கள் பூறுவம் வைத்த திருத்தேர்
9 அலைந்து போகையில் நாளது நவமாகத் தாங்கள் திரு
10 த்தேர் வைக்கையில் திருனாள் செலவுக்குத் தங்க
11 ளைக் கேழாமல் கோயிற் பண்டாரத்திலே கட்டளை
12 இடுகையில் அப்படியே நயினார் தேவதானமான பெரு
13 நல்லூரிலே கண்ட முதலிலே வருஷம் தோறும்
14 வருஷ[ம்*] ஒன்றுக்கு அன்பது பொன்னும் அஞ்ஞூ[ற்*]
15 றுக் கல நெல்லும் பத்திக் கொண்டு கோயில் பண்
16 டாரத்திலே திருனாள் நடத்தி வரக் கடவோமாகவும்
17 ே[ப$_4$]சித் தெய்வீகமாய் விளயாதே போனால் தேவிமண்
18 டலம் பத்திலே விளைஞ்ச கிறாமத்தில் முதலிலே அன்பது
19 பொன்னும் அஞ்ஞூத்துக் கல நெல்லுமிட்டு வருஷம் ஒன்
20 றும் க^3

12. க. எண்: 46 – 1916

இடம்: மகாமண்டப வடசுவர்.

செய்தி: சுந்தரசோழபுரமான தேசியுகந்த பட்டணத்து நகரத்தார் திருக்கோளக்குடிச் சுந்தரபாண்டியன் பெருந்தெருவில் குடியிருந்தனர். இவர்கள் திருக்கோளக்குடித் திருக்கோயில் திருவிழாவில் தீர்த்தம் திருநீறு பெற்றனர். திருச்சாந்து சாத்துவது குறித்தும் அதற்கான சாந்துவரி நகரத்தாரிடம் பெறப்பட்டது குறித்தும் கல்வெட்டு தகவல்

தருகிறது. ஒடுக்கு, தீபகம் போன்ற சொற்கள் ஆய்வுக்குரியவை. திருக்கைவேல் அழகியார் மடம் குறிக்கப்படுகிறது.

காலம்: கி.பி. பதினாறாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ புறமலை நாட்டுத் திருக்கோளக்குடி ஆண்ட ந
2 யினார் கோயிலில் முதலியார் திருவாசிகைய் தாட்ட
3 ம் பறமபடம் நாச்சியார் ஆக யிவற்கள் மற்றும் கடல
4 டையாதிலங்கை கொண்ட சோழ வளநாட்டு ஒல்
5 லையூர்க் கூற்றத்து தெந் கோனாட்டு சுந்தரசோழபுரமான
6 தேசி உகந்த பட்டணத்து புறமலைநாட்டு திருக்கோள
7 க்குடியில் சுந்திரபாண்டியன் பெருந்தெருவில் நகர
8 த்தார் மாத்தூருடையாந் மாதையார்பிர ஆண்டார் உள்
9 ளிட்டாரும் பரம்பை ஊருடையாந் உடப்பாண்டார்
10 முதலியாரான தன்னமலைக் கேழவதரையநும் திருக்கோளக்
11 குடி யாண்ட . . . . . சமையபுரந்தரரும் திருக்கைவேல்
12 லழகியார் மட[த்தா]ரும் சிற்றம்பலமுடையாந் ஆதி
13 பாண்[டி]ய . . . . த்த போயி சொல்ல . . .
14 – – இநகரத்து சிற்றம்பலமுடையரா
15 ன நல்லா உடைய பிள்ளையாரான வணிகர்
16 புரந்தரரும் நல்லா உடையாரான தாட்டி
17 யரும் அந்பந் தில்லையுள்ளாடுவாரும் தி
18 ருவேர்த்த சா[மம*]ழகியார் ஆவயரான சுந்தர
19 பாண்டிய சக்கிறவற்தி உள்ளிட்டாரும் ஆக இவர்
20 கள் தன்மம் உ இவர்களுக்கு திங்கள் தீபகத்துக்கு தீ
21 த்தம் திருநீறும் ஒடுக்கும் பெற்று போகக் கட
22 வார்களாகவும் திருநாளுக்கு ஏழாந் தி[ரு*]நா
23 மதித்து திருச்சாந்தும்
24 சுந்தரசோழபுரம் உள்ளிட்ட நாலு நகரமும்
25 திருச்சாந்து சாத்தி சாந்து வரிக்கு பணம் பொன்னிலு
26 ன் மா குடுக்கக் கடவார்கள் ஆகவும் இந்நகரத்தா[ர்*]க்
27 கு இக்கோயிலில் முன்னாளுண்டான மா ஒடுக்
28 கும் தீத்தம் திருநீறும் பெற்று போ[க கட]வார்கள்
29 ளாகவும் இப்படிக்கு – –
30 ஆலாலசுந்தர பட்டன் எழுத்து சுந்தரபாண்டிய
31 பிரமாதராயர் எழுத்து உ

13. க.எண்: 47 – 1916

இடம்: மகாமண்டபக் கிழக்குச் சுவர்; வெளிப்புறம்.

செய்தி: திப்பரச உடையார்க்குத் தன்மமாக அவரது காரியகர்த்தர் தம்மைய நாயக்கர், திருக்கோளக்குடி இறைவனின் உஷா பூசைப் படையலுக்குத் தேவதானமாகத் தென்கோனாட்டுக் கீழ்மணநல்லூர் கிராமத்தைச் சர்வமானியமாக அளித்தார்.

காலம்: கி.பி. 1502.

1 ஸ்வஸ்தி ஸ்ரீமன் மகாமண்டலேசுரன் அரியராய விபாடன்

2 பா[ஷை*]ஷக்குத் தப்பும் இராயிர கண்டன் கண்ட நாடு கொண்டு கொண்

3 ட நாடு கொடாதான் மேதினிமீசுர கண்டன் கட்டாரி சா

4 ளுவன் துலுக்கர் தளவிபாடன் பூறுவ தெஷ்ண பச்$_{0}$சி

5 ம உத்திர சமுத்திராதிபதி ஸ்ரீமத் நரசிங்க புசபல இராயர்

6 தன்மராயற்க்கு நரச்ச நாயக்கர் பிறுதிவி ராச்சியம் பண்ணி

7 யருளா நின்ற சகாத்தம் 1424 இதன் மேல் துந்துபி வ

8 ருஷத்து உத்தராயனத்து சதுறுத்தியும் கும்ப நாயற்று

9 அபர பக்ஷத்து சதுறுத்தியும் விதிற்பக வாரமும்

10 ப$_{4}$திபாத ஒகமும் பெற்ற திருவோணத்து நாள் சிறீமத் திப்பரச

11 உடையார் காரியத்துக்குக் கத்தரான தம்மைய நாயக்கர்

12 பொன்னமராபதி நாட்டுத் திருக்கோளக்குடி திருக்கோளக்குடி

13 ஆண்ட நயினார்க்கு உஷா பூஜை அம்முது செய்யும் கட்டளைக்

14 கு அய்யன் திப்பர[ச*] உடையாற்க்கு தன்மமாக இற்றை நாள்

15 சிவலாத்திரை புண்ணிய காலத்தில் தேவதானமா

16 க விட்ட தென்கோனாட்டு கீழ்மணநல்லூர் கிறா

17 மம் ஒன்றும் நான்கெல்லைக்கு உள்பட்ட ஏம்பல்

18 குறிச்சி நஞ்சை புஞ்சை புறக்கம் உள்பட சமுத்தப் பிறாத்தியளும்

19 சறுவமானியமாக சந்திராதித்தவற் செல்ல தேவதா

20 னமாக விட்ட அளவுக்கு இம்மரியாதி[யி*]லே நயினார்

21 திருக்கோளக்குடி ஆண்ட நயினார்க்கு இந்தக்

22 கீழ்மணநல்லூர் கிறாமமும் நான்கெல்லைக்

23 குள்பட்ட ஏந்தல் குறிச்சி நஞ்சை புஞ்சை புறக்குடி

24 உள்பட சமத்தப் பிறாத்தியமும் தேவதானமாக சறுவ

25 [மாநி]யம் ஆக சந்திறாதித்தவற் செல்ல அனுபவித்துக் கொள்ளவும்

26 இந்தப் பற்றுக்களில் பூறுவத்திலுண்டான தேவதான

27 ம் திருவிடையாட்டம் பிராமணர் மானியம் நீங்கலாக

28 அநுபவித்துக் கொள்ளவும் த$_{3}$ாநபாலநயோர்ம்மய்யே

29–30 கிரந்த சுலோகம் உள்ளது.

14. க.எண்: 48–1916.

இடம்: மேலது.

செய்தி: கூடலூர் சக்கதேவர் வேட்டுவர் காத்தவனான சாய படைதாங்கிக்கும் அவர் தம்பி சிங்கக்காத்தவனுக்கும் திருக்கோளக்குடிக் கோயில் பண்டார அலுவலர்கள் செய்து தந்த பாடிகாவல் ஆவணமாக விளங்கும் இக்கல்வெட்டால், திருக்கோளக்குடி ஒரு காலகட்டத்தில் அழிந்து குடியின்றி இருந்ததையும், அங்குக் குடியேற்றம் ஏற்படுத்த சிட்டம நாயக்கர், காளப்பையர் துணையுடன் சாளுவ[2] நாயக்கரும் அப்பப்பிள்ளையும் மேற்கொண்ட முயற்சிகளையும் அறியமுடிகிறது.

காலம்: கி.பி. பதினாறாம் நூற்றாண்டு.

1 பிரப[வ*] ௵ தை மீ 15 உ புறமலை நாட்டுத் திருக்கோளக்குடி ஆண்ட நயினார் கோயிற் சிறீபண்டாரக் காரியத்துக்கு கடவர்ரோம்

2 கூடலூரில் சக்கதேவர் வேட்டுவர் காத்த[வ]ன் ஆன சாயபடை தாங்கிக்கும் மேற்படி தம்பி சி[ங்க]க்காத்தவனுக்கும் பாடிகாவல் திரு

3 முக்காணி ஆட்சி பிறமாணம் பண்ணிக் குடுத்தபடி. திருக்கோளக்குடி சாளுவ நாயக்கரும் அப்பப்பிள்ளையும் வன்து திருப்புத்தூர்க்கு போறத்து

4 வரயிலே ஊரும் அழிந்து குடியளும் கலைந்து குடியும் ஏறாமல் கிடக்கையில் இந்த ஊர் குடி ஏற்ற ஒருத்தரும் இலாத படியாலே வேட்

5 டுவக் காத்தவனையும் சிங்கக்காத்தவனையும் அழைத்து தம்மைய நாயக்கர் காரியத்துக்குக் கடவ சிட்டம நாயக்கரும் காளப்பைய

6 ரும் ஆக இவர்களை அழைத்து இந்த ஊரை இவர்கள் குடி ஏற்றுகையில் இவர்களுக்கு சுவந்திரமாக உடையவர் திருக்கை வழக்கமா

7 க திருவுள்ளம் பற்றினபடி திருமலை சூழ்ந்த பற்றில் புதுக் குளமும் வயலும் நான்கெல்லைக்குட்பட்ட நஞ்சை புஞ்சையும் இந்த எல்

8 லை மட்டு உழு நயிநாற்கு இந்த பற்றுக்கு அற்ற மரியாதி வரிசை மாப் பணமும் இறுத்துப் பொதுவிலே இடும் சுவந்திரங்களும்

9 இட்டு தேவர்க் கட்டு முக்கையிகம் ஆக பொதுமக்கள் பேறும் இட்டு உழுது பயிற் செய்யக் கடவார்களாகவும் பாடிகாவ

10 லும் நஞ்சைப் பற்றுக்கு விளைந்த பற்றுக்கு பயிர் பாத்து பயிர் நின்ற நிலத்துக்கு ஒரு மா நிலத்துக்கு தூணிப்பதக்கு நெல்லு

11 ம் இட்டு வலையற்கு ஏரினுக்கு தூணியும் புனவனுக்குப் பதக்கும் பெற்று இடையன் வலையந் ஆடிக் காத்திகைக்கு காட்சியும் கண்டு திரு

12 நாளுக்கு பரிவட்டமும் கட்டி தீத்த திருநீறும் பெற்று சந்திராதித்தவரைக்கு கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளக்

13 – – இந்தப் படியாக தீத்தமும் திருநீறும்[3]

15. க. எண்: 49 – 1916

இடம்: மேலது.

செய்தி: திருக்கோளக்குடிக் கோயிலார் ஊர்த் தந்தரிமார்க்குச் செய்தளித்த ஒப்பந்தம். இதன்வழி இவ்வூர்க் குடிகள் ஆண்டுதோறும் இறைக்கோயிலுக்குச் செலுத்தவேண்டிய ஏர்வரி நிர்ணயிக்கப்பட்டது.[4]

காலம்: கி.பி. 1537.

1 ஸ்வஸ்திஸ்ரீ சகாத்தம் 1459ன் மேல் செல்லா நின்ற

2 துன்முகி[5] ௵ பங்கூனி மீ 10௨ புறமலைநாட்டு திருக்கோளக்குடி

3 ஆண்ட நயினார் கோயில் ஸ்ரீபண்டார காரியத்துக்கு கட

4 வாரோம் மேற்படியூர் தந்தரிமாற்கு இசைவு பிடிபாடு பண்ணி

5 க் குடுத்த பரிசாவது முன்னாள் இறுத்து இறைசாத்துக்கு ஆற்றாம

6 ல் குடியள் பல இடத்திலும் சிதறிப்போகையில் இனிமேல் ந

7 யினார் குடியாகப் பல இடத்திலும் இருந்து வந்தேறின குடிக்கும்

8 இஞ்கே முன்னுக்குப் போகாமல் இருந்த குடிக்கும் நாழது வருகிற

9 முதலாக ஏற்கு மூன்று பணமும் கைய்விளை ஏருக்கு ஒன்றரைப்

10 பணமும் புறக்குடி ஏருக்கு இரண்டு பணமும் பருவகாறனுக்கு

11 ஒரு பணமும் ஆக வருசந்தோறும் இறுத்து நயினாற்கு உண்டான ஊ

12 ழியங்களுஞ் செய்து சுகத்தில் இருக்க கடவராக(மாக)வும் குடிவ

13 ந்தேறாமல் இருந்தால் இவர்கள் காணியாட்சி உண்டான ஊ

14 ழியங்களுஞ் செய்து சுகத்திலே இருக்க கடவோமாகவும் குடிவ

15 ந்தேறாமல் இருந்தால் இவர்கள் காணியாட்சி உண்டானதுவும் மன்

16 றாடி வேண்டின குடிக்கு அ..த்துக் கொள்ளக் கடவோமாகவும்

17 சம்மதித்துக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் குடுத்தோம் மேற்படி

18 யூர் தன்தரமாற்கு சிறிபண்டாரக் காரியத்துக்கு கடவாரோம் இப்படிக்

19 கு நரசிங்கப் பிரமாதராயர் எழுத்து ஆலாலசுந்தர பட்டர் எழுத்து

20 சுந்தரபாண்டிய பிரமாதராயர் எழுத்து இப்படிக்கு மாடாபத்

21 தியம் உய்யநெறிகாட்டினார் எழுத்து இப்படிக்கு இப்பிறமா

22 ணம் எழுதினேன் கோயில் கணக்கு முன்னக்குடி உடை

23 யானான திருவொற்ற சாமமழகியாரான திருஞானசம்பந்த வே

24 ளார் எழுத்து

16 க.எண்: 50–1916

இடம்: மேலது.

செய்தி: 'ஒரு சொல் வாசகப் பேரையன் குடிகாடு' என்ற பெயரில் விளங்கிய நிலத்தை வேலங்குடி மறவர் இறையிலி திருநாமத்துக்காணியாகக் கோயிலுக்கு விற்றுத்தந்தனர். இந்நில உரிமை பற்றிய கல்வெட்டுத் தரவுகள் குறிப்பிடத்தக்கன.

காலம்: கி.பி. 1501.

1 சுபமஸ்து சகாத்தம் 1423ன் மேல் செல்லா

2 நின்ற துன்மதி[6] வருஷம் புரட்டாதி 20 புறமலை

3 நாட்டுத் திருக்கோளக்குடி உடையார் திருக்கோளக்

4 குடி ஆண்ட நாயனார் ஆதிசண்டேச்$_0$வர தேவர் பூங்கு

5 ன்ற நாட்டு வேலங்குடி மறவரில் தெற்று வரா கண்டந் சங்கரந்

6 உட்பட்டாரும் விசையாதேவன் அரியவன் உள்ளிட்டாரும் மோம்

7 திருநாமத்துக்காணி விலைப் பிறமாணம் பண்ணிக் குடுத்த

8 பரிசாவது கன்னாடக வாணமுமாய் இறை தரமும் மிகுத

9 இறுக்கும்படிக்கு ஒரு பேர்க்கும் இல்லாதபடியாலே எங்

10 கள் ஊரார் கைய்யில் தாங்கள் முன்னாள் கொண்டுடைய [ஒரு சொல்]

11 வாசகப் [ே*]பரையன் குடிக்காடு விற்க கொள்வாருளீரோ என்

12 று பலகாலும் நாங்கள் கூறுகையில் இன்னாயனார் ஆதிசண்

13 டேச்$_0$வர தேவர் வேலங்குடி ஊரார் கையில் முன்னாள் திரு

14 நாமத்துக்காணியாக கொண்டது என்று இக்குடிகாட்டு

15 க்கு எல்லையும் புரவும் ஒக்க ஒரு சொல் வாசக [ே*]பரையன் குடிகா

16 டு என்று கல்வெட்டு காட்டுகையில் நாங்கள் நெடுநாள் து

17 டங்கி இற்றை வரைக்கு த[ரு*]ங் காசும் இறுத்துப் பற்றி அநுபவித்து

18 வருகையினாலும் இக்குடிகாட்டுக்கு எங்[க*]ள் கை[க*]ய்யிலே சாதன

19 ம் இருந்து காட்டுகையினாலும் பற்றாளனைத் தள்ள ஒண்ணாதென்று

20 இந்நாயனார் திருக்கோளக்குடி ஆண்ட நாயனார் ஆதிசண்டேச்$_0$வர தேவற்கு

21 மீளவும் எம்மிலிசைந்து விலைக்குற விற்று பொருளறப் பற்றிக்கொண்டு

22 ஒழுகிலும் புரவிலும் இறங்க . . . மேற்றி இக்குடிகாட்டுக்கு உ

23 ண்டான இறை தரம் ஊழியம் பாழியம் எப்பேர்ப்பட்டனவும் நாங்களே யிறு

24 த்துப் போ[ந்*]து இப்படியாக இன்னாயனாற்கு இறையிலி திருநாமத்துக்காணியாக சந்

25 திராதித்தவற் செல்லக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் குடுத்

26 தோம் திருக்கோளக்குடி உடைய நாயனார் ஆதிசண்டே

27 ச்$_0$வர தேவற்கு தெற்று வரா கண்டன் சங்கரந் உள்ளிட்டாரும் விசை

28 யர் தேவன் அரியவன் உ[ள்*]ளிட்டா[ர்*]களோம் இப்படிக்கு நயி

29 னான் அரசுக்கு வாய்த்தான் எழுத்து இப்படி

30 க்கு விசையர் தேவன் அரியவன் உள்ளிட்டார் எழு[த்*]து

31 இப்படிக்குத் தெற்று வரா கண்டன் சங்கரன் உள்ளி

32 ட்டார் எழுத்து இப்படிக்கு சங்கரன் வீரபாண்டிய

33 தேவன் உள்ளிட்டார் எழுத்து இப்படிக்கு சீவல்லதேவ

34 ன் உள்ளிட்டார் எழுத்து இப்படிக்கு இப்பிறமாணம் எழு

35 தினமைக்கு வேலங்குடி கணக்கு நிலைமை அழகிய

36 வேளார் எழுத்து

17. க. எண்: 51 – 1916

இடம்: மேலது.

செய்தி: கல்வாயில் நாட்டுக் குலசேகரபுரத்து இளையாத்தக்குடி நகரத்தார் திருக்கோளக்குடிக் கோயிலுக்குத் தேர் செய்துதந்தனர். இவ் அறப்பணிக்காக அவர்கட்குத் தேர் முன்னே தீர்த்தம், திருநீறு, திருமாலை போன்ற பல சிறப்புகள் செய்யப்பட்டன.

காலம்: கி.பி 1551.

1 1473 இதன் மேல் செல்லா நின்ற சாதாரண வருஷம் வைய்

2 காசி உ 10 உ [புறமலை]நாட்டு திருக்கோழக்குடி ஆண்ட நயினார் கோயில் ஸ்ரீபண்

3 டாரரு காரியத்துக்கு கடவாரோம் கல்வாசல் நாட்டு குலசேகரபுரத்து இழையா

4 த்தகுடி நகரத்தாற்கு பிடிபாடு பண்ணிக் குடுத்தபடி இந்நயினார் திருக்கோழக்கு

5 டி ஆண்ட தம்பிரானாற்கு இவர்கள் தன்[ம]மாகத் திருத்தேர் வைக்கையில்

6 இதுக்கு உண்டான அரைகுறை நாங்கள் இவ[ர்*]கள் கையிலே பற்றி கொள்ளு

7 கையில் இனிமேல் இவர்களை இந்த திருத்தேர்க்கு உண்டான பொற்குடம் வடம் சட்டை

8 பிறை தண்ணும தூக்கம் மற்றும் எப்பேற்பட்டனவும் கோயில் பண்டாரத்திலே கு

9 றை தீர்த்துகொள்ளக் கடவோமாகவும் நகரத்தார்க்கு திருத்தேர் முந்னே பரிவட்ட

10 மும் கட்டி தீர்த்தமும் திருநீறும் திருமாலையும் ஒடுக்கும் சந்திராதித்தவற் செல்லப் பெற்று

11 ப் போகக் கடவார்கள் ஆகவும் இப்படிக்கு இழையாத்தக்குடி நகரத்தாற்கு ஸ்ரீபண்டார

12 க் காரியத்துக்கு கடவாரோம் . . . . மாணிக்கவாசக பட்டர் எழுத்து ஆலாலசுந்தர பட்

13 டர் எழுத்து சுந்தரபாண்டிய பிரமாதர[ா*]யர் எழுத்து மாடாபத்தியம் தொண்டைமான்

14 பிச்சர் எழுத்து கோயில் கணக்கு அகளங்க [பிரியன்] எழுத்து உ நன்றாக உ

18. க. எண்: 52 – 1916

இடம்: மேலது.

செய்தி: திருக்கோளக்குடித் திருக்கோயிலில் திருஞான சம்பந்தரை எழுந்தருள்வித்தவர்களுக்கு உரிய நாட்களில் கோயில் மரியாதைகள் அளிப்பதாக உறுதியளிக்கப்பட்டது.

காலம்: கி.பி. 1507.

1 சுபமஸ்து ஸ்வஸ்திஸ்ரீ சகாத்தம் 1429ல் மேல் செல்லாநின்

2 ற க்ஷய ௵ ஆவணி மீ 13 உ புறமலை நா

3 ட்டுத் திருக்கோளக்குடி உடைய நயினார்

4 கோயிற் சிரீபண்டாரக் காரியத்துக்குக் கட

5 வாரோம் கல்வாசல் நாட்டு இளையாத்தக்குடியா

6 ன குலசேகரபுரத்து சிறுசெற்றூருடையான்

7 மீ[யான்] வழக்குடையாரும் மேற்படி பிள்ளையாரும் மேற்படி வழ

8 க்குடையார் அடியாற்கு நல்லார் உள்ளிட்டாரும் ஆவுடையார் உள்ளிட்டாரும்

9 ஆக இவ்வனைவரும் இந்தத் திருக்கோயிலுக்கு சம்பந்தப் பெருமாள்

10 நயிநாரை எழுந்தருளப் பண்ணுகையில் இவற்கு திங்கள் திவதம்

11 திருநாளுக்கு அற்றைக் குறையறுப்பாக திருமேப்பூச்சும் திருப்பரிவட்ட

12 மும் மற்றும் எற்பேற்பட்டவை உண்டான முறைகளும் நடத்தி

13 இவற்கு ஒடுக்கும் திருமாலையும் திருக்காத்திகைக்கு பிரசாதமும்

14 குடம் சந்திராதித்தவற் செல்ல தந்ம[மா]க நடந்து ஆறாந் திருநாளுக்கு

15 அற்றைத் திருநாள் குறைவறுப்பும் குறைவற நடத்தி தந்ம

16 கத்தர் வழக்குடையாற்கு சந்நதியிலே பரிவட்டமும் பெற்று

17 சந்திராதித்தவற் செல்ல கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொ

18 ள்க இப்படி சம்மதித்து பிடிபாடு பண்ணிக் குடுத்தோம்

19 சிறீபண்டாரக் காரியத்துக்கு கடவாரோம் வழக்குடையார் உள்[ளி]

20 ட்டாற்கு இப்படிக்கு நரசிங்க பிரமாதராயர் எழுத்து சைவ

21 சிகாமணி எழுத்து சுந்தரபாண்டிய பிரமாதராயர்

22 எழுத்து மாகேஸ்வர ரகைஷ

அடிக்குறிப்புகள்

1. கல்வெட்டறிக்கையில் 14 எனத் தரப்பட்டுள்ளது.
2. 'சாலிவ' என்று கல்வெட்டறிக்கை கூறுகிறது.
3. கல்வெட்டு முற்றுப்பெறவில்லை.
4. கல்வெட்டறிக்கை குறிப்பிடும் சிட்டம நாயக்கர் பெயர் இக்கல்வெட்டில் இடம்பெறவில்லை. அவர் கல்வெட்டெண் நாற்பத்தெட்டில் இடம்பெற்றுள்ளார்.
5. கல்வெட்டறிக்கையில் 'துர்முகி' என்றுள்ளது.
6. 'துர்மதி' என்கிறது கல்வெட்டறிக்கை.

(வளரும்)

சங்ககால முடிதிருத்தம்

சங்ககாலத்தில் மக்கள் முடி திருத்திக்கொண்டார்களா? கலித்தொகை 'ஆம்' என்கிறது. 'எஃகிடை தொட்ட கார்க் கவின் பெற்ற ஐம்பால்' என்னும் கலி வரிக்கு (32), 'கத்திரிகை இடையிலே தீண்டிய, மேகத்தின் கவினைப் பெற்ற ஐந்து பகுதியையுடைய மயிர்' என்று பொருளுரைக்கிறார் நச்சினார்க்கினியர். சங்ககாலத்தில் எஃகு என்ற சொல் இரும்புக்கருவிகளைக் குறிக்கும் பொதுச்சொல்லாக இருந்ததா? அல்லது கத்திரிகையைக் குறிக்கும் சிறப்புச்சொல்லாக விளங்கிற்றா? தமிழறிஞர்கள் விளக்கினால் பயன்பெறலாம்.

4. ஆய்வுக் கட்டுரைகள்

1. சங்ககாலத் தமிழகத்தில் முதல் அறிவொளி இயக்கம்

ஐராவதம் மகாதேவன்

தமிழ் எழுத்துக்களின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற பொருளைப்பற்றி நான் பல ஆண்டுகளாக ஆய்வு நடத்திவருகிறேன். இதன்விளைவாக என்முன் எழுந்த ஒரு முக்கியமான பிரச்சினை, தமிழகத்தில் முதன்முதலாக எழுத்தறிவு தோன்றிய காலத்தின் சூழ்நிலையைப் பற்றியதாகும். தமிழகத்தில் எப்பொழுது எவ்வாறு எழுத்தறிவு தோன்றியது? எழுத்தறிவு தோன்றவும் பரவவும் துணை செய்த காரணிகள் யாவை? எழுத்தறிவினால் தமிழகத்தில் உடனடியாக எற்பட்ட மாறுதல்கள் யாவை? மேலும் ஆந்திரத்திலும் கர்நாடகத்திலும் அதே காலகட்டத்தில் எழுத்தறிவு ஏற்பட்டபோதிலும் அதன்விளைவுகள் தமிழகத்தைக் காட்டிலும் முற்றிலுமாக மாறு படுவதற்கு என்ன காரணங்கள்? இக்கேள்விகளுக்கு விடைகள் இதுவரை வெளியாகியுள்ள நூல்களில் காணப்படவில்லை என்பது வியப்பிற்குரிய ஒரு விஷயமாகும். இதுவரை ஆய்வு நடத்தப்படாத இந்த விஷயத்தில் எல்லாச் சிக்கல்களையும் உடனடியாக விடுவிப்பது முடியாதது என்றாலும் மேலும் ஆய்வு நடத்த ஓர் உரையாடலைத் தொடங்கிவைப்பதுதான் இந்த ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழகத்தில் இதுவரை கிடைத்துள்ள எழுத்துகளிலெல்லாம் மிகப் பழமையானவை தமிழ்—பிராமி எழுத்துகளாகும். இவ்வெழுத்துகள் ஏறத்தாழ அசோகரின் கல்வெட்டுகளில் காணப்படும் எழுத்துகளை ஒத்திருப்பதால் இவ்விரு எழுத்துமுறைகளும் சமகாலத்தவை என்று எடுத்துக்கொள்ளலாம். மேலும் தமிழகத்துக் குகைக் கல்வெட்டுகள் சமணச் சார்புடையவை. அசோகரின் பாட்டனாகிய சந்திரகுப்தர் தென்னாட்டுக்கு வந்தபொழுது பத்ரபாகு முனிவரின் சீடராகிய விசாக முனிவரால் தமிழகத்தில் சமண சமயம் முதன்முதலாக பரப்பப்பட்டது என்ற கர்ண பரம்பரை வரலாற்றின் அடிப்படையில் பிராமி எழுத்துமுறை தமிழகத்தில் முதன்முறையாக கி.மு. 300 என்ற காலகட்டத்தில் பரவியதாக ஏற்றுக்கொள்ளலாம். தமிழகத்திற்கு வடக்கில் ஆந்திர, கர்நாடக மாநிலங்களிலும், தெற்கில் இலங்கையிலும் காணப்படும் மிகப் பழமையான எழுத்துகளும் இதே காலகட்டத்தைச் சார்ந்தவையாகும். தமிழகத்திலும், இந்தியத்

துணைக்கண்டத்தின் மற்ற பகுதிகளிலும் இதுவரை நடந்துள்ள அகழ்வு ஆய்வுகளில் கி.மு.3–ஆம் நூற்றாண்டுக்கு முந்தைய காலத்தில் (சிந்துவெளி எழுத்துமுறையைத் தவிர்த்து மற்ற) எழுத்துகள் காணப்படவில்லை. ஆகையால் இச்சான்றுகளையெல்லாம் ஒட்டு மொத்தமாகக் கவனிக்கும்பொழுது தமிழகம் உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்களிலும், இலங்கையிலும் கி.மு.3–ஆம் நூற்றாண்டில் முதன்முதலாக எழுத்தறிவு தோன்றியது என்று கருதலாம்.

தமிழகத்தில் முதன்முதலாக எழுத்துகள் தோன்றிப் பரவிய சூழ்நிலை அதே காலகட்டத்தில் திராவிட மொழிகள் வழக்கிலிருந்த ஆந்திர–கர்நாடக மாநிலங்களிலிருந்த சூழ்நிலையிலிருந்து முற்றிலும் மாறுபட்டு இருந்தது என்பது உண்மையிலேயே மிகுந்த வியப்பை ஏற்படுத்துகிறது. தமிழகத்தில் முதன்முதலில் எழுத்துகள் தோன்றிய காலத்தை 'முதல் அறிவொளி இயக்கம்' என்று கூறமுடியும். ஆனால் ஆந்திர, கர்நாடக மாநிலங்களில் பிராமி எழுத்துமுறை பரவியிருந்த போதிலும் அங்கு 'அறிவொளி இயக்கம்' தோன்றியதாகக் கருதமுடியாது. இவ்விதமான மாறுபட்ட விளைவுகளுக்கு முக்கியமான காரணங்கள் மூன்றாகும்.

(1) ஆந்திர, கர்நாடக மாநிலங்களைக் காட்டிலும் மிக முந்தைய காலத்தில் தமிழ்நாட்டில் மக்கள் பேசும் மொழியான தமிழில் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டன.

(2) கல்வெட்டுகளிலும், பானைக்கீறல்களிலும், நாணயங் களிலும், முத்திரைகளிலும், மோதிரங்களிலும் – சுருங்கக்கூறினால் எழுதப்பட்டவை யாவையுமே – தமிழில் மட்டுமே உள்ளன.

(3) அரசவையிலும், மேனிலை மக்களிடையேயும் வழிபாட்டுத் தலங்களிலும் மட்டுமே எழுத்தறிவு என்ற நிலை தமிழகத்தில் காணப் படவில்லை. மாறாக எல்லா நிலைகளிலும் எல்லா மக்களிடையேயும் எழுத்தறிவு மிகப் பரவலாகக் காணப்பட்டது என்பது என் ஆய்வின் ஒரு முக்கிய முடிவாகும்.

மேற்கூறிய காரணங்களை ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு ஆராயலாம்:

மேலே கூறியபடி தமிழகத்தின் மிகப் பழைய கல்வெட்டுகள் கி.மு. 3–ஆம் நூற்றாண்டிலிருந்தே கிடைக்கின்றன. இதுவரை கண்டெடுத்துள்ள கன்னடக் கல்வெட்டுகளில் மிகப் பழமையானது ஹல்மிடி சாசனமாகும். இது கி.பி. 5–ஆம் நூற்றாண்டின் இடைக் காலத்தைச் சார்ந்தது. இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள தெலுங்குக் கல்வெட்டுகளில் மிகப் பழமையானது ரேநாட்டுச் சோழர்களின் கலமல்ல சாசனமாகும். இது கி.பி. 6–ஆம் நூற்றாண்டின் இறுதியில் பொறிக்கப்பட்டது.

கல்வெட்டுகளில் காணப்படுவது போன்றே இலக்கியத்திலும் தமிழுக்கும், கன்னட – தெலுங்கு மொழிகளுக்கும் மிகப் பெரிய கால இடைவெளி காணப்படுகிறது. தமிழில் சங்கநூல்கள் மிகக் குறைவான காலக் கணிப்பின்படியும் கி.பி.முதல் நூற்றாண்டிலிருந்து தொகுக்கப்பட்டவை என்று அகச்சான்றுகள் மூலமாகவும், புறச்சான்றுகள் மூலமாகவும் கருதமுடியும். ஆனால் கன்னடத்தில் கி.பி. 9–ஆம் நூற்றாண்டு முதலும், தெலுங்கில் கி.பி. 11–ஆம் நூற்றாண்டு முதலும்தான் இலக்கியங்கள் தோன்றத்தொடங்கின.

தமிழ்க் கல்வெட்டுகளுக்கும், கன்னட – தெலுங்குக் கல்வெட்டு களுக்கும் கால இடைவெளியைத் தவிர மற்றுமொரு மிகப்பெரிய மாறுபாடும் காணப்படுகிறது. தமிழ்நாட்டின் மிகப் பழைய தமிழ்–பிராமி கல்வெட்டுகள் எல்லாமே தமிழ்மொழியில்தான் எழுதப் பட்டுள்ளன. இக்கல்வெட்டுகளின் வாசகங்களில் ஆங்காங்கே பிராகிருதமொழிச் சொற்கள் காணப்படினும், கல்வெட்டுகளின் அடிப்படை மொழி தமிழ்தான் என்று இப்பொழுது ஐயத்திற்கு இடமின்றி நிறுவப்பட்டுவிட்டது.

தமிழ்மொழியின் சிறப்பு எழுத்துகளாகிய ழ,ள,ற,ன என்பன இக்கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. வடமொழியின் வர்க்க எழுத்துகள் சிற்சில பிராகிருதச் சொற்களைத் தவிர்த்து மற்ற இடங்களில் காணப்படவில்லை. இதுவரை தமிழகத்தில் முற்றிலும் பிராகிருதமொழியில் எழுதப்பட்ட ஒரு கல்வெட்டு கூட கண்டுபிடிக்கப் படவில்லை. அதே போன்று தமிழகத்தில் இதுவரை கண்டெடுக்கப் பட்டுள்ள மிகப் பழைய பானைக்கீறல்களிலும் நாணயங்களிலும் மோதிரங்களிலும் இலச்சினைகளிலும் தமிழ்மொழிதான் கையாளப் பட்டுள்ளது. காஞ்சி போன்ற தலைநகர்களிலும் அரிக்கமேடு, கொடுமணல் போன்ற வணிக மையங்களிலும் மட்டுமே மிகச் சில பானைக்கீறல்களிலும் இலச்சினைகளிலும் பிராகிருதமொழி பயன் படுத்தப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக நோக்கும்பொழுது தமிழகத்தில் எழுத்துமுறை முதன்முதலாகத் தோன்றியபொழுது எழுதக் கையாளப் பட்ட மொழி தமிழேதான் என்பதில் ஐயமில்லை.

கன்னட – தெலுங்கு மாநிலங்களில் அதே காலகட்டத்தில் சூழ்நிலை முற்றிலும் மாறாக இருந்தது. அவ்விரு மாநிலங்களிலும் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள், நாணயங்கள், செப்பேடுகள், இலச்சினைகள், பானைக்கீறல்கள் எல்லாமே முழுக்க முழுக்க பிராகிருதமொழியிலேயே எழுதப்பட்டுள்ளன. எழுத்துமுறை தோன்றி 800 ஆண்டுகளுக்கு மேல் கன்னடத்திலோ, தெலுங்கிலோ கல்வெட்டுகளும் பிற சாசனங்களும் எழுதப்படவில்லை. பிராகிருத மொழி சாசனங்களில் ஆங்காங்கே சிற்சில கன்னட – தெலுங்கு மொழிச் சொற்கள் மட்டுமே காணப்படுகின்றன. இதை இன்னொரு

விதமாகவும் விளக்கலாம். தமிழகத்தின் பழைய கல்வெட்டுகளில் பிராகிருதமொழிச் சொற்களைத் தேடித்தான் கண்டுபிடிக்கவேண்டும்; அதே காலகட்டத்தில் ஆந்திர – கர்நாடக மாநிலங்களில் எழுதப்பட்டுள்ள பிராகிருத சாசனங்களில் தெலுங்கு – கன்னட மொழிச் சொற்களைத் தேடித்தான் கண்டுபிடிக்கவேண்டும்!

தமிழகத்தில் மிகப் பழமையான காலத்திலிருந்தே எழுத்தறிவு பரவலாகக் காணப்பட்டது என்பதற்கு இப்பொழுது பல சான்றுகள் கிடைத்துள்ளன. தமிழகத்தில் குகைகளில் பொறிக்கப்பட்டுள்ள தமிழ்–பிராமி கல்வெட்டுகள் வடநாட்டிலிருந்து வந்த தமிழ் தெரியாத சமணத் துறவிகளால் எழுதப்பட்டவை என்று முதலில் கருதப்பட்டது. ஆனால் கடந்த சில ஆண்டுகளில் தமிழகத்தில் இருபதுக்கும் மேற்பட்ட ஊர்களில் அகழ்வு ஆய்வு செய்தபோது நூற்றுக்கணக்கான பானைக்கீறல்கள் தமிழ் – பிராமி எழுத்துகளில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இப்பானைக்கீறல்கள் மதுரை, கரூர், உறையூர் போன்ற தலைநகர்களிலும் கொற்கை, அழகன்குளம், அரிக்கமேடு போன்ற துறைமுகங்களிலும் மட்டுமல்லாது அழகரை, போளுவாம்பட்டி போன்ற சிற்றூர்களிலும் கிடைக்கின்றன. இப்பானைக்கீறல்களில் சாமானியர் களான பொதுமக்கள் கூட தத்தம் பெயர்களை எழுதியுள்ளதைக் காணமுடிகிறது. மேலும், அதே காலகட்டத்தில் அல்லது சற்றே பிந்தைய காலத்தில் எழுந்த சங்கநூல்களை ஆக்கியோர், தொகுத்தோர் சமுதாயத்தின் எல்லாத் தளங்களையும் சார்ந்தவர்கள் என்றும் தெரிகிறது. சங்கப்புலவர்களில் அரசர்களும் வணிகர்களும் பல்வேறு தொழில்செய்தவர்களும் பெண்டிரும் அடங்குவர். இச்சான்றுகளை நோக்கினால் சங்ககாலத்தில் தமிழ்நாட்டில் முதல் அறிவொளி இயக்கம் மிகப் பரவலாக நடைபெற்றது என்ற முடிவுக்கு வரலாம்.

இதே காலகட்டத்தில் ஆந்திர – கர்நாடக மாநிலங்களில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள பானைக்கீறல்கள் பௌத்த விகாரங்களில் மட்டுமே கிடைத்துள்ளன. அவை பிராகிருதமொழியில் எழுதப்பட்டவை; பௌத்த சமயச் சார்புள்ளவை.

மேற்கூறிய சான்றுகளிலிருந்து தமிழகத்திலும் ஆந்திர – கர்நாடக மாநிலங்களிலும் முதன்முதலில் காணப்படும் எழுத்தறிவு இருவேறு வகையானவை என்றுதான் கருதமுடிகிறது. தமிழகத்தின் எழுத்தறிவைப் பொதுமக்களின் ஆதரவு பெற்ற (popular) அறிவொளி இயக்கம் என்றும் ஆந்திர – கர்நாடக மாநிலங்களில் காணப்படும் எழுத்தறிவை மேல்மட்டத்து (elitist) எழுத்தறிவு என்றும் வர்ணிக்கலாம்.

மேற்குறித்த மாறுபாடுகளுக்கு என்ன காரணங்கள் என்பதை இனி காணலாம்.

ஆந்திர – கர்நாடக மாநிலங்களில் அக்காலத்தில் பேசப்பட்ட மொழி பிராகிருதம் என்று கூறமுடியாது. பிராகிருதமொழியில் எழுதப்பட்டுள்ள சாசனங்களில் ஆங்காங்கே கன்னட – தெலுங்கு மொழிச் சொற்கள் காணப்படுவதிலிருந்து இத்திராவிட மொழிகளைத் தான் மக்கள் அம்மாநிலங்களில் பேசிவந்தார்கள் என்று தெரிகிறது. மேலும் கி.பி. 5–ஆம் நூற்றாண்டு வரை கன்னட – தெலுங்கு மொழிகள் தனிமொழிகளாக வளர்ச்சியடையவில்லை என்றும் கூறமுடியாது. திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்வு மூலமாகத் தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகள் வரலாற்றுக் காலத்திற்கு முன்பே தனிமொழிகளாகிவிட்டன என்று தெரியவருகிறது. மேலும் தெலுங்கு – கன்னட மாநிலங்களில் சாதவாகனர்கள் போன்ற மாமன்னர்கள் ஆட்சிபுரிந்தார்கள்; கலைநுணுக்கம் மிகுந்த பெரும் வழிபாட்டுத் தலங்கள் எழுப்பப்பட்டன. பிராகிருதமொழியில் இலக்கியம் தோன்றியது. பொதுவாகத் தமிழகத்தை விட ஆந்திர – கர்நாடக மாநிலங்கள் பண்பாட்டில் பின்தங்கியிருந்தன என்று கருதுவதற்கு எத்தகைய சான்றுகளும் இல்லை. ஆகவே மேற்குறித்தவாறு மொழிவளர்ச்சியில் மட்டும் காணப்படும் மாறுபாட்டிற்கு வேறு காரணங்கள் இருக்கவேண்டும்.

ஒரு மிகமுக்கியமான காரணம் தமிழகம் அக்காலகட்டத்தில் அரசியல் ரீதியாக சுதந்திரமாக இருந்தது என்பதுதான். ஆந்திர – கர்நாடக மாநிலங்கள், நந்த–மௌரியப் பேரரசுகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவையாக இருந்தன. அசோக மன்னர் தம்முடைய 13–ஆவது சாசனத்தில் ஆந்திரத்தைத் தம்முடைய ஆட்சிக்கு உட்பட்ட மாநிலம் என்று கூறியிருக்கிறார். மகத அரசின் ஆட்சிமொழி பிராகிருதமாக இருந்ததால் அப்பேரரசின் ஆட்சிக்கு உட்பட்ட மாநிலங்கள் அனைத்திலும் பிராகிருதமொழியே ஆட்சிமொழியாகவும் சமயம், வாணிபம், கல்வி போன்ற துறைகளில் பொதுமொழியாகவும் இருந்தது. மௌரிய ஆட்சி வீழ்ந்து அவர்களுக்குப் பின் ஆந்திர – கர்நாடக மாநிலங்களை ஆண்ட சாதவாகன மன்னர்களும் அவர்களுக்குப் பிறகு இக்ஷவாகு, கதம்ப, சாலங்காயன, விஷ்ணு குண்டின், பல்லவ வம்சங்களைச் சார்ந்த மன்னர்களும் பிராகிருத மொழியையே தொடர்ந்து ஆட்சிமொழியாகப் பயன்படுத்திவந்தார்கள். மேல்நிலை மக்கள், பொதுமக்களுக்குப் புரியாத ஒரு மொழியைத் தங்கள் ஆட்சிமொழியாக வைத்துக்கொள்வதின் மூலம் சாமான்ய மக்களை ஆட்சிப்பொறுப்பிலிருந்து விலக்கிவைத்துத் தாமே அதிகாரத்தைத் தொடர்ந்து செலுத்திவந்தனர் என்பது உலகறிந்த உண்மையாகும். பிற்காலத்தில் இந்திய நாட்டில் மொகலாய ஆட்சியின்போது பாரசீக மொழி ஆட்சிமொழியாக இருந்ததும்

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் — அதற்குப் பிறகு கூட ஆங்கிலம் ஆட்சி மொழியாக அமர்ந்திருந்ததும் சரித்திரம் காட்டும் உண்மைகளாகும்.

இக்காலகட்டத்தில் தமிழகத்தின் அரசியல்நிலை முற்றிலும் வேறாக இருந்தது. தமிழகம் நந்த — மௌரிய பேரரசுகளின் கீழ் ஒருபோதும் அடங்கியிருக்கவில்லை. மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்கள் மட்டுமின்றி அதியமான்கள் போன்ற குறுநில மன்னர்களும் தமிழகத்தில் சுதந்திரமாக ஆட்சிசெய்துவந்தார்கள். அசோக மாமன்னர் தம்முடைய 2—ஆவது சாசனத்தில் சேர, சோழ, பாண்டிய வேந்தர்களையும் சதிய புத்திரர் எனப்படும் அதியமான் களையும் தம்முடைய 'அண்டை நாட்டுக்காரர்' என்றே குறிப்பிடுகிறார். தமிழகம் அப்போது பெற்றிருந்த அரசியல் சுதந்திரத்தினால் தமிழ்நாடெங்கும் தமிழே ஆட்சிமொழியாகவும், கல்விமொழியாகவும், மற்றும் சமயம், வாணிபம் போன்ற எல்லாத் துறைகளிலும் பொதுமொழியாகவும் விளங்கிவந்தது. தமிழ்மக்கள் தமிழை எழுத பிராமி எழுத்துமுறையை ஏற்றுக்கொண்டபோதும் பிராகிருத மொழியை ஆட்சிமொழியாகவோ, பொதுமொழியாகவோ ஏற்றுக் கொள்ளவில்லை. பிராமி எழுத்துமுறையை மாற்றியமைத்துத் தமிழுக்குத் தேவையான எழுத்துகளைக் கூட்டியும், தமிழுக்குத் தேவையில்லாத எழுத்துகளை நீக்கியும் மேலும் சில மாறுதல்களைச் செய்தும் தமிழுக்கென ஒரு தனியான எழுத்துமுறையைப் படைத்தனர். இதையே இன்று நாம் 'தமிழ் — பிராமி' என்று குறிக்கிறோம்.

முற்காலத்தில் பிராகிருதமொழியில் எழுதப்பட்ட சமண பௌத்த சமய நூல்களில் தமிழகத்தின் பண்டைய எழுத்துமுறையை 'திராவிடி' அல்லது 'தாமிளி' என்று குறித்தனர். அக்காலத்தில் தமிழகத்தில் சமயத் தொண்டாற்ற வந்த சமண முனிவர்களும், பௌத்த முனிவர்களும் தமிழைக் கற்றுக்கொண்டு தங்கள் சமயப்பணியையும் தமிழ்ப் பணியையும் ஒருங்கே ஆற்றினார்கள். பிற்காலத்தில் ஐரோப்பிய நாடுகளிலிருந்து கிறிஸ்தவ மதபோதகர்கள் தமிழகத்துக்கு வந்தபோது சமயத் தொண்டையும் தமிழ்த் தொண்டையும் ஒருங்கே ஆற்றினார்கள் என்ற வரலாற்று உண்மையையும் இங்குக் குறிப்பிடலாம்.

மற்ற தென்மாநிலங்களைக் காட்டிலும் தமிழகத்தில் மிக முன்னதாகவே எழுத்தறிவு பரவியதற்கு அரசியல் சுதந்திரமும் தமிழ் ஆட்சிமொழியாகவும், பொதுமொழியாகவும் இருந்தமையும் முக்கிய காரணங்கள். இவற்றைத்தவிர தமிழகத்தில் முதல் அறிவொளி இயக்கம் வேகமாகவும் ஆழமாகவும் பரவியதற்கு மேலும் சில காரணங்கள் இருந்தன. அவற்றையும் இங்குச் சுருக்கமாக ஆராயலாம்.

(1) புலமைக்கு மதிப்பு

தமிழகத்தில் புலவர்களும் வாய்மொழியாகப் பண்ணிசைத்த பாணர்களும் வெகுவாகப் போற்றப்பட்டார்கள். வேந்தர்களும் குறுநில மன்னர்களும் தமக்குள் போரிட்டுக்கொண்டபோதும் புலவர்களும் பாணர்களும் ஓர் அரசவையிலிருந்து மற்றோர் அரசவைக்குப் போக எந்தத் தடையும் இருக்கவில்லை. தமிழ்மக்களுக்கு வாய்மொழிப் பாடல்களிலும் இசையிலும் இருந்த ஈடுபாடு, எழுத்துமுறை வழக்கிற்கு வந்தபிறகு இலக்கியங்கள் வெகுவிரைவில் தோன்ற ஒரு நல்ல களமாக அமைந்தது. தமிழ்வேந்தர்களாலும், குறுநில மன்னர் களாலும் புலவர்கள் பெரிதும் போற்றப்பட்டதால் தமிழகத்தில் எழுத்து இலக்கியம் சங்ககாலத்தில் பெரிதும் வளர்ச்சிபெற்றது.

(2) குருமார்களின் எதிர்ப்பின்மை

வடநாட்டில் குருமார் வேதங்களை வாய்மொழியாகவே கற்க வேண்டுமென்றும் அவற்றை எழுதுவது கூடாது என்றும் நம்பிக்கை கொண்டிருந்தார்கள். இதனாலேயே வேதங்களை 'எழுதாக்கிளவி' (சுருதி) என்று அழைத்தார்கள். இச்சூழ்நிலையில்தான் வடநாட்டில் எழுத்துமுறை தோன்றி ஏறத்தாழ 400 ஆண்டுகள்வரை சம்ஸ்கிருத மொழியில் கல்வெட்டுகளே காணப்படவில்லை. எல்லாக் கல்வெட்டு களும் செப்பேடுகளும் நாணயங்களும் இலச்சினைகளும் பிராகிருத மொழியிலேயே எழுதப்பட்டன. சம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்டுள்ள முதல் முக்கியமான கல்வெட்டு கி.பி. 2–ஆம் நூற்றாண்டில் ஆண்ட ருத்ரதாமன் என்ற மன்னருடையதாகும்.

தமிழகத்தில் கல்வி எந்த ஒரு குழுவிடமோ, சாதியிடமோ கட்டுண்டு கிடக்கவில்லை. மேலே குறிப்பிட்டபடி சங்கப்பாடல்களை எழுதிய புலவர்களும் அதற்கு முன்னரே பானைக்கீறல்களின் மூலம் எழுதிய பொதுமக்களும் சமுதாயத்தின் அனைத்துத் தளங்களிலும் இருந்துள்ளனர்.

(3) தமிழகத்தில் ஊராட்சிமுறை

சங்கத்தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்படும் அம்பலம், பொதியில், மன்றம் போன்ற அமைப்புகளும் தமிழ் – பிராமி கல்வெட்டுகள் குறிப்பிடும் நிகமம் போன்ற அமைப்புகளும் தமிழகத்தில் அக்காலத்திலேயே ஊராட்சிமுறை ஆழமாக வேரூன்றி இருந்தது என்பதற்குச் சான்றுகளாகும். மக்கள் பேசும் மொழியான தமிழ்மொழியே பல்வேறு ஆளும் மன்றங்களுக்கு ஆட்சிமொழியாக

அமைந்திருந்தது. இந்தச் சூழ்நிலையில் எழுத்தறிவு ஓர் அறிவொளி இயக்கமாகவே தமிழகத்தின் கிராமப்புறங்களில் கூட பரவியிருந்தது என்பதற்கு எங்குத் தோண்டினாலும் கிடைத்து வரும் பானைக் கீறல்களையே சான்றுகளாகக் காட்டலாம்.

(4) சமண பௌத்த சமயத் தொண்டு

மேலே குறிப்பிட்டபடி ஏறத்தாழ கி.மு. 3–ஆம் நூற்றாண்டில் சமணமும், பௌத்தமும் தமிழகத்தில் பரவிய போதுதான் இங்கே எழுத்துமுறை முதன்முதலாக உருவாகியது. இவ்விரு சமயங்களுமே வைதிக இந்துமதத்திற்கு எதிராக எழுந்தவை. இச்சமயங்கள் சம்ஸ்கிருதத்தில் உள்ள வேதங்கள் முதலாகிய நூல்களில் நம்பிக்கை கொள்ளவில்லை. இவ்விரு சமயத்தவர்களும் தம்முடைய சமயப் பணியை முதல் காலகட்டத்தில் சம்ஸ்கிருதத்தில் பதிவு செய்யாமல், வடநாட்டில் மக்கள் பேசிய மொழியாகிய பிராகிருதத்திலேயே எழுதியும் பிரசாரம் செய்தும் வந்தார்கள். சமண பௌத்த முனிவர்கள் சமயத் தொண்டிற்காகத் தமிழ்நாட்டுக்கு வந்தபோதும் அதே மரபைப் பின்பற்றினார்கள். அதாவது மக்கள் பேசும் மொழியான தமிழ் மொழியிலேயே தம்முடைய சமய நூல்களை இயற்றி சமயத் தொண்டாற்றினார்கள். இச்சூழ்நிலையில் தமிழகத்தில் சமணமும், பௌத்தமும் தமிழ்மொழிக்கு மிகப்பெரிய தொண்டாற்றியுள்ளன என்பதில் ஐயமில்லை.

இதே காலகட்டத்தில் ஆந்திர – கர்நாடக மாநிலங்களில் பிராகிருதம் ஆட்சிமொழியாகவும், பொதுமொழியாகவும் இருந்ததால் அந்த மாநிலங்களில் பிராகிருதமொழியையே சமணர்களும் பௌத்தர்களும் சமயநூல்களை இயற்றவும் சமயப்பிரசாரம் செய்யவும் பயன்படுத்தினார்கள் என்று கல்வெட்டுகளிலிருந்தும் செப்பேடுகளி லிருந்தும் அறியமுடிகிறது. இந்த மாநிலங்களில் நிலவிய அரசியல், சமுதாய சூழ்நிலை சமயப்பிரசாரம் மக்களின் பேச்சு மொழியில் அமைய உகந்ததாக இல்லை.

(5) தமிழகத்தின் வெளிநாட்டு வாணிபம்

சங்ககாலத்திற்கு முன்னரே தமிழ்மக்கள் 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடும்' பொருட்டு மேலைநாடுகளுடனும் கீழை நாடுகளுடனும் கடல் மூலமாக வாணிபம் செய்துவந்தார்கள். சங்ககாலத்தில் தமிழகத்துடன் நடந்த ரோமானிய வாணிப அளவு எவ்வளவு பரந்தது என்பதைத் தமிழகத்தில் கிடைத்துள்ள ரோமானிய நாணயங்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம். இந்த வாணிபத்தின்

மூலமாகத் தமிழ்நாட்டுக்குப் பெரும் செல்வம் கிடைத்ததுடன் மேலைநாட்டுச் சமுதாயங்களின் எழுத்துமுறைகளைப் பற்றிய அறிவும் கிடைத்தது. அண்மையில் எகிப்து நாட்டில் செங்கடல் கரையில் அமைந்துள்ள க்வெசிர் அல் காதிம், பெரெனிகே, ஆகிய துறைமுகங்களில் தமிழ்மொழியில் தமிழ்–பிராமி எழுத்துகளில் எழுதப்பட்டுள்ள பானைக்கீறல்கள் அகழ்வு ஆய்வுகள் முலமாகக் கிடைத்துள்ளன. இப்பானைக்கீறல்களில் சா[த்]தன், க[ண்]ணன், கொ[ற்]ற[ப்] பூமான் ஆகிய தமிழ்ப் பெயர்கள் எழுதப்பட்டுள்ளன. வியன்னா நகரத்து அருங்காட்சியகத்தில் உள்ள ஒரு பாப்பிரஸ் ஏட்டில் கி.பி.2–ஆம் நூற்றாண்டில் முசிறியிலிருந்த ஒரு தமிழ் வாணிகனுக்கும், எகிப்துநாட்டு அலெக்ஸாந்திரியா நகரிலிருந்த ஒரு ரோமானிய வாணிகனுக்கும் இடையே ஏற்பட்ட கடல்வாணிக ஒப்பந்தம் எழுதப்பட்டுள்ளது. இந்த ஆவணம் கிரேக்கமொழியில் எழுதப்பட்டுள்ளபோதிலும் சங்ககாலத்தில் தமிழகத்தில் கடல் வாணிபம் எவ்வளவு வளர்ச்சியடைந்திருந்தது என்பதைக் காட்டுகிறது. அண்மையில் தாய்லாந்து நாட்டில் ஓர் அருங்காட்சியகத்தில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் கல்லில் பெரும் ப[த்]தன் கல் என்று தமிழ்–பிராமி எழுத்துகளில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்கல் பொன்னின் தரத்தைக் கண்டறிய உதவும் உரைகல் ஆகும் என்று அதை நேரில் பார்வையிட்ட ப. சண்முகம் கூறுகிறார்.

(6) தமிழ் எழுத்துகளின் எளிமை

தமிழ் – பிராமி எழுத்துமுறையில் 8 உயிரெழுத்துகளும் 18 மெய்யெழுத்துகளும் ஆகமொத்தம் 26 எழுத்துகளே உள்ளன. எழுத்துகளின் அமைப்பும் கற்பதற்கு மிக எளிமையாக இருந்தது. எழுதுவதற்காகப் பயன்படுத்திய பனையேடுகளும் தமிழகமெங்கும் ஆண்டுமுழுவதும் தேவையான அளவிற்கு மேலாகவே தாராளமாகக் கிடைத்தன. இரும்பினால் ஆன எழுத்தாணியை கிராமப்புறங்களில் கொல்லர்கள் மிக எளிதாக உருவாக்கியிருக்கமுடியும். குறைந்த எண்ணிக்கையில் எழுத்துகள், எளிய முறையில் அமைந்த எழுத்துருவங்கள், தாராளமாகக் கிடைத்த ஏடும் எழுத்தாணியும் அமைந்திருந்த சூழ்நிலையில் தமிழகமெங்கும் இவ்வெழுத்துமுறை மிக விரைவில் பரவியதில் வியப்பில்லை.

இலங்கையில் எழுத்தறிவு

தமிழகத்திலும் அதன் வடமாநிலங்களாகிய ஆந்திரம், மற்றும் கர்நாடகத்திலும் எழுத்தறிவு தோன்றிய சூழ்நிலை மிகவும் மாறுபட்டு

இருந்தது என்பது இதுவரை பார்த்தோம். இதே காலகட்டத்தில் தமிழகத்திற்குத் தெற்கே உள்ள இலங்கையிலும் பௌத்த மதபோதகர்கள் மூலமாக பிராமி எழுத்துமுறை பரவியபோது அங்கு நிலவிய சூழ்நிலையையும் சுருக்கமாக ஆராயலாம்.

அரசியல் நிலைமையைப் பொருத்தவரை இலங்கையும் அக்காலத்துத் தமிழகத்தைப் போலவே ஒரு சுதந்திர நாடாக இருந்தது. அதனால் அங்கு இந்தியாவிலிருந்து சென்ற எழுத்துமுறை ஓர் அறிவொளி இயக்கமாகவே மலர்ந்தது. சிங்கள அரசின் ஆதரவிலும் பௌத்த பிட்சுகளின் ஒத்துழைப்பிலும் பிராமி எழுத்துமுறை சிங்கள எழுத்துமுறையாக மாற்றியமைக்கப்பட்டது. பழைய சிங்களமும் ஒரு பிராகிருதமொழிதான் என்றாலும் அதன் ஒலியமைப்பு இந்திய பிராகிருதமொழிகளிலிருந்து வேறுபட்டு இருந்தது. பழைய சிங்கள மொழியின் ஒலியமைப்புக்கு ஏற்றவாறு பிராமி எழுத்துமுறை யிலிருந்து நெடில் உயிர் எழுத்துகளும், மூச்சொலி மெய்யெழுத்து களும், வேறு சில ஒலிகளும் நீக்கப்பட்டன. இவ்வாறு மாற்றியமைக்கப் பட்ட எழுத்துமுறையை 'சிங்கள – பிராமி' என்று குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். இக்காலகட்டத்தில் இலங்கையில் பொறிக்கப் பட்டுள்ள குகைக் கல்வெட்டுகள் அனைத்தும் பழைய சிங்கள மொழியிலும், சிங்கள – பிராமி எழுத்துமுறையிலும் அமைந்தவையே. தமிழகத்தைப் போலவே இலங்கையிலும் சிங்களத்தைத் தாய்மொழியாகக் கொண்ட மக்களிடம் கல்வியறிவு மிகப் பரவலாக இருந்தது என்று ஊகிக்க முடிகிறது.

அக்காலத்தில் இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் வாழ்ந்து வந்த தமிழ்மக்களின் நிலை வேறுவிதமாக இருந்தது. சிங்களமே ஆட்சி மொழியாகவும், பொதுமொழியாகவும் இருந்ததால் தமிழ்மக்களும் அங்குப் பொதுஅறிவிப்புகளுக்குச் சிங்களத்தையே பயன்படுத்த வேண்டியிருந்தது. ஆகையால்தான் இலங்கையில் குகைக் கல்வெட்டு களில் தமிழ் வணிகர்களும் சிங்கள மொழியையே பயன்படுத் தினார்கள். ஆயினும் யாழ்ப்பாணம் போன்ற தமிழ்ப்பகுதிகளில் தமிழ்மக்கள் தமக்குள் தமிழ்மொழியையும், தமிழ் – பிராமி எழுத்து முறையையும் கையாண்டனர் என்பது அண்மையில் பூ நகரி, கந்தரோடை ஆகிய பகுதிகளில் கிடைத்துள்ள பானைக்கீறல் எழுத்துகளிலிருந்து தெரியவருகிறது.

தமிழகத்தில் முதல் அறிவொளி இயக்கத்தின் விளைவுகள்

தொன்றுதொட்டு பேச்சுமொழியாக இருந்த தமிழ்மொழி எழுத்துமொழியாக மாறிய காலத்தில் தமிழ்ச்சமுதாயத்தில் மிகப்பெரிய மாறுதல்கள் ஏற்பட்டிருக்கவேண்டும். இம்மாறுதல்களைப்பற்றி

வரலாற்று ஆய்வாளர்கள் இன்றும் ஆழ்ந்து கணிப்பு செய்யவில்லை என்பது என் கருத்து. அக்காலத்தில் நிகழ்ந்த பெரும் மாறுதல்களில் முக்கியமான சிலவற்றை மட்டும் இவ்வாய்வுரையின் முடிவில் குறிப்பிடுகிறேன்.

(1) இனக் குழுக்களின் தலைவர்கள் பேரரசர்களாக வளர்ந்தனர். எழுத்தறிவின் மூலமாக கணக்கு வைத்துக்கொள்ளும் முறை வளர்ந்து பல்வகையான வரிகள் போடும் சூழ்நிலை உருவாகியது. வெளிநாடுகளுடன் அரசியல், வாணிப உறவுகள் எழுதப்பட்ட ஒப்பந்தங்களின் மூலமாக வலுப்பெற்றன.

(2) அரசின் தலைமையகங்களும், துறைமுகங்களும், வணிக மையங்களும் பெருநகர்களாக வளர்ச்சியுற்றன.

(3) பெரும் கோயில்கள் எழுப்பப்பட்டு அவையே ஊர்களின் பள்ளிகளாகவும், வங்கிகளாகவும், ஆவணப்பதிவகங்களாகவும், சமய மையங்களாகவும், ஊராட்சி நிலையங்களாகவும் பன்முனை வளர்ச்சிபெற்றன.

(4) மேலைநாடுகளுடனும், கீழைநாடுகளுடனும் கடல் வாணிகம் பெருகியது.

(5) தமிழே ஆட்சிமொழியாகவும், பொதுமொழியாகவும் இருந்ததாலும், தமிழின் எழுத்துமுறை கற்பதற்கு மிகவும் எளிதாக அமைந்ததாலும் எல்லோருக்கும் கல்வி வாய்ப்புப் பெருகி, ஊராட்சியில் பொதுமக்கள் அதிகமாகப் பங்கேற்கும் வாய்ப்புகள் கிடைத்தன.

(6) தொன்றுதொட்டு வாய்மொழியாக இருந்தபோதே மிகவும் வளமடைந்திருந்த தமிழ்மொழி, எழுத்துமுறை உருவாகிய பிறகு மேலும் வளர்ந்து இலக்கியங்கள் தோன்றி ஓர் உயரிய செம்மொழியாக பரிணாம வளர்ச்சி அடைந்தது. இதையே 'சங்ககாலம்' என்று குறிக்கிறோம். தமிழ்மொழியில் ஏற்பட்ட இந்த வளர்ச்சி மற்ற தென்மாநிலங்களைக் காட்டிலும் ஏறத்தாழ ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிவிட்டது என்பது வரலாறு காட்டும் உண்மையாகும்.

தமிழாக்கம்: ஐயந்தி நாராயணசுவாமி

---

2. குன்னத்தூர்க் குடைவரைகள்

கோ. வேணிதேவி, இரா. கலைக்கோவன்

மதுரை சிவகங்கைச் சாலையில் பதினேழு கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது வரிச்சியூர். இங்கிருந்து களிமங்கலத்திற்குப் பிரியும் தெற்குச் சாலையில் ஏறத்தாழ ஒரு கிலோமீட்டர் தொலைவில் உள்ள குன்னத்தூரை அடுத்திருக்கும் மலைத்தொகுப்பில், மூன்று குடைவரைகள் காணப்படுகின்றன. இவற்றுள் முதற் குடைவரை சாலையை ஒட்டிய மலைச்சரிவின் கிழக்கு முகத்திலும் இரண்டாம் குடைவரை அதே மலையின் மேற்கு முகத்திலும் வெட்டப்பட்டுள்ளன. இரண்டுமே அளவிற் சிறியன என்றாலும், முதற் குடைவரையினும் இரண்டாவது சற்றுப் பெரியதாக, முகப்பு, முகமண்டபம் என்ற அமைப்பில் அமைக்கப்பட்டுள்ளது. மூன்றாம் குடைவரை, முதலிரண்டு குடைவரைகள் அகழப்பட்டுள்ள மலைக்குப் பின்புறத்தே சற்றுத் தொலைவில் காணப்படும் மலையில் கிழக்குமுகமாக அகழப்பட்டுள்ளது.[1]

முதற் குடைவரை

மலையின் சரிவு நன்கு வெளிவாங்கி அமைந்திருப்பதாலும் குடைவரை நன்கு உள்தள்ளிய நிலையில் குடையப்பட்டிருப்பதாலும் குடைவரைக்கு முன்னே பேரளவிலான தரைப்பகுதியும், பக்கங்களில் மேலிருந்து கீழாக அகலப்படும் பாறைச் சுவர்களும் வாய்த்துள்ளன. முகப்பு, முகமண்டபம் போன்ற வரையறுக்கப்பட்ட அமைப்புகளின்றிக் கருவறை மட்டுமே அமைந்துள்ள இக்குடைவரையின் தென்பக்கச் சுவரில் கோட்டம் ஒன்று அகழ்ந்து, பிள்ளையார் வடிவத்தைச் செதுக்கியுள்ளனர். இச்சிற்பத்தின் வயிற்றுக்குக் கீழ்ப்பட்ட பகுதிகள் சிதைக்கப்பட்டுள்ளன. வடபுறச் சுவர் வெறுமையாக உள்ளது.

கருவறையின் முன் பரந்து கிடக்கும் பாறைத் தரை நன்கு சமன் செய்யப்பட்டுள்ளது. இதன் மீது, கருவறை வாயிலுக்கு எதிரில் இருக்குமாறு, பிற்கால நந்தியொன்று இருத்தப்பட்டுள்ளது.

முறையான தாங்குதளம் ஏதுமின்றி, 3.93மீ. அகலத்திற்கு, 1.94மீ. உயரத்திற்கு அமைக்கப்பட்டுள்ள கருவறை முன்சுவரின்

இக்கட்டுரைக்கான களஆய்வுப் பணிகள் பேரா. கோ. வேணிதேவி அறக்கட்டளை உதவியுடன் மேற்கொள்ளப்பட்டன.



முதற் குடைவரை

நடுவில் வாயில் காட்டப்பட்டுள்ளது. நிலைக்கால்களும் மேல், கீழ் நிலைகளும் கொண்டமைந்துள்ள இவ்வாயிலின் அகலம் 66செ.மீ. இதன் கீழ்நிலை சிதைக்கப்பட்டுள்ளது. வாயிலையொட்டி பக்கத்திற் கொன்றாக இரண்டு அரைத்தூண்களும் முன்சுவர், பக்கச் சுவர்களைச் சந்திக்கும் இடத்தில் பக்கத்திற்கு ஒன்றாக இரண்டு அரைத்தூண்களும் பொளியப்பட்டுள்ளன. இவ்வரைத்தூண்கள் நான்கும் சதுரம், கட்டு, சதுரம் என்ற அமைப்பிலிருக்கச் சதுரங்களின் கிழக்குமுகங்களில் மட்டும் தாமரைப் பதக்கங்கள். மேற்சதுரத்தின் மீதமர்ந்துள்ள போதிகை, தரங்கக் கைகளால் உத்திரம் தாங்குகிறது. உத்திரத்திற்கு மேல் வாஜனம். வாஜனத்தையொட்டியுள்ள கூரைப்பகுதி நன்கு சமன் செய்யப்பட்ட நிலையில் 64 செ.மீ. நீளத்திற்கு முன்னோக்கிப் பரந்துள்ளது. இதன் முகப்பு கபோதமாய்ச் செயற்படுகிறது. இக்கூரையும், பக்கச் சுவர்களும் கருவறைக்கு முன் ஒரு மண்டபம் அமைந்திருப்பது போல் தோற்றமுண்டாக்கினாலும் இப்பகுதியை மண்டபமாய்க் கொள்ளமுடியாது.[2]

சுவர்த் தூண்களுக்கு இடைப்பட்ட பகுதியில், கருவறை வாயிலின் இருபுறத்தும் கோட்டங்கள் அகழப்பட்டுள்ளன. இக்கோட்டங்களில் பக்கத்திற்கொருவராக இரண்டு வாயிற்காவலர்கள் நிற்கின்றனர். கருவறை நோக்கிய நிலையில் திரும்பியிருக்கும் இருவருமே ஸ்வஸ்திகப் பாதங்களுடன் காட்சிதருகின்றனர்.

1.92மீ. உயரமும், தென் வடலாக 2.63மீ. நீளமும், கிழக்கு மேற்காக 2.59மீ. அகலமும் கொண்டுள்ள கருவறையின் சுவர்கள் வெறுமையாக உள்ளன. சுவர்கள் கூரையைத் தொடுமிடத்து, கிழக்கு முகம் தவிர ஏனைய திசைகளில் சுற்றிலும் வாஜனம் காட்டப்பட்டுள்ளது. கருவறையின் நடுப்பகுதியில் பாறையிலேயே வெட்டப்பட்ட சதுரமான ஆவுடையார் பெரிய லிங்க பாணத்துடன் அமைந்துள்ளது. ஜகதி, கண்டம், பட்டிகை என அமைந்துள்ள ஆவுடையாரின் மேற்பரப்பு சற்றுப் பள்ளமாக அகழப்பட்டுள்ளது.

சிற்பங்கள்

1. பிள்ளையார்

67செ.மீ. அகலமுள்ள தென்சுவர்க் கோட்டத்தில் பிள்ளையாரின் அமர்நிலைச் சிற்பம் இடம்பெற்றுள்ளது.[3] இன்ன அமர்நிலையென்று அடையாளம் காணவியலாதவாறு சிற்பத்தின் கீழ்ப்பகுதி சிதைந்துள்ளது. கரண்ட மகுடமும் மேற்கையணிகளும் அணிந்து, வலக்கையைக் காப்பு முத்திரையில் காட்டி, இடக்கையை இடுப்பில் வைத்திருக்கும் இப்பெருமானின் வடிவம் சில இடங்களில் முழுமை யடையாதது போன்று தோன்றுகிறது.

2. வாயிற்காவலர்கள்

1.65மீ. உயரமும், 1.50மீ. அகலமும் கொண்டுள்ள வலக்கோட்டத்தில் ஒருவரும், 1.65மீ. உயரமும், 1.40மீ. அகலமும் கொண்டுள்ள இடக்கோட்டத்தில் ஒருவருமாய் நிற்கும் வாயிற்காவலர்கள் இருவருமே, கருவறை நோக்கியவர்களாய், ஸ்வஸ்திகப் பாதங்களுடன் நிற்கின்றனர். கால்களில் கிண்கிணியும் கைகளில் வளைகளும் இடுப்பில் சிற்றாடையும் அணிந்து சடைகளை மகுடமாய் முடிந்துள்ள இவ்விருவரில், வலப்புறத்தார் உருள்பெருந்தடி கொண்டிருக்க, இடப்புறத்தார் தம் இருகைகளையும் மார்போடு ஒட்டிய நிலையில் குறுக்கீடு செய்து, உள்ளங்கைகளை மேற்கைகளின் மீது பதித்தவாறு பயபக்தியுடன் காட்சிதருகிறார். இவரது மார்பும் முகமும் சிதைக்கப்பட்டுள்ளன.

வலப்புறத்தாரின் உருள்பெருந்தடி அவரது இடக்கைக் குழிவில் முட்டுக்கொடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. அவருடைய வலக்கை அதைப் பற்றியவாறுள்ளது.[4] வலக்காவலர் கோட்டக் கீழ்த் தளத்தில் கால் பதித்திருக்க, இடக்காவலருக்கு கோட்டக் கீழ்த் தளத்திலிருந்து சற்று உயர்ந்த நிலையில் தனித்தளம் காட்டப்பட்டுள்ளது. இவர்தம் கால் கிண்கிணிகள் செவல்பட்டிக் குடைவரைக் காவலர்களை நினைவு படுத்துகின்றன. இடப்புறக் காவலரின் பயபக்தியான குறுக்கீட்டு கைமடக்குத் தோற்றம் குன்றக்குடி குடைவரை கருடனை நினைவூட்டு கிறது. இதே போலமைந்த ஆடவர் தோற்றமொன்று சீனிவாசநல்லூர் குரங்கநாதர் கோயிலின் தென்தேவகோட்டமொன்றில் இடம்பெற் றிருப்பதும் இங்குக் கருதத்தக்கது.

கல்வெட்டு

இக்குடைவரையின் கருவறை வாயில் வடநிலையில் கல்வெட்டொன்று சிதைந்த நிலையில் காணப்படுகிறது.[5] எஞ்சியிருக்கும் எழுத்துகளின் அமைப்பு கொண்டு இக்கல்வெட்டை எட்டல்லது ஒன்பதாம் நூற்றாண்டுக்குரியதாகக் கொள்ளலாம்.

இரண்டாம் குடைவரை

முதற் குடைவரையுள்ள மலையின் பின்புறத்தே, சரிவின் கீழ்ப்பகுதியில், மேற்கு நோக்கிய நிலையில் இரண்டாம் குடைவரை வெட்டப்பட்டுள்ளது. பாறைச் சரிவு தென்புறத்தைவிட வடபுறம் சற்று முன்னோக்கி அமைந்துள்ளதால் குடைவரையின் தென்புறச் சுவரைவிட வடபுறச்சுவர் நன்கு முன்னோக்கி நீண்டுள்ளது. மண் சாலையிலிருந்து 96செ.மீ. உயரத்தில் அமைந்துள்ள குடைவரையின் முகப்பிற்கு முன்னுள்ள தரைப்பகுதி தென்வடலாக 4மீ. நீளத்திற்கும், கிழக்கு மேற்காக 2.60மீ. அகலத்திற்குமாய் அமைந்துள்ளது. முற்பகுதி ஒழுங்கற்று இருந்தபோதும், குடைவரையின் பக்கச் சுவர்களுக்கு உட்பட்ட தரைப்பகுதி பெருமளவு சமன் செய்யப்பட்டுள்ளது. முதற் குடைவரையைப் போல் அல்லாது முகப்பு, முகமண்டபம், கருவறை என்ற அமைப்பில் குடையப்பட்டுள்ள[6] இக்குடைவரையிலும் முதற் குடைவரையில் இருப்பது போலவே பிற்காலத்து நந்தியொன்று இருத்தப்பட்டுள்ளது.



இரண்டாம் குடைவரை

குடைவரையின் முகப்பு தென், வடபகுதிகளில் இரு பெரும் அரைத்தூண்களைக் கொண்டுள்ளது. இவற்றுக்கு இடையிலுள்ள 2.05மீ. அகலத் திறப்பு முகமண்டபத்திற்கான ஒரே நுழைவாயிலாய் அமைந்துள்ளது.[7] இந்த இரண்டு அரைத்தூண்களில் 37செ.மீ. அகலமுள்ள வடபுறத் தூணே முழுமை பெற்றுள்ளது. கீழே 1.26மீ. உயரமுள்ள பெருஞ்சதுரம், இடையில் 15செ.மீ. உயரமுள்ள மிகச் சிறு கட்டு, மேலே சிறிய அளவிலான 19செ.மீ. உயரச் சதுரம் எனப் பகுத்து[8] வடிக்கப்பட்டுள்ள இவ்வரைத்தூணின் போதிகை,[9] நடுவில் பட்டையுள்ள தரங்கக் கையால், உயரம் குறைந்த ஆனால் அகலமாகக் காட்டப்பட்டிருக்கும் உத்திரத்தைத் தாங்குகிறது. உத்திரத்தையடுத்து அகலமான வாஜனமும் அதையடுத்துச் சிறு நீட்டலாய்க் கபோதமும் வெட்டப்பட்டுள்ளன.



அரைத்தூணில் விமான அமைப்பு

அரைத்தூணின் மேற்குமுகம் ஏறத்தாழ முழு அளவிற்குமாய் ஒருதள விமானம் போல அழகுபடுத்தப்பட்டுள்ளது. உபானம், ஜகதி,

கம்புகளின் தழுவலில் அமைந்த கண்டம், கீழ்மடிப்போடு கூடிய கபோதம் என்றமைந்த துணைத்தள அமைப்பின் மீது கம்பொன்று செதுக்கப்பட்டுள்ளது. அதன் மீது சிறு வேதிகையும், வேதிகை யிலிருந்து எழுமாறு இரு சிறு அரைத்தூண்களும் காட்டப்பட்டுள்ளன. இவ்வரைத்தூண்களும் முகப்பு அரைத்தூண்களைப் போலவே பெருஞ்சதுரம், சிறுகட்டு, சிறு சதுரம் எனப் பகுக்கப்பட்டுள்ளன. அரைத்தூண்களுக்கு இடைப்பட்ட சுவரில் கோட்டமொன்று அகழப் பட்டுள்ளது. அரைத்தூண்களின் போதிகைகள், பக்கக் கைகளை மேல் நோக்கி விரிகோணத்தில் திருப்பி உத்திரம் தாங்குகின்றன. உத்திரத்திற்கு மேல் வாஜனமும், அதையடுத்துக் கீழ்மடிப்புடன் கூடிய கபோதமும் உள்ளன. இந்தத் தளமுடிவின் மேல் கம்புகளின் தழுவலில் அமைந்த கண்டப் பகுதியொன்றும் அதன் மீது கீழ்மடிப்புடன் கூடிய கபோதமொன்றும் இரண்டாம் முறையாகக் காட்டப்பட்டுள்ளன. இவ்வமைப்பைக் கிரீவ மற்றும் சிகரப் பகுதி போலக் கொள்ளலாம். கபோதத்தின் மேல் ஒரு கம்பும் அதன் மீது ஏழு நீட்டல்களுடன் தூபி போன்றதொரு அமைப்பும் வெட்டப்பட்டுள்ளன. பெருமாளின் மார்பில் காணப்படும் 'திருமறு' போல, ஆனால் அதனினும் கூடுதலான பக்க நீட்டல்களுடன் காணப்படும் இவ்வமைப்பு, மிகப் புதுமையான உச்சியாக அமைந்துள்ளது. இவ்வரைத்தூணின் தென்முகத்திற்கும், மேற்குமுகத்தில் அமைந் திருக்கும் இந்தச் செதுக்கல் அலங்கரிப்பிற்கும் இடையில் முழு நீளத்திற்குமாய் உத்திரத்திலிருந்து இறங்குமாறு சதுரப்பட்டியொன்று காட்டப்பட்டுள்ளது. பல குடைவரைகளில் இது போன்ற சதுரப்பட்டி முகப்பு வாஜனத்திலிருந்து அரைத்தூண்களை ஒட்டி இறங்குமாறு காட்டப்பட்டிருப்பது இங்கு நினைவுகூரத்தக்கது. தென்புற அரைத் தூணையும் வடபுற அரைத்தூண் போலவே அழகுபடுத்தும் முயற்சியின் தொடக்கச் சுவடுகள் தெரிகின்றன. இப்பணி ஏனோ தொடரப்படவில்லை.

முகமண்டபம் 1.95மீ. உயரமும், கிழக்கு மேற்காக 63செ.மீ. அகலமும், தென்வடலாக 3.11மீ. நீளமும் கொண்டு அமைந்துள்ளது. இதன் தரை, கூரை, சுவர்கள் அனைத்தும் வெறுமையாக உள்ளன. பின்சுவரின் நடுப்பகுதியில் கருவறை குடையப்பட்டுள்ளது. 67செ.மீ. அகலமும், 1.55மீ. உயரமும் உள்ள கருவறை வாயில், நிலைக்கால்களும் மேல், கீழ் நிலைகளும் கொண்டமைந்துள்ளது. கீழ்நிலை, நடுவில் வெட்டிச் சிதைக்கப்பட்டுள்ளது. இவ்வாயிலின் முன்புறத்தே, நிலையமைப்பையொட்டிக் காட்டப்பட்டிருக்கும் அடுக்குச் சட்டக அமைப்பு, வேறெந்தக் குடைவரை வாயிலிலும் காணமுடியாத அரியதோர் அமைப்பாகும்.

வாயில் நிலையமைப்பை அடுத்து வாயில் முழுமைக்குமாய் இரண்டு எளிய சட்டகங்களும், அவற்றையடுத்து ஆழமான குழிவும் கருவறை முகப்புச் சுவரில் வெட்டப்பட்டுள்ளன. குழிவையடுத்து

மற்றொரு சட்டகம் வெட்டப்பட்டுள்ளது. இதையடுத்து வாயிலின் இருபுறத்தும் பக்கத்திற்கொன்றாக இரண்டு அரைத்தூண்கள் முயற்சிக்கப்பட்டுள்ளன. இவ்வரைத்தூண்களின் உடலில் சதுரமும் கட்டும் அடுத்தடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இவ்வமைப்பு வடதூணில் தெரியும் அளவிற்குத் தென்தூணில் அமையவில்லை. முகமண்டபக் கூரையில் கருவறை வாயிலையொட்டியும், முகப்பையொட்டியும் இரண்டு ஆழமான குழிவுகள் வெட்டப்பட்டுள்ளன.

1.90மீ. உயரமும், தென்வடலாக 2.56மீ. நீளமும், கிழக்கு மேற்காக 2.50மீ. அகலமும் கொண்டுள்ள கருவறையின் சுவர்களும் கூரையும் சரியாகச் சமன் செய்யப்படாமலும், வெறுமையாகவும் உள்ளன. கருவறையின் நடுவில் பாறையில் வெட்டிய லிங்கத் திருமேனி காட்சியளிக்கிறது. துணை உபானம், உபானம், ஜகதி, கம்புகளின் தழுவலில் அமைந்த கண்டம், பட்டிகை, மேற்கம்பு என்றமைந்த 68செ.மீ. உயர ஆவுடையாரின் மீது லிங்கபாணம் வெட்டப்பட்டுள்ளது. சிறு கோமுகம் ஒன்று வடபுறம் காட்டப் பட்டுள்ளது. இந்த ஆவுடையாரின் நீளம் 1.13மீ. அகலம் 90செ.மீ.

மூன்றாம் குடைவரை

இரண்டாம் குடைவரையிலிருந்து ஏறத்தாழ ஐம்பது மீட்டர் தொலைவு மண்பாதையிலும் மலைப்பாறைகளிலும் பயணம் செய்தே மூன்றாம் குடைவரையுள்ள குன்றை அடையமுடியும். பெரும் பாறை யொன்றின் கிழக்குச் சரிவில் வெட்டப்பட்டுள்ள இக்குடைவரையின் வடபுறத்தே அழகிய தாமரைச் சுனையொன்று பாறைப் பிளவை நிறைத்தபடி அமைந்துள்ளது. கருவறை மட்டுமே கொண்டுள்ள இக்குடைவரையின் முன்னால், பிற்காலத்தில் மண்டபமொன்று எடுத்து, வாயில் வைத்து, இப்போது கதவுமிட்டுப் பூட்டி வைத்திருப்பதுடன், மண்டபத்தின் முன் திறந்தவெளியில் உயரமான தளமெடுத்து நந்தியொன்றையும் அமர்த்தியுள்ளனர் கோயிலார். நந்திக்குப் பின்னால் ஒரு பாறையைக் குடைந்து கருவறையாக்கும் முயற்சி தொடங்கப்பட்ட நிலையில் விடப்பட்டுள்ளது.

நீலகண்ட சுவாமி கோயில் என்றழைக்கப்படும் இம்மூன்றாம் குடைவரை, முதற் குடைவரை போலவே கருவறை மட்டுமே கொண்டு அமைந்துள்ளது. தாங்குதள, துணைத்தள அமைப்புகள் ஏதுமின்றிக் காணப்படும் கருவறையின் முகப்புச் சுவர் நடுவே கருவறைக்கான வாயில் வெட்டப்பட்டுள்ளது.

நிலைக்கால்கள் மற்றும் மேல், கீழ்நிலைகளுடன் அமைந்துள்ள இவ்வாயிலை அடைய இதன் முன்னர் பாறையில் வெட்டிய நான்கு படிகள் காணப்படுகின்றன. இவற்றுள் இரண்டாவது படி நிலாக் கல்லாக வடிவமைக்கப்பட்டுள்ளது. கருவறை வாயிலின் இருபுறமும் கோட்டங்கள் அகழப்பட்டுள்ளன. இக்கோட்டங்களை அணைவு செய்யுமாறு போல இருபுறத்தும் அரைத்தூண்கள் வடிக்கப்பட்டுள்ளன.

சதுரம், கட்டு, சதுரம்[10] என்ற அமைப்பிலுள்ள இவ்வரைத்தூண்கள், தம் போதிகைகளின் விரிகோணக் கைகளால் உத்திரம் தாங்குகின்றன. உத்திரத்தையடுத்து வாஜனம் மட்டுமே வெட்டப்பட்டுள்ளது. வலபியோ, கபோதமோ காணுமாறு இல்லை. கோட்டங்களில் பக்கத்திற்கொருவராக வாயிற்காவலர்கள் காட்டப்பட்டுள்ளனர்.



மூன்றாம் குடைவரை

கருவறையினுள் பாறையிலேயே உருவாக்கப்பட்ட லிங்கத் திருமேனி சதுர ஆவுடையாரும் பாணமுமாய் அமைந்துள்ளது. இதன் வடபுறம் சிறு கோமுகம் காட்டப்பட்டுள்ளது. கருவறையின் சுவர்கள் வெறுமையாக உள்ளன. கூரையை ஒட்டிச் சுவர்களின் நாற்புறமும் அகலமான வாஜனம் வெட்டப்பட்டுள்ளது. கூரையில் லிங்கத்திற்கு நேர்மேலே தாமரைப்பதக்கமொன்று முயற்சிக்கப்பட்டுள்ளது. இது தமிழகத்தின் வேறெந்தக் குடைவரையிலும் காணப்படாத சிறப்பாகும்.

இக்குடைவரையின் தென்புறத்தே உள்ள பாறைச் சரிவில் பிள்ளையாரின் வடிவம் செதுக்கப்பட்டுள்ளது. குடைவரைக்கு முன்னுள்ள மண்டபம், இப்பிள்ளையாரையும் உள்ளடக்கி அவருக்குத் தனித்திருமுன் காட்டியிருக்கிறது. வடபுறத்தே மயில் மீதமர்ந்த நிலையிலான முருகப் பெருமானின் சிற்பமொன்று இருத்தப் பட்டுள்ளது. இவரது முன்கைகள் காப்பும் அருளும் காட்டப் பின்கைகளில் வலப்புறம் சக்தியும் இடப்புறம் வஜ்ரமும் உள்ளன.

சிற்பங்கள்

1. வாயிற்காவலர்கள்

மூன்றாம் குடைவரையின் கருவறை வாயிலையொட்டிய கோட்டங்களில் காணப்படும் இரண்டு காவலரில், வலப்புறமிருப்பவர் கருவறையை நோக்கித் திரும்பியுள்ளார். வலக்கால் நேராக ஊன்றியிருக்க, இடக்காலை முழங்காலளவில் மடக்கி, இடப்பாதத்தை, வலப்பாதமொட்டிய உத்கட்டிதமாய்க் காட்டியுள்ளார். இவரது இடுப்புச் சிற்றாடையின் முடிச்சுகள் அழகுற வடிக்கப்பட்டுள்ளன. முகமும் கைகளும் மார்புப்பகுதியும் பெருமளவு சிதைந்துள்ளன. இவரது வலக்கை, பாம்பு சுற்றியுள்ள உருள்பெருந்தடியின் மீது தாங்கலாக அமர, இடக்கை முகம் நோக்கி மடிந்த நிலையில் தடியின் மீது வைக்கப்பட்டுள்ளது.

இடப்புறக் காவலர்

இடப்புறம் இருப்பவர் சமபாதராய்ச் சற்றே வலப்புறச் சாய்வு காட்டி, நேர்ப் பார்வையுடன் நிற்கிறார். சிற்றாடையின் பக்க மற்றும்

நடு முடிச்சுகள் அழகுத் தொங்கல்களாக்கப்பட்டுள்ளன. மேற்கைகளில் கங்கணங்களும் மணிக்கட்டுகளில் வளைகளும் செவிகளில் பனையோலைக் குண்டலங்களும் கழுத்தில் பட்டையான அட்டிகையும் கொண்டிலங்கும் இவரது தலையில் கரண்ட மகுடம். இடக்கையில் மலரேந்தியுள்ள இவரது தோள்புறத்தே மகுடம் மீறிய சடைப்புரிகள் கற்றைகளாய்த் தாழ்ந்துள்ளன. இடக்கையிலிருக்கும் மலரைத் தொட்ட நிலையில் வலக்கை காட்டப்பட்டுள்ளது.

2. பிள்ளையார்

சம்மண நிலையில் அமர்ந்துள்ள பிள்ளையாருக்குச் சிற்றாடையும் வயிற்றின் நடுவே பட்டையான உதரபந்தமும் காட்டப் பட்டுள்ளன. முப்புரி நூல், வயிற்றுக்கு மேற்பட்ட பகுதியில் உருளை யாகவும் வயிற்றுப்பகுதியில் பட்டையாகவும் காட்டப்பட்டுள்ளது. கரண்ட மகுடமும், கங்கணங்களும், வளைகளும், கண்டிகையுமாய்ப் பல அணிகலன்களுடன் காணப்படும் பிள்ளையாரின் வல முன்கை வயிற்றருகே மோதகம் ஏந்தியிருக்க, இட முன்கை வயிற்றின் மீதமர்ந்துள்ளது. பின்கைகளில் வலப்புறம் சிறு தடியும்[11] இடப்புறம் கரும்புத்தோகையும் காட்டப்பட்டுள்ளன. வலம்புரியாக உள்ள துதிக்கையிலும் மோதகம். இவரது வலத் தந்தம் உடைந்துள்ளது. பாண்டியர் பகுதிகளில் பிள்ளையார் இல்லாத குடைவரை மிக அரிதாகவே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிள்ளையார்

கல்வெட்டுகள்

இக்குடைவரையின் கருவறை முகப்புச் சுவர்த் தூண்களின் சதுரங்களிலும் பிள்ளையார் கோட்டத் தென்சுவரிலும் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவை இக்கோயிலை சதாசர்வ காலமும் வழிபட்ட அரியரி புத்திரன், தீத்தார் பழியஞ்சி, அதிவீரன் ஆசாரி மகன் தேவ பண்டாரம் ஆகியோர் பெயர்களைத் தருகின்றன.

அன்னையர் எழுவர் திருமுன்

மூன்றாம் குடைவரை அமைந்துள்ள பெரும் பாறையின் பின்புறமுள்ள மற்றொரு பெரும் பாறையில் அன்னையர் எழுவர் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.[12] இச்சிற்பங்களுக்கு முன்னாலும் பிற்கால மண்டபமொன்று கட்டப்பட்டுள்ளது. 'சத்தரிசிகள் மண்டபம்' என்று பெயரிடப்பட்டுள்ள இம்மண்டபத்தைக் கன்னிவாடி கு.கிருஷ்ணசாமி அய்யரும் அவரது மகன்களும் 1952இல் உபயமாகக் கட்டியுள்ளனர். குடைவரையுள்ள பாறையையும் அன்னையர் எழுவர் பாறையையும் சுவர்களால் இணைத்து இம்மண்டபம் கட்டப்பட்டுள்ளது. மண்டபச் சுவர்களில் தெற்கிலும், கிழக்கிலும் கல்வெட்டுச் சிதறல்கள் காணப்படுகின்றன. தென்புறம் குலசேகரரின் கல்வெட்டு ஒன்று ஏறத்தாழ முழுமையான அளவில் உள்ளது.

அன்னையர் அமர்ந்துள்ள பாறைப்பகுதி 1.69மீ. உயரத்திற்கும் 3.23மீ. அகலத்திற்குமாய் வெட்டப்பட்டுள்ளது. மூன்றடுக்குகளாய் உள்ள இவ்வமைப்பில் அன்னையர் அமர்ந்திருக்கும் மேலடுக்கு, பாறைத் தரையிலிருந்து 43செ.மீ. உயரத்தில் உள்ளது. அன்னையரின் கீழிறக்கப்பட்ட கால்கள் ஊன்றப்பட்டிருக்கும் நடு அடுக்கு மேலடுக்கி லிருந்து 23செ.மீ. கீழே உள்ளது. பாறைத் தரையான இறுதியடுக்கு நடு அடுக்கிலிருந்து 24செ.மீ. தாழ உள்ளது.

தலைகீழ்ப் பகரமாய் அமைக்கப்பட்டிருக்கும் அமர்வுத் தளத்தில் முதல்வராய்ச் சிவபெருமான் காட்டப்பட்டுள்ளார். இவரும் சாமுண்டியும் மட்டுமே எதிரெதிர் நோக்கியவர்களாய் மகாராஜ லீலாசனத்தில் தென்புறத்தும் வடபுறத்தும் அமர்ந்திருக்க, ஏனைய அன்னையர் அறுவரும் கிழக்கு நோக்கியவர்களாய் சுகாசனத்தில் அமர்ந்துள்ளனர். இவ் ஆறு அன்னையருள் நான்முகி மட்டுமே இடக்காலைக் கீழிறக்கியுள்ளார். ஏனையர் ஐவரும் வலக்காலைக் கீழிறக்கிய சுகாசனத்தில் உள்ளனர். இவர்கள் அறுவர்க்கும் மேலே பாறைச் சுவரில் தோரணத் தொங்கல்கள் காட்டப்பட்டுள்ளன. சாமுண்டிக்கு மட்டும் தலைக்குப் பின்னால் ஒளிவட்டம்.

சிற்பங்கள்

சிவபெருமான் சடைகளை மகுடமாய் முடித்து, செவிகளில் பனையோலைக் குண்டலங்களுடன்,[13] கழுத்தில் அட்டிகையும், கைகளில் கங்கணங்கள் மற்றும் வளைகளும் கொண்டு, மகாராஜ லீலாசனத்தில்[14] அமர்ந்துள்ளார். இவரது இடக்கை தொடை மீதிருக்க வலக்கை வல முழங்கால் மீது கடகமாய்[15] அமர்த்தப்பட்டுள்ளது. அழகு பொலிய அமைக்கப்பட்டுள்ள இவரது முகத்தின் வலப்புறம், எட்டிப் பார்ப்பதுபோல நந்தியின் தலை காட்டப்பட்டுள்ளது. திருக்கோளக்குடி அன்னையர் எழுவர் தொகுதியிலிருக்கும் சிவபெருமானுக்கும் நந்தியின் அமைப்பு இது போலவே உள்ளமை இங்கு நினைக்கத்தக்கது.

அன்னையர் அனைவருமே கணுக்கால்வரை ஆடையணிந் துள்ளனர். இவர்தம் ஆடை முடிச்சுகள் தளத்திலிருந்து தொங்குமாறு காட்டப்பட்டுள்ளன. இவர்தம் இடக்கை தொடை மீதிருக்க வலக்கை மார்பருகே கடகமாய் உள்ளது.[16] நான்முகி சடை மகுடராய்ப் பூட்டுக் குண்டலங்களுடன், கைகளில் வளைகளும் கழுத்தில் அட்டிகையுமணிந்து மார்புக் கச்சுடன் அமர்ந்துள்ளார்.



அன்னையர் எழுவர் திருமுன்

மயேச்சுவரி சடைமகுடராய்க் காட்சியளிக்கிறார். வைணவியும், வராகியும் கிரீட மகுடமணிந்து பூட்டுக் குண்டலங்களுடன் அமர்ந்திருக்க, கௌமாரி பனையோலைக் குண்டலங்களும் கரண்ட மகுடமுமாய்ச் சென்னியுடன் காட்சிதருகிறார். இந்திராணியின் மகுடம்

உடைந்துள்ளது. இவ்வன்னையர் அனைவர்க்குமே இரண்டு கரங்கள்தான் காட்டப்பட்டுள்ளன. கருவிகள் காட்டப்படா நிலையில் இவர்களை அடையாளம் காண மகுட அமைப்பும், வரிசை மரபுமே பெருமளவு உதவுகின்றன.



சாமுண்டி

சாமுண்டி[17] தென்பார்வையாய் மகாராஜ லீலாசனத்தில்[18] அமர்ந்துள்ளார். 'எலும்பும் தோலுமாய் நாரும் நரம்புமாய்' என்று சொல்லப்படும் வண்ணனைக்கேற்றவராய் வடிவமைக்கப்பட்டுள்ள இவ்வம்மையின் செவிகளில் பிணக்குண்டலங்கள். மார்பகங்கள் தளர்ந்து தொங்குமாறு காட்டப்பட்டுள்ளன. அகலத் திறந்த வாயில் கோரைப்பற்கள்; கண்கள் பிதுங்கியிருப்பதும், வல முழங்கால் மீதமர்ந்துள்ள வலக்கை கத்தியொன்றை இறுகப் பற்றியிருப்பதும் இவ்வடிவத்திற்கு அச்சுறுத்தும் தோற்றத்தை மிக எளிதாக உருவாக்கியுள்ளன. ஊனுருகி அமர்ந்துள்ள இத்தோற்றம் பிற சாமுண்டியர் வடிவங்களிலிருந்து பெரிதும் வேறுபட்டுள்ளது.

கல்வெட்டுகள்

அன்னையர் எழுவர் மண்டபத்துச் சுவர்களின் உட்புறமும் வெளிப்புறமும் கல்வெட்டுச் சிதறல்கள் காணப்படுகின்றன. இவை

சோணாடு கொண்டருளிய சுந்தரபாண்டியதேவரின் நான்காம் ஆட்சி யாண்டில் வெட்டப்பட்ட கல்வெட்டொன்றின் எஞ்சிய பகுதிகளாக அமைந்துள்ளன. மலை மண்டலத்து வன்றலைச் சொக்கன் பெயரும், சப்பை மலையும் குறிக்கப்பட்டிருக்கும் இக்கல்வெட்டு நிலக் கொடையொன்றைச் சுட்டுவதாய் அமைந்துள்ளது.

தென்புறத் துணைத்தள மகாவாஜனத்தில் காணப்படும் சடையவர்மர் குலசேகரதேவரின் பதின்மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, 'பூவின் கிழத்தி' என்ற மெய்க்கீர்த்தியோடு அமைந்துள்ளது. காவனூர் ஊரார்க்கு அனுப்பப்பட்ட நாடாழ்வார் ஒருவரின் ஆணை ஓலையாக அமைந்துள்ள இக்கல்வெட்டு, பல இடங்களில் எழுத்துகள் சிதைந்தும் தொடர்ச்சியற்றும் காணப் படுகிறது. சொரட்டை நாயனார் கோயில் ருத்ர மாகேசுவரரும் தேவகன்மிகளும் குறிக்கப்படும் இக்கல்வெட்டில், விக்கிரமகேசரிச் சதுர்வேதிமங்கலத்துக் காராம்பிச் சேட்டு பாவசேனவர் பட்டனுக்குத் தன்மதான இறையிலியாக அளிக்கப்பட்ட பரம்பஞ் செய் சுட்டப் படுகிறது. இந்நிலத்தின் வரியினங்கள் கொண்டு, இறைவனுக்கு வேண்டும் திருப்படி மாற்று உள்ளிட்ட நித்த நிவந்தக் கடமைகளை நிறைவேற்றுமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

உலகநாதர் கோயில்

முதற் குடைவரையுள்ள குன்றின் தென்புறத்தே அடுத்தடுத்து இரண்டு இயற்கையான குகைத்தளங்கள் உள்ளன. முதல் குகைத்தளம் இரு பெரும் பாறைகளின் மேலிணைவால் ஏற்பட்டுள்ளது. இதன் முன்புறத்தே பாறைகளுக்கு இடைப்பட்ட பகுதியில் சுவரெடுத்து, இரு வாயில்கள் அமைத்து, இக்குகைத்தளத்தைக் கோயில் வளாகமாக மாற்றியுள்ளனர். உள்ளே இரண்டு சிறிய அளவிலான பிற்கால இறைத்திருமுன்கள் உள்ளன. முதல் திருமுன்னில் மயில் ஊர்தியுடன் முருகன் காட்சிதருகிறார். இரண்டாம் திருமுன்னில் சிவபெருமான் லிங்கத் திருமேனியராய் எழுந்தருளியுள்ளார்.

இரண்டாம் குகைத்தளத்தில் படுக்கைகள் வெட்டப்பட்டுள்ளன. இப்படுக்கைகளின் அருகே காணப்படும் சாளுவ இம்மடி நரசிங்க மகாராயர் காலக் கல்வெட்டொன்று, நரச நாயக்கருக்குத் தன்மமாக, அவரது மதுரை மண்டலக் காரியகர்த்தரான வீரமாசய்யன், வருச்சூர் வீரபத்திர நாயனாருக்கு, மஞ்சக்குடி பூலாங்குளம் பகுதியில் நிலக்கொடையளித்த தகவலைத் தருகிறது. இக்கல்வெட்டு முழுமையடையவில்லை. இதன் அருகே காணப்படும் பிற்காலக் கல்வெட்டொன்று, 'திருப்பூவனத்திலிருந்து மலையடி வா' என்று அழைக்கிறது. இக்குகைத்தளத்தின் பாறை விளிம்பில் காணப்படும் தமிழிக் கல்வெட்டு மிகவும் சிதைந்த நிலையில் உள்ளது.[19]

குன்னத்தூர்க் குடைவரைகளின் காலத்தை, அவற்றின் அமைப்புமுறை, சிற்பங்கள் கொண்டும் முதற் குடைவரையிலுள்ள சிதைந்த கல்வெட்டின் எழுத்தமைதி கொண்டும் கி.பி. எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டாகக் கொள்ளலாம்.

ஏற்புக் கோடல்

இக்குடைவரைகளை ஆய்வுசெய்தபோது மதுரையில் உணவளித்து பயணக் களைப்பகற்றி ஊக்கமூட்டிய திருமதி, திரு.செங்குட்டுவன் குடும்பத்தார்க்கு இக்கட்டுரையாசிரியர்களின் நெஞ்சார்ந்த நன்றி உரியது.

அடிக்குறிப்புகள்

1. மார்க்சியகாந்தி தம்முடைய 'வரிச்சியூர் குடைவரைகள்' கட்டுரையில் இக்குடைவரையைக் குறிப்பிடவில்லை. மார்க்சியகாந்தி, வரிச்சியூர், கல்வெட்டு (காலாண்டு இதழ்), தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, சென்னை, இராட்சச ஆண்டு, சித்திரைத் திங்கள், ப.39.
2. இதைப்பற்றிக் குறிப்பிடும்போது, 'கிழக்கு நோக்கிய குடைவரையில் ஒரு கருவறையும், முன்னால், திறந்த இயற்கைப் பாறையிலேயே மேற்பகுதி மட்டும் இருப்பது போன்று அமைக்கப்பெற்ற மண்டபமும் மட்டுமே உண்டு' என்கிறார் மார்க்சியகாந்தி. மு.கு.நூல், ப.39.
3. இச்சிற்பத்தைப் பற்றிய குறிப்பெதுவும் மார்க்சியகாந்தியின் கட்டுரையில் இடம்பெறவில்லை. மு.கு.நூல், ப.39.
4. வலப்புறக் காவலர் தம் கதையின் மீது சாய்ந்து காணப்படுவதாகத் தி.இராசமாணிக்கம் கூறுகிறார். தி. இராசமாணிக்கம், தென்னகக் குடைவரைக் கோயில்கள், கழக வெளியீடு, 1989, ப.77. வலப்புறத்தாரின் ஒரு கை சூசி அஸ்தத்தில் இருப்பதாக மார்க்சியகாந்தி எழுதியிருப்பது சரியன்று. மு.கு. நூல், ப.39.
5. குடைவரைக் கோயிலில் கல்வெட்டுகள் ஏதுமில்லை என்கிறார் மார்க்சிய காந்தி. மு.கு.நூல். ப.39.
6. இக்குடைவரைக் கோயில் கருவறையை மட்டும் கொண்டிருப்பதாகத் தி.இராசமாணிக்கம் குறிப்பிடுகிறார். மு.கு. நூல், ப.78.
7. 'அர்த்த மண்டப வாயில்கள்' என்று மார்க்சியகாந்தி பன்மையில் குறிப்பிட்டுள்ளார். மு.கு. நூல், ப.39. ஆனால் இருப்பதோ ஒரே வாயில்தான்.
8. சதுரம், எட்டுப்பட்டை என இத்தூண் பகுக்கப்படவில்லை என்கிறார் தி.இராசமாணிக்கம். மு.கு. நூல், ப.78.
9. இப்போதிகை வட்டவடிவினைக் கொண்டிருப்பதாகத் தி.இராச மாணிக்கம் எழுதியுள்ளார். மு.கு. நூல், ப.79.

10. இவ்வரைத்தூண்கள் சதுரம் மற்றும் எட்டுப்பட்டை எனப் பகுக்கப்படவில்லை என்கிறார் தி. இராசமாணிக்கம். மு.கு. நூல், ப.79.

11. இதை ஓலைச் சுவடி என்று குறிப்பிடுகிறார் தி. இராசமாணிக்கம், மு.கு. நூல், ப. 79.

12. தி. இராசமாணிக்கம் இதையும் ஒரு குடைவரைக் கோயிலென்று குறிப்பிடுகிறார். மு.கு. நூல், ப. 79.

13. 'இவனது வலக்காதில் ஆண்களுக்குரிய குண்டலமும் இடக்காதில் பெண்களுக்கு உரிய குழையும் அணிசெய்கின்றன' என்கிறார் தி.இராசமாணிக்கம். மு.கு. நூல், ப. 80.

14. இதை உத்குடி இருக்கை என்கிறார் தி. இராசமாணிக்கம். மு.கு. நூல், ப. 80.

15. தி. இராசமாணிக்கம் இக்கை அபய முத்திரையில் இருப்பதாகக் கூறுகிறார் மு.கு. நூல், ப. 80.

16. வலக்கைகள் அபய முத்திரையில் இருப்பதாகத் தி. இராசமாணிக்கம் குறிப்பிடுகிறார். மு.கு. நூல், ப.80.

17. இவரை நரசிம்மி என்று குறிப்பிடும் தி. இராசமாணிக்கம், 'ஏழு மங்கையர் குழுவில் பொதுவாக நரசிம்மி காணப்படுவதில்லை. இங்கு அந்த வடிவம் உள்ளது. வராகி மற்றும் நரசிம்மி ஆகிய இருவரை மட்டும் அமைப்பினைக் கொண்டு இன்னார் என்று உறுதியாகச் சொல்ல முடிகிறது' என்றும் எழுதியுள்ளார். மு.கு. நூல், ப.80.

18. இதை உத்குடி இருக்கை என்கிறார் தி. இராசமாணிக்கம். மு.கு. நூல், ப.80.

19. இக்கல்வெட்டு பற்றிய தகவல்கட்குக் காண்க: T.V. Mahalingam, Early South Indian Palaeography, University of Madras, 1974, pp. 272-273.

பின்னிணைப்பு

முதற் கல்வெட்டு

இடம்: குகைத்தளம்.

1 சிறிமந் மாகா மண்டலீசுவரன் மேதினி
2 மீசுரகண்ட கடாரி சாளுவ இம்மடி நர
3 சிங்க மகாராயர் பிறிதிவி ராச்சியம் செய்தரு
4 ளுகிற நரசண நாயக்கற்கு தன்மமாக மதுரை
5 மண்டல[த்து] கற்தரான வீரமாசய்யன் வருச்சூர்
6 வீரபத்திர நயினார் தே(ய்)வதானமாக
7 விட்ட ம[ஞ்ச]க்குடி பூலாங்குளம் அஞ்சு 5 மா
8 . . யிந்த மூன்று ஏந்தல் யுள்பட்ட பத்தும்

இரண்டாம் கல்வெட்டு

இடம்: மேலது.

1 விசு ௵ ஆடி
2 மீ 7 உ தியதி தி
3 ருப்பூவன
4 த்திலிருந்து
5 மலையடி
6 வா

மூன்றாம் கல்வெட்டு

இடம்: மூன்றாம் குடைவரை அரைத்தூண்.

1 அரியரி 2 புத்தர 3 ன் சதா 4 சே[ர்வை]

நான்காம் கல்வெட்டு

இடம்: மேலது.

1 தீத்தார் ப 2 ழியஞ்சி 3 சதாசேர் 4 வை

ஐந்தாம் கல்வெட்டு

இடம்: மூன்றாம் குடைவரை பிள்ளையார் கோட்டம்.

1 அதிவீரன் ஆசரி ம
2 [கன்] தேவபண்
3 டாரம் சதாசேர்வை

ஆறாம் கல்வெட்டு

இடம்: அன்னையர் எழுவர் மண்டபத் தெற்குச் சுவர்.

1–2 பூவின் கிழத்தி என்று தொடங்கும் முதலாம் சடையவர்மர் குலசேகரரின் மெய்க்கீர்த்தி

3 கோச்சடைபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் குலசேகர தேவர்க்கு யாண்டு [13] செவ்வாய் கி[ழ*]மையும் பெற்ற மூலத்து நாள் முதல் . . . . . பத்தொன்பதாந் தியதியும் அபர பக்ஷத்து த்ரயோத$_3$ – – – வழி நாடாழ்வான் ஓலை காவனூர் ஊரார் கண்டு கனியானை . . . . . . [உடைய] நாயன்னார் கோயில் ருத்ரஸ்ரீமாஹேச்$_0$வரரு தேவ

4 கன்மிகளும் கண்டு . . . . . யான – – – விக்கிரமகேசரிச் சதுர்வேதிமங்கலத்துக் காராம்பிச் சேட்டு பாவஸேனவர் ப[ட்*]டனுக்கு இவ்வூர் வயலில் உழவு தறையில் தன்மதான இறையிலி நீர்வார்த்துக் குடுத்த நிலம் பரம்பஞ் செய் நிலம் மரமுந் . .

5 . . இதன் மேற்கடைய நாற்றங்கால் – – – ஒன்றின்னால் நிலம் காணி முந்திரிகை கீழ் முக்கால்லே மாகாணியுமாகின வயக்கல் தென்கடை தடி இரண்டு நில . முந்திரிகை கீழ் முக்கால்லே மூன்று மா முக்காணியும் ஆக கோல் – –

6 களுக்கு வேண்டுந் திருப்படி மாற்றுள்ளிட்டனவுக்குக் கடமை அந்தராயம் இறுப்பதாக மீகாட்சியும் தனக்கு காராண்மையாவுதாகவும் வேணுமென்று நமக்குச் சொன்னமையில் இந்நிலத்துக்கு பயிர் பார்த்துப் ப

7 ல நெல்லு 80 கலமும் அந்தராயந் . . . . ஒன்றே முக்காலும் கைக்கொண்டு இந்நாயனாற்கு விக்$_2$ரியன ஸங்கிரமங்களுக்கு வேண்டும் நித்திய நிமந்தங்கள் செலுத்தி இந்நாயனார்க்கு மிக்காட்சியாக . . [யாண்]

8 டு பதின்மூன்றாவது ஆனி மாஸத்து பத்தொன்பதாந் தியதியும் அபர பக்ஷத்து த்ரையோத$_3$ஸியும் செவ்வாய்க் கிழமையும் பெற்ற மூலத்து நாள் முதல் சந்திராதித்த பகல் செல்வதாக கல்லிலும் வெட்டிக்கொள்ள – –

9 விளத்தூர் கிழவன் – –

ஏழாம் கல்வெட்டு

இடம்: மேலது.

1 ஸ்வஸ்திஸ்ரீ சோணாடு கொண்டருளிய

2 சுந்தரபாண்டிய தேவற்கு யாண்

3 டு நாலாவது இலுப்பை

4 ஆஞ்சப்பை மலைக்கும் நடுவு மலைம

5 ண்டலத்து வன்றலை சொக்கன்

3. ஆனந்தரங்கப்பிள்ளையின் இறுதிநாட்களும் புதுச்சேரியின் வீழ்ச்சியும் (1760–1761)

ஒர்சே மா. கோபாலகிஷ்ணன்

ஆனந்தரங்கப்பிள்ளை தின சரிதையின் ஆங்கிலப் பதிப்பின் பன்னிரண்டாம் தொகுதியை வெளியிட்ட வரலாற்றாசிரியர் எச்.டாட்வெல் (H. Dodwell) தன்னுடைய முன்னுரையில், 1760ல் ஆனந்தரங்கப்பிள்ளையின் உடல் நலம் மிகவும் குன்றிவிட்டதால், அவருடைய நாட்குறிப்பு அந்த ஆண்டில் சரிவர எழுதப்பட்டிருக்க வில்லையென்று குறிப்பிடுகின்றார். அந்த இறுதிக் காலத்தில், வேறொருவர், தம்மால் முடியும் பொழுதெல்லாம் சில சம்பவங்களைப் பற்றி எழுதிவைத்திருக்க வேண்டுமென்றும் அவர் கருத்துரைக் கின்றார்.

நாட்குறிப்புப் படிகளின் முழுமை பற்றி 1940ல் பதிப்பிக்கப்பட்ட தம் ஆய்வு நூலில் எழுதும் சீனிவாசாச்சாரியார், ஆங்கிலப் பதிப்புக்கு பயன்படுத்தப்பட்ட (அக்காலத்தில் சென்னையில் இருந்த) எழுத்துப் படிகள் முழுமையாக இல்லாததால், தாம் மறுபடியும் புதுச்சேரி சென்று திரு. சிங்காரவேலுவின் வாயிலாக ஆனந்தரங்கப்பிள்ளையின் சந்ததியாரிடம் கேட்டு, சில புதிய எழுத்துப் பிரதிகளைப் பெற்றதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார். அந்நூலின் முன்னுரையில் பல புதிய தகவல்கள் இருப்பினும் அவற்றின் உள்ளீட்டை அறியும்பொழுது பல கேள்விக்குறிகளும் எழுகின்றன.

பேராசிரியர் ழுவோ துய்பிரேய் (Jouveau Dubreuil) தம் இறுதி ஆண்டுகளில் ழான் பிலியோசா (Jean Filliozat)வுடன் கடிதத் தொடர்பு கொண்டு, தங்கள் இருவர் கண்டுபிடிப்புகளையும் ஆதாரமாக வைத்துச் சில அரிய புதிய கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றார்.

எனினும் மேற்கூறியவர்களின் கருத்துரைகளிலோ மற்றும் இதுவரை பிரெஞ்சு, ஆங்கிலம், தமிழ் ஆகிய மூன்று மொழிகளிலும் வெளிவந்திருக்கும் பதிப்புக்களிலோ ஆனந்தரங்கப்பிள்ளையின் இறுதி நாட்கள் எப்படிச் சென்றனவென்பது முழுமையாக எழுதப் பட்டிருக்கவில்லை.

ஆனந்தரங்கப்பிள்ளையின் இறுதி நாட்கள் பற்றியும் அவர் மரணமடைந்தபின் செய்து முடித்த காரியங்கள் பற்றியும் 1761ம் ஆண்டு கவில் உடன்படிக்கை ஏற்பட்ட பின் ஆங்கிலேயர் புதுச்சேரியுள் வருகின்ற நாள்வரை நடந்த சம்பவங்கள் பற்றியும் பல புதிய தகவல்கள் பாரிசு தேசிய நூலகத்திலுள்ள (Bibliotheque Nationale, Paris) கைப்பிரதிகளுள் ஒன்றில் இருக்கக்கண்டோம். அதன் வழியாக,

புதுச்சேரியின் வரலாற்றுத் தகவல்கள் பலவற்றையும் ஆனந்தரங்கப்பிள்ளை வாழ்வின் நிகழ்ச்சிகளையும் அறியமுடிந்தது. அவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து, கீழே அத்தரவுகளை அப்படியே கொடுத்திருக்கின்றோம். அதைத் தெரிந்துகொள்ளுமுன், சில வரலாற்றுச் சம்பவங்களையும் அந்தக் காலச் சூழ்நிலையையும் நினைவுபடுத்திக்கொள்வது இன்றியமையாததாகும்.

1760இல் புதுச்சேரி ஆளுநராக லெரி (Leyrit) இருக்க, பிரான்சிலிருந்து அனுப்பப்பட்ட படைத்தலைவர் லல்லி (Lally)தான் அப்போதைய பல சண்டை, சம்பவங்களுக்கெல்லாம் முழுப் பொறுப்பாளியாக இருந்தார். அவர் ஐரோப்பாவில் நல்ல பெயரெடுத்த வரென்றாலும் தென்னிந்தியாவின் தட்பவெப்ப நிலைமை, இங்கு வசிக்கும் பிரெஞ்சுத் தமிழ்மக்களின் பழக்கவழக்கங்கள், இவர்களுடைய குணம், தன்மை முதலியவற்றைச் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை. ஆகவே, லல்லி புதுச்சேரி மக்களின் நம்பிக்கையையும் மதிப்பையும் பெறாமலே தன்னிச்சைப்படி சண்டைகளை நடத்திக்கொண்டுவந்தார்.

இவருக்கு முன்பு துய்ப்பிளெக்சு (Dupleix) காலத்தில் 1748ல் ஏற்பட்ட முற்றுகையின்போது புதுச்சேரி மக்கள் மிகுந்த உற்சாகத்துடனும் துணிவுடனும் படைவீரர்களுக்குப் பக்கபலமாக இருந்துதவினர். இவருக்குப் பின் 1778ல் ஆளுநர் தெ பெல்கோம்பு (de Bellecombe) காலத்தில், அமெரிக்க உரிமைப்போரின் பிரதிபலிப் பாகத் தென்னிந்தியாவில் ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் மோதிக் கொண்டபோது, புதுச்சேரி மக்கள் படைவீரர்களுடன் சேர்ந்து மிகவும் பாடுபட்டனர். இந்த மனமார்ந்த ஒற்றுமை லல்லி காலத்தில் இல்லை யென்றே சொல்லவேண்டும்.

ஆளுநர் லெரி படைத்தலைவர் லல்லி காலத்தில், பிரெஞ்சுப்படை தோல்வியடைந்தபின், லல்லி நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் இருந்துகொண்டே ஆங்கிலேயர் கூட்(Coote)டிடம் சரணடைய நேர்ந்தது.

இவ் இறுதிக் காலத்தில் பெண்டிர், சிறுவர் உட்படப் பல பிரெஞ்சுக்காரரும் தமிழரும் வெளியூர் சென்றுவிட்டிருந்தனர். ஊரினுள் மிகச் சில தமிழரே அப்பொழுது இருந்தனர்.

24.9.1760க்குப் பிறகு, 10.1.1761 வரை ஆங்கிலப் பதிப்பில் ஒன்றுமில்லை. அதற்குப் பின் 10.1.1761, 11.1.1761 ஆகிய நாள்களில் நடந்த சம்பவங்கள், அப்போது ஆனந்தரங்கப்பிள்ளை பட்ட வேதனைகள் பற்றிய குறிப்புகள் மட்டும் வருகின்றன. மற்ற பல புதிய தகவல்களைப் பாரிசு நகரத்தில் இருக்கும் நாட்குறிப்பின் வாயிலாகவே அறிவோம்.

"**விக்கிரம ஆண்டு புரட்டாசி** மா. 25-ந் தே. (7.10.1760) செவ்வாய்க்கிழமை மத்தியானம் காளத்தியம்மாள், குழந்தை தலங்கம் பாடிக்கு மதாம் லாசு (Madame Law) பின்னாலே பயணமாய்ப் போனது.

அற்பசி மாதம் முதல் தே. அண்ணாசாமி முதலாகிய பேர் பயணம் பிறப்பட்டது.

14-ந் தே. விஷித் தெ ஷெணரால் (Visite de General)

19-ந் தே. அப்பாவு பயணம் பிறப்பட்டது.

கார்த்திகை 27-ந் தே. சோமவார னாள் சாயங்காலமெ யிங்கிலிசுக்காரன் தென்னந்திட்டு மொறசா, செல்லன் தோட்டத்து மொறசாவுலெ பீரங்கி சுட துவக்கினார்கள். நது ராத்தரி பதினஞ்சு னாழிகைக்கு மேல் மேற்கே கருப்பந்தோட்டத்து மோர்சாவுலெயும் வடக்கே வண்ணான்துரை மோறசாவுலேயும் பீரங்கியும் மொடுத்தியே(mortier)யும் சுட ஆரம்பிச்சார்கள்.

30-ந் தேதி முசே புசெத்து (Monsieur Bausset) தோட்டத்து மோறசாவுலேயும் பீரங்கியும் மொடுத்தியேயும் சுட ஆரம்பிச்சார்கள்.

மார்கழி 4-ந் தே. சோமாவார னாள் சாயங்காலம் னாலு மணிக்கு சிரி.சிரி. பிள்ளையவர்கள் கால் னோவு நிமித்தியம் கந்தப்ப முதலியார் வீட்டுக்கு போனார்.

21-ந் தே. வியாழக்கிழமை றாத்திரி எட்டு மணிக்கு மேல் மறுனாள் காலமே அஞ்சு மணி மட்டும் பெருங் காத்து மழையும் அடிச்சு ஊருள்ள மரங்க ளெல்லா முறிஞ்சு விழுந்து கொடி மரம் முறிஞ்சு பட்டணமெல்லாம் காடு போலாச்சுது. கடலின் பேரிலெயிருந்து இங்கிலீசுகாறர் கப்பல் பதினாலும் சுலுப்பு ஒண்ணுலே நாலு கப்பல் முழுகிப் போய் மூணு கப்பல் கரை ஒதுங்கி நாலு கப்பல் கம்பம் பாய்மரம் முறிஞ்சு மொட்டையாய் குறை கப்பலும் சுலுப்புமா யின்ன யிடமென்று தெரியாமல் போச்சுது.

23-ந் தே. காலமே சிரி. பிள்ளையவர்கள் கந்தப்ப முதலி வீடு விட்டு வீடு வந்து சேர்ந்தார்.

24-ந் தே. வெள்ளக்காறருக்கு ரசியம் (ration) தென்னங்குருத்து ஆரம்பிச்சது.

28–ந் தே. ராத்திரி சலங்கும் பேரிலே ரசா அல்லி கான் பயணமாய் போய்விட்டான்.

தை முதல் (தே.) சனிவார னாள் காலமே அம்பலவ செட்டி தோட்டத்து மோர்சாவுலெ பீரங்கியு மொடுத்தியேயும் சுட ஆரம்பிச்சான்.

தை 2–ந் தே. ஞாயிறு நம்முட வீட்டிலே யிருந்த தென்ன மரத்தை வெட்ட வந்த சொல்தாதுகள் (soldats) 5 பேருக்கு ஒரு ரூபாய் கொடுத்து நம்முட வீட்டிலெயிருக்கிற மனுஷரைக் கொண்டு வீட்டும் பேரிலே சாயாமல் வெட்டிவிச்சுக் கொடுத்தோம்.

தை 3–ந் தே. சனேர் 11–ந் தே. சோமவாரம் ராத்திரி நாழிகை அஞ்சுக்கு மகா சிரி.சிரி.பிள்ளையவர்கள் வைகுண்ட பிறாபத்தியானார்.

தை 4–ந் தே. சோணாசலபிள்ளை (அரும்பாத்தை), நயினார், லெறி துபாசி எல்லாச்சி அப்புமுதலி மகன் அழகப்பன், கும்பிடுதோர் (?) கந்தப்பன் மகன் மன்னப் பெருமாள் முதலி முச்சியநம்புலு முடிப்பிறி முத்துக்குமரன் பின்னும் நம்முட வீட்டு மனுஷருடனும் கூட ஸ்நானம் பண்ணிவிச்சு செய்ய வேண்டிய சடங்குகள் செய்து பல்லக்கி லெடுத்துக் கொண்டு மாரியம்மன் கோயில் தெரு கீரைத் தோட்டத்தில் சந்தனக் கட்டையோடுந் தகனம் பண்ணிவிச்சோம். ஒன்பது பத்து மணி உண்டு(?) அந்த பிறாந்தியத்தில் கருப்பந்தோட்டத்து மோற்சாயிலயிருந்து குண்டுகள் விஸ்தாரமாய் வந்துக்கொண்டிருந்தது. அந்தனாள் பட்டணத்திலெயிருந்த தமிஷர் மேலே எழுதுப்பட்ட பேர் மாத்திரமே அல்லாமல் வேரேயில்லை. வீட்டுக்கு வந்தோம்.

காலமே முசே லெறியுடனே சாமி போய் காலம் பண்ணி போனது சொன்னதுக்கு அவர் சொன்னது சாமியுடய சித்தம் அப்படி யிருந்துப் போச்சுது. அடக்கம் பண்ணி போட்டு நீங்களெல்லாரும் யிண்ணைக்கித்தானே யெந்த வழியாகிலும் பாத்துக்கொண்டு போங்கொள் எண்ணு சொன்னார். முசே லலி (Monsieur Lally), முசே லெறி (Monsieur Leyrit), முசே பொலெ(ா) (Monsieur Boyelleau) உடனே சொன்னதுக்கு றொம்ப அங்கலாச்சார்கள். அப்படியிருக்க முசெ லெறி யிது சந்துக்கட்டு என்று சக்கிறத்தார் முசெ

துலார்மை (secretaire Monsieur Dulaurens) அனுப்பி சேமா மூலம் காகித பத்திரம் கணக்குகளை முத்திரிக்கச் சொன்னான். அவனும் அவன் ஒடுதி பிறகாரம் வந்து சொன்னான். நாங்களா வலிய கணக்குகள் யிருக்கிற யிடமெல்லாம் முத்திரை போடுவிச்சோம். சோணாசலபிள்ளை சாப்பாடு கொண்டு வந்து போட்டார். பிள்ளையவர்களை கண்டு பேசவந்த சுங்கு சேஷாசல செட்டியுடனே தண்டுலேயிருக்கிற சிதம்பரனாத பிள்ளையுடனே பிள்ளையவர்கள் காலம் பண்ணிப்போன சேதி சொல்லச் சொல்லி அனுப்பிவிச்சோம். மன்ன பெருமாள் முதலி வீட்டில் வச்ச உக்காசிலும்பி (?) முஸ்தீதை வெள்ளக்காரன் செவுரேறிக் குதிச்சு வந்து எடுத்துக்கொண்டு ஓடிப் போனான். ஷவானீய வீட்டுக்கு சாமான் யெடுத்தனுப்பச்சே சானும மதுகிடங்கு கோட்டை மீறிக்கொண்டு கிளிக்கூண்டு அண்டையில் குண்டு வந்து விழுந்தது. ஊரிலேயிருந்த ராசந்திர அய்யன் புகையிலை கிடங்கு பாப்பு பிள்ளை (Pappaiya Pillai) வரயில்லை. ராத்திரி படகேறி போய்விட்டார்கள்.

தை 5-ந் தே. நயினாருங் கூட கீரைத்தோட்டத்துக்குச் சஞ்சயனத்துக்குப் போய் செய்யவேண்டிய சடங்குகள் செய்து பிற்பாடு வீட்டுக்கு வந்தோம். சோணாசலபிள்ளை கற்னல் கூட்டு (Colonel Coote), வெங்கடாசலய்யன் முன்னிலையில் ஆயிரம் ரூபாய் குடுத்து வெளிப்பட்டுப்போனான். சாயங்காலம் மன்ன பெருமாள் முதலியை வச்சுக்கொண்டு தலைக்கட்டிக் கொண்டு பாக்கு போட்டுக் கொண்டோம். அசோகம் தோப்பு அண்டையிலேயிருக்கிற நடவாவிக்கு யிப்புறம் மோறசா போட்டு ராத்திரி எட்டு மணிக்கு துபாக்கிக்காறரும் துபாக்குச் சண்டை குடுத்தான்.

தை 5-ந் தே. முசே லெறியைப் போய் கண்டு றெம்ப உபசாரமாய்ச் சொன்னதுக்கு எல்லாம் கேட்டு நீங்கள் யினியிருக்கப் போகாது - யிருந்தால் என்ன மோசம் வருமோ தெரியாது, ஆகையால் எந்த வழியாகிலும் பாத்துக்கொண்டு போங்கோளென்று சொன்னார்.

முசே லலியை போய்க் கண்டு காலம்பண்ணிப்போன சேதி சொல்லி அங்காலச்சத்துக்கு அவரும் அங்காலாச்சு யினி செய்ய வேண்டிய தென்னயிருக்குது சாமியுடய சித்தத்துப்படியே முடிஞ்சுது என்று உபசாரம் சொன்னார். நீங்களிருக்கச் சொன்னபடியினாலே நாங்களிருந்தோம். யில்லாவிட்டால் அப்போதானே போய்விடுவோம்.

யிப்போ ஆனால் போறதுக்கு வழி றொம்ப சங்கடமா யிருக்குது யென்று சொன்னதுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம் உங்களுக்கும் கூட கபித்துலேசாமிலே (Capitulation) பேசுறோம். நீங்கள் சிந்தனை பண்ணத் தேவையில்லை போங்களென்று சொன்னார். முசே கிலியார் (Monsieur Guillard), முசே பொலோ (Monsieur Boyelleau)வைக் கண்டதுக்கு அவரும் உபசாரம் சொன்னார். கோட்டையிலே நடந்து உத்தரவுகளைச் சொன்னோம். அதுக்கு அவர்கள் சொன்னது முசே லலியை நம்பப்போகாதென்று சொன்னார்கள்.

தை 6–ந் தே. யிவர்கள் சொல்லுகுறது யிப்படி யிருக்குறபடியினலெ யிதை நம்பப் போகாதென்று யோசனை பண்ணி நயனார் முன்னிலையாய் வெறனையைக் (Veron) கண்டு பேசினதற்கு படகு கிறயம் னூத்தன்பது ரூபாய் தரங்கம்பாடி கொண்டு போய் விடுகிறத்துக்கு நானூத்தன்பது ரூபாய் கொடுக்கவேணு மென்று பேசினத்துக்கு சம்மதித்து அறுநூறு ரூபாய் நயினார் கயிலே குடுத்தோம். அதை வாங்கிக்கொண்டு பட்டணவர் வூரிலேயில்லை ரெண்டு பேரிருக்குறார்கள் அவர்களோடுங்கூடப் பத்து பேர் மறனெரை (marins) சண்டை முஸ்தீதுடனே ரெஷத்து பண்ணி தாறே னென்று சொல்லி அனுப்பிவிச்சான். நயினாரும் வந்து சொன்னான்.

நாங்களும் பயண முஸ்தீதாய் முசே நெயன் (?) வசம் வீடுகளும் தட்டு முட்டு சாமான்களும் அவன் வசம் ஒப்பிச்சு சிலவுகு குடுத்து ஒரு சிறிது சந்துவும் வீட்டிலே வச்சுப்போட்டு ஒரு தினசரிதை மூட்டையும் மூணு னாலு கத்தியும் கடாரியுமாய் வெளிப் பிறப்பட்டு முசே பொலோவை அனுப்பிவிச்சுக் கொண்டு துவான் (douane) வாசப்படிக்கு தென்னண்டை கொத்தளத்தண்டையிலே சுக்குல பஷ்ஷம் திதி தெசமி ஆனபடியினாலே நிலவு அஸ்தமானம் யிருபது னாழிகை மட்டும் அந்தக்கா(ல)த்திலிருந்து யிருட்டின உடனே படகும் பேரிலே நாங்கள் பத்து பேரும் ஆயுத முஸ்தீதுடனே பதினஞ்சு மத்தலோதும் (matelot) ரெண்டு பட்டணவரும் ஏறி படகு தண்ணியிலே தள்ளினால் ரெண்டா னலைக்கு அப்பிறம் போகாமல் கரை ஒதுக்கிச்சுது. ரெண்டு மணி பரியந்தரம் வெள்ளக்காறராலே ஆன மட்டுக்கும் தண்ணியிலே தள்ள தள்ள மறுபடியும் மறுபடியும் கரை ஒதுக்குறபடியினாலே வெள்ளக்காறர் குடிச்ச வெறிகளிலே

யிறுக்குறபடியினாலேயும் கடலோர மானபடியினாலேயும் படகுலே தண்ணி ரெம்புனபடியினாலே படகுலே வச்ச கத்தி கடாரிகளெல்லாம் நனைஞ்சு வுருவிண்டு காலின் கீழே அகப்பட்டு படகு சாயுறபோது ஒருத்தர் பேரிலே ஒருத்தர் விழுந்து கட்டிக்கொண்டிருந்த பிடவைக ளெல்லாம் நனைஞ்சு தின சரிதை தஸ்தரமெல்லாம் நனைஞ்சி யிப்படி அபஸ்தை படுகிறதினாலேயும் பொழுது வெடியகாலமாகிற படியினாலேயும் ஒருத்தர் ஒருத்தராய் சலங்கும் பேரிலிருந்து தாழயிறங்குறத்துக்குப்பட்ட அவஸ்தையை காகிதத்திலே எழுதிமுடியாது.

நனைஞ்ச வஸ்திரமும் சரீரம் உப்புக்கசுவுடனே கடலோரத்து வாசப்படி அண்டையிலே யிருக்கிற துவானிலே வந்து பிடவை வேறே கட்டிக்கொண்டு கொண்டுபோன பலகாரத்தை கொஞ்சம் சாப்பிட்டு கடல் உப்புத்தண்ணியினாலே வாயைக் கொப்பளித்துக் கொண்டு சத்து ஆசுதாவாய் படுத்துக்கொண்டு யிருக்கச்சே னாலு மணி நேரத்திலே துவான் வாசப்படியிலே வெளிச்சங் கண்டுது. யின்னேரத்திலே வெளிச்சங் காண காறண மேது என்று பாற்க்குமளவில் பீரங்கி மருந்துகளை கொண்டு வந்து அகழியிலே கரைத்துப்போட்டு போனார்கள். யித்தனாள் சாயங்காலம் யிங்கரேசுக் காரனண்டை கப்பித்தலசாம் பேசப் போன சம்பாக்கோவில் பாதிரி சேஷட்டர் முசே கொடுத்தேன் (Monsieur Courtin) முசே திபுவா (Monsieur Dubois) யிவர்கள் போனார்கள். யினிமேல் என்ன நடக்குமோ தெரியாது.

தை 7–ந் தே. சுக்கிறவாரம் யித்த னாள் காலமே கதவு திறந்த உடனே விட்டே வந்து சேர்ந்தோம். அப்படி யிருக்கச்சே முன்னாள் குருவாரம் தண்டுலே யிருக்கப்பட்ட மேஸ்தர் பிக்கட்டு (Major Pigot), மேஸ்தர் கற்னால் கோட்டண்டை (Major Colonel Coote) கபித்துலசாம் பேசத்தக்கதாக போன சம்பாகோவிலு பாதிரி சுப்பேரியொர் முசே கொடுத்தேன், முசே திபுவா யிவர்கள் கவில் பேசப் போனது சொல்தாதுகள் றெம்பக் காசிப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் அவர்களை கயிது பண்ணாமல் வெளி காவல் பண்ணி தீனி போட்டு வச்சுக்கொண்டு கப்பலிலே யேத்தி சீமைலே கொண்டுபோய் விட்டுவிடவும் முசே லல்லி முதலாயிருக்கப்பட்டத் துரைத்தனக்காறருடைய தட்டு முட்டுகளை விட்டுவிடவும் பின்னும் அபித்தாம் (habitants) அம்பிலுயெர் (employes) புருஷ்சுவா (bourgeois) யிவர்கள் வெகுனாளாய் சம்பளமில்லாமல் செவிச்சுயிருக்

கிறார்கள். ஆகையால் அவர்கள் தட்டு முட்டும் கொள்ளையிடாமலும் பின்னும் ஊரிலே யிருக்குற தமிழரை ஒண்ணுஞ் செய்யாமலும் ஊரை கொள்ளையிடாமலும் கும்பினீர் தட்டு முட்டு என்ன உண்டோ அதை எடுத்துக் கொள்ளவும் கோட்டையிடியாமலும் பேசினதுக்கு எல்ல(ா) உடம்படிக்கையும் சம்மதிச்சு கோட்டையை மாத்திரம் யிடிச்சுப் போடுவோமெண்ணு பேசினத்துக்கு ஆனால் சீமைக்கு எழுதி அனுப்பிவிச்சு சீமையிலே யிருந்து உத்தரவு வருகிறமட்டுக்கும் யிடிக்கக் கவையில்லை எண்ணு பேசினதாகவும் அதுக்கு அவர்களிருந்து கொண்டு நல்லது எல்லாம் முசே லல்லீ எந்த பிறகாரம் சொல்லுகுறாரோ அந்தப்படி அவர் மனசுப்படி நடப்பிக்குறோம். நீங்கள் போங்கள் நாங்கள் வந்து முசே லல்லியை கண்டு பேசுகுறோமென்று சொன்னதாகவும் அதும் பேரிலே காலமே ஊரே வந்துவிட்டார்கள் என்கிறதாகச் சொல்லிக்கொண்டார்கள்.

அப்படியிருக்கச்சே ஏழரை மணி நேரத்துக்கு மேஸ்தர் கற்னால் கோட்டும் (Major Colonel Coote) ரெண்டு மூணு பெரிய மனுஷரும் அன்பது காடுது (garde) குதிரைக்காறரும் னூறு சொல்தாதும் வந்து வில்லியநல்லூர் வாசப்படியிலே சொல்தாதுகளை நிறுத்திப்போட்டு குதிரையுடனே (கே)காட்டு உள்ளே நுழைஞ்சு கோட்டைக்கு வெளியிலே குதிரைகளை நிறுத்திப்போட்டு கோட்டைக்குள்ளே கொவற்ணமா (Gouvernement)வுலே முசே லல்லீ காம்பிறாவிலே னுழஞ்சவுடனே முசே லல்லீ (Monsieur Lally) ரெப்பு சாம்பறுடனே (chambre de repos) கட்டிலின் பேரிலே படுத்துக்கொண்டிருக்கச்சே மேஸ்தர் கற்னால் கோட்டவர்கள் வந்து பேட்டி பண்ணிக்கொண்டு அண்டையிலே யிருக்குற நாற்காலியின் பேரிலே உளுக்காந்து சத்து நேரம் இருவரும் பேசியிருந்து வெளியிலே வந்தார். அங்கே முசே லெறி (Monsieur Leyrit) முதலான கொன்சேலியர் (conseillers) கத்தி கட்டிக்கொண்டு வெள்ளி ரேக்கு போட்ட கொன்சேல் கூடகுற சாலையிலே கும்பலாயிருக்குறவர்களண்டையிலே வந்தார். வந்தவுடனே ஒருத்தருக்கொருத்தர் ஆசாரம் பண்ணிக்கொண்டு முசே லெறி முதலாக் கத்தியை கழத்தி மேஸ்தர் கற்னால் கோட்டவர்கள் கையிலே குடுத்தவுடனே கற்னால் கோட்டவர்கள் கத்தியை கையிலே வாங்கி மறுபடியும் உங்கள் கையிலேதானே யிருக்கட்டு என்கிறதாக குடுத்தார்.

முற்றும்

ஆனந்தரங்கப்பிள்ளையின் சிறப்பு மிகுந்த வாழ்வு, அவருடைய அபாரத் திறமை, தென்னிந்தியாவைத் தாண்டி வடக்கே டில்லி வரையிலும், மேற்கே பிரான்சு வரையிலும் பரவியிருந்த அவருடைய புகழ் முதலியன பற்றித் தெரிந்துள்ளவர்களுக்கு அன்னாருடைய முடிவு மிக மிக சோகமாயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

தன் பெரியப்பா மிகவும் பாடுபட்டு எழுதிவைத்த தின சரிதையைப் பார்த்து 1760–1791ஆம் ஆண்டுகளில் அப்பாவு என்கிற மூன்றாம் திருவேங்கடப்பிள்ளையும் பிறகு 1799 வரை இவருடைய மகனாரான முத்து என்கிற நான்காம் திருவேங்கடப்பிள்ளையும் அவர்களுடன் இருந்த வீராநாய்க்கரும் (1778–1792) எழுதி வைத்தனர். இந்நாட்குறிப்புகளின் பெரும்பகுதி இன்னும் தமிழில் பதிப்பிக்கப்படாமல் இருப்பது பெருங்குறையே.

பலவிதமான வீண் செலவுகள் செய்யப்படுவதை நோக்கும் போது, பொருள் இருக்கின்றது, ஆனால் நோக்கம்தான் இல்லை என்பதை உணர்கின்றோம். அதேவேளையில் நம் நாட்டில் திறமை மிக்க பல அறிவாளிகளும், ஆய்வாளர்களும் நல்ல உழைக்கும் சக்தி கொண்டவர்களாக இருக்கின்றனர். பொருளின்மையால் ஒன்றும் செய்யமுடியாமலிருக்கின்றனர்.

இந்நிலை மாறி சரியான முறையில் நிதி ஒதுக்கப்பட்டு, பல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கல்வெட்டுகள், கோயில்கள், கைப்பிரதிகள் முதலியவற்றைக் கால அழிவிலிருந்து காப்பாற்ற முன் வரும் நாள்தான் என்றுவருமோ என்று ஏங்கவேண்டியிருக்கின்றது.

அந்நாள் வரும்வரை ஏங்கிக்கொண்டேயிராமல் தனிமனிதர்கள் தங்களால் இயன்ற அளவில் சில ஆய்வுப் பதிப்புகளையேனும் முன்னோடியாகச் செய்துகாட்டவேண்டும். பிறகு படிப்படியாக மற்றவர்களும் செய்யத்தொடங்க, அதற்குப் பின்னாவது, அரசு இயக்கங்களும் பல்கலைக்கழகங்களும் இம்மாதிரியான ஆய்வுப் பணிகளுக்குப் போதிய ஆதரவும் ஊக்கமும் அளிக்கத் தொடங்குவர் என்று எதிர்பார்க்கலாம்.

அப்போது நாட்குறிப்புகளின் பெரும்பகுதி இன்னும் தமிழில் பதிப்பிக்கப்படாதிருக்கும் பெருங்குறை நீங்கி அவையனைத்தும் வெளிவரும்போது நமது தமிழ்நாடு, புதுச்சேரி பகுதிகளைப் பற்றி பற்பல வரலாற்றுத் தரவுகள் மேலும் செம்மையாகப் புரியும் என்பது திண்ணம்.

4. மகிபாலன்பட்டிக் குடைவரை

தி. சுமிதா, இரா. கலைக்கோவன்

திருப்புத்தூரிலிருந்து நெற்குப்பை செல்லும் பாதையில் பதின்மூன்று கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது மகிபாலன்பட்டி. இவ்வூரின் வெளியே ஒரு கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள சிறியதொரு குன்றின் மேற்குச் சரிவில் முகப்பு, மண்டபம் போன்ற அமைப்புகளின்றி, வெறும் கருவறை மட்டுமே கொண்டுள்ள குடைவரையொன்று 1.92மீ. உயரத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

உருள்குமுதம், பாதங்களோடும் கம்புகளோடும் கூடிய கண்டம், பட்டிகை என அமைந்துள்ள 54செ.மீ. உயரமுள்ள தாங்குதளத்தின் மீது மேற்கம்பும், அதன்மீது கருவறையின் முகப்புச் சுவரும் எழுகின்றன. 3.04மீ. அகலமுள்ள முகப்புச் சுவரின் நடுப்பகுதியில் 1.69மீ. உயரத்தில், 67.5செ.மீ. அகலத்தில் வாயில் அமைக்கப் பட்டுள்ளது. இவ்வாயிலின் இருபுறத்தும் அதன் நிலைக்கால்கள் போல் இரண்டு அரைத்தூண்களும், முகப்புச் சுவர் குடைவரையின் பக்கச் சுவர்களோடு இணையும் வட, தென்முனைகளில் இரண்டு அரைத்தூண்களும் கண்டத்திலிருந்து எழுமாறு காட்டப்பட்டுள்ளன. சதுரம், கட்டு, சதுரம் என்ற அமைப்பிலுள்ள இவ்வரைத்தூண்களுக்கு இடைப்பட்ட சுவர்ப்பகுதிகள் சிற்பங்களற்ற கோட்டங்களாக அகழப் பட்டுள்ளன.[1] வடகோட்டம் 1.20மீ. உயரமும் 77செ.மீ. அகலமும் கொண்டமைய, தென்கோட்டம் 1.20மீ. உயரமும் 74செ.மீ. அகலமும் கொண்டுள்ளது. தூண்களின் மேலுள்ள போதிகைகளின் கைகள் விரிகோணத்தில் மேல் திரும்பி உத்திரம் தாங்குகின்றன. சிறிய அளவிலான இவ்வுத்திரமே கருவறை வாயிலின் மேல்நிலையாகி யுள்ளது. உத்திரத்தின் மேல் வாஜனமும் அதையொட்டிக் கூரையும் உள்ளன. முன்னோக்கி மேற்கு முகமாக 66செ.மீ. நீளத்திற்குப் பரவியுள்ள இக்கூரையின் முடிவும் மேலே பாறையின் சரிவும் வடிவமைக்கப்படாத கபோதமாய்க் காட்சியளிக்கின்றன. பாறைச் சரிவின் முகப்பில், கீழ் விளிம்பிலிருந்து நன்கு மேல்தள்ளி, நடுப்பகுதியிலிருந்து வடக்கு, தெற்காக இரு நீண்ட பள்ளங்களை மழைநீர் ஓட்டத்திற்காக அகழ்ந்துள்ளனர். இப்பள்ளங்கள் குடைவரைக்குக் 'குடிசைக் கோயில்' போன்றதொரு பார்வையைத் தருகின்றன.

நன்றி: **டைமண்ட் ஆப்டிகல்ஸ்,**
120, ஏ.கே.எஸ். காம்ப்ளெக்ஸ் (மாடி),
அருணா திரையரங்கம் அருகில், பாளையம் பஜார்,
உறையூர், திருச்சிராப்பள்ளி – 620 003.



குடைவரை வளாகம்

கருவறை முகப்புச் சுவரையொட்டிய பாறைப்பகுதிகள் வடபுறத்தும் தென்புறத்தும் நன்கு சமன்படுத்தப்பட்டு, பக்கச் சுவர்களாக்கப்பட்டுள்ளன. பாறை நன்கு முன்னோக்கிச் சரிந் திருப்பதால் இச்சுவர்கள் மேலிருந்து, கீழே வரவர, நன்கு அகலமாகி அமைந்துள்ளன. வடசுவரைவிட அகலமாக அமைந்துள்ள தென்சுவர், கீழ்ப்பகுதியில் மேல்பகுதியினும் அகலமாக உள்ளது. கீழ்ப்பகுதியில் தென்சுவர் 1.36மீ. அகலத்திலும் வடசுவர் 93செ.மீ. அகலத்திலும் அமைந்துள்ளமை பாறையின் சரிவுத் தன்மையை உணர்த்தவல்லது.

கருவறைக்கு முன்னுள்ள தரைப்பகுதியில், கருவறை வாயிலை யொட்டி இருபுறத்தும் இரண்டு சிறு, உயரக் குறைவான பிடிச்சுவர்கள் பாறையிலேயே வெட்டப்பட்டுள்ளன. இவற்றுக்கு இடைப்பட்ட தரைப் பகுதி கருவறை வாயிலுக்கு நேரே சற்றுத் தாழ்வான நிலையில் அமைந்துள்ளது. பிடிச்சுவர்களை அடுத்துள்ள தரைப்பகுதிகள் இரண்டும் நடுப்பகுதியினும் மேடாக முன்னோக்கிச் சரிந்து நிலத்தைத் தொடுமாறு அமைக்கப்பட்டுள்ளன. கருவறைக்குள் இருந்து முழுக்குநீர்

நன்றி: **டைமண்ட் ஆப்டிகல்ஸ்,**
2-A, ஈ.வே.ரா. சாலை, புத்தூர்,
திருச்சிராப்பள்ளி – 620 017 தொ : 29090

வெளியேற, முகப்புச் சுவரின் வடபுறத்தே, உருள்குமுதம் மற்றும் கண்டப்பகுதியில் பெருந்துளையொன்று ஏற்படுத்தியுள்ளனர்.



குடைவரையின் முகப்புத் தோற்றம்

2.77மீ. பக்கமுள்ள சதுரமான கருவறையின் கீழ்நிலையே படியாக அமைந்துள்ளது. கருவறையின் தரை, கூரை, சுவர்கள் அனைத்தும் வெறுமையாக உள்ளன. கருவறையுள் குடைவரையோடு சேர்ந்து உருவாக்கப்பட்ட லிங்கம் காணப்படுகிறது. உபானம், ஜகதி, உருள்குமுதம், கம்புகளின் தழுவலில் அமைந்த கண்டம், பட்டிகை என அமைந்துள்ள 1.09மீ. பக்கமுள்ள சதுர ஆவுடையாரின் மீது, மேற்கம்பு ஒன்றும் வெட்டப்பட்டுள்ளது. ஆவுடையாரின் நடுவில் நன்கு வடிவமைக்கப்பட்டுள்ள உருண்டையான லிங்கபாணம் காட்சியளிக்கிறது. வடபுறம் அமைந்துள்ள கோமுகத்திற்குக் கீழே, முழுக்குநீர் இறங்க 26செ.மீ. ஆழத்தில் பள்ளமொன்று வெட்டியுள்ளனர். இதில்

நன்றி: **டைமண்ட் ஆப்டிகல்ஸ்,**
120, ஏ.கே.எஸ். காம்ப்ளெக்ஸ் (மாடி),
அருணா திரையரங்கம் அருகில், பாளையம் பஜார்,
உறையூர், திருச்சிராப்பள்ளி – 620 003.

நிரம்பி வழியும் நீரே முகப்புச்சுவர்த் துளை வழி வெளியேறும் போலும். கருவறைக்குள் சண்டேசுவரர் மற்றும் தேவியர் இருவர் சிற்பங்கள் சுவர்மீது சாய்த்துவைத்த நிலையில் காணப்படுகின்றன.

குடைவரையில் காணப்படும் சுந்தரபாண்டியரின் கல்வெட்டு உத்திரத்தின் வடபகுதியில் தொடங்கித் தென்புறம் வரை நீண்டு, பின் தெற்குத் தேவகோட்டத்தில் இறங்கி வளர்ந்து, குடைவரைத் தென்பக்கச் சுவரில் பாதிக்கு மேல் பரவியுள்ளது. இக்கல்வெட்டு குடைவரையைப் பூங்குன்றமுடைய நாயனார் கோயிலென்று அழைக்கிறது.



பிள்ளையார்

இக்குடைவரை அமைந்துள்ள அதே பாறையில் குடைவரையை யொட்டி வடபுறத்தே மேற்குப் பார்வையாக 1.23மீ. உயரமும் 1.06மீ. அகலமும் கொண்டமைக்கப்பட்டுள்ள கோட்ட மொன்றில் பிள்ளையார் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. இதன் முன்னர் பிற்காலத்தே சிறு மண்டபமொன்று எடுத்துக் கதவுகள் அமைத்துள்ளனர். தர்ம கணபதி என்று அழைக்கப்படும் இவரது பின்கைகளில் வலப்புறம் குறுந்தடி. இடப்புறம் கரும்பு; வலம்புரி துதிக்கையில் மோதகம்; அரைத்தாமரை யமர்வில்[2] அமர்ந்து இட முன்கையை இடத்தொடை மேல் வைத்துள்ள

நன்றி: **டைமண்ட் ஆப்டிகல்ஸ்,**
2-A, ஈ.வே.ரா. சாலை, புத்தூர்,
திருச்சிராப்பள்ளி – 620 017. தொ : 29090

இவரது வல முன்கை உடைந்துள்ளது. வலப்புறத் தந்தம் முழுமையாக இருக்க இடப்புறத் தந்தம் உடைந்துள்ளது. தலையில் மகுடமும் கழுத்தில் கண்டிகையும் மேற்கைகளில் கங்கணங்களும் அணிந்துள்ள இவரது மார்பை முப்புரிநூலும், வயிற்றுக்கும் மார்பிற்கும் இடைப்பட்ட பகுதியை வயிற்றுக்கட்டும் அணிசெய்கின்றன.

பிள்ளையார் திருமுன்னிற்கு வடபுறத்தே நிறைவடையாப் பணியாய் அம்மன் கோயிலொன்று அமைந்துள்ளது. முகமண்டபமும் கருவறையுமாய் அமைந்துள்ள இத்திருமுன்னில் அம்மன், முருகன், அய்யனார் சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளன.

கல்வெட்டு

கருவறையின் முகப்புச் சுவரில் காணப்படும் எம்மண்டலமும் கொண்டருளிய சுந்தரபாண்டியதேவரின் பத்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு,[3] பூங்குன்ற நாட்டுப் பகுதியைச் சேர்ந்த பூங்குன்றம் என்னும் ஊரில் அமைந்திருந்த இத்திருக்கோயில் இறைவனின் வழிபாடு மற்றும் படையலுக்காகும் செலவினங்களுக்கான முதலாக, ஆண்டுதோறும் பன்னிரண்டு பணமும் பன்னிரண்டு கலம் நெல்லும் கொள்வதாகப் பூங்குன்ற நாட்டவர் இக்கோயில் நிர்வாகிகளுக்குச் செய்தளித்த ஒப்பந்தத்தை வெளிப்படுத்துகிறது.

இந்த ஒப்புதல் ஆவணத்தில் கையெழுத்திட்டுள்ள நாட்டார் பெருமக்களில் பலர் தற்குறிகளாக இருந்தமையைக் கல்வெட்டின் பிற்பகுதியால் அறியமுடிகிறது.

இப்பூங்குன்றப்பகுதி குலசேகர ஈசுவரமுடைய நாயனார் கோயிலின் தேவதானமாக இருந்ததாகக் கல்வெட்டு உணர்த்துகிறது. இக்குலசேகர ஈசுவரமுடைய நாயனார் கோயில் எப்பகுதியில் இருந்தது என்பதை அறியக்கூடவில்லை. கல்வெட்டின் பாடம் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளது.

முடிவுரை

இக்குடைவரையின் அமைப்பு குன்னத்தூர்ப் பகுதியிலுள்ள முதல் குடைவரையோடும், மலையக்கோயில் பகுதியிலுள்ள வடக்குக் குடைவரையோடும், அரளிப்பட்டிக் குடைவரையோடும் ஒப்பிடத் தக்கதாக அமைந்துள்ளது. இது போன்று, கருவறை மட்டும் கொண்டு, எளிய அமைப்புடன் விளங்கும் குடைவரைகள் பல்லவர் பகுதிகளில் கீழ்மாவிலங்கை, ஆவூர் போன்ற இடங்களிலும், முத்தரையர் பகுதியான நார்த்தாமலையிலும் காணப்படுகின்றன.

மகிபாலன்பட்டிக் குடைவரையின் காலத்தை அதன் அமைப்பு கொண்டு ஒன்பதாம் நூற்றாண்டினதாகக் கொள்ளலாம்.

ஏற்புக்கோடல்

இக்குடைவரையை ஆய்வு செய்ய உதவிய இக்கோயில் சிவாச்சாரியார் திரு. சவுந்திரபாண்டிய குருக்கள் மற்றும் அவரது திருமகனார்க்கும், உணவளித்து உதவிய திருமதி. சந்திரா அவர்களுக்கும் இக்கட்டுரையாசிரியர்களின் நெஞ்சார்ந்த நன்றி உரியது.

அடிக்குறிப்புகள்

1. இக்கோட்டங்களுள் தென்புறக்கோட்டத்தில் பிள்ளையார் இடம் பெற்றிருப்பதாகத் தி. இராசமாணிக்கம் குறிப்பிட்டுள்ளது சரியன்று. தமிழகக் குடைவரைக் கோயில்கள், கழக வெளியீடு, 1983, ப. 25.
2. பத்ம ஆசனத்தில், யோகநிலையில் இவர் செதுக்கப்பட்டுள்ளதாகத் தி.இராசமாணிக்கம் குறிப்பிடுகிறார். மு.கு. நூல், ப.25.
3. ARE 162 of 1936.

பின்னிணைப்பு

1 ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடைபன்மரான த்ரிபு$_4$வனச் சக்ரவத்திகள் எம்மண்டலமுங் கொண்டருளிய ஸ்ரீசுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு 10வது வ்ருச்$_0$சிக நாயற்று அப[ர*] பக்ஷமும் த்$_3$ரதியையும் திங்கட்கிழமையும்

2 பெற்ற பூசத்து நாள் உடையார் குலசேகர ஈச்$_0$வரமுடைய நாயனார் தேவதானம் பூங்குன்ற நாட்டு பூங்குன்றத்து உடையார் திருப்பூங்குன்றமுடைய னாயனார் ஆதிசண் டேச்$_0$வர னாயனாற்கு இந்நாட்டு

3 நா[ட்]டவரோம் ப்ரமாணம் பண்ணிக் குடுத்த பரிசாவது இந்நாட்டு பூங்குன்றத்தார் பாற்குடிக்காடுகளில் புலவன்

4 மங்கலாதேவன் வளத்து வாழ்விச்சானான பூங்குன்றனாட்டுப் பிரமாதிராயன் உள்ளூட்டார் விலை கொண்

5 டுடைய குடிக்காடு கருப்புக்கோனேரிக்கு இவர்கள் இறுத்துப் போந்த அச்சு அரை இவ்

6 வச்சு அரையும் இவ்வச்சால் நாட்டுப் பிறியலட்டியால் வரும் வினியோகங்கள் எப்பேற்பட்டனவும் இக்கருப்பு

7 க்கோனேரியில் நின்றும் கழித்து ஊர் தோறும் ஏறட்டுக் கொண்டு இவ்வச்சரையால் வந்த வினியோகங்கள் எப்பேற்ப

8 ட்டனவும் புரவிலும் வரியிலும் கழித்து குடுத்து இத்திருப்பூங்குன்றமுடைய னாயனாற்கு அமுதுபடி சாத்துபடி உள்

9 ளிட்ட விஞ்சனத்துக்குடலாக ஆண்டொன்றுக்கு கொள்வதாக நிற்செயித பணம்[1] 12ம் நெல் 12 கல[2]மும் இப்பணம்

10 பன்னிரண்டும் நெல் பன்னிறு கலமும் ஆண்டுதோறும் ஒன்று முக்காலும் ஒன்று காலும் வாடாக் கடமை

11 யாகக் கொள்வதாகக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் குடுத்தோம் உடையார் திருப்பூங்குன்றமு

12 டைய னாயனாற்கு பூங்குன்ற நாட்டு நாட்டவரோம் இப்படிக்கு சந்த்ஊராதித்த பகல் செல்வதாக உ இப்படிக்கு பூங்

13 குன்றத்து வேளான் எழுத்து இப்படிக்கு சேட்டன் பெ[ரும]ாள் எழுத்து இப்படிக்கு உய்யநின்றாடுவான் கா

14 டப்பிள்ளை எழுத்து இப்படிக்கு பாண்டியன் பெருங்கரு . . ரயாளன் எழுத்து இப்படிக்கு செலாதமுடையான் தற்கு

15 றியும் இட்டு சொக்க ஞானசம்பந்தன் தற்குறியும் [இட்]டு பெருமாள் வளத்தான் எழுத்து இப்படிக்கு சேட்டப்பி

16 ள்ளை தற்குறியும் இட்டு நல்லமங்கை பாகன் எழுத்து இப்படிக்கு மாதவராயன் நாடப்பிள்ளை எழுத்து இப்படிக்கு

17 திருநாவுடையான் தாயில் நல்லான் எழுத்து இப்படிக்கு உதையப்பெருமாள் தற்குறியும் மதுரை மயிலேறும் பெருமாள் தற்கு

18 றியும் அழகப்பெருமாள் தற்குறியும் இட்டு மாட்டெறிரு[ந்*] தேன் உய்ய நின்றாடுவான் காடப்பிள்ளை எழுத்து இப்படிக்கு

19 அலைவாயுகந்தார் எழுத்து இப்படிக்கு நாயன் நல்லமங்கை பாகன் எழுத்து இப்படிக்கு காடன் நல்லமங்

20 கை பாகன் எழுத்து இப்படிக்கு சோழபாண்டிய கிழவர் எழுத்து இப்படிக்கு மலையாண்டார் எழுத்து இப்படிக்கு ஆடவல்ல கூ

21 த்தன் தமராக்கியாண்டான் எழுத்து இப்படிக்கு காடப்பிள்ளை எழுத்து இப்படிக்கு தவப்பெருமாள் எழுத்து இப்படிக்கு திருநட்

22 டப்பெருமாள் எழுத்து இப்படிக்கு கச்சியேகம்பன் எழுத்து இப்படிக்கு உடையபிள்ளை தற்குறிக்குப் பொன்னாட்டரை

23 யன் எழுத்து இப்படிக்கு *உடையபிள்ளை எழுத்து*[3]

அடிக்குறிப்புகள்

1–2. குறியீட்டில் தரப்பட்டுள்ளன.

3. இப்பகுதி காவியெழுத்தில் உள்ளது.

5. தென்னிந்தியக் காசுகள் புதிய கண்டுபிடிப்புகள்

ஆறுமுக சீதாராமன்

அ. மூன்றாம் பல்லாளர் காசு

கோயமுத்தூர் மாவட்டம், பேரூர் நொய்யல் ஆற்றுப் படுகையில் இரண்டு செப்புக்காசுகள் கிடைத்தன. இந்தக் காசுகள் மூன்றாம் பல்லாளர் காலத்தில் வெளியிடப்பட்டவையாகும். காசின் எடை 3.600 கிராம். காசின் முன்பக்கத்தில் நிற்கும் மனித உருவத்தின் தலைப் பகுதியில், 'ப' என்ற கன்னட எழுத்து உள்ளது. பல்லாளர் என்ற பெயரில் உள்ள முதல் எழுத்தான 'ப' மட்டும் காசில் பொறிக்கப் பட்டுள்ளது. பின்பக்கத்தில் வலப்புறம் நோக்கி நிற்கும் ஆண் யானை உள்ளது.

முன்பக்கம்

பின்பக்கம்

தமிழகத்தில் கிடைத்துள்ள பிற்காலச் சோழர், பாண்டியர், சேரர், மதுரை நாயக்கர் காசுகளில் கூட இது போன்ற நிற்கும் மனித உருவம் உள்ளது. இந்தக் காசுகளைப் பின்பற்றி ஹொய்சள மன்னர் மூன்றாம் பல்லாளர் தமிழ்நாட்டில் மட்டும் புழக்கத்தில் இருக்கவேண்டும் என்று கருதித் தமிழ்நாட்டுக் காசுகளைப் போலவே இக்காசுகளை வெளியிட்டுள்ளார். எழுத்துப் பொறிப்புகளற்ற ஹொய்சளரின் பல காசுகள் தமிழகத்தில் கிடைத்துள்ளன. அந்தக் காசுகளில் யானை அல்லது அங்குசம் இலச்சினையாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இப்போது கிடைத்துள்ள இந்தக் காசு மூன்றாம் பல்லாளர் தமிழகத்தை குறிப்பாகக் கொங்குநாட்டை ஆட்சிசெய்தபோது (கி.பி.1292–1345) வெளியிட்டதாகலாம்.

ஹொய்சளர் ஆட்சியின் இறுதிநாட்களில் மன்னராக இருந்தவர் மூன்றாம் பல்லாளர். இவர் பவானிசாகரில் உள்ள டணாய்க்கன் கோட்டை என்ற ஊரிலிருந்து கொங்குப்பகுதியை ஆட்சிசெய்தார். இம்மன்னரின் கல்வெட்டுகள் கொங்குநாடு முழுவதும் கிடைக்கின்றன. பேரூரில் வீரபல்லாளரின் நீண்ட மெய்க்கீர்த்தி ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. அதில் மன்னரின் வெற்றிச் செய்திகள் சுட்டப்படுகின்றன. ஹொய்சளர் காலத்தில் நிருவாகம், சுயாட்சித் தன்மையுடன் விளங்கியதை இக்கல்வெட்டு வலியுறுத்தும். மூன்றாம் பல்லாளருக்கு முற்பட்ட ஹொய்சள மன்னர்கள் கொங்குநாட்டில் நிலையான ஆட்சியை ஏற்படுத்தவில்லை. இவர் ஒருவரே கொங்கு நாட்டைத் தன் ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தவர் எனக் கூறலாம்.

ஆ. முதலாம் ஹரிஹரர் காசுகள்

பெரியார் மாவட்டம் பவானி ஆற்றுப் படுகையில் இரண்டு செப்புக்காசுகள் கிடைத்துள்ளன. இக்காசுகள் முதலாம் ஹரிஹரர் (கி.பி. 1336 – 1356) காலத்தில் வெளியிடப்பட்டவை.

முன்பக்கம்

பின்பக்கம்

முன்பக்கம்



பின்பக்கம்

முதல் வகைக் காசின் முன்பக்கத்தில் இடப்புறம் நோக்கி நிற்கும் சிங்கம், முன்காலைத் தூக்கிக்கொண்டு முகத்தைத் திருப்பிய நிலையில், வாலை நிமிர்த்தி, வளைத்து நிற்கிறது. சிங்கத்திற்கு மேலாகப் பிறை உள்ளது. பின்பக்கத்தில் இரண்டு வரிகளில் 'ஹரிஹர' எனும் சொற்கள் கன்னட எழுத்துகளில் பொறிக்கப் பட்டுள்ளன. காசின் எடை 1.400 கிராம். முதலாம் ஹரிஹரரால் முதலில் வெளியிடப்பட்ட காசு இதுவே ஆகும்.

இரண்டாம் வகைக் காசின் முன்பக்கத்தில் வலப்புறம் நோக்கிய கருடன், பறக்கும் நிலையில் காட்டப்பட்டுள்ளது. கருடனின் வலப் புறத்தில் பிறையும் இடப்புறத்தில் சூரியனும் காணப்படுகின்றன. கருடனின் முகத்திற்கு வலப்பக்கத்தில் சக்கரம் ஒன்று காணப்படுகிறது. இடப்பக்கத்தில் சங்கு, தேய்ந்த நிலையில் உள்ளது. பின்பக்கத்தில் நந்திநாகரியில் 'ஹரிஹர' என்று இரண்டு வரிகளில் பொறிக்கப் பட்டுள்ளது. காசின் எடை 4 கிராம்.

ஹொய்சளர்கள் தங்கள் நாட்டில் வெளியிட்ட காசுகள் அனைத்திலும் சிங்க உருவமே காணப்படுகிறது. அதே போல் ஹொய்சளர்களுக்குப் பின்வந்த விசயநகர முதல் மன்னர் ஹரிஹரர் காசுகளிலும் சிங்கம் காணப்படுகிறது. ஹொய்சளர் காசுகளில் கன்னட எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. விசயநகரக் காசுகளிலும் முதன்முதலில் கன்னடத்திலேயே எழுத்துகள் பொறிக்கப்பட்டன. பிறகே நந்திநாகரியில் எழுத்துப் பொறிக்கும் பழக்கம் வந்தது. ஹரிஹரர் முதலில் சிங்கத்தையே தமது காசுகளில் பொறித்தார். பிறகே அனுமன், கருடன் போன்ற உருவங்களைத் தம் காசுகளில் பொறிக்கத் தொடங்கினார்.

சங்கம குமாரர்களான ஹரிஹரர், புக்கர் ஆகியோரை ஹொய்சளரோடு இணைத்துக்காட்டும் சான்றாக இந்தச் சிங்கம் பொறித்த காசு கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இ. பிற்காலச் சேரர் காசு

பிற்காலச் சேரரின் செப்புக்காசு ஒன்று திருநெல்வேலியில் கிடைத்துள்ளது. காசின் எடை 3.600 கிராம். காசின் முன்பக்கத்தில் நிற்கும் மனிதனின் உருவம் காட்டப்பட்டுள்ளது. அவர் வலக்கையின் கீழே, மீனொன்று தலைகீழாக உள்ளது. இடக்கையின் பக்கத்தில் டைமண்ட் வடிவத்தில் ஓரமைப்பும் அதன் உள்ளே ஒரு வட்டமும் காணப்படுகின்றன. பின்பக்கத்தில், அமர்ந்த மனிதனின் உருவமும் அவன் இடக்கையின் கீழே பரசு கட்டாரி ஒன்றும் காட்டப்பட்டுள்ளது. கட்டாரியின் மேல் 'ச' என்னும் தமிழ் எழுத்து உள்ளது.

முன்பக்கம்

பின்பக்கம்

இவ்வகைக் காசுகள் கொற்கை, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், திருவனந்தபுரம் போன்ற ஊர்களில் அதிகமாகக் கிடைக்கின்றன. இக்காசுகளைப் பிற்காலப் பாண்டியர் காசுகள் என்றும், கொற்கைப் பாண்டியர் காசுகள் என்றும் நாணயவியலார் கருதிவந்தனர். இப்பொழுது கிடைத்துள்ள காசின் முன்பக்கத்தில் மீன் தலைகீழாகப் பொறிக்கப்பட்டுள்ளது. பின்பக்கத்திலோ பரசு கட்டாரி காணப்படுகிறது. பரசு கட்டாரி பிற்காலச் சேரர்களின் இலச்சினையாக இருந்துள்ளமைக்கு இங்குக் கிடைக்கும் காசுகளே ஆதாரமாக விளங்குகின்றன.

பாண்டியர்களின் இலச்சினையாகிய மீன் தலைகீழாகப் பொறிக்கப்பட்டிருப்பதற்குக் காரணமாகச் சேரர்களின் பாண்டி நாட்டு வெற்றியை ஊகிக்கலாம். வெற்றியின் நினைவாக இக்காசைச் சேரர்கள் வெளியிட்டிருக்காலம். 'ச' என்ற தமிழ் எழுத்து மன்னன் பெயரின் முதலெழுத்தாக இருக்கலாம். இதுவரை கிடைத்துள்ள பிற்காலச் சேரமன்னர்களின் காசுகளில் சேரகுலராமன், பூதல, பூதலவீரராமன், பூதலவீர, பாஸ்கர, மா (மார்த்தாண்டவர்மன்) போன்ற பெயர்கள் கிடைத்துள்ளன. இப்போது கிடைத்துள்ள காசின் காலம் கி.பி. 14ஆம் நூற்றாண்டாக இருக்கலாம்.

ஈ. மதுரை நாயக்கர் காசுகள்

விசுவநாதன் காசு

மதுரை வைகை ஆற்றில் இரண்டு செப்புக்காசுகள் கிடைத்துள்ளன. முதல் காசின் முன்பக்கத்தில் இடப்பக்கம் நோக்கி அமர்ந்த நிலையில் காளை ஒன்றும் அதன் மேற்புறத்தே சூரியனும்

சந்திரனும் காணப்படுகின்றன. காசின் பின்பக்கத்தில் 'விசிவ' என்று இரண்டு வரிகளில், தமிழ் – தெலுங்கு எழுத்துகளில் பொறிக்கப் பட்டுள்ளது. 'வி' தமிழ் எழுத்திலும் 'சிவ' தெலுங்கு எழுத்துகளாலும் பொறிக்கப்பட்டுள்ளன. விசுவநாதன் (கி.பி. 1529–1564) காலத்தில்



முன்பக்கம் பின்பக்கம்

வெளியிடப்பட்ட ஒரு காசில் விசுவநாதன் என்றும், மற்றொரு காசில் விஸ்வநாதன் என்றும் மன்னர் பெயர் தமிழில் காணப்படுகிறது. விஸ்வநாதன் என்று வருமிடத்து 'ஸ்வ' என்ற கூட்டெழுத்து மட்டும் கிரந்த எழுத்துகளில் உள்ளது. தற்போது கிடைத்துள்ள காசில் மன்னரின் பெயர் தமிழும் தெலுங்கும் கலந்த நிலையில் எழுதப்பட்டுள்ளது. மதுரை நாயக்கர் ஆட்சியில் தமிழ், தெலுங்கு இரண்டுமே ஆட்சிமொழிகளாக இருந்ததால், இந்தக் காசில் தமிழ், தெலுங்கு இரண்டையும் கலந்து மன்னர் பெயரைப் பொறித்துள்ளதாகக் கருதலாம். காசின் எடை 5.250 கிராம்.

முத்து கிருஷ்ணப்ப நாயக்கர் காசு

இரண்டாம் காசின் முன்பக்கத்தில் வலப்பக்கம் நோக்கி நிற்கும் காளை உள்ளது. பின்பக்கத்தில் இரண்டு வரிகளில் தெலுங்கு எழுத்துகளில், 'முத்து கிருஷ்[ண]' என்று பொறிக்கப்பட்டுள்ளது. காசின் எடை 3.450 கிராம். மதுரையை ஆட்சிபுரிந்த நாயக்கர்கள்

முன்பக்கம் பின்பக்கம்

வரிசையில் விசுவநாத நாயக்கருக்குப் பின் ஐந்தாம் ஆட்சியாளராய் வந்தவர் முத்து கிருஷ்ணப்ப நாயக்கர் (கி.பி. 1601–1609) ஆவார். முத்து கிருஷ்ணப்பர் சமயப் பெருநோக்குடையவராய் இருந்தார். இவர் காலத்தில் குமரிமுனை வரையிலும் நாயக்கர் ஆட்சி பரவியிருந்தது.

உ. மைசூர் உடையார் காசுகள்

மைசூர் உடையார்களின் அரச பரம்பரையில் கி.பி. 1638 முதல் கி.பி. 1656 வரை செங்கோலோச்சிய அரசர் கண்டீரவ நரசராச உடையார். அரசியலில் திறமைபெற்றுத் தம்முடைய ஆட்சிப்பரப்பை, குறிப்பாக மைசூர் மாநிலத்தைத் தன்னாட்சி அதிகாரம் படைத்ததாக அமைத்துக்கொண்டு ஆண்டார். தம்முடைய ஆட்சிக்காலத்தில் இரணதுல்லாகான், பீஜப்பூர் சுல்தான், கொங்கு மன்னர்கள், மதுரை நாயக்கர்கள் ஆகியோரை வெற்றிகொண்டு ஆட்சிப்பரப்பை விரிவடையச் செய்தார்.

உடையார்களின் அரச பரம்பரையில் இவர் மட்டும் சீரங்கபட்டணத்தில் அக்கசாலை அமைத்து, கி.பி. 1646ல் பொற்காசுகளை அச்சிட்டு வெளிக்கொணர்ந்துள்ளார். இதுவரை இவர் வெளியிட்ட வெள்ளி, செப்புக்காசுகள் கிடைக்கவில்லை. ஆனால் தற்சமயம் இவர் வெளியிட்ட இருவகைச் செப்புக்காசுகள் சத்தியமங்கலம் மற்றும் ஈரோடு பவானி ஆற்றில் கிடைத்துள்ளன. மைசூர் கண்டீரவ நரசராச உடையார் தம்முடைய ஆட்சியின் போது கொங்குப்பகுதியை வென்று தம் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தபோது, இந்தக் காசுகளை கொங்குநாட்டுப் புழக்கத்திற்காக வெளியிட்டிருக்கலாம். இக்காசுகள் மைசூர் உடையார்களால் முதன்முதலில் வெளியிடப்பட்ட செப்புக்காசுகளாகும்.

வகை – I

காசின் எடை 2 கிராம். காசின் முன்பக்கத்தில் வலப்பக்கம் நோக்கி நிற்கும் மயில் உள்ளது. பின்பக்கத்தில் மூன்று வரிகளில் கன்னடம் மற்றும் தெலுங்கில் 'கண்டீராவ்வ' என்று எழுதப்பட்டுள்ளது.

முன்பக்கம்

பின்பக்கம்

வகை – II

காசின் எடை 1.800 கிராம். காசின் முன்பக்கத்தில் படுக்கை வாக்கில் மீன் ஒன்று காணப்படுகிறது. பின்புறத்தில் 'கண்டீராவ்வ' என்று கன்னடம் மற்றும் தெலுங்கு எழுத்துகளில் எழுதப்பட்டுள்ளது.

முன்பக்கம்



பின்பக்கம்

ஊ. நம்மாழ்வார் காசு

வைணவத் தத்துவத்தை நம்மாழ்வார் நிலைநாட்டியதால் 'குலபதி' என்று கூறி, வைணவர்கள் அவரை மிகவும் உன்னத நிலையில் வைத்துக் கொண்டாடுகிறார்கள். திருமாலுக்கு ஆட்பட்ட அவர், தம்மைத் திருமாலின் பெரிய திருவடிகள் என்று ஒரு பாடலில் குறிப்பிட்டிருக்கிறார். எனவே அவரைப் பெருமாளின் பெரிய திருவடிகளாகவே வைணவர்கள் பாவித்து, பிற்காலத்தில் அவருடைய

திருமேனி உருவையும் பெருமாள் கோயில்களிலே வைத்துப் போற்றிப் பூசித்து வரலானார்கள்.

முன்பக்கம்

பின்பக்கம்

வைணவ குரவர்களை ஆழ்வார்கள் எனவும், ஆச்சாரியார்கள் எனவும், இருவகையாகப் பிரித்துக் கூறுவார்கள். ஆனால் நம்மாழ்வாரை மட்டும் அவ்விரு வகையினரையும் சேர்ந்தவராகக் கருதுகிறார்கள். பன்னிரு ஆழ்வார்களில் நம்மாழ்வாரை அவயவி எனவும் மற்ற ஆழ்வார்களை இவரின் அம்ச அவதாரங்களான அவயவங்கள் என்றும் குறிப்பிடுவார்கள்.

வைணவர்கள் போற்றும் பத்து ஆச்சாரியார்களில் திருமால், திருமகள், சேனை முதலியார் எனப்படும் முதல் மூன்று ஆச்சாரியார் களும் பரமபதத்தைச் சார்ந்தவர்கள். எனவே நான்காவதாகக் குறிப்பிடப்படும் நம்மாழ்வாரே பூவுலகத்தைச் சேர்ந்த முதலாவது ஆச்சாரியாராக விளங்குகிறார்.

சைவர்கள் நூல் இயற்றத் தொடங்கும்போது முதலில் விநாயகருக்கு வாழ்த்துக் கூறுவது போலவே, வைணவர்கள் நூல் இயற்றத் தொடங்கும்போது முதலில் நம்மாழ்வாருக்குத் துதி கூறும் வழக்கம் உண்டாயிற்று. நம்மாழ்வார் தோன்றிய ஊர் ஆழ்வார் திருநகரி எனப் புகழ்பெற்றது. தமிழ்நாட்டில் ஒரு செப்புக்காசு நம்மாழ்வார் உருவப் பொறிப்புடன் ஆரணியில் கிடைத்துள்ளது. காசின் எடை 3.100கிராம். காசின் முன்பக்கத்தில் நம்மாழ்வார் அமர்ந்த நிலையில், சாய்வாகக் காட்சியளிக்கின்றார். தலையில் கொண்டை காணப்படுகிறது. காசின் பின்பக்கத்தில் நடுவில் நாமம், அதன் இரு பக்கங்களிலும் சங்கும், சக்கரமும் காணப்படுகின்றன. ஆரணி பகுதியில் ஆட்சி செய்த மன்னர் சிறந்த வைணவ பக்தராக இருந்திருக்கவேண்டும். இம்மன்னர் நம்மாழ்வாரின் பல அரிய செயல்களைச் சிறப்பிக்கும் வகையில் இக்காசைச் சிறப்பு வெளியீடாகவும், கோயில் காசாகவும் அச்சிட்டு, இந்தப் பகுதி

முழுவதும் உள்ள வைணவத் தலங்களில் புழங்கவிட்டிருக்கலாம். எழுத்துகள் இல்லாததால் இக்காசின் காலத்தை நிர்ணயிக்க முடியவில்லை.

எ. ஆங்கிலேயர் காலத்துத் தமிழ்க்காசுகள்

தென்னகத்தில் ஆங்கிலேயர்கள் பல வைகயான வெள்ளிக் காசுகளை வெளியிட்டனர். இதில் 'பணம்' என்று கூறப்படும் காசுகள் சென்னை மாகாணத்தில் அச்சடித்து வெளியிடப்பட்டன. சிலவற்றைச் 'சென்னப்பட்டணம் பணம்' என்றே 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த மக்கள் கூறிவந்தனர். இந்தப்பணம் தஞ்சை மராட்டியர் காலத்திலும் புழக்கத்தில் இருந்துள்ளது. 'இரண்டு பணம்' என்று தமிழில் பொறிக்கப்பட்ட பலவகைக் காசுகள் தஞ்சையில்

வகை – I
முன்பக்கம்

வகை – II
முன்பக்கம்

எனக்குக் கிடைத்தன. இந்தக் காசுகளில் தமிழ் எழுத்துகள் இருந்ததால் எழுத்துகளை ஆய்வு செய்தபோது ஒரு காசில் **'ரெண்டு பணம்'** என்றும், மற்றொரு காசில் **'இரண்டு பணம்'** என்றும் பொறிக்கப்பட்டுள்ளதை அறிந்தேன். இக்காசுகளின் எடை 1.700கிராம். 'ரெண்டு பணம்' என்ற பொறிப்புடன் முதன்முதலில் வெளியிடப்பட்ட காசில், இன்று நாம் நடைமுறையில் கூறும் சொற்களை (எ.கா. ரெண்டு ரூபாய் கொடு) அச்சடித்துள்ளார்கள். ஆங்கிலேயர்கள் பிழை பொருந்திய காசு என்று இதைக் கருதியதால், பிறகு வெளியிட்ட காசுகளில் தெளிவாக 'இரண்டு பணம்' என்று பொறித்தனர். இக்காசுகள் தென்னிந்தியாவில் கி.பி. 1807 முதல் 1815 வரை புழக்கத்தில் இருந்தன.

6. கொற்றவைத்தளி

அர. அகிலா, இரா. கலைக்கோவன்

பஞ்சபாண்டவர் ரதங்கள் என்று மக்களால் அழைக்கப்படும் பல்லவர் கால ஒருகல் தளிகள் ஐந்தும் மாமல்லபுரத்தின் தென்புறத்தே உள்ளன. இவற்றுள் முதல் நான்கும் ஒரே வரிசையில் மேற்குப் பார்வையாக அமைய, ஐந்தாம் தளி தெற்குப் பார்வையாகத் தனித்துக் காட்டப்பட்டுள்ளது. மேற்கு நோக்கியுள்ள நான்கு தளிகளுள் முதலிரண்டும் ஒரே குன்றிலிருந்து செதுக்கப்பட்டிருப்பதால் பொதுவான தளத்தின் மீது காணப்படுகின்றன. இத்தளத்தின் கீழ் மணல் வெளிக்கு மேலாகத் துணைத்தளமொன்றின் கண்டப்பகுதியும் வாஜனமும் மட்டுமே பார்வைக்குக் கிடைக்கின்றன. கண்டப்பகுதி, மேற்கிலும் தெற்கிலும் சிம்ம மற்றும் யானை முகச் செதுக்கல்கள் இடையிட்ட பாதங்களோடு அமைந்துள்ளது. வடக்குக் கண்டப்பகுதி நிறைவடையாப் பணியாய் நிற்கிறது. கிழக்குத் தளப்பரப்பு முறையாக அமையவில்லை. முதல் பாதியில் ஒழுங்கற்றுக் காணப்படும் இத்தளப்பகுதி, தென்பாதியில் முழுவதுமாய்ச் சிதைக்கப்பட்டுள்ளது. அதனால் துணைத்தள அமைப்பை இங்குக் காணக்கூடவில்லை.

தளப்பரப்பில் நிற்கும் இரண்டு தளிகளுள் முதல் தளி ஒருதள விமானமாய் அமைந்துள்ளது. கொற்றவைக்காய் அர்ப்பணிக்கப் பட்டிருந்த போதும், இத்தளியை திரௌபதி ரதம் என்று தவறாக அழைப்பதிலேயே அனைவரும் மகிழ்கின்றனர். மணல்வெளியி லிருந்து தளப்பரப்பை அடையத் துணைத்தளத்தை ஊடறுத்தாற் போல் மேற்கில் மூன்று படிக்கட்டுகள் வெட்டப்பட்டுள்ளன. கருவறை வாயிலுக்கு நேரே அமைந்திருக்கும் இப்படிகளின் இருபுறத்தும் பிடிச்சுவர்கள் உள்ளன. இவற்றின் தலைப்பில் பாறைப்பகுதி சற்று பிதுக்கமாக விடப்பட்டுள்ளது.

கொற்றவைத் தளியின் தாங்குதளம் பாதபந்தமாகக் காட்டப் பட்டுள்ளது. ஜகதி, எண்பட்டைக் குமுதம், கம்புகளின் தழுவலில் பாதங்களோடு கூடிய சிறிய அளவிலான கண்டம், மேலே பட்டிகை என்றமைந்துள்ள இத்தாங்குதளம், சில இடங்களில் முழுமை பெறாமலும் சில இடங்களில் சிதைக்கப்பட்டும் காணப்படுகிறது. ஜகதியின் கீழ், தளி முழுமைக்குமாய்க் காட்டப்பட்டுள்ள

நன்றி: **சாஸ்தா ஃபார்மா,**
1, பதினோராம் குறுக்கு, தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி – 620 018.

உபானவரியும், கிழக்குப்புறத்தின் தென்கோடியில் சிதைக்கப் பட்டுள்ளது. பட்டிகைக்கு மேலாகச் சற்று உள்ளடங்கி இடம் பெற்றுள்ள துணைக்கம்பிலிருந்து சுவர் அமைந்துள்ளது. இச்சுவரின்



கொற்றவைத்தளி – முன்தோற்றம்

நடுவே வடக்கு, கிழக்கு, தெற்கு ஆகிய முப்புறத்தும் கோட்டங்களும் மேற்கில் வாயிலும் அமைக்கப்பட்டுள்ளன. கோட்டங்களில் கொற்றவையின் சிற்பம் இடம்பெற்றுள்ளது. இக்கோட்டங்களும்

நன்றி: ***சாஸ்தா ஃபார்மா,***
1, பதினோராம் குறுக்கு, தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி – 620 018.

வாயிலும் பக்கத்திற்கொன்றாகக் கொண்டுள்ள அணைவுத்தூண்கள் நான்முக அரைத்தூண்களாய் வடிவமைக்கப்பட்டுள்ளன. சுவர்த் திருப்பங்களில் பக்கத்திற்கு இரண்டாக எட்டு நான்முக அரைத் தூண்கள் காணப்படுகின்றன.

கோட்ட அணைவு அரைத்தூண்கள் கீழிருந்து மேலாகப் பாதம், உடல், மாலைத்தொங்கல், கலசம், தாடி, கும்பம், பாலி, பலகை



துணைத்தள - தாங்குதள அமைப்புகள்

என்னும் உறுப்புகளைப் பெற்றமைந்துள்ளன. துணைக் கம்பிலிருந்து எழும் இவை கோட்டத்திற்குச் சற்று மேலே முடிகின்றன. இவற்றின் பலகைகள் மேல் நிற்பது போல சுவர்ப்பகுதியில் பக்கத்திற்கொன்றாக இரு மகரங்கள் காட்டப்பட்டுள்ளன. இம்மகரங்களின் விரிந்த தோகைகள் அரைத்தூண்களின் இருபுறத்தும் அடர்த்தியாகப் பரவி இறங்குமாறு செதுக்கப்பட்டுள்ளன. இம்மகரங்களுக்கு இடையிலுள்ள பகுதியின் நடுவே மேலும் இரு சிறிய மகரத்தலைகள். இவற்றின் வாய்களிலிருந்து வெளிப்படும்

நன்றி: ***சாஸ்தா ஃபார்மா,***
1, பதினோராம் குறுக்கு, தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி - 620 018.

கொடிக்கருக்குகள், பலகை மகரங்களின் அங்காத்த வாய்களில் முடியுமாறு இணைக்கப்பட்டுள்ளன. பலகை மகரங்களின் முதுகுகளின் மேல் வீரர்கள் அமர்ந்துள்ளனர். இவ்வீரர்கள் ஒரு கையை மகரத்தலை மீது இருத்தியபடி, மற்றொரு கையை உயர்த்தியுள்ளனர்.



வலப்பெண்



இடப்பெண்

நன்றி: **சாஸ்தா ஃபார்மா,**
1, பதினோராம் குறுக்கு, தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி – 620 018.

கோட்டத்தின் மேல்விளிம்பையொட்டி அதன் மையப்பகுதியில் சிறு தூண் போன்ற அமைப்பொன்று காட்டப்பட்டுள்ளது. இதன் பலகைப்பகுதியின் நடுவில்தான் மைய மகர இணையும் அதன் மேலான பூரிமப்பகுதியும் செதுக்கப்பட்டுள்ளன. இப்பலகைப் பகுதியின் மேற்பரப்பு, பக்கங்களில் நீண்டு, அணைவு அரைத் தூண்களின் பலகைகளோடு இணைந்துள்ளது. கிழக்குக் கோட்டப் பகுதியில் மட்டும் இந்நீட்டலில் பக்கத்திற்கொன்றாக இரு அலங்கரிக்கப் பட்ட வளைவுகள் உள்ளன. வழக்கமாக இவ்வளைவுகளுக்குள் காட்டப்படும் குழிந்த பகுதிகள் (கூடு) இங்கில்லை.

சுவர்த் திருப்பங்களிலுள்ள நான்முக அரைத்தூண்களும் கோட்ட அணைவுத்தூண்கள் போலவே உறுப்புகள் கொண்டு துணைக் கம்பிலிருந்து எழுந்தாலும், அளவில் சற்றுப் பெரியனவாய் அமைந்துள்ளன. பலகைக்கு மேலே இவற்றிற்கு வீரகண்டமும் போதிகைகளும் காட்டப்பட்டுள்ளன. போதிகைகளின் கீழ்க்கைகள் வளைந்து, மேற்கைகளாகி உத்திரம் தொடுகின்றன. இக்கைகளுள் சில தரங்கம் கொண்டும் சில வெறுமையாகவும் உள்ளன. சுவர்களிலுள்ள மகர தோரணங்களின் உச்சிப்பகுதிகளும் இவ்வுத்திரம் தொட்டவாறு அமைந்துள்ளன. உத்திரத்தையடுத்து வாஜனமும் வலபியும் காட்டப் பட்டுள்ளன. வலபியில் நாற்புறமும் பூதவரி செதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பக்கமும் ஒன்பது பூதங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் இரண்டு நந்தியையும் தக்கனையும் சுட்டுவனவாய் உள்ளன.

தெற்குவரியில் ஐந்து கணங்களின் முகங்கள் சிதைந்துள்ளன. வடக்கில் எட்டுக் கணங்கள் வடிவமைக்கப்பட்டிருக்க, ஒரு கணத்திற்கான கற்பகுதி அப்படியே விடப்பட்டுள்ளது. வடிவமைக்கப் பட்ட எட்டும் முழுமையடையவில்லை. மேற்கிலும் ஒன்று, வடிவம் பெறாமலுள்ளது. கிழக்கிலுள்ள கணவரி முழுமையடைந்திருந்தாலும் சிறப்பிற்குரிய அமைப்பில் இல்லை. ஒவ்வொரு கணத்திற்கிடையிலும் நன்கு இடைவெளி விட்டு அமைக்கப்பட்டுள்ள இந்த வரிமானத்தில், பூதங்கள் மிக எளிமையான தோற்றத்தில் காட்டப்பட்டுள்ளன.

பூதவரிக்கு மேலாகக் கூரை காட்டப்பட்டிருந்தாலும் அதன் முன்னிழுப்பாய் அமையும் கபோதம் இடம்பெறவில்லை. அதற்குப் பதிலாக மேலே அமைக்கப்பட்டுள்ள சிகரத்தின் பக்கச் சுவர்கள் நாற்புறமும் நன்கு சரிந்து இறங்குமாறு செய்யப்பட்டுள்ளன. இந்த

நன்றி: ***சாஸ்தா ஃபார்மா,***
1, பதினோராம் குறுக்கு, தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி – 620 018.

இறக்கத்தைத் தாங்குவது போல் வலபியின் மேற்பகுதியிலிருந்து நாற்புறமும் இரும்புப்பட்டைகள் போலக் கற்பட்டைகள் காட்டப் பட்டுள்ளன. வழக்கமாகக் கொடுங்கைக்குக் காட்டப்படும் இப்பட்டைகள், இங்குச் சிகர இறக்கத்திற்கும் காட்டப்பட்டிருப்பதை இத்தளியின் மாறுபட்ட அமைப்புக்கூறுகளுள் ஒன்றாகக் கொள்ளலாம்.

கூரைக்கு மேல் வழக்கமாக அமையும் கிரீவப்பகுதி இத்தளியில் காட்டப்படவில்லை. அதற்குப் பதிலாகப் பெரிய அளவிலான நாகர சிகரம் அமைக்கப்பட்டுள்ளது. குடிசையின் மேற்கூரை போல வடிவமைக்கப்பட்டுள்ள இச்சிகரத்தின் பக்கப்பகுதிகள் கூரை மட்டத்திற்கும் கீழிறங்கிய நிலையில் நாற்புறமும் நீட்டப்பட்டிருப்பது புதுமையான அமைப்புமுறையாகும். இந்த நீட்டலே தளிக்குக் கபோதப் பயன்பாட்டைத் தந்துவிடுவதாலோ என்னவோ, இங்குக் கபோதம் அமைக்கப்படவில்லை.

சிகரத்தின் நாற்புறமும் கீழ்ப்பகுதி மூலைகளில் பக்கத்திற்கு இரண்டெனப் படர்ந்து பெருகிக் காட்சிதரும் கருக்கணிகள், சரிவின் விளிம்புகளையொட்டி மேலேறித் தூபித்தளத்தில் முடிகின்றன. சதுரமாக அமைந்துள்ள இத்தூபித்தளம் தூபியின்றி வெறுமையாக உள்ளது. துணைத்தள மேற்பரப்பின் வடமேற்கு மூலையில் தற்போது காணப்படும் தூபிக்குடம், இங்கு வைக்கப்படுவதற்காகத் துணைத்தளப் பகுதிப் பாறையிலிருந்து உருவாக்கப்பட்டதென்றும் அது இன்றளவும் அங்கிருந்து பிரித்தெடுக்கப்படாமல் காட்சியளிப்பதாகவும் கூ.ரா.சீனிவாசன் தம் கட்டுரையொன்றில் கூறியிருக்கிறார்.[1] ஆனால், தாம் இப்பகுதியை ஆராய்ந்தபோது துணைத்தளப் படிக்கட்டுகளுக்குக் கீழ்ப்பகுதியில் இந்தத் தூபிக்குடம் இருந்ததாக லாங்ஹர்ஸ்ட் தம்முடைய ஆய்வு நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.[2] தளியோடு பிறந்த தூபிக்குடமா அல்லது தனித்தூபி சிதைவுறப் பின்னாளில் வந்தவர்கள் செய்தமைத்த தூபிக்குடமா என்பதையும், தன் தளத்தில் இல்லாமல் இது தரைக்கு வந்துவிட்ட காரணத்தையும் அறியக்கூடவில்லை.

இத்தளி, ஒருதள விமானத்திற்குரிய ஆறு அங்கங்களில் நான்கை மட்டுமே பெற்றிருப்பதாகவும் பிரஸ்தரம், கிரீவம் என்னும் இரு அங்கங்கள் இத்தளியில் இடம்பெறவில்லையென்றும் தம் கட்டுரையொன்றின் முதற் பத்தியில் கூறும்[3] கூ.ரா. சீனிவாசன், மூன்றாம் பத்தியில் இதன் பிரஸ்தரம் பூதமாலையுடன் இருப்பதாகக்

நன்றி: ***சாஸ்தா ஃபார்மா,***
1, பதினோராம் குறுக்கு, தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி – 620 018.

குறிப்பிடுகிறார்.[4] இது முன்னுக்குப் பின் முரணாக உள்ளது. பிரஸ்தரம் என்ற சொல்லுக்கு 'entablature consisting of mouldings over walls and pillars, viz. uttira (beam), vajana, valabhi, kapota, alinga and antari' என்று தம் நூலொன்றிலேயே விளக்கம் தந்துள்ளார் கூ.ரா. சீனிவாசன்.[5] இவர் கூரையுறுப்புகளாகக் குறிப்பிடுவனவற்றுள் அந்தரி, ஆலிங்கம் என்பவை தளமுடிவைக் காட்டுபவை. இவை பூமிதேசத்தின் உறுப்புகள். பிரஸ்தரம் சார்ந்தவையல்ல. இவை தவிர்ந்த ஏனைய நான்கு உறுப்புகளுள் உத்திரம், வாஜனம், வலபி ஆகிய மூனறு உறுப்புகளும் கொற்றவைத் தளியில் உள்ளன. இவை இவர் சொல்வது போலவே சுவர்களின் மீதும் திருப்பத் தூண்களின் மீதுமாய் அமர்ந்துள்ளன. கபோதம் மட்டுமே காட்டப்படவில்லை. கபோதம் என்பது கூரையல்ல. அது கூரையின் முன்னிழுப்பு. அதனால் கபோதம் அமையவில்லையென்பதால் கூரையே இல்லை என்று பொருள்கொள்வது சரியல்ல. கொற்றவைத் தளியில் கூரையுறுப்புகளோடு கூரை அமைந்திருப்பதைக் கருவறை வாயில் உட்புறம் நோக்குவார் யாரும் கண்டு தெளியலாம்.

கூ.ரா. சீனிவாசன் சொல்லியிருப்பது போல் இத்தளியில் கிரீவம் காட்டப்படவில்லை என்பது உண்மையே. ஆனால் தட்டையான கூரைக்கு மேலாகப் பரந்து விரியும் சிகரத்தைப் பார்க்கும்போது இரண்டிற்கும் இடையில் உள்ள காணமுடியா இடைவெளியைக் கிரீவமாகக் கொள்வதில் தவறில்லையென்றே தோன்றுகிறது. விமானங்களில் தள அடுக்குகள் காட்டும்போது, ஆதிதளத்திற்கு மேலுள்ள தளங்களுக்குத் தளத்திற்குரிய மூன்று அடிப்படை உறுப்புகளுள் ஒன்றான தாங்குதளத்தைக் காட்டுவதில்லை. அதனாலேயே அவற்றைத் தளமெனக் கொள்ளாமல் இருப்பதுமில்லை. அதுபோலவே கிரீவம் வெளிக்குத் தெரியாமல் இருப்பதாலேயே கிரீவம் இல்லையென்று கொள்வதினும், கூரைக்கும் சிகரத்திற்கும் இடைப்பட்ட இடத்தில் கிரீவம் மறைந்திருப்பதாகக் கொள்வதில் பிழையிருக்க முடியாது. எனவே, கொற்றவைத் தளியை ஐந்தங்க விமானம் என்பதைவிட ஆறங்க விமானமாகக் கொள்வதே பொருத்தமாகத் தோன்றுகிறது.

இத்தளியின் முன்புறத்தே சுவர் நடுவே அமைந்துள்ள வாயிலை அடையத் தளப்பரப்பிலிருந்து மூன்று படிகள் காட்டப்பட்டுள்ளன. மேற்குத் தாங்குதளத்தை ஊடறுத்து அமைக்கப்பட்டுள்ள இப்படிகளின்

நன்றி: ***சாஸ்தா ஃபார்மா,***
1, பதினோராம் குறுக்கு, தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி – 620 018.

இருபுறமும் பிடிச்சுவர் உள்ளது. இப்படிகளுள், கீழ்ப்படி உபானத்தின் தொடர்ச்சியாக நிலாக்கல் வடிவத்தில் செதுக்கப்பட்டுள்ளது. 87செ.மீ. அகலமும், 2.01மீ. உயரமும் உள்ள வாயிலின் இருபுறமும் கோட்ட அணைவுத்தூண்கள் போன்று, அதே உறுப்புகளுடன் அமைந்த நான்முக அரைத்தூண்கள் காட்டப்பட்டுள்ளன. இவற்றின் மீதும் மகர தோரணம். இதனால் இந்நுழைவாயில் தோரணவாயிலாகச் சிறப்புப் பெறுகிறது. மகேந்திரப் பல்லவரின் குடைவரைகளுள் ஒன்றாகக் கருதப்படும் தளவானூர் சத்ருமல்லேசுவரமே, இது போன்ற தோரணவாயிலைப் பெற்ற முதற் கற்கோயிலாகும். ஒற்றைக்கல் தளிகளுள் கொற்றவைத் தளியே தோரண நுழைவாயில் கொண்டுள்ள ஒரே தளி எனலாம்.

வாயிலணைவுத் தூண்களின் பலகை, வாயில் மேல் நீண்டுள்ளது. இப்பலகையின் நடுவிலும், கோட்டங்களின் மேல் காணப்படும் சிறிய அளவிலான தூணமைப்பு காணப்படுகிறது. இத்தூண்பலகையின் மீதே மகரதோரணத்தின் சிறிய மகரங்கள் அமர்ந்துள்ளன. இப்பலகையின் கீழே நன்கு வரையறுக்கப்பட்டுள்ள வாயில் மேல் நிலையில், இருபுறத்தும் துளைகள் காணப்படுகின்றன. கீழே வாயிலின் தரைப்பகுதியில் அது போன்ற துளைகள் ஏதுமில்லை. நுழைவாயிலின் இருபுறத்தும் உள்ள சுவர்ப்பகுதிகளில் பக்கத்திற்கொன்றாக இரண்டு கோட்டங்கள் அகழப்பட்டுள்ளன. வலக்கோட்டம் 1.47மீ. உயரமும், 59செ.மீ. அகலமும் கொண்டிருக்க, இடக்கோட்டம் 1.48மீ. உயரமும், 60செ.மீ. அகலமும் கொண்டமைந் துள்ளது. இக்கோட்டங்களில் வாயிற்காப்போராய் நின்ற கோலத்தில் காவற்பெண்டுகள் காட்டப்பட்டுள்ளனர். தமிழகக் கலை வரலாற்றில் காவற்பெண்டுகள் இடம்பெறும் ஒரே ஒற்றைக்கல் தளி இதுதான். மாமல்லபுரத்திலுள்ள கொடிக்கால் மண்டபம் கொற்றவைக்காய் அர்ப்பணிக்கப்பட்ட குடைவரைக் கோயிலாகும். மேற்குப் பார்த்த இதன் கருவறை வாயிலின் இருபுறமும் உள்ள கோட்டங்களில் காவற் பெண்டுகள் காட்டப்பெற்றுள்ளனர். இதுவே வாயிற்காவலராய்க் கருவறை நுழைவாயிற் கோட்டங்களில் பெண்கள் இடம்பெற்ற முதலிடம் எனலாம். மகாவராகர் குடைவரையின் கொற்றவைச் சிற்பத் தொகுதியிலும் இது போன்ற காவற்பெண்டுகள் காட்டப்பட்டுள்ளனர் என்றாலும் அத்தொகுதி இறைத்திருமுன்னாய் உருவகிக்கப்பட்டதே

நன்றி: ***சாஸ்தா ஃபார்மா,***
1, பதினோராம் குறுக்கு, தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி – 620 018.

தவிர, தனித்ததொரு கருவறையாய் உருப்பெறவில்லையென்பது இங்கு எண்ணத்தக்கது. கொற்றவைத் தொகுதியில் காவற்பெண்டுகள் இடம்பெறும் முதலிடமாக மகாவராகர் குடைவரையின் கொற்றவைத் திருமுன்னைக் கொள்ளலாம். இம்மூன்றிடங்கள் தவிர வேறெந்தப் பல்லவக் கொற்றவைத் தொகுதிகளிலும் காவற்பெண்டுகள் காட்டப்பட வில்லையென்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

கருவறையின் உட்புறத்தே பின்சுவரில் கொற்றவைத்தேவியின் சிற்பத்தொகுதி காணப்படுகிறது. ஏனைய சுவர்கள் வெறுமையாக உள்ளன. இச்சுவர்களின் மேலே கூரையையொட்டி வாஜனமொன்று நாற்புறத்தும் ஓடுகிறது. கருவறைப் பின்சுவரையொட்டி தரையிலிருந்து 44செ.மீ. உயரத்திற்குப் பாதபந்தத் தாங்குதளமொன்று காட்டப்பட்டுள்ளது. ஜகதி, எண்பட்டைக் குமுதம், கம்புகள் தழுவிய பாதங்களோடு கூடிய கண்டம், பட்டிகை என அமைந்துள்ள இத்தாங்குதளத்தின் மீது நடுநாயகமாகக் கொற்றவைத்தேவி தாமரை மலரின் மீது நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். இவரது இருபுறத்தும் கீழே அடியவர்களும் மேலே கணங்களும் சிற்பங்களாகக் காட்டப்பட்டுள்ளனர்.

சிற்பங்கள்

1. கோட்டக் கொற்றவைகள்

தளியின் முப்புறக் கோட்டங்களிலும் கொற்றவைச் சிற்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றுள் கிழக்குக் கோட்டச் சிற்பமே முழுமை பெற்றுள்ளது. இங்குக் கொற்றவை மகிடாசுரமர்த்தனியாகக் காட்டப்பட்டுள்ளார். மகிடனை வென்று, வதம் முடித்து, அந்த மகிடனின் தலை மீதே வெற்றிப் பெருமிதத்தோடு நிற்குமிந்தக் கோலம், அழகு பொலிந்த திருக்கோலமாகும். கோட்டத்தின் கீழே மகிடத்தலை காட்டப்பட்டுள்ளது. தலையின் மீது தேவியின் திருப்பாதங்கள் சமமாக வைக்கப்பட்டுள்ளன. கணுக்கால்களில் தாள்செறிகள். சமபங்கத்தில் நிற்கும் தேவியின் வல முன்கை காக்கும் குறிப்பில் இருக்க, இட முன்கை கடி அஸ்தமாக உள்ளது. பின்கைகளில் வலப்புறம் எறி நிலைச் சக்கரமும் இடப்புறம் சங்கும் இடம்பெற்றுள்ளன. கரண்ட மகுடமும், செவிகளில் பனையோலைக்

நன்றி: ***சாஸ்தா ஃபார்மா,***
1, பதினோராம் குறுக்கு, தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி – 620 018.

குண்டலங்களும், மேற்கைகளில் கங்கணங்களும், கீழ்க்கைகளில் வளைகளும் கொண்டிலங்கும் அம்மையின் மார்பகங்கள் கச்சொன்றால் மறைக்கப்பட்டுள்ளன. கழுத்தில் தொங்கும் அணிகலன் இக்கச்சின் மேற்பகுதியைத் தொட்டபடி மார்பில் புரள்கிறது. இடுப்பாடையின் முடிச்சுகள் பக்கவாட்டில் தொங்க, முன் வளையத் தொங்கல் கனமானதாய்க் காட்சியளிக்கிறது. அம்மையின் இடக்கை இதன் மீதே அமர்ந்துள்ளது.

தெற்குக் கோட்டத்தில் உள்ள கொற்றவைச் சிற்பம் கணுக்கால் வரையே வடிவமைக்கப்பட்டுள்ளது. அதற்குக் கீழுள்ள பகுதி பாறையாக விடப்பட்டுள்ளது. கீழுள்ள பாறைப்பகுதி மகிடத் தலையைச் செதுக்குவதற்காக விடப்பட்டது போல் அமைந்துள்ளதால் இக்கோலத்தையும் மகிடாசுரமர்த்தனி வடிவமாகவே கொள்ளலாம். அம்மையின் வலக்கையும் பின்கைகளும் முழுமையடையாத நிலையில், இடக்கை மட்டும் கடி அஸ்தமாகக் காட்டப்பட்டுள்ளது.

வடகோட்டத்துக் கொற்றவையும் மகிடாசுரமர்த்தனிதான். இவரது முன்கைகளுள் வலக்கை காக்கும் குறிப்பிலிருக்க, இடக்கை கடி அஸ்தமாய் இடுப்பில் உள்ளது. பின்கைகளில் வலப்புறம் எறிநிலைச் சக்கரமும் இடப்புறம் சங்கும் காட்டப்பட்டுள்ளன. இரு செவிகளிலும் பனையோலைக் குண்டலங்கள். இடுப்பாடை, பக்கவாட்டு முடிச்சுகளுடன் காட்டப்பட்டுள்ளது. மார்பில் கச்சணிந்துள்ள இவ்வம்மையின் கழுத்தணிப் பதக்கம் அக்கச்சின் மேற்பரப்பைத் தொட்டவாறு உள்ளது. கால்களின் கீழ்ப்பகுதியும் மகிடத்தலையும் உருவாக்கப்படா நிலையில் பாறையாகவே விடப்பட்டுள்ளன.

2. கருவறைத் தொகுதி

1.42மீ. அகலமும் 1.57மீ. உயரமும் உள்ள கருவறைச் சிற்பத்தொகுதியில் நடுநாயகமாகப் பேருருவினராய் 1.36மீ. உயரத்திற்குக் கொற்றவைத்தேவி காட்சிதருகிறார். பட்டிகையின் மேற்பரப்பின் நடுப்பகுதியில் வடிக்கப்பட்டுள்ள தாமரைமலர்த் தளத்தின் மீது தன் இரு திருவடிகளையும் இருத்திச் சமபங்கத்தில் நிற்கும் தேவியின் வல முன்கையில் சிதைந்த மலர். வலப் பின்கையில் எறிநிலைச் சக்கரம். அம்மையின் இடப் பின்கை முழுவதுமாய்த் தகர்த்து அகற்றப்பட்டுள்ளது. இட முன்கை ஊரு

நன்றி: *சாஸ்தா ஃபார்மா,*
1, பதினோராம் குறுக்கு, தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி – 620 018.

அஸ்தமாய் உள்ளது. தாள்களில் தாள்செறியும், கைகளின் மேற்பகுதிகளில் கங்கணங்களும், கீழ்ப்பகுதிகளில் கைப்பட்டைகளும் அணிந்துள்ள தேவியின் செவிகளில் காணப்படும் பேரளவிலான பனையோலைக் குண்டலங்களுள் இடச்செவிக் குண்டலம் சிதைக்கப்பட்டுள்ளது. கழுத்தில் பதக்கத்தோடு கூடிய சிறிய கழுத்தணி ஒன்றும் சற்று இறங்கிய மணிமாலையொன்றும் காட்டப்பட்டுள்ளன. இம்மணிமாலையின் பதக்கம் கச்சின் நடுப்பகுதியில் தொங்கலாகக் காட்டப்பட்டுள்ளது. அளவான அழகிய மார்பகங்களின் நடுப்பகுதியை சிறு பட்டை போலமைந்த கச்சு மறைத்துள்ளது. இடையில் கனமான முன்வளைவுத் தொங்கல்களோடு கூடிய ஆடை. இவற்றின் பக்கவாட்டு முடிச்சுகள் அழகிய மடிப்புகளுடன் கீழே தாமரை வரை தொங்குகின்றன. தேவியின் இடக்கை இந்த முன் தொங்கல்களின் மீதே இருத்தப்பட்டுள்ளது. தலையை அணி செய்யும் கரண்ட மகுடத்தின் முன் முகப்பும் பக்க முகப்புகளும் நன்கு அலங்கரிக்கப் பட்டுள்ளன. நெற்றியில் நெற்றிப்பட்டம். அழகும், அருளும் பொலிய அமைக்கப்பட்டுள்ள இச்சிற்பம் தொடக்கக்காலப் பல்லவக் கொற்றவைகளுள் குறிப்பிடத்தக்க சிற்பமாகும்.

அம்மையின் வலப்புறத்தும் இடப்புறத்தும் மேற்பகுதியில் கணங்களும் கீழ்ப்பகுதியில் அடியவர்களும் காட்டப்பட்டுள்ளனர். அடியவர்கள் தளத்தின் மீதிருக்கக் கணங்கள் வானத்தில் உலவுவனவாய்க் காட்டப்பட்டுள்ளன. புடைத்த வயிறும், உருண்டையான முகமும், குட்டையான தோற்றமும் கொண்டுள்ள இக்கணங்கள் பக்கத்திற்கு இரண்டென வடிக்கப்பட்டுள்ளன. பனையோலைக் குண்டலங்களுடன் காட்சிதரும் வலப்புறக் கணங்களில் கொற்றவைக்கு அருகிலுள்ள முதற் கணம் வலக்கையை இடுப்பில் வைத்து இடக்கையால் இறைவியைப் போற்ற, முப்புரிநூல் அணிந்து மீசையோடு காட்சிதரும் இரண்டாம் கணம் வலக்கையில் கொடுவாளும் இடக்கையில் கேடயமுமாய்ப் போருக்குத் தயாராவது போல் நிற்கிறது. இவ்விரு கணங்களுக்குமே உதரபந்தமும் கழுத்தில் பட்டையான அணிகலனும் காட்டப்பட்டுள்ளன. இடப்புறக் கணங்களுள் முதல் கணத்தின் வலக்கை சிதைக்கப்பட்டுள்ளது. இடக்கை மடக்கிய நிலையில் வயிற்றருகே காட்டப்பட்டுள்ளது. இதன் செவிகளில் கனமான பனையோலைக் குண்டலங்கள். முப்புரிநூலும்

நன்றி: *சாஸ்தா ஃபார்மா,*
1, பதினோராம் குறுக்கு, தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி – 620 018.

உதரபந்தமும் கொண்டுள்ள இதன் இடக்கையில் வளை. கழுத்தில் பட்டையான அணி. சடைகளை முடிந்து மகுடமாக்கியுள்ள இதன் வலக்கால் மடித்த நிலையில் இருக்க, இடக்கால் இரண்டாம் கணத்தின் வலப்பாதத்திற்குப் பின்னால் முழங்கால்வரை காட்டப்பட்டுள்ளது. இரண்டாம் கணத்தின் கொடுவாள் பற்றிய இடக்கை மட்டுமே பார்வைக்குக் கிடைக்கிறது. வலக்கை முதற் கணத்தின் பின்புறமிருப்ப தாகக் கொள்ளலாம். நன்கு வளர்ந்த மீசையும், முழங்காலுக்கு மேல்வரையிலான இடுப்பாடையுமாய்க் காட்சிதரும் இப்பூதத்தின் ஆடைமுடிச்சுகள் வயிற்றுக்குக் கீழே தொடைகளுக்கு இடைப்பட்ட பகுதியில் காட்டப்பட்டுள்ளன. நீள வளர்ந்துள்ள இதன் செவிகளில் குண்டலங்கள். இதன் எளிய மகுடம் தலைப்பட்டியுடன் அமைந்துள்ளது.

கீழே கொற்றவையின் இருபுறத்தும் உள்ள ஆடவர் சிற்பங்கள் இடுப்பாடையுடன் குத்துக்காலிட்டு அமர்ந்த நிலையில் காட்டப் பட்டுள்ளன. வலப்புறமுள்ள அடியவர் இடக்கையால் தலைமுடியைப் பிடித்தபடி வலக்கைக் கத்தியால் தம் கழுத்தை அறுத்துக்கொள்கிறார். முகம் பக்கவாட்டில் திரும்பியுள்ளது; வலச்செவியில் பனையோலைக் குண்டலமிருக்க இடச்செவி நீள் செவியாய்க் காட்டப்பட்டுள்ளது. சங்க இலக்கியப் புறத்திணைச் சிந்தனைகளின் படப்பிடிப்பாய் அமைந்துள்ள இது போன்ற மற்றொரு தலைப்பலிச் சிற்பம் வராகர் குடைவரையிலுள்ள கொற்றவைத் தொகுதியில் காணப்படுகிறது. சிங்கவரத்திலும் மகாவராகர் குடைவரையிலும் உள்ள கொற்றவைத் தொகுதிகளில் காணப்படும் அடியவர்கள், சதை கிழித்துக் குருதிப்பலி தருபவர்களாகவே காட்டப்பட்டுள்ளமை இங்குக் கருதத்தக்கது. எனவே தலைப்பலிச் சிற்பம் இடம்பெறும் முதலிடங்களாகக் கொற்றவைத் தளியையும் வராகர் குடைவரையையும் கொள்வதில் தடையிருக்க முடியாது.

இடப்புறம் இருப்பவர் கரண்டமகுடம் அணிந்துள்ளார். நன்கு மடித்த துணியை முப்புரிநூலென அணிந்துள்ள இவரது நீள் செவிகள் வெறுமையாக உள்ளன. கைகளின் கீழ்ப்பகுதி உடைந்துள்ளதால் இவை எந்த அமைதியில் இருந்தன என்பதை உறுதியாகச் சொல்ல இயலவில்லை. இக்கைகளின் அமைப்பு கொண்டு பார்க்கும்போது இவை வணக்க முத்திரையிலோ அல்லது பூத்தாவல் நிலையிலோ இருந்ததாக ஊகிக்கலாம்.

நன்றி: ***சாஸ்தா ஃபார்மா,***
1, பதினோராம் குறுக்கு, தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி – 620 018.

3. காவற்பெண்டுகள்

வாயிலின் இருபுறத்தும் உள்ள காவற்பெண்டுகள் நின்ற கோலத்தில் அழகு பொலியக் காட்சிதருகின்றனர். இருவருமே வளர்ந்த சடைகளை அழகாய் முடிந்து மகுடமாக்கியுள்ளனர். ஒரு செவியில் பனையோலைச் சுருளும் நீள வளர்த்த மற்றொரு செவியில் பூட்டுக் குண்டலமுமாய் இருவளைவுக் கோலத்தில் நிற்கும் இவர்தம் இளமார்புகளைக் கச்சொன்று மறைக்கமுயல்கிறது. இருவருக்குமே முடிச்சுகள் பக்கவாட்டில் தொங்கும்படி இடுப்பைச் சுற்றிக் கட்டிய ஆடை. இடப்புறத்தாருக்கு மட்டும் வளைவுத் தொங்கலொன்றும் முன்புறத்தே கனமாய்க் காட்டப்பட்டுள்ளது. இருவருமே காவற்பெண்டு களுக்குரிய கம்பீரத்துடன் காட்சியளித்தாலும் வலப் பெண்ணின் கம்பீரப் பார்வையில், பெருமிதக்கலப்பையும் காணமுடிகிறது. கோட்டத்தளத்தின் மீது நிறுத்தப்பட்டுள்ள பெருங்கேடயத்தின் மீது தாங்கலாக நிறுத்தியுள்ள வலக்கையில் ஓங்கிய கொடுவாள். இடக்கை ஊரு அஸ்தமாய்த் தொடை மீது இருத்தப்பட்டுள்ளது. இடப்புறத்தார் போல் இவரது கால்பகுதிகள் திருத்தமாய் வடிவமைக்கப்பெறாத போதும் இடப்பாதம் பார்சுவமாகவும் வலப்பாதம் சமமாகவும் இருப்பதைக் காணமுடிகிறது.

இடப்பெண் கோட்டத்தளவு உயர்ந்த வில்லொன்றை வலக்கையால் எளிதாகப் பிடித்த நிலையில், இடக்கையைத் தொடையின் மீது ஊன்றி ஸ்வஸ்திகக் காலமைப்பில் காட்சிதருகிறார். வலக்காலை முழங்காலளவில் மடக்கி, வலப்பாதத்தை இடப்பாதத்தின் பின்னால் அக்ரதலசஞ்சாரமாய் நிறுத்தியுள்ள இவரது கணுக் கால்களில் தாள்செறிகள். கழுத்தில் மெல்லிய அணியுடன் இருக்கும் இவர் முதுகுப்புறத்தே, இருபுறமும் அம்புக்கூடுகள். இரண்டும் இருவிதமான அமைப்பிலுள்ளன. இடப்புறம் உள்ள வட்டமான கூட்டிலிருந்து இப்பெண்ணின் மகுடத்தையொட்டி அம்பொன்று காட்டப்பட்டுள்ளது.

கொடிக்கால் மண்டபத்திலும் மகாவராகர் குடைவரையிலும் காணப்படும் காவற்பெண்டுகள், தோற்ற அமைப்பிலும் போர்க் கருவிகளைக் கொண்டிருக்கும் பாங்கிலும் இவர்களிடமிருந்து சற்றே வேறுபட்டுள்ளனர். காதணிகள், தலைக்கோலம், ஆடையமைப்பு போன்றவை இம்மூன்றிடத்துக் காவற்பெண்டுகளுக்கும் ஒன்று போலவே அமைந்திருந்தாலும் நிற்கும் நிலையில் மாற்றம் உள்ளது.

நன்றி: ***சாஸ்தா ஃபார்மா,***
1, பதினோராம் குறுக்கு, தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி – 620 018.

காவற்பெண்டுகள் தோற்ற ஒப்பீடு

தோற்றம், அணிகள்	கொற்றவைத் தளி	மகாவராகர் குடைவரை	கொடிக்கால் மண்டபம்
I. வலப்பெண்கள்			
1 நிற்கும் நிலை	நேர்க்கோலம்; நேர்ப்பார்வை.	கருவறைக்காய்த் திரும்பிய உடல்; நேர்ப்பார்வை.	கருவறைக்காய் திரும்பிய உடல்; நேர்ப்பார்வை.
2 மகுடம்	கரண்டம்	கரண்டம்	கரண்டம்
3 தலை	நேராக	இடப்புறச் சாய்வு	வலப்புறச் சாய்வு
4 முகம்	உருண்டை	நீளம்	நீளம்
5 செவியணிகள்	வளர்ந்த நீள் வலச்செவியின் சிறு குண்டலம் தோளில் புரள்கிறது; இடச்செவியில் பனையோலைக் குண்டலம்.	இரு செவிகளிலும் பனையோலைக் குண்டலங்கள்	வலச் செவியில் பனையோலைக் குண்டலம்; வளர்ந்த நீள் இடச் செவியின் சிறு குண்டலம் தோளில் புரள்கிறது.
6 கழுத்தணி	மெல்லிய அணி	அணி ஏதுமில்லை	அணி உள்ளது
7 வலக்கை	வலப்புறம் தரைமீது நிறுத்தப் பட்டுள்ள கேடயத்தின்மீது தாங்கலாய்; ஓங்கிய கொடுவாள்.	ஓங்கிய கொடுவாள்	ஓங்கிய கத்தி

8 இடக்கை	ஊரு அஸ்தம்	கீழே நிறுத்தப்பட்டுள்ள கேடயத்தின் மீது தாங்கலாய்	இட முழங்கை கீழே நிறுத்தப்பட்டுள்ள கேடயத்தின் மீது தாங்கலாய்
9 பாதங்களின் பொதுஅமைப்பு	சரியாக வடிவமைக்கப் படவில்லை. இவை கோட்டக் கீழ்த்தளத்தின் மீதே உள்ளன.	நன்றாக வடிவமைக்கப் பட்டுள்ளன. இவை கோட்டக் கீழ்த்தளத்தின் மீதே உள்ளன. ஸ்வஸ்திகம்.	நன்றாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை துணைக்கம்பின் மேல் உள்ளன. ஸ்வஸ்திகம்.
10 வலப்பாதம்	சமம்	சமம்	சமம்
11 இடப்பாதம்	பார்சுவம்	வலப்பாதத்தின் முன்னால் அக்ரதலசஞ்சாரம்	வலப்பாதத்தின் முன்னால் அக்ரதல சஞ்சாரம்
II இடப்பெண்கள்			
1 நிற்கும் நிலை	கருவறைக்காய்த் திரும்பிய நிலை	கருவறைக்காய்த் திரும்பிய நிலை	உடலின் கீழ்ப்பகுதி கருவறை நோக்கித் திரும்பியிருந்தாலும் உடலின் மேற்பகுதி நேர் நிலையில் உள்ளது.
2 மகுடம்	கரண்டம்	கரண்டம்	கரண்டம்
3 தலை	நேராக	இடப்புறச் சாய்வு	இலேசாக இடப்புறச் சாய்வு
4 முகம்	உருண்டை	நீளம்	நீளம்

5 செவியணிகள்	வலச் செவியில் பனையோலைக் குண்டலம்; இடச்செவியில் பூட்டுக் குண்டலம்	இரு செவிகளிலும் பனையோலைக் குண்டலங்கள்	நீள வளர்ந்த வலச் செவியின் சிறு குண்டலம் தோளில் புரள்கிறது; இடச்செவியில் பனையோலைக் குண்டலம்
6 கழுத்தணி	உள்ளது	உள்ளது	உள்ளது
7 வலக்கை	வில்லின் மேற்பகுதியைப் பிடித்துள்ளது	வில்லின் மேற்பகுதியைப் பிடித்துள்ளது	வில்லின் மேற்பகுதியைப் பிடித்துள்ளது
8 இடக்கை	ஊரு அஸ்தம்	கடி அஸ்தம்	கடி அஸ்தம்
9 பாதங்களின் பொதுஅமைப்பு	நன்கு வடிவமைக்கப்பட்ட பாதங்கள் கோட்டக் கீழ்த் தளத்தில் காட்டப்பட்டுள்ளன. ஸ்வஸ்திகம்.	நன்கு வடிவமைக்கப்பட்ட பாதங்கள் கோட்டக் கீழ்த் தளத்தில் காட்டப்பட்டுள்ளன. ஸ்வஸ்திகம்.	பாதங்கள் நன்கு வடிவமைக்கப் பட்டுள்ளன. வலப்பாதம் துணைக் கம்பின் மேல். இடப்பாதம் பட்டிகை மேல்.
10 வலப்பாதம்	அக்ரதலசஞ்சாரத்தில் இடக்காலின் பின்னே	அக்ரதலசஞ்சாரத்தில் இடக்காலின் பின்னே	அக்ரதலசஞ்சாரமாய்த் துணைக்கம்பின் மீது
11 இடப்பாதம்	சமம்	திரஸ்ரயம்	சமமாய்ப் பட்டிகை மீது நிறுத்தப் பட்டுள்ளது

நன்றி: ***சாஸ்தா ஃபார்மா***, 1, பதினோராம் குறுக்கு, தில்லைநகர், திருச்சிராப்பள்ளி – 620 018.

தொல்காப்பியர்க்கு முற்பட்ட காலத்திலிருந்தே வழக்கிலிருந்து வரும் கொற்றவை வழிபாடு, பல்லவர் காலத்தில் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தமைக்கு இத்திருக்கோயிலும், அவ்வழிபாட்டின் மீது ஏற்பட்ட வைதிக சமயக் கொள்கைகளின் தாக்கத்திற்கு, இக்கோயிலின் கோட்டங்களில் இடம்பெற்றுள்ள மகிடாசுரமர்த்தனி வடிவங்களும் சிறந்த சான்றுகளாகும். தமிழ்நாட்டில் கொற்றவைத் தெய்வத்திற்காக அமைந்த காலத்தால் முற்பட்ட கற்கோயிலாக இத்தளியைக் கொள்ளலாம். இன்று தமிழ்நாட்டில் வழிபாட்டிலிருக்கும் அனைத்துப் பெண் தெய்வங்களுள் பழமையான தெய்வமும் கொற்றவையே என்பது இலக்கிய மற்றும் சிற்பச் சான்றுகளால் தெளிவாகிறது. அதனால்தானோ என்னவோ இவ்வம்மைக்குப் 'பழையோள்' என்ற பெயரையும் இலக்கியங்கள் தந்து மகிழ்ந்துள்ளன.

அடிகுறிப்புகள்

1. K.R. Srinivasan, Encyclopaedia of Indian Temple Architecture, South India Lower Dravida Desa, American Institute of Indian Studies, 1983, p.37.

2. A.H. Longhurst, Pallava Architecture, part II, Cosmo Publication, 1982, p.16, (First Edition of this book was published in 1928)

3. K.R. Srinivasan, op.cit., p.31. இதே கருத்தை வே. இராமன், கி. ஸ்ரீதரன் உள்ளிட்டோர் தம்முடைய கட்டுரையொன்றில் வெளியிட்டுள்ளனர்.

   கி. ஸ்ரீதரன், சி. முனுசாமி, வே. இராமன், 'கோயிலும் குடியிருப்பும்', தமிழர் நாகரிகம், முதல் தொகுதி, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, 1994, ப. 7.

4. K.R. Srinivasan, op.cit., p.31.

5. K.R. Srinivasan, Temples of South India, National Book Trust, India, 1985, p.213.

நன்றி: *சாஸ்தா ஃபார்மா,*
1, பதினோராம் குறுக்கு, தில்லைநகர்,
திருச்சிராப்பள்ளி – 620 018.

7. கரூர் ஆனிலையப்பர் கோயில் ஆவணம்

பூ.ர. குப்புசாமி

ஒரு ஜெர்மானிய மானிடஇயல் அறிஞர் பல ஆண்டுகளுக்கும் முன்னரே, நம் நாட்டில் இதழ்களில் வரும் மணமகன், மணமகள் தேவை விளம்பரத்தைப் பார்த்து அதிர்ச்சியடைந்துபோனார். அத்திருமண விளம்பரங்களைப் பார்த்தாலே எத்தனை வகை பேதங்கள் நமக்குள்ளே என்பது விளங்கும். இந்து அறநிலையச் சட்டத்தின் கீழ் இயங்கும் இந்து அறநிலையத்துறையில் பணியாற்றும், வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புச் சொல்லும் அதிகாரமுள்ள உதவி ஆணையர், துணை ஆணையர் போன்றவர்களின் முன்னால் வந்த, வரும் வழக்குகளையும் அவற்றில் அவர்களுடைய தீர்ப்புகளையும் பார்த்தாலே சமுதாயத்திலுள்ள ஏற்றத்தாழ்வு, சாதிப்பூசல், சமயச் சண்டை, கோயில் குத்துவெட்டு, திருவிழாக் காலப் போட்டிகள், முதல் மரியாதை விவகாரம் போன்ற எண்ணற்ற பேதங்களைக் காணலாம். இதுபோல் கடந்த காலங்களிலும் கடுமையான சமுதாய ஏற்றத் தாழ்வுகள் இருந்தமைக்குக் கீழ்வரும் ஆவணம் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

1916ம் வருடம், செப்டம்பர் மாதம் 13ம் தேதிக்கு; நள வருடம் ஆவணி மாதம் 29ம் தேதி; கரூர் தாலுக்கா, கஸ்பா கரூரிலிருக்கும் பிராமண ஜாதி உத்தியோக ஜீவனம் வாங்கம் சின்னசாமி சாஸ்திரிகள் குமாரர் சுந்தரேசரய்யர் அவர்களுக்கு:

கரூரிலிருக்கும் வேளாள ஜாதி உத்தியோக ஜீவனம், ராமலிங்கம் பிள்ளை குமாரர் கரூர் ஸ்ரீகல்யாண பசுபதீஸ்வர சுவாமி தேவஸ்தானம் தர்மகர்த்தா ராமசாமிபிள்ளை எழுதிக் கொடுத்த குத்தகை தஸ்தாவேஜு என்னவென்றால்:

இதனடியில் கண்ட கரூர் ஸ்ரீகல்யாண பசுபதீஸ்வர சுவாமி தேவஸ்தானத்திற்குச் சொந்தமான காலி நிலத்தை ஏலம் போடுவதாக பிரசுரிக்கப்பட்ட 21-1-1914ம் தேதியுள்ள விளம்பரப்படி 5-2-1914ம் தேதி தாங்கள் ரூ.15-0-0 டிபாசிட்டு செய்து ரூ.280-0-0க்கு ஏலத்தில் எடுத்து ௸ ஏலம் நியாயம் செய்யப்பட்டு அன்று செலுத்திய டிபாசிட்டு துகையைத் தவிர ரூ.94-0-0ம், 8-2-1914ம் தேதி பாக்கி ரூ.171-0-0ம் ஆக ரூபாய் இருநூற்றி எண்பதும் ௸ தேவஸ்தானத்திற்காக என்னிடம் செல்லாகிவிட்ட படியால், ௸ நிலத்தில் ஏல ஷரத்துப் பிரகாரம் இந்த சாசனத் தேதி

முதல் ஒரு வருஷத்திற்குள்ளாக கூரை வீடன்னியில் ஒட்டுவில்லை அல்லது லாகட வீடு கட்டி அதில் குடியிருந்து அனுபவித்துக் கொள்ளவேண்டியது. அப்படி செய்யத் தவறினாலாவது கட்டிட வேலை முடியாமலிருந்தாலாவது ஒரு வருஷ காலத்திற்குப் பின்பு அந்த நிலத்தையும் கட்டிடத்தையும் தேவஸ்தானத்தார் கைப்பற்றிக்கொண்டு மறு ஏலம் போட்டு வசூலாகும் துகையில் சிலவு போக மீதியினை தாங்கள் பெற்றுக்கொண்டு ௸ செலுத்தியுள்ள பாத்தியதையை விட்டுவிடவேண்டியது. ௸ இடமானது பசுபதீஸ்வர சுவாமி கோவில் மடவளாகத்திற்கு சேர்ந்ததாகவும் ஆலய புண்ணிய பூமியின் நான்கெல்லைக்குள்ளிருப்பதாலும், அதில் குடியிருந்து அனுபவிப்பவர்கள் இந்து மதஸ்தர்களில் உயர்குலத்தோர்களாயிருக்க வேண்டுமென்கிற விதியையும் நிபந்தனையையும் அனுசரித்து, நீங்களும் உங்கள் வாரிசுகளும் உங்கள் பாத்தியதையை அடைகிறவர்களும் ௸ இடத்தை அன்னிய மதஸ்தர்களுக்காவது இந்துக்களில் தாழ்ந்த வகுப்பார்களுக்காவது எவ்வித பராதீனமும் செய்யக்கூடாது. அப்படிப்பட்டவர்கள் யாராவது ௸ சொத்துக்கு சொந்தக்காரர்களாக ஏற்படும் பட்சத்தில் அதில் கட்டியிருக்கும் கட்டிடத்துடன் யாதொரு தொகையும் கொடாமல் தேவஸ்தானத்தார் சுவாதீனம் செய்துகொள்ளலாம் என்கிற ஷரத்துடன் நாளது தேதி முதல் தொண்ணூற்றி ஒன்பது வருடத்திற்கு குத்தகைக்கு கொடுக்கப் பட்டிருக்கிறது. அந்தக் கெடுவுக்குப் பின்னிட்டு, அதில் கட்டியிருக்கும் கட்டிடத்திற்கு அப்போதுள்ள மதிப்புத் துகையை தேவஸ்தானத்தார் கொடுத்து மீட்டுக்கொள்ளலாம். அவர்கள் அப்படி செய்யாத வரையில் ௸ காலத்திற்குப் பின் வருஷம் ஒன்றுக்கு ஏக்கர் 1–க்கு ரூ.15–0–0 வீதம் இந்த நிலத்தின் விஸ்தீர்ணத்துக்குள்ள நிலத்தீர்வையை தேவஸ்தானதாருக்கு நீங்களும் உங்கள் வாரிசுகளும் அல்லது அக்காலத்தில் ௸ நிலத்தை அனுபவிக்கும் நபர் செலுத்தி வர வேண்டியது. இந்தப்படிக்கு எழுதிக் கொடுத்த குத்தகை தஸ்தாவேஜு.

சொத்து விபரம்

திருச்சினாப்பள்ளி ரிஜிஸ்ட்ரேஷன் டிஸ்திரிக்கட்டு, கரூர் சப்–டிஸ்ட்ரிக்குச் சேர்ந்த கரூர் தாலூக்கா, கஸ்பா கரூர் முனிசிபல் டவுன் 1–வது வார்டு, 9–வது பிளாக் சர்வே 369 நெ. சாலையில் பசுபதீஸ்வர சுவாமி கோயில் தெற்கு மடவளாகம் கிழமேல் வீதிக்கும் தெற்கு; ஸ்ரீனிவாச கெனபாடிகள் ஏலத்தில் எடுத்திருக்கிற நிலத்திற்கும்

மேற்கு; தேவஸ்தானம் கிழமேல் காலி சந்துக்கும் வடக்கு; வி.வெங்கிடரமணய்யர் ஏலத்தில் எடுத்திருக்கிற நிலத்திற்கும் கிழக்கு. இதன் மத்தியில் கிழமேல் ஜாதியடி 30, தென்வடல் ஜாதியடி 160. இந்த விஸ்தீர்ணமுள்ள காலிமனை நிலம்.

ஒம்./ராமசாமி பிள்ளை, தர்மகர்த்தா.

சாட்சிகள்:

கரூரிலிருக்கும் மலை வக்கீல் வெங்கட்ரமணய்யர் குமாரர் ஒம்./ ஒ.வி. வெங்கடசுப்பையர். கரூரிலிருக்கும் குழுமணி நாராயண அய்யர் குமாரர் ஒம்./ ஸ்ரீநிவாச கனபாடி.

எழுதியது:

ஒம்./ டி.என். சுப்புராமய்யர், த/பெ. நடேசய்யர், திருமாநிலையூர்.

–/உண்மை நகல்/–

பேய் வரும் நேரம்

பேய்கள் நள்ளிரவு பன்னிரண்டு மணிக்குப் பிறகுதான் உலாவத் தொடங்குமென்பது பொதுவான நம்பிக்கை. ஆனால் சங்க இலக்கியங்களுள் ஒன்றான நற்றிணையோ மாலையிலேயே பேய்கள் தங்கள் உலாவைத் தொடங்கிவிடுவதாகக் கூறுகிறது.

பாழடைந்த மன்றங்களில் வாழ்கின்ற இப்பேய்கள், வேனிற் காலத்துச் செம்முருக்கின் காய்ந்த நெற்றுப் போன்ற விரல்களை உடைய வல் வாய்ப் பேய்கள். வளப்பம் பொருந்திய பழமைச் சிறப்புடைய ஊரிடத்தே, தெய்வத்தின் முன், மாலை நேரத்தில் பூவும் நெல்லும் தூவி வணங்கி வழிபட்டுப் பலிச்சோறிடுவது ஊர் மக்களின் பழக்கம். இந்தப் பலிச்சோற்றை உண்பதற்காகத் தாம் உறையும் மன்றத்தை நீங்கிப் புறப்படும் பேய்களிடம் ஊர் மக்களுக்கு அச்சமிருந்தது. ஆண் துணையின் அணைப்பில் இருந்தபோதும் பெண்கள் இப்பேய்களுக்கு அஞ்சியதாக நற்றிணை சொல்கிறது.

பேய்களைப் பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் பரவலாகச் சிதறிக் கிடக்கின்றன. திரட்டிச் சேர்த்தால் பேய்களே மகிழக்கூடிய அளவிற்கு ஒரு நூல் உருவாக்கலாம்.

8. குழந்தைப்பலியும் அறிஞர் கருத்துரையும்

அர. அகிலா

வரலாறு ஐந்தாம் இதழில் வெளியாகியிருந்த சங்ககாலத்துக் குழந்தைப்பலி குறித்த தரவின் உண்மைத்தன்மையைத் தெரிவித் தருளுமாறு தமிழ்ப் பேராசிரியர்களை வேண்டியிருந்தோம். வரலாறு இதழின் உறுப்பினர்களாகவே பல தமிழறிஞர்கள் இருந்தும் குழந்தைப்பலிக்கான விளக்கங்கள் வாராமையின், முனைவர் தமிழண்ணல், முனைவர் சுப. அண்ணாமலை, முனைவர் சி. பாலசுப்பிரமணியன், முனைவர் ச.சு. இராமர் இளங்கோ, முனைவர் சா. விசுவநாதன், முனைவர் அ.மா. பரிமணம், முனைவர் அறிவுநம்பி, முனைவர் க. இந்திரசித்து ஆகிய தமிழறிஞர்களுக்கு இத்தரவினைத் தெரிவித்து விளக்கம் வேண்டி மடல்கள் எழுதினோம்.

முனைவர் சுப. அண்ணாலை, முனைவர் அ.மா. பரிமணம், முனைவர் க. இந்திரசித்து ஆகிய அறிஞர்கள் வரலாறு இதழின் மடலை மதித்துத் தங்களுடைய கருத்துரைகளை அனுப்பியுள்ளனர். தமிழ்மண் சார்ந்த பண்பாட்டுத் தரவொன்றின் உண்மைத்தன்மையை அறியத் துணைநின்ற இவ்வறிஞர் பெருமக்களை வரலாறு இரு கை கூப்பி வணங்கி நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

இது போன்ற சிக்கலான நிலைகளில் துறை வல்ல அறிஞர்கள் தயங்காது தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்தினால் தெளிவேற்பட வழியுண்டு. பல விளக்கங்கள் வரினும் அவற்றைச் சீர்தூக்கிப் பார்த்து ஒரு முடிவுக்கு வர வாய்ப்பிருக்கிறது. அந்த வகையில் வரலாறு மேற்கொண்ட இந்த முயற்சிக்குத் தங்களின் பல்வேறு பணிகளுக்கிடையில் ஒத்துழைப்பு நல்கிய அறிஞர் பெருந்தகைகள் பாராட்டிற்கும் தமிழக மக்களின் நன்றிக்கும் உரியவர்கள்.

அறிஞர்களின் கருத்துரைகள்

1. முனைவர் அ.மா. பரிமணம், C. 151, நகராட்சிக் குடியிருப்பு, தஞ்சாவூர் – 613 007.

19.4.96

பழந்தமிழ்ப் பண்பாடு பற்றிய செய்திகளில் ஐயம் தோன்று மிடத்தே அதன் உண்மையினைத் தக்கார் வாயிலாக அறிந்து வெளிப் படுத்துவதில் ‘வரலாறு’ இதழ் கொண்டுள்ள ஆர்வம் பாராட்டத்தக்கது. அவ்வுண்மை பற்றிச் சிந்திக்கத் தொடங்குமுன், நற்றிணை உரையாசிரியர், உரைகள் பற்றிய சிலவற்றை நினைவுகூர்வது அதற்குப் பெரும்பயன் அளிப்பதாக அமையும்.

இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் சங்க நூல்களுக்கு உரை வரைந்த சான்றோருள் குறிப்பிடத்தக்க ஒருவராகப் பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர் விளங்கினார். நற்றிணைக்கான இவருரை, ஒவ்வொரு செய்யுட்கும், துறை விளக்கம், பொழிப்புரை விளக்கம், உள்ளுறை, மெய்ப்பாடு, பயன், இலக்கணக்குறிப்பு ஆகியவற்றைக் கொண்டது. இவருரையைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் அப்படியே இருமுறை பதிப்பித்த பின்னர்த் (1952, 1956) திருத்தப்பட்ட மூன்றாம் பதிப்பாக (1962) பெருமழைப்புலவரைக் கொண்டு வெளியிட்டது. அதில் ஐயரவர்களின் பொழிப்புரை, பதவுரையாகப் பிரித்து அமைக்கப்பட்டதோடு அவரது பணியின் இறுதியில், 'பெருமழைப்புலவர் ஆய்வுரை' எனும் பகுதி சேர்க்கப் பட்டுள்ளது. அப்பகுதியில் பெருமழைப்புலவரின் கருத்துகளும் பாட பேதங்களும் உள்ளன. ஐயரவர்கள் பாடபேதங்களை அறிந்திருந்தும் அவற்றைப் பாடலின் கீழ் குறிப்பிடவில்லை என்பதும், பெருமழைப் புலவர் குறிப்பிட்டார் என்பதும் நினைவிற் கொள்ளத்தக்கன. பின்னாளில் நற்றிணையைப் பதிப்பித்தோர் மேற்கொண்ட பாடங்களுக்கு இப்பாடபேதங்கள் பெருமளவில் உதவிபுரிந்துள்ளன. உரைவேந்தர் ஔவை சு.துரைசாமிப்பிள்ளை பதவுரை, விளக்கவுரை முதலியவற்றோடு விரிவான உரைப்பதிப்பினை (1966) வெளி யிட்டுள்ளார். நூலினை மூலமாகவும், மூலமும் உரையுமாகவும் பலர் வெளியிட்டுள்ளனர். அவை எல்லாம் 'அந்தாதி பார்த்து அந்தாதியும் கலம்பகம் பார்த்துக் கலம்பகமும்' புலவர்களால் உருவாக்கப்பட்டன என்று பாரதியார் கூறுமாப் போல வெளிவந்தனவேயாகும். அண்மையில் (1989) டாக்டர் உ.வே.சா. ஐயர் நூலக வெளியீடாக வந்துள்ள 'நற்றிணை மூலமும் உரையும்' எனும் வெளியீடும் அவ்வகையிலமைந்த விலைத்தொண்டுப் பதிப்பாகவே உள்ள தெனலாம்.

தலைப்பிற் குறிப்பிட்டுள்ள ஐயத்தை ஏற்படுத்திய பகுதியைக் கொண்ட நற்றிணை 15ஆம் பாடலில், நாராயணசாமி ஐயரவர்கள் 'ஒய்ய வாங்கக் கைவிட்டாங்கு' என்ற பாடத்தையே கொண்டுள்ளார். பெருமழைப்புலவர் பதிப்பில் பாடபேதமாக இடம்பெற்றுள்ள 'பேஎய் வாங்கக் கைவிட்டாங்கு' என்னும் பாடத்தையும் பின்னைப் பதிப்பாளர்கள் பாடமாகக் கொண்டு, தாம் கொண்ட பேதத்திற்கேற்பப் பொருள் கூறுவாராயினர். இவ்வகையிலமைந்த பதிப்புக்களில் நாராயணசாமி ஐயர் உரை, ஔவை சு. துரைசாமிப்பிள்ளை உரை, எச். வெங்கடராமன் உரை (உ.வே.சா. நூலக வெளியீடு) ஆகிய மூன்று உரைகளையும் அடிப்படையாகக் கொண்டு குழந்தைப்பலி பற்றிய செய்தியினை ஆராயலாம். இம்மூவருள், முன்னவர் 'ஒய்ய

வாங்க' என்னும் பாடத்தையும், பின்னிருவர் 'பேஎய் வாங்க' என்னும் பாடத்தையும் கொண்டுள்ளனர்.

நெய்தல் திணையில் தோழி கூற்றாக அமைந்த இப்பாடலின் ஆசிரியர் அறிவுடைநம்பியாவார். ஒருவர் பெறுமவற்றுள் மகப்பேற்றின் மிக்க பேறில்லை எனும் கருத்தில் அமைந்த, "படைப்புப் பல படைத்து ..... பயக்குறை இல்லைத் தாம் வாழுநாளே" என்னும் புறநானூற்றுப் பாடலைப் (188) பாடியவரும் இப்புலவரேயாவார் என்பது குறிப்பிடத் தக்கது. தலைவியின்பால் இன்பந் துய்த்த தலைமகன், மணந்து கொள்ளாது காலந் தாழ்த்துவது கண்ட தோழி, அவன் விரைவில் வந்து மணந்துகொள்ள வேண்டும் என்று வற்புறுத்துவதனை நோக்கமாகக் கொண்டது இப்பாடல். அவன் காலந் தாழ்த்துதலால், ஊரவர் கூறும் அலரால் தலைவி நாணம் இழந்தவளாய் வருந்துகின்றாள். அதனால் விரைந்து மணந்துகொள்ளல் வேண்டும் என்பது தோழி கூற்றின் கருத்தாகும். தலைவி நாணம் விட்ட நிலையை விளக்கக் கூறிய உவமையே 'குழந்தைப்பலி' பற்றிய நினைப்பிற்கு அடிப்படையாக உள்ளது. அவ்வுவமை வருமாறு:

"மாசில் கற்பில் மடவோள் குழவி
ஒய்ய வாங்கக் கைவிட் டாங்கு"

நற். 15:7,8. பின்னத்தூரார் பாடம்.

இந்த உவமைக்கு முற்குறித்த மூவர் உரையையும், அவற்றின் திறத்தையும் சிந்திப்போம்.

1. பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் உரை (பெருமழைப்புலவர் பொழிப்புரையை பதவுரையாக்கிய வண்ணம்)

"மாசு இல் கற்பின் மடவோள் – குற்றமற்ற கற்பினையுடைய மடவாளொருத்தி; குழவி ஒய்ய வாங்கக் கைவிட்டாங்கு – தன் குழவியைப் பலி கொடுப்ப வாங்குதலும் அவள் அதனைக் கைவிட்டாற் போல"

ஒய்யுதல் – செலுத்துதல், ஈண்டுப் பலிக்கடன் செலுத்துதல்.

பெருமழைப்புலவர் ஆய்வுரை

"பேஎய் வாங்கக் கைவிட்டாங்கு" என்றும் பாடம் – இப்பாடமே சிறப்புடையது.

ஐயர் கொண்ட, 'ஒய்ய வாங்க' என்னும் பாடத்தின்படி, இங்குப் பேய் பற்றிய எண்ணம் தோன்றுவதற்கே வாய்ப்பில்லை. இருந்தும் "தன் குழந்தையைப் பலி கொடுப்ப வாங்குதலும்" என்னும் பொருளினை 'ஒய்ய வாங்க' எனும் தொடருக்கு எழுதுதற்கான காரணம் யாதாயிருக்கலாம் என்று எண்ணுதல் வேண்டும். அவர்

எடுத்துக்கொள்ளாவிட்டாலும் 'பேஎய் வாங்க' எனக் கண்ட பாடபேதம், 'பேய்க்குப் பலி கொடுக்க' என்னும் எண்ணத்தை உண்டாக்கி இருக்கலாம். சங்ககால மக்களிடத்தே பேய் பற்றிய நம்பிக்கையும் செயற்பாடும் நிலவிவந்தமை இவ்வெண்ணத்தை எழுப்பியிருக்கலாம்.

இந்நிலையில் 'ஒய்ய' என்பதற்குச் செலுத்த என்னும் பொருள் கொண்ட ஐயரவர்கள், எதைச் செலுத்த என்பதன் விடையாகப் 'பலி செலுத்த', 'பலி கொடுப்ப' என்று எழுதலாயினர்.

2. ஔவை சு. துரைசாமிப்பிள்ளையவர்கள் உரை

"கற்புடைய மகளொருத்தி ஈன்ற குழவியைப் பேயொன்று போந்து தனக்கெனப் பற்றி எடுக்க அவள் கைவிட்டாற் போல"

மேலுமிவர், "தாய் வாங்குகின்ற மகவைத் தனக்கெனப் பேய் வாங்கியன்னதோர் பெற்றித்தே என்று பிறர் கூறுவதைக் காட்டுவர் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்" எனத் தம் விளக்கவுரையில் குறிப்பிட்டுள்ளார்.

3. எச். வெங்கடராமன் உரை

"குற்றமில்லாத கற்பினையுடைய மடமகளொருத்தி, தன் சிறிய குழந்தையைப் பேய்க்குப் பலி கொடுப்ப எண்ணப் பின் பாசத்தால் அதனைக் கைவிட்டாற் போல"

பின்னிரண்டு உரைகளும் 'பேஎய் வாங்க' என்னும் பாடத்தைக் கொண்டுள்ளனவாயினும், உரை காண்பதில் வேறுபடுகின்றன. பேயொன்று போந்து, ஈன்ற குழவியைக் கற்புடையாளிடமிருந்து கவர்ந்தது எனும் கருத்திலமைந்த பிள்ளையவர்களின் உரையும், கற்புடையாளொருத்தி குழந்தையைப் பேய்க்குப் பலி கொடுக்க முதலில் எண்ணிப் பின், மனம்மாறி அவ்வெண்ணத்தைக் கைவிட்டாள் எனும் கருத்திலமைந்த எச். வெங்கடராமன் உரையும் அவரவர்தம் கற்பனையில் தோன்றிய ஊகங்களாகுமேயன்றி உண்மை யுரையாகா. காரணம் இவ்வூகங்களுக்கான பொருளைத் தரும் குறிப்புகள் மூலத்தில் இல்லாமையேயாகும். அதனால், பேய்ப் பாடங் கொண்ட இவ்விருவர் உரைகளும் குழந்தைப்பலி பற்றிய செய்திக்குச் சான்றாகாமையை அறியலாம்.

ஐயரவர்கள் கொண்ட 'ஒய்ய வாங்க' என்னும் பாடத்திற்குப் பேய் பற்றிய கருத்து பொருந்தாது என்பதை அறியுமுன்னர், அத்தகு கருத்து பண்டைத் தமிழகத் தாயின்பால் உண்டாகுமா என்பதனை எண்ணிப் பார்ப்பது பயனுடையதாகும். 'பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த மக்கட்பேறல்ல பிற' என்பது திருக்குறள். குழந்தைகள்,

பகைவர்களாலும் விரும்பிக்கொள்ளும் பாங்கினர் என்பதனைச் ‘செறுநரும் விழையும் செயிர்தீர்க் காட்சிச் செம்மல்’ என்று பழந்தமிழ் நூல் பகரும். அச்செல்வம் பெற்றோர் ‘இம்மை உலகத்து இசையொடும் விளங்கி மறுமையுலகம் மறுவின்றெய்துப’ என்பது பழந்தமிழர் கண்ட முடிபு. நற்றிணை 15ஆம் பாடலை இயற்றிய அறிவுடைநம்பியே புறநானூற்றில் குழந்தைச்செல்வத்தின் சிறப்பையும் பயனையும் காட்டியுள்ளமை முன்னரே குறிப்பிடப்பட்டது. இத்தகு சிந்தனை சிறந்த தமிழினத் தாய்மார்கள் உள்ளத்தில் குழந்தையைப் பலி கொடுக்கும் நினைப்போ, தேவையோ தோன்றியிருக்குமா என்பதனை நினைதல் வேண்டும்.

தன் குழந்தையைப் பலி கொடுத்துப் பெறவேண்டிய கருமம் கற்புடைய ஒரு தாய்க்கு உளதாகுமா? பிறிதொரு நலனுக்காகத் தம் குழந்தையைப் பலி கொடுக்க முற்பட்ட தாய்மார் பண்டு இருந்தனர் என்பது பொருந்தாக் கற்பனையாதலின் பண்டு, குழந்தைப்பலி தமிழ் மக்களிடை இருந்தது என்று எண்ணுவது தவறாகும். உரை கண்டவர் உள்ளத்தில் தோன்றிய மயக்கமே குழந்தைப்பலி பண்டு இருந்தது என்னும் ஐயம் தோன்றுதற்கு கடனாயது.

குறிப்பிட்ட இந்த உவமையின் உண்மையான பொருளைக் காண முற்படுமுன், வாசகர் மனங்கொள்ளவேண்டியது, பண்டிருந்த பேய்பற்றிய நம்பிக்கை, அதனடிப்படையில் எழுந்த மயக்க உணர்வுகள், அவற்றின் பயனாய்த் தோன்றிய பிழைபட்ட உரைகள் ஆகியவற்றை மறந்துவிடவேண்டும். ஐயரவர்கள் தேர்ந்து கொண்ட ‘ஒய்ய வாங்க’ என்னும் பாடத்தோடு கூடிய பாடலை மட்டுமே நம்மறிவு துணையாக ஆராய முற்படவேண்டும்.

நற்றிணைப் பாடலில் தலைவி நாணம் நீங்கி நலியும் நிலைக்கு உவமையாகவே கற்புடைய பெண், குழவியைக் கைவிட்டு வருந்தும் நிலை கூறப்பட்டுள்ளது.

ஒய்ய வாங்க என்பதில் ‘வாங்க’ என்பதன் பொருள் வெளிப்படை. ‘ஒய்ய’ என்பது பொருள்விளக்கம் காணவேண்டிய சொல்லாகும். அது கவர்ந்துவர, செலுத்த, தப்ப எனும் பொருட்களில் சங்க நூல்களில் வழங்கப்பட்டுள்ளது. ஐயர், இச்சொல்லைச் ‘செலுத்த’ எனும் பொருளிற் கொண்டமையால், பலி செலுத்த என்று மயங்கி உரைக்க நேர்ந்தது. ஒய்ய என்ற சொல் ஒய் என்னும் சொல்லடியாகப் பிறந்த ஒன்று. ஒய் என்பது விரைவை உணர்த்தும் ஒலிக்குறிப்பாகும். அவ்வகையில் ஒய்ய என்பது ‘விரைய’ என்று பொருள்படுவதனைச் சிலப்பதிகார அரும்பதஉரையால் அறியலாம். ‘ஒய்யெனத் தெழித்தாங்கு’ (சிலப். 15.48) என்னும் தொடருக்கு அடியார்க்கு

நல்லார் வேறு பொருள் கூறினாலும் குறிப்புரையாசிரியர் 'ஒய்ய — விரைய' என்று பொருள் கூறியுள்ளார்.

ஒக்கலிற் சுமக்கும் பருவத்தாய குழந்தையை அதன் தாய் மற்றவர்களிடம் கொடுப்பதும், மற்றவர்களிடமிருந்து வாங்குவதும் என்றும் எங்கும் காணக்கூடிய அன்றாடக் காட்சியாகும். அங்ஙனம் விரைய — ஒய்ய — வாங்குங்கால் குழந்தை கைநழுவி விழுந்து விடுவதும் எப்போதேனும் நிகழலாம். அந்நிலையில் அத்தாய் துணுக்கமும் துன்பமும் உற்றுக் கவல்வதனைக் காணலாம். அந்த நிலையைத்தான் ஆசிரியர் அறிவுடைநம்பி இப்பாடலில் தலைவி நாணம் விட்டுத் துன்புற்று நிற்கும்நிலைக்கு உவமையாகக் காட்டு கின்றார். இயல்பாகவும், அருமையாகவும் பொருள்விளங்க நிற்கும் இந்த உவமைக்குப் பேயொடு தொடர்புபடுத்திப் பொருள் காண்பது தேவையற்றதும் பொருந்தாததுமாகும்.

அதனால் ஒய்ய வாங்க என்ற பாடங் கொண்டாலும், அன்றிப் பேஎய் வாங்க என்ற பாடங் கொண்டாலும் ஈன்ற தாய் குழந்தைப் பலிக்கு ஒருப்பட்டாள் என்ற எண்ணத்தை தோற்றுவிக்கும் எவ்வகைப் பொருளும் ஏற்புடையதாகாது என்பது தெளிவாகிறது.

2. முனைவர் சுப. அண்ணாமலை, 98, அறிஞர் அண்ணா நகர், மதுரை — 625 020.

31.5.96

சங்க இலக்கியம் — சைவசித்தாந்த சமாசப் பதிப்பில், 'மாசில் கற்பின் மடவோள் குழவி பேய் வாங்கக் கைவிட்டாங்கு' என்ற பாடமே உள்ளது. இப்பாடத்தில் குழந்தையைப் பலி கொடுத்த செய்தி இல்லை. பேய் குழந்தையினைப் பறித்த செய்தியே உள்ளது. சிலப்பதிகாரத்தில் கனாத்திறம் உரைத்த காதையில், மாலதி என்பவளிடமிருந்து, இடாகினிப் பேய் குழந்தையைப் பறித்துத் தின்ற செய்தி உள்ளது. நான் அறிந்தவரை குழந்தைப்பலி பற்றித் தமிழ் இலக்கியத்தில் எங்கும் இல்லை.

3. முனைவர் க. இந்திரசித்து, தமிழ்த்துறை, வித்யாசாகர் கல்லூரி, உடுமலைப்பேட்டை.

6.6.96

'குற்றமற்ற கற்பினையுடைய மடவாள் ஒருத்தி தன் குழந்தையைப் பலி கொடுப்ப வாங்குதலும், அவள் அதனைக் கை விட்டாற்போல' என்று பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் இப்பாடலுக்கு உரையெழுதுகின்றார். 'குற்றமில்லாத கற்பையுடைய இளமகள் ஒருத்தி ஈன்ற குழவியைப் பேய்மகள் போந்து தனக்கெனப்

பற்றியெடுக்க அவள் கைவிட்டாற் போல' என்று அவ்வை துரைசாமிப்பிள்ளை உரையெழுதியுள்ளார்.

தான் பெற்ற குழந்தையை ஒரு பெண் பலிக்குத் தந்ததாக இலக்கியத்திலும் வரலாற்றிலும் குறிப்புகள் இல்லை. எனவே குழந்தையை ஒருத்தி பலிக்குத் தந்தாள் என்று பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் கூறும் உரை பொருத்தமற்றதாகக் காணப் படுகின்றது. 'குழந்தையைப் பேய் பறித்துக்கொள்ளக் கைவிட்ட தாய் போல' என்பதே சரியான உரையாகவேண்டும்.

முடிவுரை

மூன்று அறிஞர்களின் கருத்துரைகளும் சங்ககாலத்தில் குழந்தைப்பலி இருந்திருக்கமுடியாது என்ற உண்மையை நிறுவு கின்றன. முனைவர் அ.மா. பரிமணம், பேரா. ஒளவை சு. துரைசாமி உரை பற்றிக் குறிக்குமிடத்து, 'அது உரையாசிரியரின் கற்பனையில் தோன்றிய ஊகமாகுமேயன்றி உண்மையுரையாகாது' என்று குறித்துள்ளார். பேரா. ஒளவை சு. துரைசாமி, 'பேய் வாங்க' என்ற பாடத்தைக் கொண்டதால், 'கற்புடைய மகளொருத்தி ஈன்ற குழவியைப் பேயொன்று போந்து தனக்கெனப் பற்றியெடுக்க, அவள் கைவிட்டாற் போல' என்று உரை கூறியுள்ளார். இதைக் கற்பனையில் தோன்றிய ஊகமாகக் கொள்ளமுடியவில்லை. பெருமழைப்புலவர் 'பேஎய் வாங்கக் கைவிட்டாங்கு என்றும் பாடம், இப்பாடமே சிறப்புடையது' என்று குறிப்பிட்டிருப்பது இங்கு நினைக்கத்தகுந்தது. பாட வேறுபாடு களை அவரவர் விருப்பத்திற்கேற்பக் கொள்வது பிழையாகாது. பேய் குழந்தையைப் பறிக்கும் நிகழ்ச்சி சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றிருப்ப தாக முனைவர் சுப.அண்ணாமலை சுட்டுவதால், 'பேய் வாங்க' என்று பாடங்கொள்வதிலும் பொருளிருப்பதை உணரலாம்.

குழந்தையைப் பேய் பறித்ததோ அல்லது பிறரிடமிருந்து வாங்குகையில் குழந்தை கை நழுவிக் கீழே விழுந்ததோ, நிகழ்ச்சி எதுவாயினும் இது தாய்க்குத் திடீரென ஏற்பட்ட இழப்பாதலின், அந்த இழப்பின் விளைவான உணர்வுவெளிப்பாடுகளும், தாயின் செயற் பாடுகளுமே இங்குக் கருதத்தக்கன. அவையே தலைவி நாணிழந்து துன்புற்று நின்ற நிலைக்கு உவமையாயின எனக் கொள்ளலாம். இது குறித்து மேலும் சிந்திக்க விரும்புவோர் தம் கருத்துகளை வரலாறு இதழிற்கு எழுதலாம்.

9. தளிச்சேரிக் கல்வெட்டு
வினாக்களும் விளக்கங்களும்

இரா. கலைக்கோவன்

வரலாறு ஐந்தாம் இதழில் ராஜராஜீசுவரம் திருக்கோயிலின் தளிச்சேரிக் கல்வெட்டு விரிவான கட்டுரையாக வெளியிடப் பட்டுள்ளது. இக்கல்வெட்டில் பயிலப்பட்டிருக்கும் சில சொற்களுக் கான சரியான பொருள்விளக்கங்களை அறியமுடியாமலிருந்ததால் கல்வெட்டு மற்றும் தமிழியல்துறை அறிஞர்களின் உதவியை நாடினோம்.

பேரா. முனைவர் எ. சுப்பராயலு, திரு. ஐராவதம் மகாதேவன், பேரா. முனைவர் செ. இராசு, முனைவர் மு.து. சம்பத், முனைவர் சு.இராசகோபால், பேரா. முனைவர் தமிழண்ணல், பேரா. முனைவர் அ.மா. பரிமணம் ஆகிய அறிஞர்கட்கு விளக்கங்கள் வேண்டி மடல்கள் அனுப்பப்பட்டன.

மையத்தின் வேண்டுகோளை மதித்துப் பேரா. முனைவர் செ.இராசு, பேரா. முனைவர் அ.மா. பரிமணம், பேரா. முனைவர் எ.சுப்பராயலு ஆகிய அறிஞர்கள் மறுமொழி அனுப்பி உதவியுள்ளனர். திரு. ஐராவதம் மகாதேவன், முனைவர் சு. இராசகோபால் ஆகிய இருவரும் நேரில் இது குறித்து உரையாடினர். திரு. ஐராவதம் மகாதேவன் இது தம்முடைய ஆய்வெல்லைக்குள் வராமையால் தாம் கருத்துத் தெரிவிக்கக்கூடவில்லை என்று கூறியிருக்கிறார். முனைவர் சு.இராசகோபால், பேரா. முனைவர் எ. சுப்பராயலு எழுதியிருக்கும் மருத்துவர் பற்றிய கட்டுரையைக் குறிப்பிட்டுச் சில விளக்கங்கள் தந்தார். சிக்கலான சில கல்வெட்டுச் சொற்களின் உட்பொருளை அறிந்து, மக்களுடன் அதைப் பகிர்ந்துகொள்வதில் வரலாறு இதழ் மேற்கொண்ட இம்முயற்சிக்குப் பேரன்புடன் ஒத்துழைப்பு நல்கித் துணைநின்ற அறிஞர் பெருமக்களுக்கு வரலாறு இரு கை கூப்பி நன்றி தெரிவித்து மகிழ்கிறது.

இது போன்ற சிக்கலான நிலைகளில் அறிஞர்களின் கலந்துரையே தெளிவேற்படுத்தமுடியும். பல விளக்கங்கள் வரினும் அவற்றைச் சீர்தூக்கிப் பார்த்து ஒரு முடிவுக்கு வர வாய்ப்பிருக்கிறது. அந்தவகையில் வரலாறு மேற்கொண்ட இந்த முயற்சிக்குத் தங்களின் பல்வேறு பணிகளுக்கிடையில் ஒத்துழைப்பு நல்கிய அறிஞர் பெருந்தகைகள் பாராட்டிற்கும் தமிழக மக்களின் நன்றிக்கும் உரியவர்கள்.

அறிஞர்களின் விளக்கவுரைகள்

1. பேரா. முனைவர் செ. இராசு, தலைவர், கல்வெட்டியல்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 613 005.

7.12.95

தஞ்சைப் பெருவுடையார் திருக்கோயில் கல்வெட்டில் விளக்கம் பெறாச் சொற்களுக்கு விளக்கம் பெறும் முயற்சி நன்முயற்சி; பாராட்டுதல்கள்.

காவிதிமை

காவிதி என்பது நடுநிலையுடன் மேற்பார்வை செய்யும் பணியாளர்கட்கும் மத்யஸ்தர்கட்கும் அளிக்கும் பட்டம். முதலில் மதுரைக்காஞ்சியில் இச்சொல் பயின்றுவருகிறது. 'செம்மை சான்ற காவிதி மாக்கள்' (499) என்பது மதுரைக்காஞ்சித் தொடர். கணக்கரும், கீழ்க்கணக்கரும் கணக்கு எழுதுபவர்களும், எழுதிய கணக்கைப் பாதுகாப்பவரும் ஆவர். காவிதிமை செய்வார் என்பவர், இன்னார் இனியார் என்று பாராமல் நடுநிலையுடன் வரி தண்டும் பணிமக்கள் ஆவர். புலவர் வே. மகாதேவன் காவிக்கல் வேலை செய்பவர் என்று கூறுகிறார். சா. கணேசன் அவர்கள் காவிதிமை செய்ய என்பதற்குக் 'காவிக்கல் கல்லி எடுக்க' என்று பொருள் கொள்ளுகிறார்.

கோலினமை

இச்சொல்லிற்குக் கோயின்மை, கோயினமை என்று நீங்கள் பாடம் கொண்டது தவறாகத் தோன்றுகிறது. எல்லோரும் கோலினமை என்றே பாடம் கொண்டுள்ளனர். பெருவுடையார் கோயிலில் கோலினமை செய்தவர் இருவர் பெயர்கள் அரையன் பவருத்திரன் ஆன பஞ்சவன் மங்கலப் பேரையன், அம்பட்டன் கோன் சடங்கவி ஆன ராஜராஜப் பிரயோகதரையன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. இங்குக் குறிக்கப்பட்ட அம்பட்டன் என்பது தனியான தொழிற்பெயர் அல்ல; கோலினமை செய்தாரின் குலப்பெயர் ஆகும். மங்கலன், பிரயோகன் என்பன வைத்தியருக்குரிய பெயர்கள். நாவிதர்கள் இப்பெயரோடு பெரிய வைத்தியர்களாக விளங்கியமையை பேரா. எ.சுப்பராயலு அவர்கள் தம் கட்டுரையொன்றில் விளக்கியுள்ளார். கோலினமை செய்வார் மருத்துவத்தில் வல்ல கத்தரிக்கோல் உருவாக்கிப் பராமரிப்பவர்கள் ஆவர்.

நாவிசர், அம்பட்டர்

நாவிசம் செய்யும் நாவிசரும் அம்பட்டரும் ஒருவரே. பெருவுடையார் கோயில் கல்வெட்டில் நாவிசம் செய்வார் மட்டுமே குறிக்கப்பட்டுள்ளனர். இங்குக் குறிக்கப்பட்டுள்ள அம்பட்டன் கோலினமை செய்வாருள் இரண்டாமவன். கல்வெட்டமைதியை நன்கு கவனிக்கவும்.

சன்னாலியள்

சன்னாலிகள் என்ற சொல்லே இங்குச் சன்னாலியள் என்று எழுதப்பட்டுள்ளது. சா.கணேசன் அவர்கள் கோலப்பொடி தயாரிப்பவன், விபூதி தயாரிப்பவன் அல்லது சுண்ணாம்பு நீற்றை வடிகட்டித் தருபவன் என்று பொருள் கொள்ளுகிறார். வே. மகாதேவன் இதில் இறுதிப் பொருளை மட்டும் எடுத்துக்கொள்கிறார்.

சன்னம் என்பது குழைந்த காரையைக் குறிக்கும். காரையை அரைத்துத் தயாரித்துப் பூசும் பணிபுரிபவன் சன்னாலியன் ஆகலாம்.

2. பேரா. முனைவர் அ.மா. பரிமணம், தமிழ்ப் பேராசிரியர், C 151, நகராட்சிக் குடியிருப்பு, தஞ்சாவூர் – 613 007.

8.12.95

காவிதிமை: திருக்கோயிலுக்கு வரவேண்டிய சிவ வருமானங்களைத் தண்டும் பணியில் நியமிக்கப்பட்டவர்களாகலாம்.

கோயின்மை: கோயிலின் தன்மை என்பது வழக்கில் விகாரமுற்று கோயின்மை என அமையலாம். அதனால் குறிக்கப்படும் பணியின் இயல்பினை அறியக்கூடவில்லை. முன்னும் பின்னும் நன்கு அறியப் பட்ட தெளிவான பணிகள் சுட்டப்பட்டுள்ளபோது இதற்குக் 'கோயிலின் இயல்பு தொடர்பான பணி' என்று பொதுப்பொருள் கொள்வது ஏற்புடைமையாகுமா?

இராராசப் பேரரசன் தன் உள்ளம் போல உயர்ந்ததும் பெரியதும் புதியதுமான திருக்கோயிலை உருவாக்கியதனால், அதன் இயல்புக்கு ஏற்பப் பல்வேறு புதுப்புதுப் பணிகளைத் தோற்றுவித்துப் பணியாளர் களை நிரப்பியிருக்கலாம். காலப்போக்கில் கோயிலின் நடப்புகள் குறைந்தும் மறைந்தும்விட்ட நிலையில், சில பணிகளைப் படித்தறியவும் கேட்டறியவும் வாய்ப்பில்லாது போயிற்று. பிற கோயில்கள் எல்லாம் சிறிய அளவினவாதலால் இத்துணை விரிவான அளவில் பணிநிலைகள் இருந்திருக்கமுடியாது. இருந்திருந்தாலும் இக்கல்வெட்டினை போலக் குறித்து வைத்திருந்தால்தானே அறிய முடியும்?

சன்னாலியள்

'சென்னை' என்றொரு இசைக்கருவியின் பெயர் கூறப்படுகிறது. அது 'சன்னா' என்றும் வழக்கில் இடம்பெறலாம். 'சென்னை' என்னும் சொற்குப் பொருள் கூறுங்கால் 'கோயில் மூர்த்தியின் புறப்பாடு அறிவிக்கும் மேளம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை நினைவிற்கொண்டு பார்த்தோமாயின் 'சன்னாலியள்' அக்கருவியைக் கையாள்பவன் என்று கொள்ளலாமா என எண்ணுகின்றேன். பணியாளர் வரிசையில், இவ்விடத்தில் இது மட்டுமே இசைக்கருவி இயக்குபவன் பற்றியதாக அமைகிறது. அது பொருத்தமாகுமா என்பதனைச் சிந்திக்க வேண்டுகிறேன்.

நாவிசர், அம்பட்டர்

இவ்விரு சொற்களுமே முடியகற்றும் பணியாளரைக் குறிப்பன வாக, இன்றும் கிராமப்பகுதியில் வழங்கக் காணலாம். தாங்கள் குறிப் பிட்டுள்ளது போல, அகராதிகள் இவற்றை ஒருபொருட் பன்மொழி யாகவே குறிப்பிடுகின்றன. அவ்வாறு குறிப்பிடுவது ஓரளவிற்குப் பொருந்தும்.

தொடக்கநிலையில் நாவிசர்/அம்பட்டர், மயிர் குறை/ மழிவினை செய்துவந்தனர் என்றும் பின்னர் இசைநலம் பெற்றவராய்ச் சமுதாய நலம், தீங்கு நிகழ்ச்சிகளில் இசைத்தொண்டும் புரிந்தனர் என்றும் கூறப்படுகின்றது. பின்னாளில் மூன்று தொழில்களிலும் ஒருங்கே ஈடுபட்டுள்ளமையினையும் காணலாம்.

சொற்பிறப்பும் பொருளும்

நாசுவன் – அம்பட்டன் – அம்பஷ்டன் (ambastha) - winslow.

அம்பட்டர் – தமிழ்நாட்டுச் சவரத் தொழிலாளி; நாட்டுப்புற அறுவைச் சிகிச்சையாளர்.

அம்பா – பக்கம்; ஸ்தா – இருப்பவன், பக்கத்திலிருப்பவன் என்னும் பொருளில் அம்பஸ்தன் – அம்பட்டன் வந்ததாகலாம்.

1. மயிர்நீக்கும்போது நீக்கப்படுபவனின் அருகிலிருப்பவன்.

2. அறுவைச் சிகிச்சை செய்யும்போது அருகிலிருப்பவன்.

இரு தொழிலிலும் இவர் அருகில் (பக்கத்தில்) இருப்பவராவர். பக்கத்திலிருப்பவன் என்னும் பொருளில், சவரத் தொழிலாளி, மலையாளத்தில் 'அடுத்தோன்' என்று கூறப்படுகின்றானாம்.

என்றாலும் இவ்விரு சொற்களையும் அவற்றின் பொருள் அடிப்படையில் பார்த்தால் சற்றே வேறுபாடு தோன்றக் காணலாம். செயலில், அந்தஸ்தில், சமூக அளவில் சிறிது வேறுபாடு இருந்துள்ளது என்று எண்ணத் தோன்றுகிறது.

ஒருகால் நாவிசர் முடி அகற்றும் தொழிலோடு நின்றவர் என்றும், அம்பட்டர், மருத்துவம், இசை போன்றவற்றிலும் பணியாற்றியவர் என்றும் கொள்ளலாம்.

பிற்காலத்தில் மறைந்துவிட்ட இந்த வேறுபாடு இராசராசன் காலத்தில் தெளிவாக இருந்திருத்தல்கூடும். அதனால் அவ்வேறுபாடு தோன்ற நாவிசம் செய்யத் தனிப் பணியாளரும், சார்புடைய பிறபணி செய்ய அம்பட்டரும் தனித்தனியாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்று கருதலாம்.

3. பேரா. முனைவர் எ. சுப்பராயலு, கல்வெட்டியல்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 613 005.

22.1.96

உங்கள் 28.11.95 கடிதத்தில் எழுப்பியுள்ள கேள்விகளுக்கு இதுநாள் வரை விடையெழுதாமைக்கு மன்னிக்கவும். பல சிறுசிறு வேலையிடையூறுகளினால் உரிய நேரம் கிடைக்கவில்லை. ஆயினும் இதைக் குறித்த சில செய்திகளைப் புலவர் செ. இராசு அவர்களிடம் விவாதித்துள்ளேன். அவர் உங்களுக்குக் கடிதம் எழுதியிருப்பார். மேற்கொண்டு எழுத நிறைவான பதில் என்னிடம் இல்லை.

முடிவுரை

ராஜராஜீசுவரத்துத் தளிச்சேரிக் கல்வெட்டு குறிக்கும் 'காவிதிமை', மத்யஸ்தர் பணியையே குறிக்கும் என்பதைக் கட்டுரையிலேயே தக்க சான்றுகளுடன் நிறுவியுள்ளோம் (வரலாறு 5, பக்.96. அடிக்குறிப்பு எண் 130). கோயின்மை என்பது தவறான பாடம் என்று பேரா. செ. இராசு குறிப்பிட்டுள்ளார். கல்வெட்டில் கோயின்மை என்றுதான் உள்ளது. அச்சொல்லை மசிப்படி எடுத்துக் கல்வெட்டறிஞர்கள் பேரா.செ. இராசு, பேரா.எ. சுப்பராயலு இருவருக்குமே காட்டினோம். கோயின்மை அல்லது கோயினமை என்றுதான் அச்சொல்லைக்

கொள்ளமுடியும். கோலினமை என்ற பழைய பாடம் சரியன்று. கோயின்மை சுட்டும் பணி எதுவென்று அறியக்கூடவில்லை.

நாவிசர், அம்பட்டர் இரண்டுமே வேறுபட்ட பணிகளைக் குறிக்கும் சொற்களாகவே இருக்கவேண்டும். இது குறித்துப் பேரா.அ.மா. பரிமணம் தெரிவித்திருக்கும் கருத்துகள் ஏற்புடையனவாக உள்ளன. எனினும் இது குறித்து மேலும் ஆராயவேண்டியுள்ளது.

சன்னாலியள் குறித்துப் பேரா.செ. இராசு தெரிவித்திருக்கும் கருத்து சிந்தனைக்குரியது. சன்னம் ஆள்பவன் 'சன்னாளன்' ஆகலாம். கல்வெட்டு 'சான்னாலி' என்று குறிப்பிடுவதால் இச்சொல் குறித்து மேலும் தெளிவு தேவைப்படுகிறது.

'காண பாட' என்று தளிச்சேரிக் கல்வெட்டு தெளிவாகக் குறிப்பிடுவதைக் கட்டுரையிலேயே சுட்டியுள்ளோம். பேரா. செ. இராசு ராஜராஜீசுவரத்தில் நிகழ்ந்த சதயத் திருநாள் விழாவில் (21.10.95) இச்சொல்லை 'கானபாடி' என்றே குறிப்பிட்டார். அதனால் இச்சொல் லையும் மசிப்படி எடுத்துப் பேரா. செ. இராசுவிடம் காட்டினோம்.

பேரா. அ.மா. பரிமணம் அவர்கள் தம் மடலில், "தாங்கள் படித்ததும் பதிப்பித்ததும் சரிதானா என்பதை உணர்த்த ஓர் உபாயம் செய்திருக்கலாம். அது செலவுமிக்க ஒன்றுதான். என்றாலும், அது இக்கால 'Decision of the third umpire in the test cricket play' போல மறுக்கமுடியாத, யாவரும் நேரே கண்டு தெளியத்தக்கச் சான்றாக அமையும். வேறுபட்ட இடங்களில் சிலவற்றைப் (காலியாக விடப்பட்ட இடம், மாற்றிப் படித்த இடம் போன்ற சிலவற்றை) படம் எடுத்து, அந்தச் சொல் அல்லது தொடர்களைப் பெரிதாக்கி (enlarge) பதிப்பித்துக் காட்டினால் எல்லோரும் ஐயமின்றித் தெளிவு பெற ஏதுவாகும். ஒரு கட்டுரையில் இப்படிச் செய்துகாட்டிவிட்டால், இனிக் காட்டவிருக்கும் இதுபோலும் மாறுபாடுகளை உணர்த்தும்போது ஐயமின்றி வாசகர்கள் ஏற்பர். சற்றே செலவாயினும் ஒருமுறையாவது அப்படிக்காட்ட முயலுமாறு வேண்டுகிறேன்" என்று குறிப்பிட்டிருந்தார். பேராசிரியரின் விருப்பத்தை இவ்விதழில் நிறைவேற்றியுள்ளோம். 'காண பாட', 'கோயின்மை', 'வடுகக் காந்தர்வ்வரில்' 'மெராவியம்' என்னும் கல்வெட்டுச் சொற்களை மசிப்படியெடுத்து ஒளிப்படமாக்கி இங்குத் தந்துள்ளோம். அனைத்துப் பாடவேறுபாடுகளையும் மசிப்படி யெடுத்துப் படமெடுத்து வெளியிட பொருளாதாரச் சூழல்கள் இடம்தர வில்லை.

கோயின்மை

'கோயின்மை' என்ற இச்சொல் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதியில் 'கொலினமை' என்று பதிப்பிக்கப்பட்டுள்ளது. கல்வெட்டில் 'யி' தெளிவாக வெட்டப்பட்டிருப்பதைப் படத்தில் பார்க்கலாம். இதனுடன் 'லி'யை ஒப்பிட்டுக் காண விரும்புவோர், 'காண பாட' சொல்லின் ஒளிப்படத்தைப் பார்க்கவும். அதில் மழலைச் சிலம்பு என்ற பெயரில் லகரம் இரண்டு இடங்களில் இடம்பெற்றுள்ளது. லகரத்திற்கும் இக்கல்வெட்டிலுள்ள யிகரத்திற்கும் உள்ள வேறுபாடு உள்ளங்கைக் கனியாகும்.

காண பாட



'காண பாட' என்ற இச்சொல் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதியில் 'கானபாடி' என்று பதிப்பிக்கப்பட்டுள்ளது. டகரம், ணகரம் ஆகிய இரண்டு எழுத்துகளும் கல்வெட்டில் தெளிவாக வெட்டப்பட்டிருப்பதைப் படத்தில் பார்க்கலாம்.

மெராவியம்



வடுகக் காந்தர்வ்வரில்



'மெராவியம்' என்ற சொல் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதியில் [மெ] . . [வியம்] என்று பதிப்பிக்கப்பட்டுள்ளது. அடைப்புக்குறிக்குள் குறிக்கப்பட்டிருக்கும் 'மெ', 'வியம்' எனும் எழுத்துகள் கல்வெட்டில் தெளிவாக இருப்பதையும் புள்ளியிடப் பட்டிருக்கும் இடங்களில் ரகரமும், துணையெழுத்தும் இடம்பெற்று இருப்பதையும் படத்தில் காணலாம். தளிச்சேரிக் கல்வெட்டில் ரகரமும், துணையெழுத்தும் மேற்கோடு ஒன்றால் வேறுபடுத்தப்பட்டிருப்பது குறிப் பிடத்தக்கதாகும்.

'வடுகக் காந்தர்வ்வரில்' என்னும் சொற்றொடர் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதியில், 'வடுகக் காலவரில்' என்று பதிப்பிக்கப் பெற்றுள்ளது. 'காந்தர்வ்வரில்' எனும் சொல் தெளிவாக வெட்டப் பட்டிருப்பதைப் படத்தில் பார்க்கலாம்.

617 கோயிற் பணியாளர்களைப் பற்றிப் பேசும் இத்தளிச்சேரிக் கல்வெட்டுள்ள ராஜராஜீசுவரத்தின் வடவளாகம் மிகத் துன்பமான நிலையில் உள்ளது. உலக மரபுரிமை நினைவிடங்களுள் ஒன்றாக அமைந்துள்ள இத்திருக்கோயிலின் வடவளாகச் சுவர்களில்தான் புகழ் பெற்ற கல்வெட்டுகள் வெட்டப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத் தக்கதாகும். இவற்றைப் படித்தறியக் கூசும் நிலையில் இப்பகுதி பாழ்பட்டிருக்கும் சூழல் மாறவேண்டாமா? கிழக்கு, தெற்கு, மேற்கு வளாகங்களைத் தோட்டமாக்கிப் புரக்கும் இந்தியத் தொல்லியல் அளவீட்டுத்துறை இவ்வடவளாகத்தைத் தோட்டமாக்கிக் காக்கும் நாள் என்று வருமோ தெரியவில்லை.

கடமையுணர்ந்த காதல் புறா

பாலைநிலத்துப் புறாக்கள் வாழ்க்கையைப் பறவையியல் கவிஞர் கடுங்கோ காட்டுகிறார். களர்நிலத்துக் கள்ளிச்செடி மீது சுள்ளிகளை அடுக்கி, வளவிய புறமும் செவ்விய கால்களும் கொண்ட ஆண் புறாவொன்று கூடமைத்தது. அதில் பிள்ளைகளை ஈன்று, அங்குமிங்கும் நடந்து காக்கும் பெண் புறாவோ பிள்ளைப்பேற்றுத் துன்பத்துடன் நடைத்துன்பமும் கொண்டு தளர்ந்திருந்தது.

தன் குடும்பத்திற்கு உணவு கொள்ள வெளிப்போந்த ஆண் புறா உணவுக்காய்ப் பல திக்கும் சென்றது. அண்மையில் நடந்த போரொன்றால் பாழ்நிலமாய் ஏதுமின்றிக் கிடந்தது அந்தச் சுற்றுப்புறம். துணைக்கு உணவுதர துயரமும் தொலைவும் கருதாது தேடிப்போன புறாவிற்குத் தானே விளைந்து நெல்மணி சிதறக் கிடந்த நெற்பயிர் கண்ணில்பட்டது. உதிர்ந்துகிடந்த மணிகளை அலகு கொள்ளுமளவு கொணர்ந்து துணைக்குத் தந்து மகிழ்ந்து நின்றதந்தக் கடமையுணர்ந்த காதல் புறா.

நற்றிணை 338, 384.

10. திருக்கோளக்குடிக் குடைவரையும் கற்றளிகளும்

மு. நளினி, இரா. கலைக்கோவன்

புதுக்கோட்டை மாவட்டத்தில் பொன்னமராவதியிலிருந்து 13 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது திருக்கோளக்குடி. புதுக்கோட்டையிலிருந்து ராங்கியம் வழியாக மிதிலைப்பட்டி வந்தும் இவ்வூரை அடையலாம். இது மிகச் சுருக்கமான வழியாகும்.

திருக்கோளக்குடி முன்னேற்றத்தை எட்டிப்பார்க்காத சிற்றூர். மிகச் சில குடும்பங்களே வாழும் இவ்வூரின் நாயகர்கள் போல் சரிந்தும் எழுந்தும் இயற்கையான குகைத்தளங்களுடன் நிற்கும் குன்றுத் தொடர்கள். இவற்றுள் மையக் குன்றின் அடிவாரத்திலும் நடுப் பகுதியிலும், மேலுமாய்க் கோயில்கள். குன்றக்குடி ஆதீனத்திற்குச் சொந்தமான இத்திருக்கோயில்களே இன்றைக்குத் திருக்கோளக் குடியின் சொத்தாக விளங்குகின்றன.

திருக்கோளக்குடிக் குன்றின் அடிவாரத்தில், கிழக்கிலும் தெற்கிலும் கோயில்கள் அமைந்துள்ளன. தெற்கில் உள்ள குளத்தை யொட்டி, அதன் படித்துறையில், மரத்தடியில் பிள்ளையார் எழுந்தருளியுள்ளார். பிள்ளையாருக்குத் தென்புறத்தே மலைப் பாறைகளைச் சேர்த்தணைத்து ஒரு சிறு செங்கல் கட்டடம் எடுக்கப்பட்டுள்ளது. இதன் ஒருபகுதி சிதிலமாகியுள்ளது. இங்கு தண்டபாணியும், அருணகிரிநாதரும் வழிபாட்டில் உள்ளனர். இப்பகுதிப் பெரியவர் நாராயணசாமி இங்குத் தவசியாக வாழ்ந்து மறைந்ததாக ஊரார் சொல்கிறார்கள். அவரது சமாதியையும் உள்ளடக்கிய இக்கட்டடப்பகுதியை ஞானியார் மடம் என்று அழைக்கிறார்கள்.

இம்மடத்திற்குப் பின்னால் குன்றின் இடைப்பகுதிக்கும் சற்றுக் கீழே இயற்கையான குகைத்தளமொன்று அமைந்துள்ளது. மிக நீள மாக அமைந்திருக்கும் இத்தளத்தின் நடுப்பகுதியில் சுவர்களெழுப்பி அறை போலத் தடுத்துப் பூட்டியிருக்கிறார்கள். ஆண்டார் மடம் என்றழைக்கப்படும் இத்தளத்தில், சாமியார் ஒருவர் வசித்து வந்ததாகவும், அவருக்குப் பிறகு இந்த அறையை மாம்பழம் பழுக்க வைக்கும் அறையாகப் பயன்படுத்துவதாகவும் ஊரார் சொல்கிறார்கள். இந்தக் குகைத்தளத்திற்குச் செல்லும் வழியிலும் குளமொன்று இருக்கிறது. இதன் கரையில் காய்த்துக் குலுங்கும் மாமரங்கள். இக்குளக்கரையிலிருந்து இரண்டு புதிய கல்வெட்டுகள் படியெடுக்கப் பட்டன.[1] இந்தக் குளம் உண்துறையாக ஊரார்க்குப் பயன்படுகிறது.

இக்கட்டுரைக்கான களஆய்வுப் பணிகள் குன்றக்குடித் திருமடம் மற்றும் சிவபூசை திருமதி.பேபி சரோசா அம்மையார் அறக்கட்டளை ஆகியவற்றின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டன

குன்றின் அடிவாரத்தில் கிழக்குமுகமாகப் பக்கத்திற்கொன்றாக இரண்டு கட்டடங்கள். தென்புறம் இருப்பது திருநாள் மண்டபம். கொடுங்கையுடன் கூடிய கபோதம் கொண்டு விளங்கும் இதன் நுழை வாயிலையடுத்துப் பதினாறு தூண்கள் கொண்ட மகாமண்டபமும், அதையடுத்து உயர்த்தியமைக்கப்பட்ட அகலமான தளமொன்றும், அதன் பின்னால் கருவறையொன்றும் காணப்படுகின்றன. தளமுகப்பு ஜகதி, உருள்குமுதம், கம்புகள் மற்றும் பாதங்களோடு கூடிய கண்டம் கொண்டு, மேலே கூடுகளோடு கூடிய கபோதத்தோடு அமைந்துள்ளது. ஆறு தூண்கள் நிற்கும் இத்தளத்தின் நடுவில் இறைத்திருமேனிகளை இருத்த மேடையொன்று கட்டியுள்ளார்கள். கருவறை வெறுமையாக உள்ளது. மகாமண்டபமும் தளமும் தரைப்பகுதியில் இணைந்திருந் தாலும், கூரைப்பகுதியில் இரண்டும் இணையுமிடம் திறப்பாகவே உள்ளது. முன்பு மூடியிருந்த கூரைக்கற்கள் நழுவியதால் இந்நிலை போலும்.



பொய்யாமொழி ஈசுவரமும் மலைமேற் கோயில்களும்

பொய்யாமொழி ஈசுவரம்

மலையடிவாரத்தின் வடபுறத்தே கற்றளியொன்று பொய்யா மொழி ஈசுரவம் என்ற பெயரில் அமைந்துள்ளது. விமானம், முக மண்டபம், மகாமண்டபம் என்ற அமைப்பிலுள்ள இக்கட்டுமானத்தின் முதலிரண்டு பகுதிகளும் பிற்பாண்டியர் காலத்தவை.

பத்திப் பிரிப்புடன் அமைந்துள்ள விமானமும், முகமண்டபமும் பாதபந்தத் தாங்குதளம் கொண்டுள்ளன. இத்தாங்குதளத்தின் கீழே துணை உபானமும், உபானமும் உள்ளன. தாங்குதளத்தின் மீது வேதிக்கண்டமும், வேதிகையும் காட்டப்பட்டுள்ளன. வேதிகைக்கு அணைவாகக் கீழ்நோக்குத் தாமரைவரி. வேதிகையின் மேல், துணைக் கம்பு அமைய, அதன் மீது நான்முக அரைத்தூண்களோடு கூடிய சுவர் எழுகிறது. தாங்குதளக் கண்டம், வேதிக்கண்டம் இரண்டும் கம்பணைவுகளோடு தூண்பாதங்களும் கொண்டுள்ளன.

சுவரமைப்பின் பத்திப் பிரிப்புகளுக்கு இடைப்பட்ட ஒடுக்கங் களில் ஒருகால் பஞ்சரங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. சாலைப்பத்தி களில் கோட்டம் காட்டப்பட்டுள்ளது. பட்டிகையின் மேலுள்ள துணைக் கம்பின் மேற்பரப்பு வரை நீட்டப்பட்டுள்ள இக்கோட்டங்களின் அணைவுத் தூண்களும் நான்முகத் தூண்களாகவே உள்ளன. இவ்வரைத்தூண்கள் உத்திரம் தாங்க, மேலே வாஜனம், வலபி, கூடுகளோடு கூடிய கபோதம் காட்டப்பட்டுள்ளன. கபோதத்திற்கு மேலே கிரீவமும் தூபிகளோடு கூடிய சாலை சிகரமும் அமைந்துள்ளன. முப்புறத்திலும் வெறுமையாக உள்ள இக்கோட்டங்கள் உள்ள சாலைப் பத்திகளில், வேதிகைத்தொகுதியின் மேலுறுப்பான வேதிகைக்கு மாற்றாகக் கூடுகளோடு கூடிய கபோதம் காட்டப்பட்டுள்ளது. இது போன்ற மாற்றமைப்பு, உறுப்பு வேறுபாடு எனப்படும்.

சுவர் அரைத்தூண்கள், வெட்டும் தரங்கமும் இணைந்தமைந்த போதிகைக் கைகள் வழி உத்திரம் தாங்க, மேலே வாஜனமும், தாமரை வலபியும். அதற்கு மேலாகக் கூடுகளோடும் கருக்கணிகளோடும் கூடிய கபோதம், கூரையின் முன்னிழுப்பாய் அமைந்துள்ளது. கூரைக்கு மேலே உள்ள பகுதிகள் அனைத்தும் அண்மைக் காலத்தே குட முழுக்கின் போது கட்டப்பட்டவை. கூரையமர் உறுப்புகளாகக் கர்ண கூடங்களும் சாலைகளும் அமைய, கிரீவமும் சிகரமும் நாகரமாக உள்ளன.

விமானத்திற்கும் முகமண்டபத்திற்கும் இடைப்பட்ட ஒடுக்கங்களில் கோட்டப் பஞ்சரங்கள் காட்டப்பட்டுள்ளன. முகமண்டபத்திற்கு முன்னால் உள்ள மகாமண்டபம், துணைத்தளம் கொண்டு நான்முக அரைத்தூண்களுடன் கூடிய சுவரால் சூழப்பட்டுள்ளது. மகாமண்ட பத்தின் தென்சுவரில் கல் சன்னலொன்று ஒளியும் காற்றும் கோயிலுள் நுழைய வாய்ப்பாக அமைக்கப்பட்டுள்ளது.

மகாமண்டபத்துள் வடபுறத்தே காணப்படும் திருமுன்னில் அம்மன், மரகதவல்லி அம்மையாய் வலக்கையில் மலர் மொட்டேந்தி, இடக்கையை நெகிழவிட்டுக் கரண்ட மகுடமும் சம பாதங்களுமாய்த் தெற்கு நோக்கி, நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். அம்மன் திருமுன்னுக்குக் கிழக்கில், மேற்கு நோக்கிய லளிதாசனக் கோலத்தில் பிள்ளையார். கருவறையில் இறைவன் லிங்கத் திருமேனியராய்,

மேற்குப் பார்வையில், பொய்யாமொழி ஈசுவரர் என்னும் திருப்பெயரோடு எழுந்தருளியுள்ளார். இக்கோயிலின் கருவறைப் புறச் சுவரில் பிற்பாண்டியர் கல்வெட்டொன்றும்,[2] முகமண்டப வடஅகச் சுவரில் பதினெட்டாம் நூற்றாண்டு எழுத்தமைதியில் வெட்டப்பட்டுள்ள 'மாகாளி' என்ற பெயர் சுட்டும் கல்வெட்டொன்றும் காணப்படு கின்றன.

மேலுள்ள கோயில்களுக்கு அழைத்துச்செல்லும் மலைப் படிக்கட்டுகள் நல்லமுறையில் அமைந்துள்ளன. மற்ற இடங்களைப் போலன்றி, மிக நீளமாகவும் தேவையான அகலத்துடனும் அமைந்துள்ள இப்படிகள் ஆங்காங்கே தளப்பரப்பாகவும் அமைந்து, ஏறும் களைப்பே தெரியாமல் செய்துவிடுகின்றன. முதல் வரிசைப் படிகள் மேற்கு நோக்கி ஓடி, கோபுரமற்ற வாயிலொனறில் முடிகின்றன. இந்த வாயிலின் தென்புறத்தே பிள்ளையார் திருமுன் வடக்குப் பார்வையாக அமைந்துள்ளது. மிதிலைப்பட்டியைச் சேர்ந்த நல்ல கருப்பன் செட்டி பழனியப்பன் என்பாரால் கட்டப்பட்டதாகக் கல்வெட்டு கூறும் இத்திருமுன் மிகப் பிற்பட்ட காலத்தது.

இத்திருமுன்னின் கருவறையில் வீற்றிருக்கும் பிள்ளையாரின் வலக்கைகளில் தந்தமும் அங்குசமும் இருக்க, இடக்கைகளில் மோதகமும் பாசமும் உள்ளன. துதிக்கை இடக்கை மோதகத்தைச் சுவைபார்க்கிறது. கரண்ட மகுடமும் முகபடாமும் கழுத்தணிகளும் கேயூரங்களும் அணிந்துள்ள இவர், திருக்கோளக்குடி வளாகத்தில் இரண்டாவது பிள்ளையார். இவரைத் தாண்டியதும் கோபுரமற்ற முதல் வாயில் எதிர்கொள்கிறது. உள்ளே அலங்கரிக்கப்பட்ட திருமுன்னில் முருகப்பெருமான், தெய்வானையும் வள்ளியும் சற்றுத் தள்ளி எதிரெதிர் நோக்கியவர்களாய் நிற்க, மாறுபட்டதோர் அமைப்பில் காட்சிதருகிறார். பொதுவாக முருகனின் இருபுறத்தும் இத்தேவியர் நிற்க, மூவரும் ஒரே பார்வையில் அமைவர். இங்கே தந்தையைக் காணப் படியேறி வருபவர்களை வரவேற்பது போல் முருகன் கிழக்குப் பார்வையாய் நிற்க, தெய்வானை கச்சணிந்த மார்புகளுடன் வடபார்வையாகவும், வள்ளி வனப்பான மங்கையாய்த் தென்பார்வை யாகவும் நிற்கின்றனர். திருக்கோளக்குடித் திருமுன்களில் காணப்படும் சில மாற்றங்களுள் இதுவும் ஒன்றாகும்.

ஒரு தேவகோட்டம் போலச் சாலை சிகரத்துடன் அமைந்துள்ள இத்திருமுன், பக்கங்களில் பிள்ளையாரையும் முருகனையும் ஓவிய வடிவில் கொண்டு, படித்திருப்பத்துக்கு வழிகாட்டியாய் அமைந் துள்ளது. இத்திருமுன்னின் இருபுறத்தும் காணப்படும் கல்வெட்டுகள் சுண்ணாம்புப் போர்வைக்குள் புழுங்கிக்கொண்டுள்ளன. இங்கிருந்து படிகள் தென்முகமாகத் திரும்புகின்றன. ஒரு குறிப்பிட்ட திருப்பத்தை அடைந்ததும் மீண்டும் படிகள் மேற்கு நோக்கி ஓடுகின்றன.

இவ்வழி நெடுக இருபுறச் சுவர்களிலும் நம் முன்னோர்களின் வரலாறுகளைத் தாங்கிநிற்கும் கல்வெட்டுகளும் அவற்றைக் கரைத்துக்

கொண்டிருக்கும் இந்நாளைய மன்னர்களின் சுண்ணாம்புப் பூச்சுகளும்தான். இப்படிகளின் முடிவில் பாறைத்தளம். இத்தளத்தில் மூன்று கோயில்களும் சண்டேசுவரர் திருமுன்னும் மடைப்பள்ளியும் அமைந்துள்ளன.

சிவகாமியம்மன் கோயில்

படிக்கட்டுகள் முடியும் இடத்திற்குத் தென்புறத்தே சிவ தர்மபுரீசுவரர் கோயிலும் வடபுறத்தே சிவகாமியம்மன் கோயிலும் உள்ளன. இவையிரண்டுமே கிழக்கு நோக்கி அமைந்துள்ள கற்றளிகள். இவற்றுள் சிவகாமியம்மன் கோயில் காலத்தால் மிகவும் பிற்பட்டது. வழக்கமான தளஉறுப்புகள் ஏதும் காட்டப்படாத இருவரிசைக் கல்லடுக்கின் மேல், அரைத்தூண்களை உள்ளடக்கிய சுவர் சூழ, மேலே கூரை கொண்டு, சிறிய அளவில் அமைந்துள்ள கருவறையின் மேல், வேசர கிரீவமும் சிகரமும். முகமண்டபமும் அதையடுத்து முன்மண்டபமும் அமைந்துள்ள இத்திருமுன்னில் அம்மை சிவகாமி, பாண்டி மண்டல முறையில் இரு கையினராய், வலக்கையில் மலரேந்தி, இடக்கையை நெகிழ்த்திச் சமபாதராய் நின்றருள்கின்றார்.

சிவதர்மபுரீசுவரர் கோயில்

சிவதர்மபுரீசுவரர் திருக்கோயில் ஒருதளக் கற்றளியாய்க் கருவறை, முகமண்டபம், மகாமண்டபமென்ற அமைப்பிலுள்ளது. விமானத்தின் பாதபந்தத் தாங்குதளம், பத்திப் பிரிப்புடன் உபானம், ஜகதி, எண்பட்டைக் குமுதம், கம்புகளும் பாதங்களும் கொண்ட கண்டம், பட்டிகை என உரிய உறுப்புகள் கொண்டமைய, அதன் மீது வேதிகைத்தொகுதியும் துணைக்கம்பும் காணப்படுகின்றன. கம்பின் மீதெழும் சுவரின் திருப்பங்களில் எண்முக அரைத்தூண்களும் சாலைப்பத்திகளை அணைவு செய்யுமாறு உருளை அரைத் தூண்களும் காட்டப்பட்டுள்ளன. முப்புறத்தும் உள்ள சாலைப் பத்திகளில் அகழப்பட்டுள்ள கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. இவற்றின் கீழே தாங்குதளத்திற்கு மேலாகக் கண்டமும், வேதிகைக்குப் பதிலாகக் கபோதமும் காட்டப்பட்டுள்ளன. இது உறுப்பு வேறுபாடாகும். பட்டிகைக்கு மேலுள்ள துணைக்கம்பின் மேற்பரப்பே, கோட்டங்களின் கீழ்த்தளமாக அமைந்துள்ளது. இக்கோட்டங்களை அணைவு செய்யும் உருளை அரைத்தூண்கள் சதுர பாதங்களின் மீது எழுந்து உத்திரம் தாங்க, மேலே வாஜனமும், வலபியும், இரு கூடு களுடன் கபோதமும் காட்டப்பட்டுள்ளன. கபோதத்தின் மீது வடிப்பற்ற பூமிதேசமும் வேதிகைத்தொகுதியும் கிரீவமும் சிகரமும் காட்டப் பட்டுள்ளன. கிரீவ நாசிகைக்கு, சிகர முகத்தில் தோரண வளைவு காட்டப்பட்டுள்ளது. சிகரம் நான்கு தூபிகளுடன் அமைந்துள்ளது. பாண்டிநாட்டுக் கோயில்களில், கோட்டங்கள் இது போல் அமைவதே மரபாக உள்ளது. தெற்குக் கோட்டத்தின் முன், பின்னாளில் ஒரு மண்டபம் இழுத்து ஆலமர் அண்ணலை அமர்த்தியுள்ளனர்.

விமானத்தின் வடக்குத் தாங்குதளப் பகுதியில் திருமுழுக்கு நீர்வழி குமுதப்பகுதியை ஊடறுத்து அமைந்துள்ளது.

சுவர்த் தூண்களும் சாலைப்பத்தித் தூண்களும் வெட்டும் தரங்கமும் கொண்ட தங்கள் போதிகைக் கைகளால் உத்திரம் தாங்க, மேலே வாஜனமும், மலரிதழ் வலபியும். அதற்கு மேல் கபோதம். வேசர கிரீவத்தின் பெருநாசிகைகளில் தெற்கில் ஆலமர் அண்ணலும், மேற்கில் திருமாலும், வடக்கில் நான்முகனும், கிழக்கில் முருகனும் காட்டப்பட்டுள்ளனர். கிரீவ சுவரிலும் சிறிய நாசிகைகளிலும் பல்வேறு வடிவங்கள் காட்டப்பட்டுள்ளன. கிரீவத்தின் நாற்புறமும் பக்கத்திற் கிரண்டாக எட்டு நந்திகள். அலங்கரிப்புகள் கொண்ட வேசர சிகரத்தின் மீது வேசர தூபி.

முகமண்டபம், விமானத்தின் முதல் மூன்று உறுப்புகளை அப்படியே பெற்றுள்ளது. அரைத்தூண்கள் நான்முகத் தூண்களாகப் பாலிகையுடன் கூடிய பலகைகள் பெற்று அமைந்துள்ளன. தெற்கிலும் வடக்கிலும் உள்ள கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. கோட்டங்களின் மேல் நாகர சிகரம் காட்டப்பட்டுள்ளது.

பிற்கால இணைப்பான மகாமண்டபத்தைப் பதினாறு தூண்கள் தாங்குகின்றன. இவற்றுள் ஒன்றில் வணக்க முத்திரையில் காணப் படும் ஆடவர் வடிவம் இம்மண்டபத்தை எடுத்த பெரியவராகலாம். இம்மண்டபத்தில், ஆர்வத்தோடு சிவலிங்கத்தை எட்டிப்பார்ப்பது போல் வீறுடை நந்தியொன்று அமர்ந்துள்ளது.

முகமண்டபத்தின் உட்சுவரில் சுண்ணாம்புப் பூச்சுக்குள்ளிருந்து புதிய கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.[3] கருவறையில் இறைவன் மிகச் சிறிய அளவிலான லிங்கத் திருமேனியுடன் சிவதர்மபுரீசுவரர் என்ற திருப்பெயரில் எழுந்தருளியுள்ளார்.

சிவதர்மபுரீசுவரர் கோயிலின் பின்புறத்தே தலமரமான நெல்லியும்[4] அதையடுத்து வடபுறத்தே பலாவும் உள்ளன. நெல்லியின் அடிவயிற்றைச் சுற்றிலும் சுவரெழுப்பி மேடையமைத்து, அந்த மேடையின் பின்புறத்தே, சுனைச் சுவர் அருகே, நாகர் வடிவங்களையும் பிள்ளையார்களையும் வரிசையாக இருத்தியிருக் கிறார்கள். மேடையின் முகப்பில் அருள்தரு வினாயகர் என்றெழுதி அங்கே பாறைப்பலகையிலான ஆடவல்லானை நிறுத்தியுள்ளனர். மரத்தடி நிழலில் பிள்ளையார் பெயரில் ஆடவல்லான். தந்தைக்கு மகன் செய்த உதவி. இந்த மேடையின் பின்னால், கீழேயுள்ள பாறைப் பள்ளத்தில், பாசிப் போர்வையால் பசுமைப் புரட்சி செய்து கொண்டிருக்கும் மழைநீர்த் தேங்கல். இதைக் கோயிலார் அன்போடு மலைச்சுனை என்கிறார்கள். இந்தச் சுனைக்குச் செல்ல மூன்று வழிகள் படிக்கட்டுகளுடன் அமைந்துள்ளன. இதையொட்டியெழும் பாறை முகடுகளில் காணப்படும் பெரும் தேன்கூடுகள், குறுந்தொகைப்

பாடலின், 'கருங்கால் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன் இழைக்கும்' காட்சியைத்தான் நினைவூட்டுகின்றன.

சிவதர்மபுரீசுவரர் கோயிலுக்கு வடக்கே மடைப்பள்ளி. இங்கு அடுப்படி தவிர கோயில் பாத்திரங்கள் வைக்க இரண்டு அறைகள் உள்ளன. இதன் உட்புறத்தும் வெளிப்புறத்தும் உள்ள பிற்காலப் பாண்டியரின் கல்வெட்டுகள் சிமெண்ட் மற்றும் சுண்ணாம்புப் பூச்சுக்களால் பெரிதும் பொரிந்துபோயுள்ளன.

சுனைக்கு வடமேற்கில் எழும் படிகள் மேலே உள்ள குடைவரைக் கோயிலின் மகாமண்டபத்திற்கு அழைத்துச்செல்கின்றன. பாறைத் தளத்தின் முற்பகுதியில், சிவகாமியம்மன் திருமுன்னுக்குத் தென் புறத்தே, குடைவரைக் கோயிலுக்குச் செல்லும் மற்றொரு படிவரிசை தொடங்குகிறது. இந்தப் படிவரிசையை ஒட்டிப் பாறைத்தளத்திலிருந்து 5.73மீ. உயரத்திற்குக் கற்சுவரொன்று கட்டப்பட்டுள்ளது. இச்சுவர் வடபுறத்தே உள்ள ஆத்மநாயகி அம்மன் திருக்கோயிலுக்குத் திரும்பும் பாதை வரை 20.54மீ. நீளத்திற்குத் தென்வடலாக நீண்டு, வடக்கில் தொடர்ந்து, கிழக்கில் திரும்பி, அங்குள்ள பழைய சுவரமைப்பு ஒன்றில் இணைகிறது. இச்சுவர்க் கட்டுமானத்தில், பாறைத்தளத்தின் வடகிழக்குப் பகுதியிலுள்ள கல்வெட்டொன்றின் தொடக்க வரிகள் சிக்கியுள்ளன. பின்னாளில் ஏற்பட்ட இக்கட்டுமானத்தில் கிழக்கு முகமாகச் சிறு கோட்டமொன்றில் பழனியாண்டவர் காட்டப் பட்டுள்ளார்.

பைரவரும் நாகராசரும்

வடபுறத்தே ஆத்மநாயகி கோயிலுக்குத் திரும்பும் இடத்திற்குச் சற்று முன் பாறைத்தளத்தில் பிற்சோழர் காலத்ததாகக் கொள்ளத்தக்க பைரவர் வடிவமொன்று தென்பார்வையாய்த் தனிச் சிற்பமாய் நிற்கிறது. பின்கைகள் உடுக்கையும் பாம்பும் ஏந்த முன்கைகளில் முத்தலையீட்டியும் தலையோடும் கொண்டு, மண்டையோட்டு மாலையும் சுடர்முடியுமாய் நிர்வாணியாய் நிற்கும் இறைவர்க்குப் பின் அவர் வாகனமான நாய். இடுப்பில், அரைநாணாக முறுக்கிக் கிடக்கும் படமெடுத்த பாம்பு. செவிகளில் மகர மற்றும் பனையோலைக் குண்டலங்கள். இவரையடுத்துத் திரும்பினால் இதே பாறையெழுச்சி யின் வடபுறத்தே கிழக்குப் பார்வையாய் அமர்ந்திருக்கும் நாகராசரும் சற்றுத் தள்ளி அமைந்திருக்கும் ஆத்மநாயகி அம்மன் திருக்கோயிலும் கண்ணில்படும்.

நாகராசர் மிக அழகான சோழர் காலத்துச் சிற்பமாகும். பாறைத் தளத்தில் தனியராய் வடபுறத்தின் காவலர் போல், தலையின் பின்புறம் ஐந்துதலைப் பாம்பு படம் விரித்திருக்க, தாமரைத்தளத்தின் மீது சுகாசனத்தில் காணப்படும் இச்சிற்பம், இங்குள்ள தனிச் சிற்பங்களில் காலத்தால் பழமையானதாகும். கைகள் காப்பும் அருளும் காட்டக் கரண்ட மகுடராய், உரிய இடங்களில் அளவான அணிகலன்கள்

பொலிய, மலர்ந்த முகத்துடன் காட்சியளிக்கும் இந்நாகரைப் பார்க்கும் போது தஞ்சாவூர் ராஜராஜீசுவரத்து நாகரும் ஆறை மேற்றளி நாகரும் நினைவில் நிழலிடுவதைத் தவிர்க்க முடியவில்லை. சிற்பத்தின் பின்புறம் பாம்பு உடல் காட்டப்பட்டுள்ளது.

நீட்டல் அளவைகள்

நாகருக்கு முன்னால் உள்ள பாறைத்தளத்தில் இரண்டு பழங்கால நீட்டல் அளவைகள் வெட்டப்பட்டுள்ளன. நீள்கோடாக வெட்டப்பட்டுள்ள முதலாவது அளவு 5.17மீ. நீளமுள்ளது. இதற்குச் சற்று மேலே காணப்படும் கல்வெட்டு[5] இந்த அளவுகோல் கி.பி. 1662ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் நான்காம் நாளில் வெட்டப் பட்டதைச் சுட்டுகிறது. தொடர்ந்து காணப்படும் ரகுனாதத் திருமலை என்ற பெயர் இவ்வளவையின் பெயராகலாம். கீழேயுள்ள அளவை மூன்று கூட்டல் குறிகளுக்கு இடைப்பட்ட நிலையில் 5.10மீ. நீளத்தில் உள்ளது. முதல் இரு கூட்டல் குறிகளுக்கு இடையே தொடர்ந்து புள்ளி குத்தப்பட்ட நிலையில் காணப்படும் இவ்அளவை, இரண்டாவது கூட்டல் குறிக்கும் மூன்றாவது கூட்டல் குறிக்கும் இடைப்பட்ட பகுதியில் அத்தகு தொடரான புள்ளியமைப்பின்றி உள்ளது. இந்த அளவு கோலின் தென்புறம் காணப்படும் கல்வெட்டு, இதன் பெயரை 'இழுவை' எனச் சுட்டுகிறது.

ஆத்மநாயகி அம்மன் கோயில்

பாறைத்தளத்தின் வடபகுதியில் அமைந்துள்ள ஆத்மநாயகி அம்மன் கோயில் சிவதர்மபுரீசுவரர் போலவே விமானம், முகமண்டபம், மகாமண்டபம் என்ற அமைப்பில் விளங்குகிறது. இவற்றுள் முன்னிரண்டும் பிற்பாண்டியர் காலத்தன. மகாமண்டபம் காலத்தால் சற்றுப் பிற்பட்டது.

விமான அமைப்பு ஏறத்தாழச் சிவதர்மபுரீசுவரர் கோயிலை யொட்டியே பத்திப் பிரிப்புடன் கூடிய பாதபந்தத் தாங்குதளத்தில் தொடங்கி, இருதள விமானமாய் வடிவெடுத்துள்ளது. வடபுறக் கண்டப் பகுதியை ஊடறுத்துக்கொண்டு வெளிவரும் முழுக்கு நீர் வடிகால் சிம்ம முகத்துடன் முடிகிறது.

தாங்குதளத்திற்கு மேலே வேதிகைத்தொகுதியும் துணைக் கம்புமிருக்க மேலே சுவர். சுவரிலுள்ள அரைத்தூண்கள் எண்முகமாக அமைய, சாலைப்பத்தித் தூண்கள் பதினாறுமுகம் கொண்டும், அச்சாலைப்பத்திகளிலுள்ள கோட்டங்களை அணைவு செய்யும் அரைத் தூண்கள் உருளைமுகமாகவும் அமைந்துள்ளன. இவற்றின் சதுர பாதங்களில் கருக்கணிகள். இப்பாதங்களின் மேற்புறத்தே இருபுறமும் நாகபந்தங்கள்.

சாலைப்பத்திக் கோட்டங்கள் சிவதர்மபுரீசுவரர் விமானத்தில் இருப்பது போலவே அமைந்துள்ளன. வெறுமையாக உள்ள இக்கோட்டங்களின் உருளைத் தூண்களை அடுத்துள்ள சுவர்ப்

பகுதியில் இருபுறத்தும் வேதிக்கம்பின் மேல், தளம் அமைத்துச் சிற்றுருவச் சிற்பங்கள் காட்டப்பட்டுள்ளன. தென்புறம் பக்கத்திற் கிரண்டாய் நான்கு முனிவர் சிற்பங்களும், மேற்கில், வணங்கிய நிலையில் சங்கு மற்றும் சக்கரத்தாழ்வார்களும் இருக்க, வடபுறம் சிற்பங்களேதுமின்றி விடப்பட்டுள்ளது.

அனைத்து உறுப்புகளையும் பெற்றுள்ள சுவர்த் தூண்களும் சாலைப்பத்தித் தூண்களும் தங்கள் போதிகைகளின் மதலைகளாலும் நாணுதல்களின் மேற்பகுதிகளாலும் உத்திரம் தாங்குகின்றன. நாணுதல்களின் பூமொக்குகள் இக்கட்டுமானத்தின் காலத்தைப் பதின் மூன்றாம் நூற்றாண்டாகக் காட்டுகின்றன. அதை இங்குள்ள சோணாடு கொண்டருளிய சுந்தரபாண்டியரின் கல்வெட்டுகள் உறுதி செய்கின்றன.[6] மேலே வலபியில் பூதவரி இடம்பெற்றுள்ளது. இப்பூதவரியின் சில இடங்களில் பூதவடிவங்களின் மீது காவிக்கோடுகள் காணப்படுகின்றன. இது போன்ற காவிக்கோடுகள் விமானம் மற்றும் முகமண்டபத்தின் வடபுறப் போதிகைகளின் கைகளிலும் காணப்படுகின்றன. இக்கோடுகள் காணப்படும் இடங்களை, இவையொத்த பிற இடங்களோடு ஒப்பிட்டுப்பார்த்தபோது, கோடிட்ட இடங்களில் மேலும் வேலைப்பாடு நிகழவேண்டியுள்ளதை அறியமுடிந்தது. இதனால் சிற்பாசிரியர்கள் வரிவடிவங்களையும், செதுக்கவேண்டிய அமைப்புகளையும் காவிக்கோடிட்டுத் திட்டமிட்டுப் பிறகே உருவாக்கியுள்ளனர் என்று கொள்ளலாம். இவ்வம்மன் கோயில் கல்வெட்டுகளின் சில பகுதிகளும் பணி முற்றுப்பெறா நிலையில் காவியெழுத்துகளாகக் காணப்படுகின்றன. இக்கல்வெட்டு களின் முற்பகுதி வரிகள் வெட்டெழுத்துகளாக அமைய, இவை வெட்டப்படா நிலையில் வெறும் காவி வரிவடிவங்களாக இருப்பது, அக்கால எழுத்துத் தச்சர்கள் காவியால் எழுதிப் பிறகே எழுத்துகளை வெட்டியமைத்தனர் என்பதை நன்குணர்த்துகிறது. கோடிட்டு எழுதும் முறையும் கல்வெட்டுத் தச்சர்களிடையே இருந்தமையை இங்குள்ள காவிக்கோடுகள் தெளிவாக்குகின்றன.

இதுபோல் காவியால் எழுதியும், வரைந்தும் செதுக்கியுள்ள முறையைத் தாராசுரத்திலுள்ள ராஜராஜீசுவரத்திலும், திருமலைப்புரம் முற்பாண்டிய குடைவரையிலும் காணமுடிவது இங்கு ஒப்புநோக்கத் தக்கது.

கபோதம், மூலைகளிலும் நடுவிலும் கருக்கணிகள் பெற்று, யாளித்தலைத் தோரணங்களுடன் கூடிய ஆழமற்ற கூடுகளுடன் காட்சியளிக்கிறது. கூடுகளில் சிற்றுருவச் சிற்பங்கள். பூமிதேசத்திற்கு மேலே ஆறங்கச் சாலைகளும் வழக்கமான மூன்றங்கக் கர்ணகூடங்களும் ஆரச்சுவரால் இணைக்கப்பட்ட நிலையில், பத்திகளின் மேலுறுப்புகளாய் நிற்க, அவற்றின் பின்னே இரண்டாம் தளம் காட்டப்பட்டுள்ளது. சாலைகளின் சுவர்க் கோட்டங்களில்

தென்புறம் மயேசுவரியும் மேற்கில் வைணவியும் வடபுறம் நான்முகியும் கிழக்கில் கௌமாரியும் இடம்பெற்றுள்ளனர்.

இரண்டாம் தளக் கூரை மீது கிரீவமும் அதன் மீது பேரளவினதாய்ச் சாலை சிகரமும் காட்டப்பட்டுள்ளன. சிகரத்தின் தென், வடகீர்த்திமுகங்களின் கீழுள்ள கிரீவ நாசிகைகளில் சிறிய அளவிலான ஒருதள நாகர விமானங்களை அமைத்து,[7] அவற்றின் சுவர்க் கோட்டங்களில் தென்புறம் மயேசுவரியையும் வடபுறம் நான்முகியையும் காட்டியுள்ளனர். கிழக்கிலும் மேற்கிலும் உள்ள கிரீவ நாசிகைகளில் முறையே கௌமாரியையும் வைணவியையும்

அம்மன் கோயில் விமான மேலுறுப்புகள்

காட்டியுள்ளனர். இவற்றின் இருபுறத்தும் உள்ள சிறிய நாசிகைகளில், கிழக்கில் முருகனும் பிள்ளையாரும் காட்டப்பட்டுள்ளனர். மேற்கில் இவை வெறுமையாக உள்ளன.

விமானத்தைப் போலவே கீழ்த்தள உறுப்புகளைக் கொண்டுள்ள முகமண்டபமும் பத்திப் பிரிப்புக்கு ஆளாகியுள்ளது. இதன் வட, தென் சுவர்களிலும், நடுப்பத்திகளிலும் கோட்டங்கள் உள்ளன. வெறுமை யான இக்கோட்டங்களை அடுத்துச் சிற்றுருவச் சிற்பங்கள் உள்ளன. தென்புறச் சிற்பங்கள் தலையில் ஏதோ சுமப்பன போல் உள்ளன. இவை இக்கோட்டத்திற்குரியவராகப் பிள்ளையாரைச் சுட்டுகின்றன. வடபுறச் சிற்பங்களாகக் கவரிப்பெண்கள். இச்சிற்பங்கள் இக்கோட்டத் திற்குரியவராகக் கொற்றவையைக் காட்டுகின்றன. இச்சிற்பங்களின் இருப்பு விமான மற்றும் முகமண்டபக் கோட்டங்களில் முன்னாளில் சிற்பங்கள் இருந்தனவோ என்றெண்ணவைக்கிறது.

கருவறைக்கும் முகமண்டபத்திற்கும் இடைப்பட்ட ஒடுக்கத்தில், தெற்கிலும் வடக்கிலும் எழிலார்ந்த கோட்டப் பஞ்சரங்கள் காட்டப் பட்டுள்ளன. கருக்கணிகள் செதுக்கப்பட்டுள்ள இரு சதுர பாதங்களின் மீது சிறிய நாகபந்தங்கள். மேலே எண்முகக் கால்கள். இக்கால்கள் ஒவ்வொன்றின் மேலும் தாமரைக்கட்டு, கலசம் முதலான மேலுறுப்புகள் அமைந்து உத்திரம் தாங்க, மேலமர்ந்துள்ள தாமரை வலபியை அடுத்துக் கபோதம். மேலே பூமிதேசம், வேதிகை, கிரீவம், கீர்த்திமுக வளைவுத் தோரணமாய்ச் சிகரம். இதன் குழிவில் தோரணம், மதலைகள், சிறிய அளவிலான நாகர விமானம் ஆகியன காட்டப்பட்டுள்ளன.

மூன்று சதுரங்களும் இடையில் கட்டுகளும் கொண்டிருக்கும் பதினான்கு தூண்கள் தாங்கும் மகாமண்டபம் அம்மன் திருமுன்னுக்குக் காலத்தால் சிறிது பிற்பட்டதாகலாம். இம்மகா மண்டபத்தினுள் வடபுறத்தே பள்ளியறை கட்டப்பட்டுள்ளது. இங்குள்ள மையத்தூண்கள் நான்கிலும் உள்ள மேற்சதுரங்களிலும், நடுவில் நந்தியும் தென்மேற்கே பிள்ளையாரும் உள்ள முகமண்டபத்தின் உட்சுவர்களிலும் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.[8]

கருவறையில் அம்மன் கரண்ட மகுடராய், வலக்கையில் நீலோத்பலம் ஏந்தி, இடக்கையை நெகிழ்த்தி, நின்ற கோலத்தில் அருள் செய்கிறார்.

முருகன் திருமுன்

அம்மன் கோயிலுக்கு வடக்கில் பிற்காலத் திருப்பணியாய்ச் சிறியதொரு முருகன் திருமுன். கருவறையும் உள்மண்டபமுமாய் அமையப்பெற்றுள்ள இத்திருமுன்னில் பின்கைகளில் வஜ்ரமும் சக்தியுமிருக்க, முன்கைகளில் அருளும் காப்பும் காட்டிய வண்ணம் முருகன், வள்ளியும் தெய்வானையும் சூழ எழுந்தருளியுள்ளார். கருவறையினுள் மேற்குச் சுவரையொட்டி முருகன் நின்றவாறிருக்க,

அவரது தேவியர், கைகளில் மலர்களுடன், அவருக்குச் சற்று முன்னால் கருவறையின் பக்கச் சுவர்களையொட்டி, எதிரெதிர்ப் பார்வையில் அமைக்கப்பட்டுள்ளனர். வள்ளி வடக்குப் பார்வை யாகவும், தெய்வானை தெற்குப் பார்வையாகவும் காட்சிதருகின்றனர். இவ்விருவரையும் பிரித்துக் காட்டுவது மார்பகக் கச்சுதான். குறிஞ்சிக் குமரியென்பதால் இக்கச்சு பொதுவாக வள்ளிக்குக் காட்டப்படு வதில்லை.

இத்திருமுன்னை எடுத்ததுடன் தம் உருவத்தையும் உள்மண்டபத் தூணொன்றில் வணக்க முத்திரையுடன் சிற்பமாக்கிக் கொண்டிருக்கும் பெருமகனார் குடமுழுக்கு வண்ணப்பூச்சுகளில் சிக்கிப் பச்சையப் பராகியுள்ளார். இத்திருமுன்னின் வடசுவர், மதிலாய் வளர்ந்து அம்மன் கோயில் மகாமண்டபத்தை அடுத்து முடிகிறது. முருகன் திருமுன் அருகே இம்மதிலில் காட்டப்பட்டிருக்கும் வாயில், மலையின் வடபுறம் அழைத்துச்சென்று இயற்கைக்காட்சிகளில் மூழ்கவைக்கிறது. இதன்வழியே தொடரும் மலைப்பாதையில் சற்று மேலேறிச் சென்றால், மிக அற்புதமாக அமைந்துள்ள இயற்கையான குகைத்தளத்தை அடையலாம். இக்கோயிலின் குடமுழுக்குக் காலத்தே, தவத்திரு அடிகளார் பெருமானின் நிர்வாக அலுவலகம் தற்காலிகமாக இங்கு தான் இயங்கியது.

மலை மேலுள்ள முருகன் கோயில்

இந்தப் பாதைவழியே சென்று குன்றின் மீது வெட்டப்பட்டி ருக்கும் படிகளில் எச்சரிக்கையுடன் ஏறினால் குடைவரை அமைக்கப் பட்டிருக்கும் குன்றின் மேற்பரப்பை அடையலாம். பரவலான பாறைத் தளமாக பரந்து விரிந்த நிலையில் அமைந்துள்ள இம்மேற்பரப்பின் தொடக்கப்பகுதியில் கிழக்கு நோக்கிய முருகன் கோயிலொன்று கற்றளி.யாக எடுக்கப்பட்டுள்ளது. விமானமும் முகமண்டபமுமாய் அமைந்திருக்கும் இக்கோயிலின் தாங்குதளம் பாதபந்தமாக உபானத்தி லிருந்து எழுகிறது. கீழே இரு அடுக்குகளாலான துணைத்தளம். தாங்கு தளத்திற்கு மேலே வேதிக்கண்டமும் வேதிகையும் துணைக்கம்பும் இடம்பெற, கம்பின் மீதிருந்து சுவர் எழுப்பப்பட்டுள்ளது. சுவர்களில் காணப்படும் நான்முக அரைத்தூண்கள் வெட்டு மற்றும் தரங்கப் போதிகைக் கைகளுடன் உத்திரம் தாங்க, மேலே வாஜனம், தாமரையிதழ் வலபி, கூரை, கூரையின் வெளி நீட்டலாய்க் கூடுகள் கொண்ட கபோதம். கபோதத்தின் மூலை மற்றும் நடுப்பகுதிகளில் கருக்கணிகள். கீழ்த்தளச் சுவர்களின் முப்புறத்தும் அமைந்துள்ள கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. பாதபந்தத் தாங்குதளத்தின் ஜகதியிலும் குமுதத்திலும் கல்வெட்டுகள் வெட்டப்பட்டுள்ளன.[9]

முதல் தளக் கூரையை அடுத்துப் பூமிதேசமும் வேதிகையும் அதன்மீது கூரையமர் உறுப்புகளான கர்ணகூடங்களும் சாலைகளும் காட்டப்பட்டுள்ளன. இவற்றின் பின்னால் இரண்டாம் தளமும் அதன் கூரை மீது நாகர கிரீவமும், சிகரமும் தூபியுடன் அமைந்துள்ளன.

கிரீவச் சுவரின் நாற்புறமும் உள்ள பெருநாசிகைகளில் முருகப் பெருமானின் திருவுருவங்கள். கிரீவம் அமர்ந்துள்ள வேதிகையின் நாற்புறமும் புறத்திற்கு இரண்டென மயில்கள்.

விமானக் கீழ்த்தளம் போலவே கட்டமைப்பு கொண்டுள்ள முகமண்டபம் தெற்கிலும் வடக்கிலும் கோட்டங்கள் பெற்று அமைந்துள்ளது. இக்கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. முக மண்டபத்தினுள் நடுப்பகுதியில் மயிலும், கருவறை வாயிலின் வலப்புறம் நாகர், பிள்ளையார் சிற்பங்களும், இடப்புறம் தலைக்காவு தரும் வீரரின் சிற்பமும் காணப்படுகின்றன.

கருவறையுள் முருகப்பெருமான் சமபாதராய், அறுமுகச் செவ்வேளாய்க் காட்சிதருகிறார். பெருமானின் வல முன்கை காக்க இட முன்கை அருள்செய்கிறது. பிற கைகளில் வலப்புறம் கீழிருந்து மேலாகப் பாசம், ஈட்டி, தடி, சக்தி ஆகியன காட்டப்பட்டுள்ளன. மூன்றாவது கைக்கருவியை அடையாளம் காணமுடியவில்லை. இடப் புறக் கைகளில் வேல், மணி, வில், சக்தி ஆகிய கருவிகள் இடம் பெற்றுள்ளன. நான்காம் கை கடக முத்திரையில் உள்ளது. கரண்ட மகுடமும் கழுத்தணிகளும் கையணிகளும் கொண்டு பட்டாடையுடன் விளங்கும் பெருமானின் வலப்புறம் தெய்வானையும் இடப்புறம் வள்ளியும் பெருமானைப் போலவே கிழக்குப் பார்வையராய்க் காட்டப்பட்டுள்ளனர். இருவருமே கரண்ட மகுடம் அணிந்து ஒரு கையில் மலரேந்தி மறு கையை நெகிழ்த்திச் சமபாதத்தில் நிற்கின்றனர். தெய்வானை கச்சணிந்திருக்கிறார்.

கற்றளியும் விளக்குமாடமும்

முருகன் கோயிலுக்கு முன்னால், கிழக்கில், குடைவரையின் கருவறைக் கூரையாக விளங்கும் பாறைப்பகுதி உள்ளது. இதன்மீது செங்கல்லால் நாகர கிரீவமும், சிகரமும், மேலே தூபியும் காட்டியுள்ளனர். இதன் வழி குடைவரையின் கருவறை மேல் மூன்று அங்கங்கள் பெற்று விமானமாகியுள்ளது. இந்தச் செங்கல் கட்டுமானங்களின் பின்புறத்தே, இரு பெரும் பாறைகளுக்கிடையில் சிதைந்த நிலையில் கருவறை மட்டும் கொண்டமைந்துள்ள கற்றளி ஒன்று காணப்படுகிறது. இங்குள்ள சிவலிங்கம் வழிபாட்டில் உள்ளது. இத்திருமுன்னின் முன்புறத் தூணொன்றில் பிள்ளையாரின் ஊர்த்வ ஜாநு கரணக்கோலச் சிற்பமொன்று செதுக்கப்பட்டுள்ளது. பிள்ளையாரின் வல முன்கையில் உடைந்த தந்தம். பின்கையில் அங்குசம். இட முன்கை அர்த்த ரேசிதமாக அமையப் பின்கையில் மோதகம். துதிக்கை அம்மோதகத்தைச் சுவைபார்க்கிறது. வலக்கால் ஊர்த்வஜாநுவாக உயர, இடக்கால் பார்சுவமாக உள்ளது. கரண்ட மகுடமும் முப்புரிநூலும் வயிற்றுக்கட்டும் அழகுறக் காட்டப்பட்டுள்ளன. ஆடலுக்கேற்பப் பிள்ளையாரின் கால்களில் சதங்கைகள்; வலத் தந்தம்

உடைந்துள்ளது. இவரின் இருபுறத்தும் தூண் காட்டி மேலே தோரணத்தால் அவற்றை இணைத்துள்ளனர்.

இந்தத் திருமுன்னின் வலப்புறப் பாறையின் பக்கத்திலுள்ள மற்றொரு பெரும் பாறையின் உச்சியில் கார்த்திகை விளக்கேற்ற விளக்குமாடம் ஒன்று அமைத்துள்ளனர். இதில் இருநூறு ஆண்டு களுக்குப் பிறகு அண்மையில் விளக்கெரிக்கப்பட்டதைக் கோயிலார் மகிழ்வுடன் நினைவுகூர்கிறார்கள்.

குகைத்தளமும் பிள்ளையார் திருமுன்னும்

குன்றின் இடைப்பகுதியிலுள்ள ஆத்மநாயகி கோயிலுக்குப் பின்னால் உள்ள பாறை முன்னோக்கிச் சரிந்து பின் உள்வாங்கியிருப்பதால், இதன் கீழ்ப்பகுதி இயற்கையான குகைத் தளமாய், ஆத்மநாயகி கோயிலுக்கு வடக்கேயுள்ள முருகன் திருமுன் வரை நீண்டுள்ளது. குன்றின் சரிவில் இணைக்கப்பட்ட நிலையில், அம்மன் கோயிலுக்குச் சற்றுத் தள்ளி, வடபுறத்தே, சிறு முகமண்டபமும் கருவறையுமாய்ப் பிற்காலத்துப் பணியாகப் பிள்ளையார் திருமுன் ஒன்று கட்டப்பட்டுள்ளது. முறையான தாங்குதள அமைப்பற்ற இத்திரு முன்னின் கருவறையில் பிள்ளையார் வழக்கமான லளிதாசனத்தில் பின்கைகளில் பாசமும் அங்குசமும் கொண்டு, முன்கைகளில் தந்தமும் மோதகமும் காட்டித் துதிக்கை மோதகத்தைச் சுவை பார்க்கக் கரண்ட மகுடராய்த் தாமரைத் தளத்தில் அமர்ந்துள்ளார்.

இந்தப் பிள்ளையார் திருமுன்னிற்குத் தெற்கில், மேலுள்ள குடைவரைக் கோயிலுக்கு ஏறிச்செல்ல வாய்ப்பாகப் படிகள் காணப் படுகின்றன. இவ்வழியில் தனியராய்க் காணப்படும் சண்டேசுவரர் பிற்காலத்துத் திருமேனியர். நிழலுக்கு ஒதுங்கியவர் போல் சுவர்மேல் சாய்ந்து சோகத்தோடு பார்க்கிறார்.

அன்னையர் எழுவர்

இவரை அடுத்துள்ள நடைப்பகுதியில் மலைச்சரிவின் கிழக்கு முகத்தில் ஆழமான கோட்டம் அகழ்ந்து அதில் அன்னையர் எழுவர் சிற்பங்களையும் சிவபெருமானின் வடிவத்தையும் செதுக்கி யுள்ளனர்.[10] இக்கோட்டத்தின் உயரம் 1.47மீ. தென்வடலாக இதன் நீளம் 3.56மீ. தென்புற அகலம் 73செ.மீ. வடபுற அகலம் 69செ.மீ. இக்கோட்டத்தின் தென்புறத்தே சிவபெருமானும் வடபுறத்தே சாமுண்டியும் எதிரெதிராக அமர்ந்திருக்க, மேற்கில் மற்ற ஆறு அன்னையரும் கிழக்குப் பார்வையாகக் காட்டப்பட்டுள்ளனர்.[11] பாறைத்தளத்தில் வலக்காலைக் கிடத்தி இடக்காலைக் கீழிறக்கி சுகாசனத்தில் அமர்ந்துள்ள இந்த எட்டு வடிவங்களும் அற்புதமான சிற்பங்களாகும்.



நந்திதேவர்

சிவபெருமான் நந்திதேவராக உருவாக்கப்பட்டுள்ளார். இடுப்பி லிருந்து வரிவரியாகக் கீழிறங்கும் ஆடை இழுத்துச் சுருக்கியது போல் முழங்கால் வரை காட்டப்பட்டுள்ளது. வலக்கையை மடித்து, வலத் தொடை மேல் இருத்தி, இடக்கையில் கடகம் காட்டும் பெருமானின் நீள்செவிகளில் குண்டலங்கள் இல்லை. கனத்து விரியும் சடைபாரத்துடன், இடப்பாதத்தை அதற்கென அமைந்த தளத்தில் இருத்திச் சற்றே முன்தள்ளிய அமர்வில் காட்சிதரும் இறைவனின் பின்புறம் தனித் தளத்தில் அமர்ந்த நிலையில் நந்தி.[12]

அன்னையர் அறுவரும் அமர்ந்திருக்கும் தளம், கீழே ஜகதியும் மேலே மகா வாஜனமும் கொண்டு இடைப்பட்ட நிலையில் கம்புகளற்ற

கண்டம் கொண்டமைந்துள்ளது. ஜகதியிலிருந்து அன்னையர்தம் இடத் திருவடிகட்கு ஆங்காங்கே தனித் தளங்கள் நீட்டப்பட்டுள்ளன. இங்குக் காட்டப்பட்டுள்ள பாதந்தாங்கி போலவே தூசி மாமண்டூரில் உள்ள பல்லவக் குடைவரையொன்றிலும் வாயிற்காப்போர்க்குத் தாள் தாங்கிகள் காட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

அன்னையர் அறுவரும் சுகாசனத்தில், பட்டாடை அணிந்து அமர்ந்துள்ளனர். அனைவரது இடக்கைகளும் மடித்துத் தொடை மீது இருத்தப்பட, கடகத்திலுள்ள வலக்கைகள் அவரவர்க்கு உரிய கருவி களைக் கொண்டுள்ளன. அனைவரும் மார்புக்கச்சுடன், மேற்கை களில் கங்கணம் அணிந்து, மணிக்கட்டுகளைப் பட்டை வளைகள் அழகு செய்ய, எழிலார்ந்து அமர்ந்துள்ளனர்.



நான்முகி

மயேச்சுவரி

மூன்று தலைகளைச் சுற்றிலும் பெரிய ருத்திராக்கங்களாலான தலைமாலையணிந்து செவிகளில் பூட்டுக் குண்டலங்களும் கழுத்தில் மணியாரமும் பூண்டவராய்ச் சடைமகுடத்துடன் காட்சியளிக்கும் முதல்வரான நான்முகியின் வலக்கையின் பின்னால், குண்டிகை சுரைக்குடுவையெனக் காட்டப்பட்டுள்ளது. மயேச்சுவரி ஒரு செவியில் பூட்டுக் குண்டலமும் மறு செவியில் மகர குண்டலமும் அணிந்து, கழுத்தில் இரண்டு ஆரங்கள் அழகுசெய்யச் சடைமகுடத்துடன் வலக்கையின் பின்னே மழுவேந்திக் காட்சிதருகிறார். அதே போன்ற அணிகலன்களுடன் நெற்றி மேல் சென்னி அணிந்தவராய்,

வைணவி

வலக்கையின் பின்னே சக்தி கொண்டு கௌமாரி புன்னகைக்க, அடுத்தமர்ந்துள்ள வைணவி கிரீட மகுடத்துடன் வலக்கையின் பின்னால் சங்கு வைத்துள்ளார். இந்திராணி கிரீட மகுடராய், வலக்கையின் பின் வஜ்ரம் காட்ட, வராகி கரண்ட மகுடத்துடன் வீற்றிருக்கிறார். இவரது வலக்கையின் பின்னே கலப்பை. அன்னையர் அறுவர் தோள்களிலும் சடைப்புரிகள். ஆனால் யாருக்கும் முப்புரிநூல் இல்லையென்பது குறிப்பிடத்தக்கது.

இந்திராணி

சாமுண்டி தனிப்பெருந்தேவியாய்க் கோட்டத்தின் வடதிருப் பத்தில், தென்பார்வையாய், எதிரிலிருக்கும் நந்திதேவரைப் பார்த்த படி அமர்ந்துள்ளார். மார்புக்கச்சோ, கை வளைகளோ இல்லை. தனித் தளத்தில் இருத்தப்பட்டிருக்கும் தேவியின் இடப்பாதத்திற்கு முன்னால் தரையில் எருமைத்தலை காட்டப்பட்டுள்ளது.[13] இடுப்பாடை முழங் காலுக்கு மேலே சுருட்டப்பட்டுள்ளது. படியச் சீவி உச்சியில் கொண்டையிட்ட சடைபாரமும், மிகப்பெரிய முகமும் கொண்டுள்ள அம்மையின் செவிகள் மிக நீளமாய்க் கீழிறங்கிப் பிணக் குண்டலங் களுடன் தோள்களை வருடுகின்றன. முப்புரிநூல் ருத்திராக்க மாலையாய் மார்பின் குறுக்கே ஓட, நடுவில் பெரிய மணியுடன்

வராகி – சாமுண்டி

அமைந்த கழுத்தணி மார்பை அலங்கரிக்கிறது. அம்மையின் உயர்த்திய வலக்கையில் இருக்கும் பொருளை இனம்காணமுடியவில்லை. இடக்கை மற்ற அன்னையர் போல் இடத்தொடையில். அம்மையின் முகம் உக்கிரத்திலும் கருணை காட்டும் அதிசய உணர்வுக் கலவையாய்க் காட்சிதருகிறது.

இவ்வன்னையரின் முன்னுள்ள நடைப்பகுதியை மண்டபமாக்கி யுள்ளனர். இதற்காகவே அன்னையர் செதுக்கப்பட்டுள்ள மலைப் பாறையின் மேற்பகுதியில் குழிவுசெய்து, செவ்வகப் பாறைப் பாளங்களை நுழைத்து அவற்றின் மறு முனையை எதிர்த்திசையில், தூண்களின் மீதோடும் உத்திரத்தின் மீது நிறுத்தியுள்ளனர். இம்மண்ட

பத்தின் எதிரிலுள்ள மலைத்தளத்தில் பலா மரமொன்றும் அதன் நிழலில் சிவலிங்கமொன்றும் உள்ளன.

நடைமண்டபத்திலிருந்து எட்டுப் படிகள் மேலேறினால் குடைவரையின் முன்னாலுள்ள மகாமண்டபத்தை அடையலாம். இந்த வழியிலுள்ள மலைச்சரிவில் சோணாடு கொண்டருளிய சுந்தர பாண்டியரின் பேரளவிலான கல்வெட்டொன்று காணப்படுகிறது.[13A] அதற்குக் கீழே சற்று வடபுறமாக 1.35மீ. உயரம், 93செ.மீ. அகலம், 58செ.மீ. ஆழத்திற்கு ஒரு கோட்டம் குடைந்து அதில் லிங்கத் திருமேனியை உருவாக்கியுள்ளனர். அரைவட்ட வடிவில் அமைந்துள்ள ஆவுடையார்பகுதி ஜகதி, உருள்குமுதம், கம்பு, கண்டம், கம்பு, பட்டிகை முதலிய உறுப்புகளைக்கொண்டு, பாதபந்தமாய் அமைந்துள்ளது. இதன் மேல் 36செ.மீ. உயரத்திற்கு லிங்கபாணம் காட்டப்பட்டுள்ளது. இது போன்ற லிங்கங்கள் குன்றக்குடி, மலையக் கோயில் போன்ற இடங்களிலும் குடையப்பட்டிருப்பது இங்கு நினைக்கத்தகுந்தது. தொண்டைமண்டலக் குடைவரைகளில் இது போன்ற லிங்கங்களைக் காணமுடிவதில்லை.

மையக்கோயிலாக மலையின் மேற்பகுதியில் அமைந்திருக்கும் குடைவரையே இங்குள்ள கோயில்களுள் காலத்தால் பழமையானதாகும். இக்குடைவரையின் முன்னால் பிற்காலத்தில் மகாமண்டபமொன்றும் அதற்கும் முன்னால் முன்மண்டபமொன்றும் கட்டி உள்ளனர்.

முன்மண்டபம்

முன்மண்டபத்தின் கிழக்கு முகமும் தென்முகமும் திறப்பாக உள்ளன. தென்முகத்தே செங்கல்லால் ஆன பிடிச்சுவரும் கீழ்முகத்தே கம்பித்தடுப்பும் உள்ளன. இம்மண்டபத்தைப் பல தூண்கள் தாங்குகின்றன. இத்தூண்களின் பூமொட்டுப் போதிகைகள் இம்மண்டபத்தின் வயதை நிர்ணயிக்க உதவுகின்றன. இங்குள்ள தூண் ஒன்றில் சிதம்பரமூர்த்தி என்ற பெயர் வெட்டப்பட்டுள்ளது.[14] இது இத்தூணைத் தந்தவரின் பெயராகலாம். மண்டபத்தை எடுப்பித்த தம்பதியரின் திருவுருவங்கள் தூண்களின் கீழுள்ள சதுரங்களில் வெட்டப்பட்டுள்ளன. புடவையைத் தலையைச் சுற்றி முக்காடிட்டு வலப்புறமாய்த் தோளில் சரித்துள்ள அம்மணி, இரு கைகளையும் வணக்க முத்திரையில் கொண்டு நின்றகோலத்தில் இறைவனை வணங்குகிறார். இவரது கணவர் சற்றுத் தள்ளி மற்றொரு தூணில் வணக்க முத்திரையில், கீழே பட்டாடையும் மேலே திறந்த மேனியுமாய்க் காட்சிதருகிறார்.

இந்த முன்மண்டபத்தின் வடபுறத்தே இரண்டு திருமுன்கள் உள்ளன. முதலில் இருப்பது நடராசர் திருமுன். கல்வெட்டுகளில்

அழகநட்டப்பெருமாள் என்றழைக்கப்படும் இவரது திருமுன் தெற்கு நோக்கியமைந்துள்ளது. இத்திருமுன்னின் நான்கு சுவர்களிலும் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.[15] இவற்றுள் ஒன்று பாடல் கல்வெட்டாகும். கருவறையின் முன், கிழக்கிலும் தெற்கிலும் திறப்பாக உள்ள அகலமான மேடை. இதன் மேற்குப்புறம் சுவரால் மறைக்கப் பட்டுள்ளது. தெற்கில் இம்மேடையை அடையப் படிகள் உள்ளன.

இத்திருமுன்னில் ஆடவல்லானும் உமையும் கல் திருமேனியராய் இருந்தும், அண்மைக் காலக் குடமுழுக்குக் கோலாகலங்களில் சிக்கிக் கொண்டதால், பல வண்ணப் பூச்சில் மூலநிறமும் எழிலும் இழந்து மினுமினுக்கின்றனர்.

ஆடவல்லானாய் ஆனந்தத் தாண்டவமிடும் சிவபெருமான், வலக்காலை முயலகன் முதுகின் மீதிருத்தி, இடக்காலை வீசிய காலாய் வலப்புறம் திருப்பியுள்ளார். குப்புற விழுந்திருக்கும் முயலகனின் கைகளிரண்டில் காணப்படும் பாம்பின் உடலும், வாலும் அவன் கீழ் நசுங்க, அதன் படமெடுத்த தலையின் மீது இறைவனின் தூக்கிய திருவடி அமர்ந்துள்ளது. ஆடவல்லானின் பின்கைகளில் தீயகலும் துடியும். முன்கைகளில் வலக்கை காக்கும் குறிப்பு காட்ட, இடக்கை வேழ முத்திரையில் உள்ளது. விரிசடையில் மயிலிறகும் கொக்கிறகும் கொண்டு, அரையில் புலித்தோல் வீக்கி ஆடும் பெம்மானின் இடப்புறம் கரண்ட மகுடத்துடன் இடக்கையை நெகிழ்கையாக்கி வலக்கையில் மலரேந்தி அத்தனின் ஆடலை அனுபவித்தபடி உமா. இந்தத் திருமுன்னுக்கு முன்னாலுள்ள தூணொன்றின் கீழ்ச்சதுரத்தில் இதை எடுத்த பெரியவரின் திருமேனி சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திருமுன்னுக்குச் சற்றுத் தள்ளி ஏறத்தாழ அதே அளவில், முன்மேடையில்லாமல் மற்றொரு திருமுன். வடகிழக்கில் அமைந் துள்ள இத்திருமுன்னில் பாண்டி மண்டலத்தின் சிறப்புக்குரிய தெய்வ மான சேத்திரபாலர், தெற்கு நோக்கிய பார்வையில் எழுந்தருளி யுள்ளார். பிற்காலக் கட்டடமான இத்திருமுன்னிலுள்ள திருமேனியும் பிற்காலத்ததுதான். முன்கைகளில் முத்தலையீட்டியும் தலையோடும் கொண்டு, பின்கைகளில் உடுக்கையும் பாம்பும் ஏந்திச் சமபாதத்தில், சினக்கோலத்தில் சுடர்முடியும் கோரைப்பறகளும் கொண்டு உடல் மீது மண்டையோடும் ருத்திராக்கமும் கலந்திணைந்த மாலையணிந்து காட்சிதருகிறார் சேத்திரபாலர். பின்னால் அவரது வாகனமான நாய், இறைவன் கையிலிருக்கும் தலையோட்டு ஊனைச் சுவைக்கும் நிலையில் காட்டப்பட்டுள்ளது. இவ்வமைப்பு பெரிச்சியூர் கோயிலிலுள்ள சேத்திரபாலர் சிற்பத்தை நினைவூட்டுகிறது.[16] இந்த முன்மண்டபத்திலிருந்து மலையின் முப்புறமும் பல்வேறு காட்சிகள் பார்வைக்குக் கிடைக்கின்றன. கோயிலுக்கு ஏறிவருபவர்கள், இறங்கிச் செல்பவர்கள், கீழே தெரியும் சில தெருக்களே அடங்கிய

திருக்கோளக்குடி ஊர், தொலைவில் தெரியும் மிதிலைப்பட்டி, பாதைகள், அவற்றில் நெளியும் ஊர்திகள் என்று பார்க்கும் கண் களுக்கும் அவற்றின் பின்னே நிற்கும் உள்ளங்களுக்கும் ஏற்பப் பலநூறு காட்சிகள்.

முன்மண்டபத்துக் கிழக்குச் சுவரின் கீழ்ப்பாதி முழுமையும் கல்வெட்டுகளால் நிரப்பப்பட்டுள்ளது.[17] இச்சுவரின் மையப்பகுதியில் 2.33மீ. உயரத்திற்கும் 1.19மீ. அகலத்திற்குமாய் அமைந்துள்ள வாயில், மகாமண்டபத்திற்குள் வழிகூட்டுகிறது. வாயிலுக்கு முன்னால் இருபுறத்தும், பக்கத்திற்கு இரு நெடிய உருளைத்தூண்கள் காட்டப் பட்டுள்ளன. நாகபந்தங்களோடு கூடிய சதுர பாதங்களுடன் தொடங்கும் இவற்றின் கீழே கபோதமும் கண்டமும் காட்டப்பட்டுள்ளன. இது கிழக்குச் சுவரின் கீழ்ப்பகுதியில் காணப்படும் வேதித் தொகுதியின் உறுப்பு மாறுபாடாகும். அனைத்து மேலுறுப்புகளும் கொண்டுள்ள இத்தூண்களின் தாமரைப் பலகைகளின் மேல் வீரகண்டமும் போதிகைகளும் காட்டப்பட்டுள்ளன. போதிகைகளின் நாணுதல்கள் கீழிறங்க, மதலைகள் உத்திரம் தாங்குகின்றன. மேலே வாஜனமும் தாமரை வலபியும். உத்திரம் வாயிலுக்கு முன்னால் படர்ந்து பரந்துள்ளது. இதன் கீழ்முகத்தில் தாமரைப் பதக்கம் வெட்டப் பட்டுள்ளது.

வாயில்நிலை, நிலைக்கால்களும் மேல், கீழ் நிலைகளும் கொண்டமைந்துள்ளது. நிலைக்கால்களின் முதலடுக்கில் நாகபந்தமும் அதற்கு மேல் தாமரையிதழ்வரியும் செதுக்கப்பட்டுள்ளன. இதையடுத் துள்ள அடுக்கு, குழிந்த பகுதியாக உருளைக்கால்வரி கொண்டு அமைய, மூன்றாம் அடுக்கு மேனோக்குத் தாமரைவரியுடன் அழகு படுத்தப்பட்டுள்ளது. உத்திரத்தின் கிழக்கு முகத்தில் புதிய கல்வெட டொன்று கண்டறியப்பட்டது.[18]

மகாமண்டபம்

இவ்வாயில் வழியே மிகப்பரந்து விரிந்து அமைந்துள்ள மகாமண்டபத்துள் நுழையலாம். நாற்புறச் சுவர்களிலும் கல்வெட்டுகள் கொண்டுள்ள இம்மண்டபத்தை மூன்று வகையான தூண்கள் தாங்கு கின்றன. இத்தூண்கள் அனைத்துமே உடலமைப்பில் ஒன்றாகவும் போதிகை மற்றும் மேலமைப்புகளில் மாறுபட்டும் உள்ளன. மூன்று சதுரங்களும் அவற்றுக்கு இடைப்பட்ட இரண்டு கட்டுகளுமென அமைந்துள்ள இவற்றின் சதுரங்களுக்கும் கட்டுகளுககும் இடையில் தாமரைக்கட்டு காட்டப்பட்டுள்ளது. கட்டுகளின் நடுப்பகுதியில் ஒரு பட்டையும் கீழ்ச்சதுரத்தின் மேலே நாகபந்தங்களும் உள்ளன.

தென்புறத்தே உள்ள தூண்களின் கீழ்ச்சதுரங்களின் தலைப்பில் பேரளவிலான நாகபந்தமும், முகங்களில் கொடிவேலையும் செதுக்கப்

பட்டுள்ளன. மேற்சதுரங்களின் மேலுள்ள போதிகைகளின் கைகள், வெட்டும், பக்கப்பகுதிகளில் தரங்கமும் கொண்டு உத்திரம் தாங்க அதன்மேல் வாஜனமும், வலபியும், மேலே கூரையும் அமைந்துள்ளன. இந்தத் தூண்வரிசைக்கு நேராகக் கிழக்கு, மேற்குச் சுவர்களில், தூணின் மேற்பகுதியான தாமரைப் பலகையும், போதிகையும் மட்டும் காட்டி, அங்கும் தூண்கள் இருப்பது போன்ற தோற்றத்தை உருவாக்கியுள்ளனர்.

இரண்டாம் வகைத் தூண்கள் மண்டபத்தின் கிழக்கு, மேற்குப் பகுதிகளில் மூன்று வரிசைகளாய் அமைந்துள்ளன. இவற்றின் போதிகைகள் மதலைகளை மேலனுப்பி நாணுதல்களைக் கீழே தாழ்த்தியுள்ளன. மேற்கு வரிசைக்கு மட்டும் தென், வடசுவர்களில் இவற்றிற்கு நேராக இருப்பது போல் தாமரைப் பலகையும் போதிகையும் காட்டப்பட்டுள்ளன.

இரண்டாம் வகைத் தூண்களின் மேற்கு, கிழக்கு வரிசைகளுக்கு இடைப்பட்ட, மண்டபத்தின் மையப்பகுதியில், மற்ற பகுதிகளை விட கூரை உயர்த்தப்பட்டுள்ளது. இங்குதான் மூன்றாம் வகைத் தூண்கள் இடம்பெற்றுள்ளன. வழக்கமான இரண்டாம் வகைத் தூணுடன் ஒவ்வொரு தூணுக்கும் உடனிருப்பாக, அதன் முன்பகுதியில் மற்றொரு தூண் இணைக்கப்பட்டுள்ளது. இந்த உடனிருப்புகளின் கீழ்ப்பகுதி உபானம், பத்மம், சிறு கண்டம், அதன் மேல் கூடுகளுடன் கூடிய கபோதம், சிறுகம்பு என அமைய, பாதம் நாகபந்தத்துடன் முப்புறமும் பூவேலைகள் கொள்ள, இதன் மீது இரு உருளைகள் இடையில் குழிவுடன் கால்பகுதியாய் எழுகின்றன. இவற்றின் பக்கங் களிலும் குழிவையொட்டியும் தாமரையிதழ் அணைவு. குழிவுகளில் குமிழ் வேலைப்பாடு.

மேற்பகுதியில் மாலைத்தொங்கல், தாமரைக் கட்டு, கலசம், தாடி, கும்பம், கண்டம், தாமரை, பலகை, சிறிய வீரகண்டம், மதலை அதன் பின் இரண்டு யாளியென உறுப்புகள் அமைய, மதலையின் மேலுள்ள போதிகைத்தளத்தில், அமர்ந்த சிங்கம் காட்டப்பட்டுள்ளது. இதன் மீது மீண்டுமொரு தாமரைத்தளமும், பலகையும் அமைய உத்திரம், வாஜனத் தழுவலில் வலபி, கூடுகளோடு கபோதம் ஆகியனவும் காட்டப்பட்டுள்ளன. எட்டுக் கூடுகள் திசைக்கு இரண்டென இந்நடுப்பகுதிக் கூரையில் அமைந்து இப்பகுதியைத் தனிச் சிறப்புக்குரியதாக்குகின்றன. இவை தவிர மூலைகளில் அரைக்கூடுகள் காட்டப்பட்டுள்ளன.

மகாமண்டபத்தின் வடசுவரையொட்டி நீளமான மேடை இழுக்கப் பட்டுள்ளது. இதில் செப்புத்திருமேனிகள் இருத்தப்பட்டுள்ளன. இவற்றுள் உமையும் ஆடவல்லானும் இருக்கும் பகுதி தனி முகப்புப்

பெற்றுச் சிறப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னால்தான் அமர்ந்த சிங்கங்களைத் தலையில் கொண்டுள்ள தூண்கள் நிற்கின்றன.

மண்டபத்தின் தென்மேற்கில் சுவர் எழுப்பி ஓர் அறை போலத் தடுத்திருக்கிறார்கள். வௌவால்கள் வாசம் செய்யும் இந்த அறையின் மேற்குச் சுவரில் இரண்டு புதிய கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.[19] இவ்வறையின் வெளிச்சுவருக்கு முன்னால் மகா மண்டபத்தில் ஒரு தனி மேடையெழுப்பி அதில் சோமாஸ்கந்தரை அமர்த்தியுள்ளனர். அருகே தாமரைத்தளத்தில் நின்றவராய் உமை. மகாமண்டபத்திற்குள் நுழைய கிழக்கு வாயில் தவிர தெற்கிலும் வடக்கிலும் வாயில்கள் உள்ளன. வடக்கு வாயில் அன்னையர் எழுவர் காட்டி, ஆத்மநாயகி அம்மன் கோயிலுக்கும், தெற்கு வாயில் மலைப்பாறையில் அகழப்பட்டுள்ள பிள்ளையார் திருமுன் காட்டிச் சுனைக்கும் அழைத்துச்செல்கின்றன. இம்மண்டபத்தின் கிழக்கு வாயிலின் வடபுறத்தே கதிரவன் தனியராய் இருக்கச் சந்திரனைக் காணவில்லை.

மகாமண்டபத்திலுள்ள செப்புத்திருமேனிகளுள் எதுவும் பழமை யானதல்ல. இருக்கும் திருமேனிகளுள் ஆடவல்லான் தொகுதியும் சோமாஸ்கந்தர் தொகுதியும் கலைநயத்துடன் காட்சியளிக்கின்றன. ஆடவல்லான் விரிசடையில் வலப்புறம் கங்கையும் இடப்புறம் பிறையும் திகழத் தலையின் முகப்பில் மண்டையோடும், கட்டிய சடைகளில் கொக்கிறகு, ஊமத்தம்பூ போன்றவையும் கொண்டு, பின்கைகளில் உடுக்கை, தீயகல் ஏந்தி, முன்கைகளில் வலக்கையைக் காக்கும் குறிப்பிலும் இடக்கையை வேழ முத்திரையிலும் காட்டி அருளாட்சி செய்கிறார். இவரது ஊன்றிய வலப்பாதம் முயலகனின் முதுகை அழுத்த, உயர்த்திய இடப்பாதம் ஆனந்தத் தாண்டவக் கோலத்தில் வலப்புறம் வீசப்பட்டுள்ளது. முயலகனின் கையில் பாம்பிருப்பது போல் இறைவனின் திருக்கையைச் சுற்றியும் படமெடுத்த பாம்பு. ஆடும் இறைவனின் அருகே சடையை மகுடமாய் முடித்த அன்னை, இடக்கையை நெகிழ்த்தி வலக்கையில் மலரேந்திக் காட்சியளிக்கிறார். மறுபுறம் மாணிக்கவாசகர், அக்கமாலையுள்ள வல முன்கையில் சின் முத்திரை காட்டி, இடக்கையில ஓலைச்சுவடியொன்று ஏந்திச் சுருள் முடியும் ருத்திராக்க மாலையுமாய்ச் சிவப்பழமாய்க் காட்சிதருகிறார். கையிலுள்ள ஓலைச்சுவடியில் 'நமசிவாய' என்ற ஐந்தெழுத்து மந்திரம்.

முருகு உடனுறை சிவசக்தியாகச் சிவபெருமானும் உமையும் சுகாசனத்தில் இருக்க, இடையில் சிறுபிள்ளையாய் முருகன். வழக்கமான கோலத்தில், வழக்கமான அழகுகளுடன் அமைக்கப் பட்டிருக்கும் இத்திருமேனித் தொகுப்புடன் தனித் தேவியும் உடன் கூட்டமாய் எழுந்தருளியுள்ளார்.

மகாமண்டபம், குடைவரைக்கு முன்னிருக்கும் பாறைப் பகுதியையே தரையாகக் கொண்டு, ஆங்காங்கே கற்கள் பாவி எழுப்பப் பட்டுள்ளது. பார்வையில் படும் இதன் தென்புறச் சுவரின் புறப்பகுதி அலங்கரிப்பின்றியிருக்க, மறைப்பிலுள்ள வடசுவரின் புறப்பகுதி அரைத்தூண்கள் பெற்று வனப்புடன் விளங்குகிறது.

மகாமண்டபத்திலிருந்து குடைவரைக்குள் நுழைய அமைந்துள்ள வாயிலின் அகலம் 1.13மீ. இதன் இருபுறமும் கோட்டப் பஞ்சரங்கள். இவற்றுள் தென்புறப் பஞ்சரத்தின் கோட்டத்தில் புதிய கல்வெட்டொன்று கண்டுபிடிக்கப்பட்டது.[20]

குடைவரையின் முற்பகுதி

குடைவரையின் முன்னால் வாயிலுடன் கூடிய கற்சுவரொன்று எழுப்பி, அது குடைவரைக் கபோதத்திற்கு மேலிருந்து நீளும் பாறைப் பகுதியுடனும், பக்கவாட்டில் உள்ள பாறைச் சுவர்களுடனும் பொருந்துமாறு அமைத்து இந்த மகாமண்டபம் உருவாகக் காரணமா யிருந்தவர்கள், மற்றொரு துன்பமான திருப்பணியும் செய்து, குடைவரையின் அழகையும் கெடுத்து, அதன் வரலாற்று விடிவிளக்கு களையும் அறியாமை காரணமாய் மறைத்திருக்கிறார்கள். குடை வரைக்கு ஏற அதன் முகப்புக்கு முன்னுள்ள தரையிலிருந்து படிகள் ஓடுகின்றன. இப்படிகள் குடைவரையின் தென்புறம் வெட்டப் பட்டுள்ளன. கீழ்மட்டத்தில் ஒரு சந்திரக்கல்லும் மேலே நான்குபடி களும் கொண்ட இப் படித்தொடர்க்கு அணைவாய்ப் பிடிச்சுவரொன்று யானைத் துதிக்கை போல அமைந்துள்ளது. இப் பிடிச்சுவரில் முதற் குலோத்துங்கரின் கல்வெட்டொன்று புதிய கண்டுபிடிப்பாய்க் கிடைத்தது.[21] இப்படிக்கட்டுகளுக்கு எதிரே உள்ள சுவரிலிருந்தும் புதிய கல்வெட்டொன்று கிடைத்தது.[22] இந்தப் படிக்கட்டுப் பகுதியையும் குடைவரையின் முகப்புக்கு முன்னுள்ள தரையமைப் பையும் பின்னாள் திருப்பணியாளர்கள் என்ன காரணத்தாலோ மூடித் தளமிட்டு, முன்னாலொரு மகாமண்டபமும் எடுத்துக் குடைவரையின் பழைய அமைப்புமுறையையே மாற்றியிருக்கிறார்கள். ஆய்வின் போது மூடப்பட்டுள்ள தரைமுகப்பிலிருந்து இரண்டாம் இராசராசரின் கல்வெட்டொன்று பாதி மறைக்கப்பட்ட நிலையில் கண்டறியப்பட்டது. கற்பூரத்தட்டு, செம்பாலான சிறிய யானை வடிவம் போன்றவையும் படிகளின் கீழ்ப்பகுதியிலிருந்து கண்டெடுக்கப்பட்டன.

மலைமூர்த்தி விநாயகர்

இந்தப் படிவரிசைக்குப் பின்னுள்ள மலைச்சரிவில்தான் கிழக்குப் பார்வையாய்ப் பிள்ளையார் வடிவம் செதுக்கப்பட்டுள்ளது. மிகப்பெரிய வடிவமாய்க் காட்டப்பட்டுள்ள இப்பிள்ளையார் வடிவத் திற்கு முன்னால் கட்டடமெழுப்பி, இதைத் தனித் திருமுன்னாக்கியிருக்

கிறார்கள். 4.99மீ. நீளமும் 2.31மீ. அகலமும் கொண்டமைந்துள்ள இம்மண்டபத்தின் மேற்குச் சுவராகப் பாறைச்சரிவே கொள்ளப் பட்டுள்ளது. இச்சரிவில் ஒரு கல்வெட்டு இடம்பெற்றுள்ளது.[23] மலைமூர்த்தி விநாயகர் என்று அழைக்கப்படும் இப்பிள்ளையார் கிழக்குப் பார்வையாய் 1.68மீ. உயரமும் 1.48மீ. அகலமும் 56செ.மீ. ஆழமும் கொண்ட கோட்டத்தில் சம்மணமிட்ட நிலையில் உருவாக்கப் பட்டுள்ளார். பாண்டி மண்டலத்திலுள்ள பழைய சிற்ப வடிவங்கள் சில இப்படிச் சம்மணமிட்ட நிலையிலேயே காட்டப்பட்டுள்ளமை இங்கு நினைவுகொள்ளத்தக்கது.

பிள்ளையாரின் முன்னால் பெரிய கல் உருண்டையொன்று காட்டப்பட்டுள்ளது. இதைப் பலாப்பழம் என்கிறார்கள். இதன் வலப் புறம் வாழைப்பழ அடுக்கொன்று கல்லில் காட்டப்பட்டுள்ளது. இடப் புறமும் இரண்டு சிறு கல்லுருண்டைகள் மாங்கனி வடிவத்திலுள்ளன. முக்கனி விழைவோராய் அமர்ந்துள்ள இவ்வலம்புரிப் பிள்ளையாரின் பின்கைகளில் வலப்புறம் நீள் தடியும் இடப்புறம் கரும்புத் தோகையும் காட்டப்பட்டுள்ளன.

முன்கைகளில் வலப்புறம் மோதகமும் இடப்புறம் தந்தமும் உள்ளன. பொதுவாகப் பிள்ளையாரின் வலப்புறத் தந்தம் உடைந்திருக்கும். அந்த உடைந்த பகுதியை அவர் வலக்கையில் கொண்டிருப்பார். இங்கோ இடப்புறத் தந்தம் இல்லாமல் உள்ளது. அந்தத் தந்தம் இடக்கையிலிருப்பதும் பொருத்தமாகவே உள்ளது. பட்டையான பெரிய கண்டிகை கழுத்தை அலங்கரிக்கக் கரண்ட மகுடமணிந்து, மேற்கைகளில் கங்கணங்கள் பொலிய, முப்புரிநூல் வலக்கை மேல் வளைந்து செல்லக் கணுக்கால் வரை ஆடையணிந்து செம்மாந்து அமர்ந்துள்ளார், இந்தப் பாறைப் பிள்ளையார். பிள்ளையாரின் பழங்கால வடிவங்களுள் குறிப்பிடத்தக்கன பாண்டி மண்டலத்திலேயே கிடைப்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செய்தியாகும்.

குடைவரை

இந்த மலை மீது முதன்முதலாக எடுக்கப்பட்ட இறைக்கோயில் இங்குள்ள குடைவரைதான். இதன் அமைப்புமுறையும், கட்டட உறுப்பு களின் வளர்ச்சி நிலையும் இதைக் கி.பி. எட்டாம் நூற்றாண்டளவில் எடுக்கப்பட்டதாகக் காட்டுகின்றன.

முகப்பு, முகமண்டபம், உள்மண்டபம், கருவறை என்றமைந் துள்ள இக்குடைவரையின் முகப்புக்கு முன்னுள்ள தரையமைப்பு தென்வடலாக 6.90மீ. நீளமும் கிழக்கு மேற்காக 1.13மீ. அகலமும் கொண்டமைந்துள்ளது. முகப்பையொட்டிய இதன் முதற்பகுதி பாறை யாகவும் மகாமண்டபச் சுவரையொட்டிய பின்பகுதி கல்பாவிய தள

அமைப்பாகவும் உள்ளது. இத்தள அமைப்பின் கீழ்தான் இக்குடைவரையின் படிக்கட்டுகள் மூடி மறைக்கப்பட்டுள்ளன.

குடைவரைக்கு முன்னால் நிற்கும் மகாமண்டபச் சுவர், வாயிலுக்குத் தென்புறத்தே 2.53மீ. அளவும் வடபுறத்தே 2.60மீ. அளவும் பரந்து, குடைவரை முகப்பின் முன்னுள்ள பக்கச் சுவர்களுடன் இணைகின்றது. இந்தப் பக்கச் சுவர்கள் குடையப்பட்ட பாறையின் பக்கப் பகுதிகளாகும். இவற்றுள் வடபுறச் சுவரின் அகலம் 1.32மீ., தென்புறச் சுவரின் அகலம் 1.35மீ.

முகப்பு

நடுவில் இரண்டு முழுத்தூண்களையும் பக்கங்களில் இரண்டு அரைத்தூண்களையும் கொண்டு உருவாகியுள்ள முகப்பு, கிழக்கு மேற்காக 81செ.மீ. அகலத்திலும் தென்வடலாக 6.52மீ. நீளத்திலும் அமைந்துள்ளது. முகப்புத் தூண்கள் அனைத்துமே சதுரம், கட்டு, சதுரம் என்ற அமைப்பில், சதுரங்களின் அனைத்து முகங்களிலும் தாமரைப் பதக்கங்கள் கொண்டு வடிக்கப்பட்டுள்ளன. அரைத்தூண்களின் கிழக்கு முகங்களில் மட்டும் அரையளவே காட்டப்பட்டுள்ள இத்தாமரைப் பதக்கங்கள், பல்லவர் பதக்கங்களைப் போலவே குவி இதழ்கள், விரி இதழ்கள் கொண்டு தாமரையைச் சுற்றி வட்டம், பின் அதைச் சுற்றிச் சதுரமென அணி செய்யப்பட்டுள்ளன. தெற்கு அரைத் தூணின் கீழ்ச்சதுரத்தில் காட்டப்பட்டுள்ள மேற்குமுகத் தாமரை சிதைந்துள்ளது. இத்தூண்கள் நான்குமே கல்வெட்டுகளைக் கொண்டுள்ளன.[24]

வடக்குத் தூணின் கீழ்ச்சதுரம் 72செ.மீ. உயரமுடையதாகவும் 65செ.மீ. அகலமுடையதாகவும் உள்ளது. இதன் மீதுள்ள கட்டு 92செ.மீ. உயரமும் 2.11மீ. சுற்றளவும் கொண்டிருக்க, மேற்சதுரம் 71செ.மீ. உயரமும் 61.5செ.மீ. அகலமும் பெற்றுள்ளது.

தெற்குத் தூணின் கீழ்ச்சதுரம் 74செ.மீ. உயரமும் 65செ.மீ. அகலமும் கொண்டிருக்கக் கட்டு 91செ.மீ. உயரமுடையதாகவும் 2.11மீ. சுற்றளவுடையதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. மேற்சதுரத்தின் உயரம் 72செ.மீ. அகலம் தென்வடலாக 62செ.மீ.

மேற்சதுரங்களின் மேலமர்ந்துள்ள போதிகைகளிலிருந்து கிளைக்கும் கைகள் தரங்க அமைப்புடன் விரிகோணத்தில் உத்திரத்தைச் சென்றடைகின்றன. நடுப்பட்டை கொண்டுள்ள இவற்றின் கீழ்க் கைகளை விட மேற்கைகள் பெரியவை. கீழ்க்கை மேற்கையாகத் திரும்பும் இடத்திலுள்ள தரங்க எழுச்சி ஏனைய தரங்கங்களை விடப் பெரிய அளவினதாக அமைந்துள்ளது. மேற்கை உத்திரத்தைத் தொடுமிடத்தில் சிறுமடிப்பு காட்டித் தொடுகிறது. அகலமான உத்திரம், உயரத்தில் போதிகையை விடச் சற்றுக் குறைவாக உள்ளது. உத்திரத்தின் மேல் வெளிப்பிதுக்கமாகக் காட்டப்பட்டுள்ள வாஜனம் தெற்கு வடக்காக முகப்பு முழுவதற்குமாய் ஓடுகிறது. பாறையின்

மேற்பரப்பு கபோதமாக நீட்டப்பட்டுள்ளது. குன்றக்குடிக் குடைவரை போல மிக நீளமான கபோத அமைப்பு. வாஜன விளிம்பிலிருந்து 69செ.மீ. நீளத்திற்கு விரிந்து பரந்திருக்கும் இக்கபோதத்தின் அடிப் பரப்பு நன்கு சமன் செய்யப்பட்டுள்ளது. கபோத முகப்பில் இரண்டு பெரிய கூடுகள் தென், வடஅங்கணங்களின் நடுப்பகுதிக்கு நேர் மேலே காட்டப்பட்டுள்ளன.

இவற்றின் வளைவுகள் வெறுமையாக உள்ளன. கபோத வடிப்பின் மேல் உள்ள பாறையின் நீட்சி மகாமண்டபத்தின் கிழக்குச் சுவர் உச்சியில் முடிகிறது.

முகமண்டபம்

முகப்பையடுத்துள்ள மண்டபம் மற்றொரு வரிசைத் தூண் களாலும் மேடை போல் உயர்த்தப்பட்ட தரையமைப்பாலும் முக மண்டபம், உள்மண்டபம் என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது.[25] முகப்புத் தூண்களுக்கும் இரண்டாம் வரிசைத் தூண்களுக்கும் இடைப் பட்ட முகமண்டபம் தென்வடலாக 7.41மீ. நீளமும் கிழக்கு மேற்காக 2.10மீ. அகலமும் கொண்டு அமைந்துள்ளது. நன்கு பொளியப்பட்டு, வழவழப்பாக்கப்பட்டுள்ள முகமண்டபத் தரையின் நடுவே பாறையிலேயே உருவான நந்தியொன்று கருவறையை நோக்கி அமர்ந் துள்ளது. தரையிலிருந்து 4செ.மீ. உயரத்தில், 1.56மீ. நீளத்திற்கும் 91செ.மீ. அகலத்திற்குமாய் அமைக்கப்பட்டுள்ள தளத்தின் மீது, முன்னங்கால்களை மடக்கி அமர்ந்திருக்குமாறு போல உருவாக்கப் பட்டுள்ள நந்தியின் கழுத்து மடிப்புகளும், திமிலும், சிறு கொம்புகளும் அழகுற அமைந்துள்ளன. இதன் பின்னால் பிற்காலத்துப் பலித்தளமொன்று வைக்கப்பட்டுள்ளது.

முகமண்டபக் கூரையின் நாற்புறமும் வாஜனம் காட்டப் பட்டுள்ளது. தென், வடசுவர்களில் பக்கத்திற்கொன்றாய் இரண்டு முனிவர்களின் சிற்பங்கள் தள அமைப்புகளுடன் செதுக்கப் பட்டுள்ளன. வடபுறத்தே இத்தள அமைப்பையொட்டி பிற்காலத்தே கல்லால் ஒரு மேடையெழுப்பியுள்ளார்கள்.

சுவர்ச் சிற்பங்களுள், தென்புறமிருக்கும் வடிவத்தை அகத்திய ரென்றும், வடபுறமிருக்கும் வடிவத்தைப் புலத்தியரென்றும் கோயிலார் குறிக்கிறார்கள். இது வழிவழிச் செய்தியாக விளங்கிவருகிறது. இதே போன்ற சிற்பங்கள் இவற்றினும் அழகாகவும் சிறப்பாகவும் தேவர் மலைக் குடைவரையில் காணப்படுகின்றன. இங்கும் அவை இப்பெயர் களாலேயே அழைக்கப்படுகின்றன. இவை முனிபுங்கவர்களைக் குறிக்கிறதென்பதில் யாதொரு அய்யமும் இல்லை.

தென்புறச் சிற்பம் சடைமகுடத்துடன் வலத்தோளில் சடைப் புரிகள் புரளத் தொங்குமீசையும் தாடியுமாய் 1.84மீ. உயரத்திற்குக் காட்சியளிக்கிறது. அணிகலன்களற்ற நீள் செவிகள். துணியை முப்புரிநூல் போல் அணிந்திருக்கும் இம்முனிவரின் வலக்கை சின்

முத்திரையில் நாபிக்குக் கீழே காட்டப்பட்டுள்ளது. உயர்த்திய இடக்கையில் மலர்க்கொத்து. இதில் பல மலர்கள் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளன.

கருவறை நோக்கிச் செல்பவர் போல் திரும்பியுள்ள இப்பெரியாரின் கணுக்கால் வரை இடைக்கச்சம் வைத்த பட்டாடை. இவர் நிற்கும் கல்தளத்தின் உயரம் தரையிலிருந்து 53செ.மீ. மேல் நிலையில் 59செ.மீ. அகலமும், கீழ்நிலையில் 63செ.மீ. அகலமும் உள்ள இத்தளத்தின் முகப்பு ஜகதி, உருள்குமுதம், கம்புகளோடு கூடிய கண்டம், பட்டிகை என்று பாதபந்தமாய் அழகுபடுத்தப்பட்டுள்ளது.

வடபுறமுள்ள வடிவத்தின் வலக்கை உயர்ந்து போற்றி முத்திரையில் இருக்க, இடக்கை தாமரை மொட்டுடன் நெஞ்சருகே. இடப்புறம் முடிந்த இடையாடை விசிறி மடிப்பாய்க் கணுக்கால் வரை. இடுப்பில் அரைப்பட்டிகை. சடை, மகுடமாய்ப் புனையப்பட்டிருந்தும், தோள்களில் பரவலாய்ப் புரிகள். 1.95மீ. உயரமுள்ள இந்த வடிவம் இளையகோலத்தில் அகத்தியர் போல் தாடி, மீசையின்றி உள்ளது.

புலத்தியர்

உள்மண்டபம்

முகமண்டபத் தரையிலிருந்து 10செ.மீ. உயர்த்தப்பட்டுள்ள உள் மண்டபத் தரையில், பிற்காலத் திருப்பணியாளர்கள் 57செ.மீ. உயரத்திற்குக் கற்களை நிறுத்தி தளம் அமைத்துள்ளனர். உள்மண்டப நான்முகத் தூண்கள்[26] பழந் தரையமைப்பிலிருந்து 10செ.மீ. உள் தள்ளி எழுகின்றன. நடுத்தூண்கள் இரண்டும் முழுத்தூண்களாய் அமையப் பக்கத் தூண்கள் அரைத்தூண்களாய் உள்ளன. தென் முழுத் தூணின் முன்னால், முகமண்டபத் தரையமைப்பிலிருந்து மூன்று படிகள், உயர்த்தப்பட்ட உள்மண்டபத் தளத்தை அடைவதற்காகப் பிற்காலத் திருப்பணியாளர்களால் அமைக்கப்பட்டுள்ளன. இப் படி களுக்குப் பிடிச்சுவர் இல்லை. உள்மண்டபத் தரை உயர்த்தப்பட்டதால் நான்கு தூண்களுமே தங்கள் கீழ்ப்பாதியைக் கட்டட அமைப்பில் இழந்து, மேற்பாதியை மட்டும் மேனியாய்க் காட்டி நிற்கின்றன.

உயர்த்தப்பட்டிருக்கும் உள்மண்டபத் தரையின் முகப்பு, நந்திக்கு முன்னால் மட்டும் கபோதம் போல வடிவமைக்கப்பட்டு இரண்டு கூடுகளுடன் காட்சியளிக்கிறது. இக்கூடுகள் உள்மண்டப முழுத்தூண் களுக்கு முன்னால் காட்டப்பட்டுள்ளன. தூண்களின் போதிகைகளி லிருந்து கிளைக்கும் கைகள் விரிகோணத்தில் உத்திரம் தொடுகின்றன. உத்திரம் 57.5செ.மீ. அகலமும் 19.5செ.மீ. உயரமும் கொண்டமைந்துள்ளது. போதிகைக் கைகளின் நீளம் தூணுக்குத் தூண் வேறுபடுகிறது. உத்திரத்தின் வெளிப்பிதுக்கமான வாஜனம் தென்வடலாக ஓடுவதுடன் உள்மண்டபக் கூரையை ஒட்டித் தெற்கிலும் வடக்கிலும் நீட்டப்பட்டுள்ளது.

தூண்களின் இருப்பால் மூன்று அங்கணங்களாகப் பிரிக்கப் பட்டுள்ள உள்மண்டபத்தின் வடஅங்கணத் தரையில் லிங்கத் திருமேனி யொன்று இருத்தப்பட்டுள்ளது. தென்அங்கணம் கிழக்கிலும் வடக்கிலும் சுவரெழுப்பப்பெற்றுத் தனியறையாக்கப்பட்டுள்ளது. வடசுவரில் வாயில் கொண்டு காப்பறையாகப் பயன்படும் இந்த அறையில் இறையலங்காரப் பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன. நடு அங்கணத்தின் அகலம் 1.61செ.மீ.

கருவறை

உள்மண்டபத்தின் வட, தென்சுவர்களும் கூரையும் வெறுமையாக உள்ளன. பின்சுவரிலிருந்து 37செ.மீ. முன்தள்ளி அமைந்துள்ள கருவறை வாயிலின் அகலம் 76செ.மீ.; உயரம் 1.64மீ. இருபுறமும் திருநிலைக்கால்களோடு அமைந்துள்ள இவ்வாயிலின் கீழ்நிலை உள்மண்டபத் தரையிலிருந்து 14செ.மீ. உயரத்தில் அமைந்துள்ளது. வாயிலின் இருபுறமும் பக்கத்திற்கொன்றாக இரு அரைத்தூண்கள். வடபுறத்தூண் மூன்று சதுரங்களும் அவற்றிற்கிடையிலான இரண்டு

கட்டுகளும் என்ற அமைப்பில் உள்ளது. தென்புறத்தூண் நான்முகமாகக் காட்சியளிக்கிறது. இது பிற்காலத் திருப்பணிகளின் காரணமெனலாம். வடதூணின் மேற்சதுரத்தின் மேல், பாலிகை, பலகை போன்ற உறுப்புகள் உள்ளன. இரு தூண்களுக்கும் இடையில் காட்டப்பட்டுள்ள தோரணத்தை உமிழும் மகரங்கள், இப்பலகைகளின் மேல் நிற்கின்றன. இவற்றின் வால்பகுதி தோகை போல் பல சுருள்களாய்க் காட்டப்பட்டுள்ளது. வடதூண் பலகையின் பக்கவாட்டில் கிளைக்கும் போதிகை, தரங்கமும் பட்டையும் கொண்டுள்ளது. போதிகைக் கைகள் தொடும் உத்திரத்தின் வெளிப்பிதுக்கமாய் கருவறை முகப்புச் சுவரின் முப்புறமும் தொடர் ஒழுங்கோடு ஓடும் வாஜனம், உள்மண்டபப் பின்சுவரைத் தொட்டதும் நின்றுவிடுகிறது.



குடைவரையின் உள்தோற்றம்

கருவறை வாயிலுக்கு இருபுறத்தும் உள்ள அரைத்தூண்கள் தவிர, பக்கத்திற்கிரண்டாக மேலும் நான்கு அரைத்தூண்கள் வாயிலை ஒட்டியுள்ள வடதூணின் அமைப்பிலேயே பொளியப்பட்டுள்ளன. முகப்புச் சுவரின் திருப்புமுனைகளில் உள்ள அரைத்தூண்களில் கிழக்கு முகமாகவும் ஒரு போதிகை காட்டப்பட்டுள்ளது. இவற்றின் மேற்குப் போதிகைகள் 34.5செ.மீ. அகலத்திற்கு உள்மண்டபப் பின் சுவர்வரை பரவியுள்ளன. தூண் சதுரங்களின் கிழக்கு முகங்களில் சிறிய அளவிலான தாமரைப் பதக்கங்கள் காட்டப்பட்டுள்ளன.

இந்த அரைத்தூண்களுக்கு இடையில் வாயிலின் தென்புறத்தே இரண்டும், வடபுறத்தே இரண்டுமெனக் காட்டப்பட்டுள்ள சுவர்க் கோட்டங்கள் வெறுமையாக உள்ளன.

மகரதோரணத்தில் காட்டப்பட்டுள்ள மகரங்கள் மிகப் பெரியவை. இவை தம் துதிக்கைகளை நன்கு உயர்த்திச் சுருட்டியுள்ளன. இவற்றின் வாயிலிருந்து வெளிப்படும் பூத்திரள், வாயிலின் நடுப்பகுதிக்கு மேலே காட்டப்பட்டிருக்கும் மைய மகரங்களை அடைகின்றன. இந்த மைய மகரங்கள் சந்திக்குமிடத்தின் நெற்றிப் பகுதியில் பூப்பதக்கம் செதுக்கப்பட்டுள்ளது.

2.24மீ. உயரமும், 3.17மீ. பக்கமுமுள்ள கருவறையில், பாறையில் வெட்டிய 1.28மீ. பக்கமுள்ள சதுரமான ஆவுடையாரும் அதன்மீது 67செ.மீ. உயரமுள்ள லிங்கத் திருமேனியும் நடுநாயகமாக அமைந்துள்ளன. வடபுறமாகச் சிறு கோமுகம் காட்டப்பட்டுள்ளது. ஆவுடையாரின் முகப்பு ஜகதி, உருள்குமுதம், கம்புகளோடு கூடிய கண்டம், துணைக்கம்பு, பட்டிகை, மேற்கம்பு என அழகுபடுத்தப் பட்டுள்ளது. கருவறையின் கூரையும் பக்கச் சுவர்களும் வெறுமையாக உள்ளன. தரையில் கோமுகத்தின் கீழே முழுக்கு நீரை வாங்கும் பள்ள மொன்று உள்ளது. இப்பள்ளத்தையொட்டிப் புறப்படும் நீரோடுகால், திருமுழுக்கு நீரைக் கருவறையிலிருந்து வெளியேற்றுவதற்காகப் பிற்காலத்தே செய்யப்பட்ட பணியாகும்.

இக்குடைவரையின் சிறப்புகள்

பிற்காலத் திருப்பணிகளற்ற நிலையில், இக்குடைவரை பாண்டி மண்டலத்தின் பெரிய அளவிலான குடைவரைகளுள் ஒன்றாய் விளங்கியிருக்கவேண்டும். முற்பாண்டியரின் கலைமுறையில், தென் சரிவில் பிள்ளையாரைக் கொண்டிலங்கும் இக்குடைவரையின் எப்பகுதியிலும் வாயிற்காவலர்கள் இல்லாமை குறிப்பிடத்தக்கதாகும். முனிவர் பெருமக்கள் குடைவரை முகமண்டபத்தின் பக்கச் சுவர்களில் இடம்பெற்றதால் வாயிற்காவல் தேவையற்றுப்போனது போலும். தேவர் மலைக் குடைவரையிலும் வாயிற்காவலர்கள் இல்லாமை இங்கு ஒப்பிடத்தக்கது.

இக்குடைவரையின் அருமையான, உயரமான படியமைப்பு, திருமலை தவிர, ஏனைய முற்பாண்டியர் குடைவரைகளில் காண

முடியாத அமைப்பாகும். இங்குள்ள பிள்ளையார் திருமேனி குன்றக்குடி, பிள்ளையார்பட்டி, செவல்பட்டி, திருமலைப்புரம், திருக்கோகர்ணம் ஆகிய குடைவரைகளில் காணப்படும் பிள்ளையார் திருமேனிகளுடன் பலவிதங்களில் ஒப்பிடத்தக்கதாய் அமைந்துள்ளது. முற்பாண்டியர் குடைவரைகளில் காணப்படும் பிள்ளையார் திருமேனிகள் குறித்த ஒப்பாய்வு பல பயனுடைய தகவல்களைத் தரவல்லது. இங்குள்ள அன்னையர் எழுவர் சிற்பங்களும் தனியிடம் பெறுகின்றன. சாமுண்டியின் முன்னால் காட்டப்பட்டிருக்கும் எருமைத்தலை வேறெந்தக் குடைவரை அன்னையர் சிற்பத் தொகுதிகளிலும் காணப்படாத சிறப்பம்சமாகும்.

ஏற்புக்கோடல்

திருக்கோளக்குடிக் கோயில்களை ஆய்வு செய்ய அழைத்துப் புதியன கண்டுபிடிக்கப்பட்ட போதெல்லாம் வாழ்த்தி, வேண்டும் உதவி யெல்லாம் செய்தளித்த தவத்திரு அடிகளார் பெருமான் அவர்கட்கும், அதேவழியில் தொடர்ந்து அரவணைத்துவரும் தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்கட்கும், திருமடத்து அன்பர்கள் திரு. மரு. பரமகுரு, திரு. கோ. சங்கரநாராயணன் ஆகியோர்க்கும், கோயில் சார்ந்த அனைத்து அலுவலர் பெருமக்கட்கும் இக்கட்டுரையாசிரியர்களின் அளப்பரிய நன்றி என்றும் உரியது. இக்கோயில்களின் களப் பணியில் துணைநின்ற பேரா. கோ. வேணிதேவி, திருமதி. ஜான்சி ஜேக்கப், திருமதி. தி. சுமிதா, திருமதி. வாணி செங்குட்டுவன் ஆகியோர் ஆற்றிய உதவிகள் என்றும் நினைத்துப் போற்றற்குரியன. பயணங்களின் போது உணவளித்து உதவிய திருமதி. சிந்தாமணி, திருமதி. பாப்பா வெங்கடாசலம் ஆகியோர் என்றென்றும் நெஞ்சில் நிறைந்திருப்பர். அழைக்கும்போதெல்லாம் ஓடிவந்து உடனிருந்து உதவிய சிறுமி ராதா களஆய்வுகளின் உயிர்மூச்சென்றால் அது மிகையாகாது.

அடிக்குறிப்புகள்

1. இவ்விதழின் புதிய கல்வெட்டுகள் பகுதியில் இக்கல்வெட்டுகளின் பாடங்கள் இடம்பெற்றுள்ளன. பக். 16–17.
2. ARE 117 of 1916.
3. இக்கல்வெட்டுகள் வரலாறு ஏழாம் இதழில் இடம்பெறும்.
4. தி. இராசமாணிக்கம் தலமரமாகப் பலாவைக் குறிப்பிடுகிறார். தமிழகக் குடைவரைக் கோயில்கள், கழக வெளியீடு, 1984, பக்.16.
5. களஆய்வின்போது கண்டுபிடிக்கப்பட்ட இக்கல்வெட்டின் பாடம்: சகாத்தம் 1584 மேல் சுபகிறி [illegible] ஆவணி 4 உ ரகுனாதத் திருமலை.
6. ARE 85, 90 of 1916.
7. கிரீவ நாசிகைகளில் இது போல் விமானங்களை அமைக்கும் முறை பல்லவப் பழமையதாகும். மாமல்லபுரத்து ஒருகல் தளியான பீம ரதத்திலும் சகாதேவ ரதத்திலும் இவ்வமைப்புமுறையை முதன்முறை

யாகப் பார்க்கமுடிகிறது. இக்கலைமுறை முற்சோழர் காலத்தும் பின்பற்றப்பட்டமைக்குக் கீழையூர் அவனி கந்தர்ப்ப ஈசுவர கிருக வளாகத்துள்ள தென்வாயில் ஸ்ரீகோயில் சான்றாகும்.

8. ARE 82, 83, 92-95 of 1916.
9. ARE 108-110 of 1916.
10. இது போன்ற குடைவரைச் செதுக்கல்களாய் அன்னையர் எழுவரையும் சிவபெருமானையும் குன்னத்தூரிலுள்ள மூன்றாம் குடைவரையில் காணமுடிகின்றது. இவர்களோடு பிள்ளையாரையும் இணைத்த நிலையிலான சிற்பத்தொகுதிகள் திருக்கோகர்ணம், மலையடிப்பட்டி சிவன் கோயில் ஆகிய குடைவரைகளில் பாறைச் செதுக்கல்களாக அமைந்துள்ளன. தமிழகத்திலுள்ள மிகப் பழமையான அன்னையர் எழுவர் வடிவங்களாக இந்நான்கு தொகுதிகளையும் கொள்ளலாம்.
11. இதேபோன்ற அமைப்புமுறையில்தான் குன்னத்தூரிலுள்ள மூன்றாம் குடைவரையிலும் இச்சிற்பங்கள் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.
12. குன்னத்தூர் மூன்றாம் குடைவரையிலுள்ள சிவபெருமானும், நந்தி பின்னிருக்கக் காட்சிதருவது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.
13. திருக்கோளக்குடி, திருக்கோகர்ணம், மலையடிப்பட்டி சிவன் கோயில், குன்னத்தூர் மூன்றாம் குடைவரை ஆகிய நான்கு குடைவரைகளிலும் பார்வைக்குக் கிடைக்கும் சாமுண்டி வடிவங்களுள் திருக்கோளக்குடி சிற்பம் மட்டுமே பாதத்திற்கு முன்னால் எருமைத்தலையைக் கொண்டுள்ளது. ஆகமங்கள் சாமுண்டியை எமனின் துணைவியாகக் குறிக்கின்றன. அதைச் சுட்டுமாறு போல எருமையின் தலை சாமுண்டி யின் முன்னால் காட்டப்பட்டுள்ளதா அல்லது சாமுண்டியே மகிடவதம் செய்தவள் என்பதை இவ்வமைப்பு குறிப்பால் உணர்த்துகிறதா என்பது ஆய்விற்குரியது.
13A. ARE 77 of 1916.
14. வரலாறு 3, ஆகஸ்டு 1994, பக்.35.
15. ARE 68–76 of 1916; வரலாறு 4, பிப்ருவரி 1995, பக்.5.
16. இரா. கலைக்கோவன், 'பெரிச்சியூர் பாலதேவர்', கட்டுரை, தினமணி கதிர், 16.12.90.
17. ARE 47-61 of 1916.
18. வரலாறு 3, பக். 34.
19. வரலாறு 4, பக். 1–5.
20. வரலாறு 3, பக். 35.
21. மேலது., பக். 33.
22. மேலது., பக். 34.
23. ARE 43 of 1916.
24. ARE 35-39 of 1916.
25. தி. இராசமாணிக்கம் முகப்பினை அடுத்து அர்த்த மண்டபமும் கருவறையும் இருப்பதாகக் கூறுகிறார். மு.கு. நூல்., பக்.16.
26. தி. இராசமாணிக்கம் இத்தூண்கள் மேலும் கீழும் சதுரமாகவும் நடுவில் எட்டுப்பட்டை கொண்டனவாகவும் இருப்பதாக கூறுகிறார். மு.கு. நூல்., பக்.17.

5. ஆய்வுத் தொடர்

தமிழகக் கோயிற் கட்டடக்கலை வரலாறு – 3

அர. அகிலா, ஸ்தபதி வே. இராமன், இரா. கலைக்கோவன்

குறுந்தொகைத் தரவுகள்

தொகை நூல்களுள் ஒன்றான குறுந்தொகை சங்ககாலக் கோயிற் கட்டட அமைப்புகளைப் பற்றிய தகவல்களேதும் தரவில்லையென்றாலும் அக்கால மக்களின் இறைநம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், பலியுணவு இடப்பெறும் பாங்கு எனச் சில அரிய தரவுகளை ஆங்காங்கே பொதிந்துவைத்துள்ளது.

மன்றத்து இருந்த செங்கடம்ப மரத்தில் அச்சம் தரும் கடவுள் குடியிருந்ததாகக் குறுந்தொகைக் காலத்தில் கருதப்பட்டது. இக்கடவுள் கொடுஞ்செயல் செய்தாரைத் துன்புறுத்தும் என்று மக்கள் நம்பினர். குன்றக் கடவுளாகக் குறுந்தொகையும் முருகனையே குறிக்கிறது. இவர் தவிர 'சூர்' என்னும் மலைத்தெய்வங்களும் வணங்கப்பட்டன. பெண் தெய்வங்களான இவற்றை 'வரையர மகளிர்', 'சூரர மகளிர்' என்றழைத்தனர்.

முருகனுக்கு அலரி மாலை அணிவிக்கப்பெற்றது. வெற்றியை உடைய நெடுவேள் என்று முருகன் புகழப்பட்டார். இவருக்குப் பல்வகை உணவுப்பொருட்களும் தினை போன்ற தானிய வகைகளும் பலியாகத் தரப்பட்டன. சிறிய ஆட்டுக்குட்டிகளைக் கொன்று உயிர்ப் பலியும் காட்டப்பட்டது. இப்பணிகளைச் செய்த பூசாரிகள் 'வேலன்' எனப்பட்டனர். இவர்கள் முருக வழிபாட்டு முறைகளில் மிகத் தேர்ந்தவராய் இருந்தனர். காதல் வயப்பட்ட மகளிர்தம் உண்மை நிலையறியாத பெற்றோர், தம் மகளிரின் நலிவிற்குக் காரணமறிய இவ்வேலர்தம் உதவியுடன் அரங்கிழைத்து வெறி அயர்ந்தனர். இவ்வயர்வுகள் சில போதுகளில் ஓடும் ஆற்றின் ஆற்றிடைக் குறையாகிய துருத்தியிலும் நடத்தப்பெற்றன. பல இசைக்கருவிகள் முழங்க இவ்வயர்வுகளில் வெறியாடிய பூசாரிகள் முருகனைப் போற்றிப் பரவியதுடன் வேற்றுப் பெருந்தெய்வம் பலவற்றையும் வாழ்த்தினராம். 'வேற்றுப் பெருந்தெய்வம்' என்ற இச்சொல்லாட்சி சிறப்புடையதாகும். இதனால் அற்றைநாள் தமிழகத்தில் மக்கள் தெய்வங்களைப் பெருந்தெய்வம், சிறுதெய்வம் என இருவகைத்தாய்ப் பிரித்து வழிபட்ட பாங்கு தெளிவாவதுடன் பெருந்தெய்வங்கள் பலவாய் இருந்தமையும் புலப்படும். தொடக்கக் காலத்தில் நிலத்

தெய்வங்களே பெருந்தெய்வங்களாக இருந்திருக்கவேண்டும். பின்னாட்களில் இத்தகுதி சிவன், பலராமன், திருமால், முருகன், இந்திரன் ஆகியோர்க்கு வழங்கப்பட்டிருந்ததைப் பரிபாடலும் கலித் தொகையும் நன்குணர்த்துகின்றன.

புதிய விளைச்சலின் முதற் கதிரைத் தெய்வத்திற்குப் பலியாக இடும் பழக்கம் வழக்கில் இருந்தது. இதனால் அக்கடவுள் ‘கடியுண கடவுள்’ எனப்பட்டார். கொல்லிமலையில் இருந்த அச்சமூட்டும் கருங்கண் தெய்வம், அம்மலையின் மேற்குப்பகுதியில் ஓவியப் பாவை யொன்றை எழுதியிருந்தது. இந்தக் கொல்லிப்பாவை பல புலவர் களால் பாடப்பெற்றுள்ளது.

சூலத்தையுடைய பெண்பாற் கடவுளான கொற்றவை அதனாலேயே சூலி என்றழைக்கப்பட்டாள். மலைப்பக்கத்து உறையும் தெய்வமாகக் காட்டப்படும் இத்தேவிக்குப் பலியிடுவதும் இவரை வணங்கிக் கையிற் காப்புநூல் கட்டுவதும் இவர் திருமுன்னில் நிமித்தம் பார்த்தல், நற்சொல் கேட்டல் போன்றனவும் அந்நாள் மகளிரிடையே பெருவழக்காய் இருந்தன. பிறை தொழும் வழக்கமும் மகளிரிடம் இருந்தது.

கலித்தொகைத் தரவுகள்

சிவபெருமான், திருமால், முருகன், காமன், பலராமன், சாமன், நான்முகன, ஞாயிறு, கொற்றவை, வேழத்திரு, இந்திரன், திருமகள் ஆகிய சிறப்புத் தெய்வங்களும் மலைத்தெய்வம், கடல் தெய்வம், மரத் தெய்வம், நிலத்தெய்வம், நீர்த்தெய்வம் எனும் பொதுநிலைத் தெய்வங் களும் கலித்தொகையால் சுட்டப்படுகின்றன. சிறப்புத் தெய்வங்களுள் சிவபெருமான், திருமால், முருகன் ஆகிய மூவரும் பல பாடல்களில் இடம்பெற்றுப் பெருந்தெய்வங்களாகக் காட்சியளிக்கிறார்கள். சிவபெருமானின் திருவுருவ அமைதி, அவரது செயற்பாடுகள் கூறும் பாடல்கள் கலித்தொகையில் பலவாக உள்ளன. மூவெயில் எரித்தது, கங்கையையேற்றது, இயமனை உதைத்தது, இராவணனுக்கு அருளியது, திங்களைச் சூடியது, அம்மையப்பர் கோலம், அருந்தவ முதல்வராய்த் தென்முகக் கடவுளாய் அமைந்தமை எனச் சிவபெருமானின் பல்வேறு திருச்செயல்கள் கலித்தொகையில் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் சில முதன்முதலாகக் கலித்தொகையில்தான் இடம்பெறுகின்றன என்பது குறிப்பிடததக்கது.

சிவபெருமானின் திருவுருவ அமைதிகள் முடிதொட்டு தாள் வரையிலும் வண்ணிக்கப்பட்டுள்ளன. ஈர்ஞ்சடை அந்தணனாய்க் காட்டப்படும் சிவபெருமானின் மிக்கொளிர் தாழ் சடைகளில் கங்கையும் திங்களும் கொன்றையும் இடம்பெற்றுள்ளன.

முக்கண்ணராய் இரண்டு பாடல்களில் பாராட்டப்பெறும் அப்பெருமானின் சிறப்புக்குரிய கருவியாய் எரிதிகழ் கணிச்சி குறிப்பிடப்படுகிறது. கொலைவன், சீர்மிகு சிறப்பினோன், சீறரு முன்பினோன் என்றெல்லாம் போற்றப்படும் சிவபெருமான் உயர் மலையில் உமையுடன் வீற்றிருந்தார். எண்கையராகக் கடவுள் வாழ்த்து போற்றும் இவர் கைக்கருவிகளுள் கணிச்சி, தலை, வில்லான இமயம், நீர்மலி கரகம் என்பன அடங்கும். அறமுரைக்க வரும்போது கையிலுள்ள நீர்மலி கரகத்தை மரக்கிளையில் தொங்கவிடுவது இவர் பழக்கம். இவர் நிறம் இலவம்பூ, அந்தி, பெருஞ்சண்பகம் ஒத்தது. ஊர்தியும் கொடியும் ஏறு. கழுத்தோ நீலகண்டம். தோள்களில் கொன்றைமாலை புரளும். கடவுள் வாழ்த்தின்படி புலித்தோலை அரைக்கசைத்தவர். பண்டரங்கம், காபாலம் போன்ற ஆடல் வகைகளுடன் படுபறை பல இயம்பப் பல்லுருவம் பெயர்த்துக் கொடு கொட்டியும் ஆடியவர், இந்த ஆதிரைநாளர். கலித்தொகை தவிர வேறெந்தச் சங்க இலக்கியமும் சிவபெருமானின் தோற்ற அமைதிகள், திருச்செயல்கள் குறித்த இத்தனை விரிவான தகவல்களைக் கொண்டிருக்கவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

மல்லரை அழித்தமை, கஞ்சன் அனுப்பிய குதிரை அரக்கனைக் கையாலேயே அடித்துக் கொன்றமை, மூவுலகையும் அளந்தமை ஆகிய மூன்று வீரச்செயல்கள் திருமாலின் அருளிச்செயல்களாகக் கலித்தொகையில் இடம்பெற்றுள்ளன. திருமகள் வீற்றிருக்கும் மார்பன் எனும் பொருள்படத் 'திருமறு மார்பன்' என்றழைக்கப்படும் திருமாலின் கைக்கருவிகளாய்ச் சங்கும் சக்கரமும் சுட்டப்படுகின்றன. இவற்றுள் சக்கரப்படையே 'கொல்யானை அணிநுதல் அழுத்திய ஆழி' என்றெல்லாம் பலபட விதந்து பாராட்டப்படுகிறது. இருள் நிறத்தரான இப்பெருமான் பாடலுடன் யாழும் கேட்டு இன்புற்றுக் கடலிடத்தே பாம்பணையில் பள்ளிகொண்டவர். மாலைகள் மணக்கும் மார்பினரான இப்பெருமானைப் போற்றிப் பாண்டியர்க்கு வாழ்த்துக் கூறுவது போல் சில கலிப்பாடல்கள் அமைந்துள்ளன. இவரது திருவடியைத் தலையால் வணங்கி முல்லை நில ஆயர் ஒருவர், தலைவியிடம் சூளுரைப்பது, கலித்தொகைக் காலத்துத் திருமால் படிமங்களுக்கும், அப்படிமங்கள் இருந்த கோயில்களுக்கும் சான்றுகளாகின்றன.

முருகனைப் பற்றிய செய்திகள் கலித்தொகையில் குறைவாகவே உள்ளன. ஆலமர் செல்வரான சிவபெருமானின் திருமகனாக இரண்டு பாடல்களில் சுட்டப்படும் முருகனின் கைவேல் பெரிதும் பாராட்டப் பட்டுள்ளது. 'சூர்கொன்ற செவ்வேல்' என்றும் 'அடங்காப் போர்வேல்' என்றும் பாராட்டப்படும் இவ்வேலால் மாகடல் கலக்கமுற உள்சென்று 'சூர்' மாமரத்தை வெட்டிய முருகனின் செயல் இரண்டு பாடல்களில்

இடம்பெற்றுள்ளது. சிவந்த நிறமுடைய முருகன் தாழ்ந்து விளங்கிய வெண்ணிற ஆடையுடன் திகழ்ந்தார். இவருக்கு மக்கள் விழா எடுத்ததுடன், உலக்கைப் பாடல்களின் நாயகனாகவும் கொண்டிருந்தனர். இவரது இருப்பிடமாகப் பேசப்படும் குன்றொன்றை உரையாசிரியர் திருப்பரங்குன்றமாய்க் காணுகிறார்.

பலராமனைப் பற்றிப் பேசும் கலிப்பாடல்கள் அவரை, நம்பி மூத்தபிரான் என்றழைக்கின்றன. வெண்ணிறத்தவராகவும் ஒரு பூங்குழையை உடையவராகவும் காட்சியளிக்கும் இவரது மார்பைத் துழாய் மாலையும், சிவந்த மாலையும் அணிசெய்கின்றன. கொடிய வலிமையுடைய கலப்பைப் படையைக் கொண்ட இப்பெருமானின் கொடி பனைக்கொடி. திருமாலின் மகனாகக் கொள்ளப்படும் காமன் சுறாமீன் கொடியோராய்க் கையில் படையுடையாராய்க் காட்டப் படுகிறார். காமனுக்குக் கோட்டம் இருந்தது. காதல் வயப்பட்ட பெண்களால் பெரிதும் போற்றி வணங்கப்பட்ட காமனுக்குப் பெண்கள் இங்கே பால்மடை தந்தனர். ஒருவரையொருவர் விரும்பு மாறு செய்யும் கணையைக் கையிலுடையாராய்க் கொண்டாடப்பட்ட காமனின் உடன்பிறப்பாகச் சாமன் கருதப்பட்டார். நீர் நிறைந்த காலத்தில் ஆற்றிடைக்குறையில் காமனுக்கு விழா எடுத்தனர். இளவேனில் காலத்தில் காமன் விழாவில் விருந்து படைக்கப்பட்டது. தலைவரைப் பிரிந்திருக்கும் நிலையில் தங்கட்குக் காமன் கொடுமை செய்வதாகக் கருதிய பெண்கள், காமனின் கொடுமைகளை இயமன் தன் ஓலையில் குறித்துக்கொண்டு தண்டிப்பார் என்று நம்பினர். சில போதுகளில் அதுபோல் தண்டிக்க வேண்டாமென இயமனுக்கு வேண்டுகோளும் வைத்தனர்.

படைத்தல் தொழிலைச் செய்த முதியவராய் நான்முகனும் எல்லாம் உணர்ந்து, பெருங்காட்டிடத்து அமர்ந்தவராய்க் கொற்றவையும் காட்டப்படுகின்றனர். கொற்றவைக்குப் பேய்கள் நொடி சொன்னதாக நம்பப்பட்டது. இவர்கள் தவிர வேழத்திருவாய் கஜலட்சுமியும், வச்சிரப்படையும் ஆயிரம் கண்களும் உடையவராய் இந்திரனும், கொடியவர் கொடுமைகள் குறிக்கும் ஓலையைக் கையில் கொண்டவராய் வலிமைமிகு இயமனும் வலம் வருகின்றனர்.

இச்சிறப்புத் தெய்வங்கள் தவிர மலைத்தெய்வம், மரத்தெய்வம், நிலத்தெய்வம், கடல் தெய்வம் எனப் பல பொதுநிலை சார்ந்த தெய்வங்களும் மக்களால் வணங்கப்பட்டன. அறம் கடவுளாகக் கருதப்பட்டது. பலி பெறும் அணங்குகளும், தெய்வப் பெண்டிரும் மக்கள் வழிபாட்டைப் பெற்றிருந்தனர். தொழிலர்க்கு அவரவர் தொழில் சார்ந்த பொருட்கள் தெய்வமாக விளங்கின. தேரையே தெய்வமாகக் கருதித் தேரைத் தொட்டுச் சூளுரைத்த பாகர்கள் கலித்தொகைக் காலத்தில் வாழ்ந்தனர்.

புத்தேளிர்க் கோட்டங்களும் கடவுட் கடிநகர்களும் ஒவ்வொரு ஊரிலும் பலவாக இருந்தன. தன் மகனைத் தோழியோடு விடுத்த தலைவி ஒருத்தி, அவனை அவ்வூரிலுள்ள அனைத்துத் திருக்கோயில் களையும் வலம்வரச்செய்து அழைத்துவருமாறு பணித்தாள். இதனால் தெய்வத் திருக்கோயில்களை மக்கள் வலம்வருதல் வழக்கமாக இருந்ததையும், சிறுவர்களும் அப்பழக்கத்தைத் தவறாது மேற்கொள்ளு மாறு செய்யப்பட்டதையும் அறியமுடிகிறது.

(வளரும். . .)

மடைநூலும் மனிதநேயமும்

சிற்ப நூல், மனை நூல், புரவி நூல், இசை நூல் எனச் சங்ககாலத்திலிருந்த தொழில்நுட்ப மற்றும் கலைநுட்ப நூல்களின் எண்ணிக்கை வியப்பூட்டுகிறது. இந்த வரிசையில் மடை நூலைச் சேர்க்கிறது சிறுபாணாற்றுப்படை.

நல்லியக்கோடனின் அரண்மனைக்குச் சென்ற பாணர்க்கு உளவியல் நோக்கில் வரவேற்பு கிடைக்கிறது. கந்தலாடை களையப்பட்டுத் தூய ஆடைகள் தரப்படுகின்றன. வந்த களைப்பு நீங்கத் தேறல் தந்து பின்னர் உணவு கொள்ள அழைக்கிறார்கள். அங்கோ கதிரவனும் அவனைச் சுற்றியுள்ள கோள்களும் போல, நடுவில் பொன்தட்டு வைத்துச் சுற்றிலும் வரிசையுற அடுக்கப்பட்ட சிறியதும் பெரியதுமான உண்கலங்கள். அவற்றில், அருச்சுனனின் அண்ணனும் இமயம் போன்ற மார்பை உடையவனுமான வீமன் எழுதிய சமையற்கலை நூல் காட்டும் வழிமுறைகளில் வழுவாது சமைக்கப்பெற்ற பல்வேறு வகையான உணவுகள் பரிமாறப்படுகின்றன. உண்டு பசியாறுகிறார், சுற்றமும் உடன் கூட்டமும் சூழவந்த பாணர்.

சிறுபாண் காட்டும் இந்தக் காட்சிவரிகளில் வீமனின் மடை நூல் மட்டுமா கிடைக்கிறது! தமிழரின் வானியல் அறிவும், உளநலச் சிந்தனையின் மாண்பும், மனிதநேயமும் அல்லவா வெளிப்படுகின்றன.

6. பொதுப்பகுதி

1. பெருமைச் சுவடுகள்

கோலப்பக் கனகசபைப் பிள்ளை

சீ. கீதா, கோ. வேணிதேவி

வரலாறு என்பது மன்னர்கள், அவர்தம் சாதனைகள், போர்கள், ஆட்சிமுறை என்று அரசியல் சார்ந்ததாக இருந்த காலகட்டம் ஒன்றுண்டு. தமிழகத்தைப் பொறுத்தமட்டில் வரலாறு அரசியல் மட்டுமல்ல, அதன் பின்னணியில் நிற்பது மக்களும் அவர்தம் இயல்பு களும்தான் என்பதை வலியுறுத்தி, சமுதாய வரலாறு எழுதுவதற்கு வித்திட்டவர் கே.கே.பிள்ளை என்று வரலாற்றறிஞர்களால் நேயமுடன் அழைக்கப்படும் கோலப்பக் கனகசபைப் பிள்ளையவர்கள்தான்.

தமிழர் சமுதாய வரலாற்றை, வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் கி.பி.600 வரை, இடைப்பட்ட காலம், தற்காலம் என்று வகைப் படுத்தி ஒரு சிறந்த வரலாற்று நூலை உருவாக்கித் தமிழ் மக்களுக்குப் பெருமை தேடித்தந்தவர் கோ.க. பிள்ளை. வரலாற்று நூல்கள் மட்டுமல்லாது, இலக்கியங்களையும், பிற நூல்களையும் பயின்று தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமைபெற்றுத் தெளிவாகவும செம்மை யாகவும் எழுதவல்லவராய் அவர் இருந்தார். வரலாறு எழுதுவதற்குத் துணையாக நிற்கும் பல சான்றுகளையும் கற்றறிந்து, வரலாற்று வரைவியல் முறைகளை ஒழுங்குடன் கையாண்டு எழுதிய ஒரு சில வரலாற்றறிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர் கோ.க. பிள்ளை. தொன்மை வாய்ந்த தமிழர் சமுதாயத்தின் பண்பாட்டு மேன்மையை உணர்த்த வேண்டுமென்ற சமுதாய நோக்குடன், நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் கொண்டு பிள்ளையவர்கள் வரலாற்று நூல்களைப் படைத்தார்கள் என்பதை அன்னாரின் நூல்கள் கொண்டு நன்கு தெளியலாம். அதனாலேயே தமிழகத்தில் தோன்றிய வரலாற்று மேதைகளில் தனியிடம் பெற்றுத் திகழ்கிறார் இப்பெருமகனார்.

இவ்வறிஞர் 1905ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் மூன்றாம் நாள் கன்னியாகுமரி மாவட்டத்தில் அல்லூரில் கோலப்பப்பிள்ளைக்கும், பார்வதி அம்மையாருக்கும் மகனாகத் தோன்றினார். பள்ளிப்படிப்பை

நன்றி: நேஷனல் இரத்தப் பரிசோதனை நிலையம்,
18, பிஷப் சாலை, புத்தூர், திருச்சிராப்பள்ளி – 620 017.

அல்லூரிலும் நாகர்கோயிலிலும் முடித்தபின், உயர்கல்வி பயிலத் திருவிதாங்கூர் சென்றார். 1928இல் வரலாற்றில் முதுகலைப் பட்டம் பெற்றார். பிள்ளையவர்கள் முதலில் பணியாற்றியது தெள்ளச்சேரியிலுள்ள அரசு கலைக்கல்லூரியில். அதன் பிறகு பல அரசு கலைக்கல்லூரிகளில் இவர் பணி தொடர்ந்தது. 1942இல் வரலாற்றுச் சிறப்பு மிக்க பல அறிஞர்களை உருவாக்கிய சென்னை மாநிலக் கல்லூரியில் வரலாற்றுப் பேராசிரியராகப் பொறுப்பேற்றார். 1946இல் 'சுசீந்திரம் கோயில் வரலாறு' என்ற இவருடைய ஆய்வேட்டை ஏற்றுச் சென்னைப் பல்கலைக்கழகம் இவருக்கு முது முனைவர் பட்டம் வழங்கியது. அதன் பிறகு வரலாற்று ஆய்வுகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்ட பிள்ளையவர்கள் 1946இல் இங்கிலாந்து ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் சேர்ந்து சென்னை மாநில ஊராட்சி வரலாறு பற்றிய ஆய்வினை மேற்கொண்டார். இரண்டு வருடங்களில் நிறைவுபெற்ற இவ்வாய்வுக்கு ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் டி.ஃபில். பட்டம் வழங்கிப் பாராட்டியது. இதன் வழி இப்பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்ற ஒரே தமிழர் என்ற தனிச்சிறப்பினைப் பெற்றார் கோ.க. பிள்ளை.

வரலாற்றறிஞர் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி சென்னைப் பல்கலைக் கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பொறுப்பிலிருந்து ஓய்வுபெற்ற பின் கோ.க. பிள்ளை இப்பொறுப்பையேற்றார். ஓர் ஆசிரியரின் தலையாய கடமை மாணவர்களின் திறமையறிந்து அவர்களைத் தக்கவாறு ஊக்குவித்து வழிப்படுத்தலாகும். கோ.க. பிள்ளை இதற்குச் சரியான எடுத்துக்காட்டாக விளங்கினார். சிறந்த பேச்சாற்றல் அவரிடம் காணப்பட்டது. தாய்மொழியிலும் ஆங்கிலத்திலும் மிக நன்றாக உரையாற்றக்கூடிய ஆற்றலுடைய அவருடைய குரல் வகுப்பறைகளில் கம்பீரமாக ஒலிக்கும். பிள்ளையவர்கள் வகுப்பு என்றாலே மாணவர் களுக்குத் தனி உற்சாகம்தான். அவரிடம் பயின்ற அல்லது ஆய்வு மேற்கொண்ட மாணவர்களான கி.ர.அனுமந்தன், எஸ்.கதிர்வேலு, ஆர். இராசய்யன், கு.நம்பி ஆரூரன், பா.சுப்ரமணியன், என்.ஜகதீசன், அப்துல் ரஹீம், சி.வெங்கடேசன் போன்றவர்கள் இன்று வரலாற்றுத் துறையில் சிறந்த பொறுப்புக்களை வகித்து வருவதுடன் பிள்ளை யவர்கள் வளர்த்த வரலாற்று மரபினையும் பின்பற்றிவருகிறார்கள். கோ.க.பிள்ளை 1965இல் பல்கலைக்கழகப் பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும் அது ஒரு சமூகப் பொறுப்பு என்று உணர்ந்திருந் தமையால் அவர்தம் வரலாற்றுப்பணி தொடர்ந்தது.

நன்றி: தீபன் மருத்துவமனை,
56, பிஷப் சாலை, புத்தூர், திருச்சிராப்பள்ளி – 620 017.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் மரபு சார்ந்த பண்பாட்டுக் கழகம் அவரது திறமையைப் பயன்படுத்திக்கொள்ள விழைந்து 1972இல் அவரை இயக்குநராக ஏற்றுக்கொண்டது. கோ.க.பிள்ளை அக்கழகத்தின் ஆய்வுப்பணிகளில் தம்முடைய முழு கவனத்தையும் உழைப்பையும் தந்தார். சென்னைப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியராகப் பணியாற்றியபோதே பல தென்னிந்திய, வட இந்தியப் பல்கலைக்கழகங்களுடன் தொடர்புகொண்டு அப்பல்கலைக் கழகங்களில் நடந்த ஆய்வரங்குகளில் பல சிறந்த ஆய்வுக்கட்டுரை களை வழங்கியுள்ளார். பாடத்திட்டக்குழு உறுப்பினராகவும், அதன் தலைவராகவும் பிள்ளையவர்கள் பணியாற்றிய பல்கலைக்கழகங்கள் எண்ணிலடங்கா. பிள்ளையவர்கள் உரையாற்றிய மாநாடுகள் மாநில அளவிலும், இந்திய அளவிலும், உலக அளவிலும் பலவாகும். 1959ஆம் ஆண்டு புவனேசுவரத்தில் நிகழ்ந்த இருபதாவது அனைத்திந்திய கீழ்த்திசை மாநாட்டில் பங்கேற்றுச் சிறப்புரை வழங்கினார். தென்னிந்திய வரலாறு, அதுவும் குறிப்பாகத் தமிழ்நாட்டு வரலாறு முறையாக எழுதப்படவேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். அதன் விளைவாகத் தமிழ்நாட்டரசு தமிழ்நாட்டு வரலாற்றை முறையாக எழுத ஒரு குழுவினை அமைத்தது. அக்குழுவின் தலைவராகப் பிள்ளையவர்கள் பொறுப்பேற்றுத் தமிழ் நாட்டு வரலாற்றிற்கு ஆற்றிய தொண்டு என்றும் நினைவில் கொள்ள வேண்டியவொன்றாகும். கீழை நாடுகளின் மரபுகளைப் போற்றும் வகையில் ஐக்கிய நாட்டு நிறுவனம் நிறுவிய கல்வி, சமூக, பண்பாட்டு அமைப்பின் (UNESCO) மரபு சார்ந்த பண்பாட்டுக் கழக ஆய்விதழின் பதிப்பாசிரியராக ஏறத்தாழப் பத்தாண்டுகள் அயராது பணியாற்றிக் கீழ்த்திசை நாடுகளின் பண்பாட்டு மரபுகளையும், தமிழர் பண்பாட்டு மரபுகளையும் உலகறியச் செய்த பெருமை பிள்ளையவர்களைச் சாரும்.

கோ.க. பிள்ளையவர்களின் முனைவர் பட்ட ஆய்வு 'சுசீந்திரம் கோயில்' பற்றியது. அவருடைய பிற படைப்புகள், History of Local Self Government in the Madras Presidency 1850-1919, Social History of the Tamils upto A.D. 600, South India and Ceylon, Studies in Indian History with special reference to Tamil Nadu, இங்கிலாந்து வரலாறு, தமிழக வரலாறு – மக்களும் பண்பாடும், தென்னிந்திய வரலாறு – இரு பாகங்கள் என்பனவாம். ஏறக்குறைய ஐம்பதிற்கும் மேற்பட்ட கட்டுரை களை வரலாற்று ஆய்விதழ்களில் வெளியிட்ட பெருமைக்குரியவர் பிள்ளையவர்கள்.

பிள்ளையவர்களின் நூல்களில் மிகச் சிறந்ததாக வரலாற்று அறிஞர்களால் போற்றப்படுவது 'தமிழக வரலாறு – மக்களும் பண்பாடும்' என்னும் நூலாகும். தமிழகச் சமுதாய வரலாற்றைப்

பொறுத்தவரையில் வரலாற்றறிஞர்களுக்கு இந்நூல் ஓர் அகராதி போல் பயனுள்ளதாக அமைந்துள்ளது. இலக்கியத்தை ஒரு முக்கியச் சான்றாகப் பெரும்பாலான வரலாற்றறிஞர்கள் ஏற்றுக்கொள் வதில்லை. இலக்கியம் கற்பனையில் உருவாகிய நம்பத்தகாத வெறும் கட்டுக்கதை என்று அறிஞர்கள் ஒதுக்கிவிடுகிறார்கள். அறிஞர்களின் இத்தகைய போக்கைப் பெரிதும் மாற்றியவர் பிள்ளையவர்கள். அவர்தம் நூல்களில் இலக்கியச் சான்றுகள் உரிய முறையில் பயன் படுத்தப்பட்டிருக்கும். தொல்காப்பியம், தொகைநூல்கள், பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு, பெருங்காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றவற்றில் எத்துணை வரலாற்றுச் செய்திகள் அடங்கியுள்ளன என்பதை அவர்தம் நூல்கள் மிகத் தெளிவாக உணர்த்துகின்றன. இதைத்தவிரக் கல்வெட்டு, அகழ்வாராய்ச்சி போன்ற பிற சான்றுகளும் தக்கவாறு அவர் நூல்களில் கையாளப் பட்டுள்ளன.

அவருடைய புலமையைப் போற்றும் வண்ணம் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த C.H.பிலிப்ஸ் என்னும் அறிஞர் தம்முடைய 'Historians of India, Ceylon and Pakistan' என்னும் படைப்பில் பிள்ளையவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரையொன்றை வெளியிட்டிருக் கிறார். அவருடைய மற்றுமோர் அரிய ஆய்வுக்கட்டுரையான 'Historical Heritage of the Tamils', தமிழக நாகரிகத்திற்கும், சிந்து சமவெளி நாகரிகத்திற்கும் உள்ள மொழி மற்றும் வழிபாட்டு முறைகளில் தெரியும் ஒற்றுமையை மிகத் தெளிவாக விரித்துரைக்கிறது. அவருடைய பிற ஆராய்ச்சிக் கட்டுரைகளான 'The Caste System in Tamil Nadu', 'Date of Manickavachagar', 'History of Nanchil Nadu' போன்றவற்றால் அவருடைய ஆய்வுநுட்பத்தையும் சீரிய புலமையையும் அறியமுடிகிறது.

தமிழர்தம் நெஞ்சில் நிலைக்குமாறு வரலாற்றிற்கு அரும்பெரும் பணியாற்றிய கோ.க.பிள்ளை 1981ஆம் ஆண்டு அமரரானார். வரலாற்றுக் கலங்கரை விளக்கமாய்ச் செயற்பட்ட அப்பெருமகனாரின் வரலாற்று அணுகுமுறை என்றென்றும் அறிஞர்கட்கு வழிகாட்டி ஒளிகூட்டும்.

நன்றி: தகடி பார்மா லிமிடெட்
ஆறாம் குறுக்கு, சுந்தர் நகர், திருச்சிராப்பள்ளி – 620 021.
மேலாண் இயக்குநர்: எஸ்.டி. சுப்பையா
தொலைபேசி: 459169, 23778 (இல்லம்).

2. நூல் மதிப்புரை

நூல் : ஆய்வு வட்டக் கட்டுரைகள் – 1

ஆசிரியர் : வெ. கிருஷ்ணமூர்த்தி (தொகுப்பாசிரியர்)

வெளியீடு: ஆய்வு வட்ட வெளியீடு, வடபழனி, சென்னை – 600 026.

பக்கங்கள்: 323. விலை : ரூ. 60.00

உறுப்பினர் பக்கம், வல்லுநர் பக்கம், புதிய கண்டுபிடிப்புகள் என்று மூன்று பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ள இந்நூலின் முதல் பிரிவில் ஐந்து உறுப்பினர்களின் ஏழு கட்டுரைகள் வெளியிடப் பட்டுள்ளன. வல்லுநர் பகுதியில் ஆறு அறிஞர்களின் கட்டுரைகள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் ஐந்து கட்டுரைகள் மொழியாக்கம் செய்யப்பட்டவை. புதிய கண்டுபிடிப்புகள் தொல்லியல் ஆய்வாளர் எஸ். இராமச்சந்திரனால் களஆய்வின்போது கண்டறியப்பட்டவை.

உறுப்பினர் பக்கக் கட்டுரைகளுள் முதலிரண்டு கட்டுரைகளைத் தொகுப்பாசிரியர் வெ. கிருஷ்ணமூர்த்தி எழுதியுள்ளார். இவற்றுள், தென்கலை வைணவச் சமூகத்தின் உள்ளடக்கம் மிக நீளமான கட்டுரை. இராமானுசரில் தொடங்கி விசிஷ்டாத்வைத விளக்கம், தென்கலை, வடகலையாரின் கொள்கை வேறுபாடுகள் என விரியும் இக்கட்டுரை தெளிவான கருத்துகளை உள்ளடக்கியுள்ளது. வைணவக் கொள்கைகளில் கட்டுரையாசிரியருக்குள்ள பயிற்சி நன்கு புலப்படுகிறது. ஆன்மாவின் இயல்புகள், இயக்கம் என்பன மிக எளிமையாக விளக்கப்பட்டுள்ளன, பாராட்டத்தக்க முயற்சி. ஆனால் இதில் சொல்லப்பட்டிருக்கும் பல தரவுகள் பிறர் கூற்றுகளை அப்படியே சுட்டும் நிலையில் அமைந்துள்ளன. அவற்றில் சிலவற்றையேனும் கட்டுரையாசிரியர் உட்புகுந்து ஆராய்ந்திருக்கலாம். எ.கா. 'மத்திய காலத்தில் அவ்வாலயம் (ரங்கநாதர் கோயில், திருவரங்கம்) பலமிக்க நிலவுரிமையாளர்களான பிராமணர் அல்லாத பக்தர்களின் வசம் இருந்தது. ஆழ்வார் பாசுரங்களைப் பாடுதல், எளிமையான பஞ்சராத்ர (பாஞ்சராத்ர?) வழிபாடு, கோவில் வழி பாட்டில் சூத்திரர்களுக்குப் பங்கு ஆகியவற்றை ரங்கநாதர் ஆலயத்தில் நிறுவியதன் மூலம் நாதமுனி, யமுனர், ராமானுஜர் ஆகியோர் ஸ்ரீவைஷ்ணவ பிராமணர்களுக்குத் தலைமைப் பொறுப்பையும் செல்வாக்கையும் உண்டாக்கினார்கள் என்று கூறப்படுகிறது' (பக்.37).

கட்டுரையாளர் மேற்கோளாகத் தந்திருக்கும் இச்சான்று பர்ட்டன் ஸ்டின் கூறுவது போலப் பட்ரிஷியா ஒய். மம்மி கூறுவதாகக்

கட்டுரையாளரால் கூறப்பட்டுள்ளது. இப்பகுதியின் முதல் கருத்தும் ரங்கநாதர் கோயில் வழிபாட்டில் சூத்திரர்களுக்கு அளிக்கப்பட்ட பங்கு பற்றிய கருத்தும் மிக முக்கியமானவை. ஆனால் இவையிரண்டுமே 'கூறப்படுகிறது' என்று செவிவழக்கு போலச் சொல்லப்பட்டிருப்பது ஏமாற்றம் தருகிறது. உரிய சான்றுகள் தந்திருந்தால் இக்கருத்துகள் படிப்பவர் உள்ளங்களில் ஆழமாகத் தைத்திருக்கும்.

'தென்கலை வைணவம் திருவரங்கம் கோயிலில் வளாந்தது. ரங்கநாதர் ஆலயம் மட்டுமின்றித் தென்தமிழகத்தில் உள்ள பெரும் பாலான கோயில்களிலும் அது வளர்ந்தது. அக்கோயில்கள் மன்னர் களின் அரவணைப்பில் வளரவில்லை. எனவேதான் வருணாசிரம தரும முறையையும் வடமொழி தரும சாஸ்திரங்களையும் அக்கோயில்கள் கட்டிக் காக்க முயலவில்லை எனக் கொள்வதில் தவறேதுமில்லை' (பக். 39), என்று ஓரிடத்தில் கட்டுரையாசிரியர் குறிப்பிடுகிறார். இதைச் சரியான முடிவாகக் கொள்ளக்கூடவில்லை. மன்னர்களின் அரவணைப்பு கொண்ட பல கோயில்கள் வருணாசிரம தரும முறையையும் வடமொழி தரும சாத்திரங்களையும் கட்டிக் காத்ததாகச் சொல்லச் சான்றுகளில்லை. அப்படிப் பெறாதவை கட்டிக் காக்கவில்லை என்றும் கூறமுடியாதபடி, உறையூர்த் தான்தோன்றீசுவரம் போன்ற கோயில்கள் கல்வெட்டுகளால் சான்று பகர்கின்றன. திருவரங்கமே முழுக்க முழுக்க மன்னர்களின் அரவணைப்பில் வளர்ந்த திருக்கோயில்தான் என்பதைத் திருவரங்கம் கல்வெட்டுத் தொகுதியைப் புரட்டினாலே புரிந்துகொள்ளலாம். தரவுகளை முழுமையாகப் பார்க்காமல் கருத்து முடிவுகள் கொள்வது சரியல்ல.

இந்தக் கட்டுரையின் மற்றொரு பக்கத்தில் (பக். 38), 'மத்திய காலம் முழுவதும் காஞ்சியிலுள்ள கோயில்களும் சநாதன பிராமண குழுக்களும் அரசர்களிடமிருந்து கணிசமான உதவிகளையும், அரவணைப்பையும் பெற்றுவந்தனர்' என்ற செய்தி காணப்படுகிறது. இக்கூற்று சரியானதல்ல. காஞ்சிபுரத்திலுள்ள பல பல்லவர் தளிகளில் (இறவாதான் ஈசுவரம், பிறவாதான் ஈசுவரம், திரிபுராந்தக ஈசுவரம், மாதங்கேசுவரம், மகேந்திர ஈசுவரம், முக்தேசுவரம்) கல்வெட்டுகளே இல்லை. வைகுந்தப் பெருமாள் கோயில், கயிலாசநாதர் கோயில் போன்றவை மத்திய காலத்தில் எத்தகு அரச ஆதரவைப் பெற்றிருந்தன என்பதை அறிய இங்குள்ள மிகச் சில கல்வெட்டுகள் துணையா கின்றன. முதற் குலோத்துங்கர் காலத்தில் கயிலாசநாதர் கோயிலின் நிலங்கள் முடக்கப்பட்டமை வரலாறு அறிந்த உண்மை. ஏகாம்பரநாதர், வரதராசப் பெருமாள் கோயில் போன்ற மிகச் சில கோயில்களே மத்திய காலத்திலும் செல்வாக்குடன் திகழ்ந்ததாகக் கல்வெட்டுச் சான்றுகள் கொண்டு குறிப்பிடலாம்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தியின் மற்றொரு கட்டுரையான 'தமிழ் வேதம் ஓர் ஆய்வு', திரு. பானர்ஜியின் கூற்றுகளையே நம்பியமைந் துள்ளது. பவிழியம், ஆவஸ்தம்ப சூத்திரத்தையே குறிக்கும் என்ற முடிவிற்குக் கட்டுரையாளர் தகுதியான சான்றுகளேதும் வைக்க வில்லை. அதுபோலவே, 'வேளாளர்களுக்கு வெள்ளான் வகை நிலங்கள் மன்னர்களால் நிவந்தங்களாக அளிக்கப்பட்டன' என்ற கூற்றுக்கும் கல்வெட்டுச் சான்றுகள் காட்டப்படவில்லை. ஆய்வுத் தரவுகள் பொதுவில் சொல்வதாக அமையக்கூடாது. அவை உரிய சான்றுகளின் அடிப்படையில் நிறுவப்படுதல் வேண்டும். அப்போதுதான் அவை மதிப்புப் பெறும்.

மூன்றாம், நான்காம் ஆய்வுக்கட்டுரைகளை திரு. எஸ். இராமச்சந்திரன் எழுதியுள்ளார். இவற்றுள், 'முத்தூற்றுக் கூற்றம் – களஆய்வு' நல்ல முயற்சி. ஆனால் சிறுவாச்சிதான் முத்தூற்றுக் கூற்றத்தின் தலைநகர் என்று நிறுவ மேலும் சான்றுகள் தேவை. நாகராஜாவும் நாகரம்மனும் கட்டுரை புதிய செய்திகளை உள்ளடக்கியுள்ளது. கட்டுரையாளரின் உழைப்பும் ஆய்வுத்திறனும் பாராட்டிற்குரியன. தெளிவான நடையும், எளிய சொல்லாட்சிகளும் கட்டுரையைச் சுவையுடையதாக்குகின்றன. நாகரம்மன் வழிபாடு பற்றித் தமிழகம் தழுவிய அளவில் ஆய்வுகள் மேற்கொள்வது புதிய தடங்களைத் தோற்றுவிக்கும்.

ஆல்துரையின் 'தொல்காப்பியமும் சொற்றொடர் அமைப்புக் கோட்பாடும்' என்ற கட்டுரையில் முழுமையின்மையும் தெளிவின்மையும் இருப்பதற்குக் காரணம் அதில் காணப்படும் கருத்துகளின் தவளைப் பாய்ச்சல்தான். 'மேலோட்டமாகப் பார்த்தால் கிளவியாக்கத்தில் வரும் 61 நூற்பாக்களில் ஐம்பதற்கும் மேற்பட்டன நேரிடையாகத் தொடரிலக்கணம் சொல்லும் நிலையிருப்பதாகக்' (பக். 69) கூறும் கட்டுரையாசிரியர், அக்கிளவியாக்கத்தை மட்டுமே தலைப்பாகக் கொண்டு சிறந்த காட்டுகளை முன்வைத்துக் கட்டுரையை அமைத்திருந்தால் தொல்காப்பியரின் தொடரியல் சிந்தனைகளை நன்றாக விளங்கிக்கொண்டிருக்கலாமோ என்று தோன்றுகிறது. மேலோட்டமாகப் பார்த்தபோதே 50 நூற்பாக்கள் தேறியிருக்கையில், கட்டுரையாசிரியர் ஆழமாகவே பார்த்து அத்தனை நூற்பாக்களின் கருத்துகளையும் தொகுத்துத் தொடர்புபடுத்தித் தந்திருக்கலாம். இலக்கண உலகிற்குக் கட்டுரையாசிரியரின் பெருங்கொடையாக அது விளங்கியிருக்கும்.

தமிழக இனமரபியலிசை கட்டுரை புதிய முயற்சி. குறிப்பிட்ட ஓர் இனத்தவரிடம் மட்டும் வாழ்ந்துகொண்டிருக்கும் நாட்டுப்புற இசைவகையே இனமரபியலிசை என்கிறார் கட்டுரையாசிரியர். இதை இனமரபியல் இசை என்பதை விட 'இன இசை' என்றே சுருக்கி அழைக்கலாமோ என்று தோன்றுகிறது. 'இனமரபியல் இசை,

இசையை மட்டுமின்றி அதனுடன் இணைந்துள்ள பண்பாட்டையும் ஆய்வு செய்யும் புலம்' என்று கட்டுரையின் முடிவுப்பகுதியில் கூறும் ஆசிரியர், உறுமிமேள இசையுடன் இணைந்துள்ள இனப் பண்பாட்டை வெளிக்காட்டியிருக்கலாம். நிகழ்வுகளும் அவற்றின் காரணங்களும் சுட்டப்பட்டிருப்பது போல், இந்த இசையுடன் தொடர்புடைய இனக்குழுப் பண்பாட்டுக் கூறுகள் அல்லது பாதிப்புகள் அறியப்பட்டிருக்குமாயின் கட்டுரையின் கருதுகோள் நிறைவடைந் திருக்கும். இக்கட்டுரையில் பல இடங்களில் சொற்றொடர்ச் சிதைவுகள் உள்ளன. திரு. ஆல்துரை கவனிப்பாராக.

'பண்டைத் தமிழகத்தில் சட்டமும் நீதியும்' என்ற கட்டுரையின் இரண்டாம் பத்தியில், திரு. செ.மா. கணபதி, 'தமிழ் இலக்கியங்களில் ஆங்காங்கே காணப்படும் சட்டம், நீதி பற்றிய செய்திகளையும் தொகுத்து இக்கட்டுரையில் பகுத்தாய்வு செய்ய எண்ணியிருப்பதாக' முன்னுரைத்துள்ளார். தோற்றமும் வளர்ச்சியும், சட்டமும் நீதியும், உரிமையியல் நீதிமன்றங்கள், குற்றவியல் நீதிமன்றங்கள், மக்கள் நீதிமன்றங்கள், சிறைச்சாலைகளும் கைதிகளும் எனும் தலைப்புகளின் கீழ், தாம் தொகுத்துப் பகுத்தாய்வு செய்த தரவுகளைத் தந்துள்ளார். நோக்கமும் தலைப்புகளும் சிறக்க அமைந்துள்ள இக்கட்டுரையில் இலக்கியத் தரவுகள் மட்டும் ஏனோ மிகமிகக் குறைவாகவே இடம்பெற்றுள்ளன. சில தரவுகள் தக்க சான்று களின்றியும் தரப்பட்டுள்ளன.

சங்ககாலத்து நடுவர் மன்ற அமைப்பு, வழக்கு நடந்த முறை, தீர்ப்பு வழங்கப்பட்டுச் செயலாக்கப்பட்ட நிலை என அனைத்துச் செய்திகளும் அடங்கிய அகநானூற்றுப் பாடல் இக்கட்டுரையில் இடம்பெறாமை கட்டுரையாசிரியர் தரவுத் தேடலை முனைந்து செய்யவில்லையோ என்று கருதவைக்கிறது.

திருக்குறள் சிறந்த நீதி மற்றும் சட்ட நூலாகத் திகழ்வதாகக் கூறும் கட்டுரையாசிரியர், அதன் தரவுகளை உரியவாறு பயன்படுத்திக் கொள்ளாமை ஏனென்று தெரியவில்லை. கல்வெட்டுகளுக்கும் செப்பேடுகளுக்கும் தரப்பட்டிருக்கும் முக்கியத்துவம் இலக்கியத் தரவுகளுக்கும் தரப்பட்டிருந்தால் கட்டுரை சிறப்படைந்திருக்கும்.

அகநானூற்றுப் பாடலும், குறள்வழித் தரவுகளும், சங்ககால ஊரகத்து நடுவர் அமைப்புகளைச் சரியாக இனங்காட்ட ஆசிரியருக்கு உதவியிருக்கமுடியும். அவை விடுபட்டதால்தான், பண்டை நாளில் அரசனது தலைமைக் குரு மற்றும் கிராமப் பெரியவர்கள் நீதிபதிகளாக விளங்கியதாகக் கட்டுரையாசிரியர் குறிப்பிட்டிருக்கிறார். அரசனது 'தலைமைக் குரு' நீதிபதியாக விளங்கியமைக்கு எந்தச் சான்றும் கட்டுரையாசிரியரால் தரப்படவில்லை. சங்ககாலத்தில் எத்தனை அரசர்கள் தலைமைக் குருமார்களைக் கொண்டிருந்தார்கள், அவர்களுள் எத்தனை குருமார்கள் நீதிபதிகளாக இருந்தார்கள்

என்பதற்கெல்லாம் கட்டுரையாசிரியர் இலக்கியச் சான்றுகள் தந்திருந்தால் பயனுடைத்தாய் இருந்திருக்கும். சான்றுகளில்லாத தரவுகள் ஆய்வுமுடிவுகளாக ஏற்கப்படுவதில்லை.

சிலப்பதிகாரத்தின் வழக்குரை காதை கட்டுரையாசிரியரால் சுட்டப்படாமை பெருங்குறையே. பாண்டி நாட்டு அரசமன்றத்தில் சோழ நாட்டுப் பெண் ஒருவர் துணிவோடு வழக்குரைத்த நிலையும் அங்கேயே, அப்போதே, சான்று காட்டப்பட்டு வழக்கு முடிந்து, தீர்ப்பெழுதப்பட்ட முறையும் எத்தனை சிறப்பானவை!

பண்டைத் தமிழக நியாய மன்றங்கள் வழங்கிய தீர்ப்பை அவையத்தார் ஓலை என்று கலித்தொகை குறிப்பிடுவதாகக் கட்டுரையாசிரியர் குறிப்பிடுகிறார் (பக். 139).

'துகடபு காட்சி அவையத்தார் ஓலை
முகடுகாப் பியாத்துவிட் டாங்கு'

எனும் மருதக்கலியின் இறுதி வரிகளுக்கு 'துகள் அறுகின்ற அறிவினையுடைய அவையிலுள்ளார், திரட்சி பொருந்தின ஓலையின் தலையைக் கட்டி, அதன் தலையிலே அரக்கிலச்சினை இட்டுவிட்டாற் போல' என்று உரையாசிரியர்கள் பொருள் கூறியுள்ளனர். ஓலையைக் கட்டி அவையத்தார் அதற்கு அரக்கிட்ட தகவலே இவ்வரிகளில் உள்ளன. இதை எப்படி திரு. கணபதி, பண்டைத் தமிழக நியாய மன்றங்களின் தீர்ப்பே அவையத்தார் ஓலை எனக் கலித்தொகை கூறுவதாகக் கொள்கிறார் என்பதுதான் விளங்கவில்லை.

ஐம்பெருங்குழு, நாற்பெருங்குழு, எண்பேராயம் தொடர்பான ஆசிரியரின் கருத்துகள் ஆய்வுக்குரியவை. கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் ஆசிரியருக்குள்ள பயிற்சி, அவற்றிலிருக்கும் தரவுகளை அவர் எடுத்தாண்டிருக்கும் முறையிலிருந்து தெளிவாகிறது. இருந்தாலும் நீதி வழங்கல் குறித்த பல்வேறு கல்வெட்டுச் சான்றுகளை ஒப்பாய்வு செய்து, நீதி வழங்கலிலும் தண்டனைகளிலும் இருந்த நிறை குறைகளை ஓரிரு பத்திகளிலேனும் சுட்டியிருந்தால் நிறைவாக இருந்திருக்கும்.

'கணைக்கால் இரும்பொறை, சோழன் செங்கணானால் தோற்கடிக்கப்பட்டுக் குடவாயிற் கோட்டத்துச் சிறையில் சிறைவைக்கப் பட்டான். சிறையில் தாகத்தின் போது தண்ணீர் வழங்காததால் உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்தான்' என்பது போன்ற கதைகள் ஆய்வுக்கட்டுரைகளில் இடம்பெறலாகாது. வேளத்தைச் சிறைச்சாலை என்பதை விட அடிமைப் பெண்களின் வாழிடம் என்றழைப்பது பொருத்தமெனத் தோன்றுகிறது.

வல்லுநர் பக்கத்தில் மூன்று கட்டுரைகள் குறிப்பிடத்தக்கவை. திரு. கமில் வி. சுவலபில்லின் 'சிந்துவெளி – அண்மைக்கால முயற்சிகள்' சிறந்த திறனாய்வுக் கட்டுரை. இதை மொழிபெயர்த்துள்ள

திரு.எஸ்.ஆர்.சந்திரன் பாராட்டுக்குரியவர் (தலைப்பெழுத்துக்களையும் தமிழில் கொடுத்திருக்கலாமே). சுவை குன்றாமல், தொடரொழுங்கு சிதையாமல், பொருள் மாறாமல் மொழிபெயர்த்திருப்பது அவரது இருமொழி வல்லமையை உணர்த்துகிறது. இக்கட்டுரை சிந்துவெளி எழுத்துகள் பற்றிய அனைவர் கட்டுரைகளையும் திரட்டிப் படித்தறிய முடியாத எழுத்தியல் ஆய்வாளர்களுக்குப் பெரும் புதையலாய் உதவும்.

திரு. கோசாம்பியின் 'அமரகோசமும் உழைக்கும் வர்க்கமும்' என்ற கட்டுரையும், திரு. மைக்கேல் லார்கேயின் 'இனமரபு இசையியலும் இசைச்சேகரிப்பு உத்திகளும்' என்ற கட்டுரையும் நன்கு மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. திரு. மைக்கேல் லார்கேயின் கட்டுரை அரிராமனின் கட்டுரையைப் புரிந்துகொள்ளப் பேரளவிற்கு உதவுவது குறிப்பிடத்தக்கது. லார்கேயின் கட்டுரையிலுள்ள தெளிவும், செறிவும் அரிராமன் கட்டுரையில் இல்லாமையும் குறிப்பிடத்தக்கது.

தஞ்சைக் கோயில் பொற்குவை பற்றிய விசாரணைக் கட்டுரை ராஜராஜீசுவரத்திற்குத் தங்கம் வந்துசேர்ந்த வழிகளை ஆராய்கிறது. இதில் கட்டுரையாசிரியர் இரண்டாம் குலோத்துங்கச் சோழரைச் 'சுங்கம் தவிர்த்த பிரான்' என்று குறிப்பிடுகிறார். சுங்கம் தவிர்த்தவர் முதற் குலோத்துங்கரே. இதைத் திரு. சதாசிவபண்டாரத்தார் பிற்காலச் சோழர் சரித்திரம் என்னும் நூலில் மிக விரிவாக, உரிய எடுத்துக் காட்டுகளுடன் விளக்கியுள்ளார் (பக். 309–311). வந்தவாசிப் பகுதியிலுள்ள மருதாடு என்னும் ஊரிலிருக்கும் புரந்தரேசுவரர் கோயிலில் காணப்படும் முதற் குலோத்துங்கரின் முப்பத்திரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு மன்னரைச் சுங்கம் தவிர்த்த சோழராகக் குறிப்பது இங்கு நினைக்கத்தக்கது. இரண்டாம் குலோத்துங்கரின் மொத்த ஆட்சியாண்டுகளே பதினேழுதான் என்பதும் இங்குக் கருதத் தக்கது. தஞ்சைக் கோயில் பொற்குவையின் கட்டுரையாசிரியர் தம் கூற்றுக்குச் சான்றாக இரண்டாம் குலோத்துங்கரின் மெய்க்கீர்த்தியைச் சுட்டியுள்ளார் (பக். 304). ஆனால் இரண்டாம் குலோத்துங்கரின் மெய்க்கீர்த்திகளில் அவர் சுங்கம் தவிர்த்த தகவல் ஏதும் இடம்பெற வில்லை (பூ.சுப்பிரமணியம், மெய்க்கீர்த்திகள், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், 1983) என்பது குறிப்பிடத்தக்கது.

மூன்றாவது பகுதியான புதிய கண்டுபிடிப்புகள் அனைத்தும் கொற்கைக் காப்பாட்சியர் எஸ். இராமச்சந்திரனால் களஆய்வின் போது கண்டறியப்பட்டவையாகும். புவனேகவீரன் காசு, தீர்த்தங்கரர் சிற்பங்கள், கல்வெட்டுகள் என வளரும் இப்பட்டியல் இராமச்சந்திரனின் முயற்சிகளைக் காட்டுகிறது. உழைபபாளிகள் எங்கிருந்தாலும் ஊதியம்தான். இராமச்சந்திரனின் உழைப்பு வரலாற்றுக்கு ஊதியமாகியுள்ளது. இப்பகுதி அளவில் பெருகுவது ஆய்வாளர்க்குப் பயன்தருவதாகும்.

– சு. அரங்கசாமி, இரா. கலைக்கோவன்.

3. யாவரும் கேளிர்

1. த. மலர்க்கொடி: ச. தங்கவேல், த. நாகரெத்தினம் மகளார். தமிழில் முதுகலை, முதுநிறைஞர், முனைவர். முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை, தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக்கல்லூரி, தஞ்சாவூர் – 613 002. ***இல்லம்:*** 11, அரயபுரம், பாபநாசம் அஞ்சல் – 614 205, தஞ்சாவூர் மாவட்டம். ***படைப்பு:*** கரந்தைக் கவியரசு அரங்க வேங்கடாசலம்பிள்ளையின் தமிழ்ப் பணிகள். ***ஆர்வம்:*** கட்டுரை, கவிதை எழுதுதல், வானொலிப் பொழிவுகள், பெண்ணிய கருத்துகளைப் பெண்களிடம் எடுத்தோதி விழிப்புணர்வூட்டல்.

2. அ. ஜம்புநாதன்: 4.10.1953 சு. அருணாசலம், அ. தங்கம் அம்மாள் மகனார். இளங்கலைப் பொருளாதாரம். ***பணியிடம்:*** இந்தியன் ஓவர்ஸீஸ் வங்கி, திருவானைக்காவல், திருச்சிராப்பள்ளி – 620 005. ***இல்லம்:*** 123, கீழக்கொண்டையம்பேட்டை, திருவானைக் காவல், திருச்சிராப்பள்ளி – 620 005. ***ஆர்வம்:*** புத்தகம் படித்தல், கோயில் வழிபாடு, கட்டுரை, கவிதை எழுதுதல்.

3. கி. இராதாபாய்: 30.5.1960. வி. கிருஷ்ணமூர்த்தி, ஜி.முத்துலட்சுமி மகளார். வரலாற்றில் முதுகலை, முனைவர். விரிவுரையாளர், அரசு மகளிர் கலைக்கல்லூரி, புதுக்கோட்டை. ***இல்லம்:*** உசிலம்பட்டி, மதுரை மாவட்டம். ***சாதனைகள்:*** பள்ளியிறுதித் தேர்வில் பள்ளியின் முதல் மாணவியாகத் தேர்வு, இளங்கலை வரலாற்றுத் தேர்வில் கல்லூரியின் முதல் மாணவியாகத் தேர்வு, முதுகலை வரலாற்றுத் தேர்வில் பல்கலைக்கழகத்தின் இரண்டாவது மாணவியாகத் தேர்வு, 1986இல் இந்தியாவின் பார்வைக்குறைவுடைய பெண்களுள் மிகச்சிறந்த பெண் விருது, 1988இல் மலைக்கோட்டை ஜேசீஸ் சங்கத்தின் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் மிகச் சிறந்த இளைஞி விருது, 1988இல் சென்னை மேற்கு சுழற்சங்கத்தின் மிகச்சிறந்த இளைஞி விருது, 1993இல் திருச்சிராப்பள்ளி பன்னாட்டுப் பண்பாட்டுக் குழுமத்தின் சிறந்த பெண் விருது. ***படைப்புகள்:*** குமுதம், ஆனந்த விகடன், இந்தியன் எக்ஸ்பிரஸ், வானொலி, தொலைக்காட்சியில் கவிதைகள். ***ஆர்வம்:*** பெண்ணியம், வரலாறு.

4. வெ. அகிலா: 24.10.1977. சி. வெங்கடாசலம், வெ. பாப்பா மகளார். இரண்டாமாண்டு கணிப்பொறியியல், ஜெயராம் பொறியியல் கல்லூரி, கரட்டாம்பட்டி, துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம். ***இல்லம்:*** 22, கொல்லமேட்டுச் சந்து, சின்னக் கடைத்தெரு, திருச்சிராப்பள்ளி – 620 002. ***சாதனைகள்:*** கட்டுரைப்போட்டி,

தேவாரம் திருவாசகம் பாட்டுப் போட்டி, நல்லொழுக்கப் பாடம் – முதல் பரிசு, பத்தாம் வகுப்பில் கணிதம் நூற்றுக்கு நூறு. தமிழில் முதல் மதிப்பெண். ***ஆர்வம்:*** செஸ் விளையாட்டு, வரலாறு.

5. மரு. கோ. பாலகோபால்: 9.11.1942. மரு. கோ. கோ. மேனன், வெ. தேவகி அம்மாள் மகனார். எம்.பி.பி.எஸ்., எம்.டி. ***ஆய்வேடு:*** Pancreatic Function Studies in Tropical Sprue. பொது மருத்துவம், ஜே.எம். மருத்துவமனை, 5, அல்லித்துறைச் சாலை, புத்தூர், திருச்சிராப்பள்ளி – 620 017. தொ. 25369. ***இல்லம்:*** 3, மாவட்ட ஆட்சியர் அலுவலகச் சாலை, திருச்சிராப்பள்ளி – 620 001. தொ. 461713. ***பொறுப்புகள்:*** இந்திய மருத்துவ மன்றத் திருச்சிராப்பள்ளிக் கிளையின் தலைவர் 1995–96, செய்தியிதழ் ஆசிரியர் 1995–96. ***பங்கேற்பு:*** இந்தியப் பொது மருத்துவர்கள் மாநாடுகள் – கல்கத்தா (1988), காத்மாண்டு (1996). ***ஆர்வம்:*** எழுதுவது, நாடகங்களில் நடிப்பது, புத்தகத் திறனாய்வுகள். ***சாதனை:*** தொடர்ந்து பல ஆண்டுகளாக ஒவ்வொரு புதன்கிழமையும் புத்தகத் திறனாய்வுக் கூட்டம் நடத்திவருவது.

6. உஷா கிருஷ்ணன்: 20.10.50. ராஜம், சிவராமன் மகளார். ***கணவர்:*** கிருஷ்ணன். தமிழில் முதுகலை, முதுநிறைஞர். ***ஆய்வேடு:*** திருக்கோவையார் – பேராசிரியர் உரைத்திறன். முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை, சீதாலட்சுமி ராமசாமி தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620 002. ***இல்லம்:*** 125, பெரியார் நகர், திருவானைக்காவல், திருச்சிராப்பள்ளி – 620 005. தொ: 432617 ***பங்கேற்பு:*** கல்லூரிக் கருத்தரங்குகள். ***ஆர்வம்:*** இலக்கியம், வரலாறு, இசை, நடனம். ***சாதனை:*** தமிழ் இளங்கலைத் தேர்வில் பல்கலைக்கழக அளவில் முதனிலைத் தேர்வு.

7. மரு. செ. ஞானதிலகன்: 20.9.1945. ஞான செபாஸ்தியன், குழந்தை தெரசா மகனார். எம்.பி.பி.எஸ்., டி.எல்.ஓ., எம்.எஸ். (கா.மூ.தொ.), எப்.ஐ.சி.எஸ். காது, மூக்கு, தொண்டை சிறப்பு மருத்துவர், திலக் மருத்துவமனை, 103, A/2, தேவர் குடியிருப்பு, முதல் குறுக்குத் தெரு, தில்லைநகர், திருச்சிராப்பள்ளி – 620 018. தொ. 762277, 762288. ***இல்லம்:*** 103, A/2. தேவர் குடியிருப்பு, முதல் குறுக்குத் தெரு, தில்லைநகர், திருச்சிராப்பள்ளி – 620 018. ***பொறுப்புகள்:*** செயலாளர், இந்திய மருத்துவ மன்றத் திருச்சிராப்பள்ளி கிளை. ***பங்கேற்பு:*** உலக அறுவை மருத்துவ வல்லுநர்களின் மாநாடு – எகிப்து 1992, ஜப்பான் 1996. வளர்ந்து வரும் நாடுகளிடையே உள்ள காது கேளாதவர்கள் பற்றிய கருத்தரங்கு – மான்செஸ்டர் 1995. ஆசியக் காது, மூக்கு, தொண்டை சிறப்பு

மருத்துவர்கள் மாநாடு – சிங்கப்பூர் 1989. ***சாதனை:*** பன்னாட்டு அரிமா சங்கத்தின் மாவட்டத் தலைவர் நிலையில் காது கேளாதவர் நலன் குறித்த செய்முறைகளுக்காக அமெரிக்கப் பரிசும் பாராட்டும் – நான்கு முறை.

8. பா. சுந்தர்: 24.4.1959. தி.ஆ பாலகிருஷ்ணன், சண்பகவல்லி மகனார். தமிழில் முதுகலை, முதுநிறைஞர். ***ஆய்வேடு:*** குன்றக்குடி அடிகளார் நூல்கள் ஒரு மதிப்பீடு. முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை, உருமு தனலட்சுமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620 019. ***இல்லம்:*** 22, கொல்லமேட்டுச் சந்து, சின்னக் கடைத்தெரு, திருச்சிராப்பள்ளி – 620 002. ***வெளியீடு:*** அருள்நெறித் தந்தை அடிகளார் – நூல். ***பங்கேற்பு:*** சைவ சமயக் கருத்தரங்குகள், இலக்கியப் பொழிவுகள். ***ஆர்வம்:*** சமயம், வரலாறு, இலக்கியம், சமுதாயப்பணி. ***சாதனை:*** தமிழ் இளங்கலைத் தேர்வில் பல்கலைக்கழக அளவில் மூன்றாம் நிலைத் தேர்வு. இந்தியக் குடியரசுத் தலைவரின் ஊக்கத்தொகை பெற்றமை.

9. மரு. க. கோபாலகிருஷ்ணன்: 1.2.1951. கணேசன், மீனாட்சி மகனார். எம்.பி.பி.எஸ்., எம்.டி. (மனநோய் மருத்துவம்). மருத்துவ இயக்குநர் – மனநோய் மருத்துவமனை, தலைவர் – மனநல மறுவாழ்வு மையம், சௌமனஸ்யா மருத்துவமனை, 19, வி.என். நகர், சிந்தாமணி, திருச்சிராப்பள்ளி – 620 002. தொ. 34304. ***இல்லம்:*** தொ. 468944. ***பொறுப்புகள்:*** தலைவர், இந்திய மனநோய் மருத்துவக் கழகம், தமிழ்நாடு பிரிவு (1987–88). துணைத் தலைவர், இந்திய மருத்துவக் கழகம், தமிழ்நாடு பிரிவு (1986). செயலாளர், இந்திய மருத்துவக் கழகம், திருச்சிராப்பள்ளிக் கிளை (1983–86). தலைவர், உலக மன, சமூக மறுவாழ்வியல் அமைப்பு. இந்தியப் பிரிவு. பொருளாளர், இந்திய மனநோய் சமூகவியல் அமைப்பு, இந்தியத் தற்கொலைக்கான ஆராய்ச்சி அமைப்பு. உறுப்பினர், ஆசிரியர் குழு, இந்திய உளவியல் மருத்துவ இதழ். வாழ்நாள் ஒப்பாளர், இந்திய மனநோய் மருத்துவக் கழகம், இந்திய மனநோய் சமூகவியல் அமைப்பு. ஏற்புடை ஒப்பாளர், அமெரிக்க மனநோய் மருத்துவக் கழகம் (95ஆம் ஆண்டு இந்திய நாட்டில் ஒருவருக்கு மட்டுமே இச்சிறப்பு வழங்கப்பட்டது). ***பங்கேற்பு:*** எட்டாம் உலக மனநோய் மருத்துவ மாநாடு, ஏதென்ஸ் 1989. பதின்மூன்றாம் உலகச் சமூக மனநோயியல் மாநாடு, புதுதில்லி 1992. 150ஆவது அமெரிக்க மனநோய் மருத்துவ மாநாடு, பிலடெல்பியா 1994. 14ஆவது உலகச் சமூக மனநோயியல் மாநாடு, ஹாம்பர்க் 1994. 18ஆவது உலகத் தற்கொலைத் தடுப்பு அமைப்பு மாநாடு, வெனிஸ் 1995. 152ஆவது அமெரிக்க மனநோய் மருத்துவர் மாநாடு, நியூயார்க் 1996. இந்திய மனநோய் மருத்துவக்

கழகத்தினரால் நடத்தப்படும் கருத்தரங்குகள், மாநாடுகள், இந்தியச் சமூக மனநோய் மருத்துவக் கழகத்தினரால் நடத்தப்படும் கருத்தரங்குகள். ***ஆய்வுக்கட்டுரைகள்:*** தற்கொலைத் தடுப்புமுறை, மனநோயாளிகளுக்கிடையே தற்கொலை, மன இறுக்கத்தைக் கட்டுப் படுத்துதல், பள்ளி செல்லும் சிறுவர்களுக்கு ஏற்படும் உணர்ச்சி மாற்றங்களும் தொல்லைகளும், மனநோய்களிடமிருந்து பாதுகாப்பு, தென்னிந்தியக் கோயில்களில் இந்துமத முறைப்படி மனநோயாளி களுக்கு மருத்துவம், இந்தியச் சமூகத்தினருக்கு மனநலக் கல்வி போன்ற பல ஆய்வுக் கட்டுரைகள். இவை தவிர மனநலம் குறித்த பல ஆய்வுகள். ***சாதனைகள்:*** சௌமனஸ்யா மருத்துவமனை முதுநிலைச் சான்றிதழ் தேர்விற்காகத் (Dip.N.B.) தேசிய மருத்துவத் தேர்வாணை யத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தால் சமூகசேவை, மனநோய் மருத்துவம் ஆகியவற்றில் முனைவர் பட்டத் தேர்விற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ***ஆர்வம்:*** வயலின், கீபோர்டு, நாணயம் சேகரித்தல், பன்மொழிக்கல்வி.

கொடுவெறி இன்பம்

உளத்திரிபு நிலைகளுள் ஒன்று கொடுவெறி இன்பம் (Sadism). இத்திரிபுள்ளார் காரணம் ஏதுமின்றிக் கொடுமை செய்வதில் விருப்பம் உள்ளவர்களாகவும் அக்கொடுமைகட்கு ஆளாவார்தம் துன்பங்கள் கண்டு அளவற்று மகிழ்பவர்களாகவும் இருப்பர். இவர்தம் கொடுமைகட்கு அனைத்து உயிர்களும் ஆளாவதுண்டு. உலகம் முழுவதும் இன்றளவும் காணப்படும் இக்கொடுவெறி இன்பம் அன்பு தழைத்த சங்ககாலத்திலும் இருந்தது.

அடர்ந்து வளர்ந்த தலைமுடியை உடைய பாலை நில மறவர்கள், வலிய உடலும் புலிப்பார்வையும் வீரச்செருக்கும் கொண்டவர்கள். தம் நிலப்பகுதியில் பயணப்படும் புதியவரை வழிமறித்து, அவர்தம் கைப்பொருளைக் கொள்ளையிட்டு, அதுகொண்டு வாழ்க்கை நடத்தும் இவர்கள், கொள்ளையின்போது பயணிகளைக் கொன்றழிப்பதும் உண்டு. கொள்ளைக்காகக் கொலை, குற்றமென்றாலும் காரணமுடையது. ஆனால் உயிரிழப்பவரின் வேதனைத் துடிப்புகளைக் கண்டு மகிழ்வதற்காகவே, பொருளேதுமின்றிப் பாலைவழியில் பயணம் மேற்கொண்ட புதியவர்களைக்கூடக் காரணமற்ற நிலையில் அம்பெறிந்து கொல்வது இவர்தம் வழக்கமாக இருந்திருக்கிறது.

சங்க வாழ்வின் மறுபக்கமாய்க் கலிப்பாவில் கண்சிமிட்டும் ஆறலைக் கள்வர்களின் இக்கொடுவெறி இன்பம் படிப்பவர் நெஞ்சை நெருடுகிறது.

பாலைக்கலி – 4

4. அன்புள்ள உங்களுக்கு

தளிச்சேரிக் கல்வெட்டுக் கட்டுரை மிகவும் அற்புதமாக அமைந்திருக்கிறது. 55. 78 மீட்டர் நீளத்தில் இருப்பதால் உலகிலேயே மிக நீண்ட கல்வெட்டாகச் சாதனை படைத்திருக்கிறது என்று கூடச் சொல்லலாம். தளி, சேரி ஆகிய இரு சொற்களுக்கும் இலக்கியச் சான்றுகளை மிக விரிவாகவும், விளக்கமாகவும் கூறியிருப்பது போற்றுதற்குரியது. குடியிருப்பின் பிரிவுகளை உணர்த்த வடசிறகு, தென்சிறகு என்று ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் முன்னோர்கள் குறிப்பிட்டிருப்பதை எண்ணி வியந்துபோனேன். தளிச்சேரிகளில் குடியமர்த்தப்பட்ட நானூறு பெண்களின் பெயர்களும் புதுமை யாகவும், வியப்பிற்குரியவனவாகவும் இருக்கின்றன. நிவந்தக்காரர்கள் என்ற கோயிற் பணியாளர்கள் பற்றியும் அவர்கள் பெறும் ஊதியம் பற்றியும் நிறைய செய்திகள் அறியமுடிகிறது.

இராஜராஜீசுவரம் கோயிலின் பணிகள் எள்ளளவும் குறைபாடின்றி நடைபெறவேண்டுமென்று கருதி, ஒரு கோயிலில் என்னென்ன வகையான பணிகள் இருக்குமென்று ஆய்ந்து, முப்பத்தாறு வகையான தொழிற்பிரிவுகளை ஏற்படுத்தி, அவற்றில் இருநூற்றுப்பதினேழு கலைஞர்களையும் தொழிலாளர்களையும் அமர்த்தி, அவர்களுக்கு ஊதியம் முதலான தேவைகளையும் தடையின்றி அளிக்க ஏற்பாடுகள் செய்து, இவற்றையெல்லாம் விரிவாகக் கல்வெட்டில் பதித்த முதலாம் இராசராசரின் பெருமைகளையும் புகழையும் போற்றுவதற்குச் சொற்களில்லை.

மரு. சு. பழனியாண்டி
2, பட்டாபிராமன் பிள்ளை தெரு,
தென்னூர், திருச்சிராப்பள்ளி – 620 017.

வரலாறு பிப்ருவரி 95 இதழ் படித்தேன். செவல்பட்டிக் குடைவரை, மலையடிப்பட்டிக் குடைவரைகளும் கல்வெட்டுகளும் மற்றும் தமிழகக் கோயிற் கட்டடக்கலை வரலாறு போன்ற ஆய்வுத் தொகுதிகள் எம் போன்ற மாணவர்களுக்கும், ஆய்வு மாணவர் களுக்கும் பெரிதும் பயன்படத்தக்கதாகும்.

மாமல்லைக் கடற்கரையில் கண்டெடுத்த கலைச்செல்வம் எனும் கட்டுரையில் அகழாய்வில் கிடைத்த சிறிய கோயில் மற்றும் மகாவராகச் சிற்பம் பற்றிய பல செய்திகளை வரலாற்றுச் சான்றுகளோடு சிறப்பாகத் தொகுத்துத் தந்துள்ளார் கட்டுரையாசிரியர். வராகத்தின் வயிற்றுப்பகுதியில் கொடி, அலை மற்றும் தாமரை போன்ற வடிவங்கள் செதுக்கியுள்ளதாக ஆசிரியர் குறிப்பிடுவது சரியல்ல. இவைகள் வயிற்றுப்பகுதிக்கு அடியில் (வடதிசை) முன், பின் கால்களுக்கு இடைப்பட்ட பகுதியில் செதுக்கப்பட்டுள்ளன என்பதே

சரியாகும். இதுபோன்ற வடிவமைப்பை (மேற்கு திசை) பிருஷ்டப் பகுதிக்குக் கீழேயும் பார்க்கமுடிகிறது.

படுக்கைப் பாறையில் செதுக்கப்பட்டுள்ள அதிட்டானத்தின் உபஉபானம் எண்பட்டமாகவும் உபானம் பதினாறுபட்டமாகவும் இருப்பதைப் பார்க்கமுடிகின்றது. அதிட்டானத்தில் இடம்பெறும் குமுதத்தை முப்பட்டை வடிவமென்று குறிப்பிடுவதும் சரியல்ல. மகாபத்மம், குமுதம், பிரதிவரி கொண்ட அதிட்டானத்தைப் பாதபந்தம் என வகைப்படுத்தியிருப்பதும் ஏற்புடையதல்ல. இதனைப் பிரதிபந்தம் எனக் குறிப்பிடுவதே மரபாகும். கருவறையின் உட்பகுதியில் வடக்கிலும் தெற்கிலும் சாமரம் வீசும் சிற்பங்கள் இடம்பெற்றிருப்பதை ஏனோ ஆசிரியர் குறிப்பிடவில்லை. அதிட்டானத்தின் பூமிதேசப்பகுதி மேல்மட்ட மையப்பகுதியில் குழி ஒன்று காணப்படுவதும், பாதச்சுவரில் இடம்பெறும் போதிகையுடன் கூடிய உத்திரவரி இடம்பெறாததும் ஆய்வுக்குரியன எனக் கொள்ளலாம்.

இரா. முத்துராஜசேகரன்
சிற்பம் மற்றும் கட்டடக்கலைக் கல்லூரி
மாமல்லபுரம்.

வரலாறு நான்காம் இதழில் மலையடிப்பட்டிக் குடைவரைகளும் கல்வெட்டுகளும் எனும் ஆய்வுக்கட்டுரையை ஆர்வமுடன் படித்தேன். குடைவரைக் கோயிலின் தோற்றம் மற்றும் தொன்மைச் செய்திகள் நன்கு ஆராய்ந்து தரப்பட்டுள்ளன. கட்டடக்கலை, சிற்பக்கலைச் சிறப்புகள் மிக நுட்பமாக ஆய்வுசெய்யப்பட்டுள்ளன. இதனால்தான் கட்டடக்கலை அமைப்புமுறையையும் பல சிற்பங்களையும் அடையாளம் காட்டவும், புதிய கல்வெட்டுகளைக் கண்டறியவும் முடிந்தது எனலாம். களஆய்வில் ஈடுபட்டதன் காரணமாகத் தேவையான இடங்களில் ஆய்வுத்தரவுகள் தரப்பட்டு, தக்க மேற்கோள்களுடன் தவறுகளையும் சுட்டிக்காட்டி படிப்போரை மலையடிப்பட்டிக்கு அழைத்துச்சென்று உள்ளார்கள் என்றால் மிகையல்ல. கல்வெட்டுடன் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலை முதலானவற்றைத் தொகுத்துத் தந்துள்ளமை வரலாற்றிற்கு அணிசேர்க்கும் என்பதில் அய்யமில்லை. வாழ்த்துக்கள்.

ஸ்தபதி வே. இராமன்
38/5, புதிய சுற்றுலா மாளிகைக் குடியிருப்பு,
திருச்சிராப்பள்ளி – 620 020.

வரலாறு ஐந்தில் திருவிசலூர்க் கல்வெட்டுச் செய்திகளைப் படித்தேன். திருவிசலூர், திருப்பனந்தாள் ஆடுதுறை சாலையிடையே, தெற்கே பிரியும் கும்பகோணம் சாலையில் உள்ளது. திருப்பனந்தாள் அருகே உள்ள இவ்வூரின் வரலாற்றுப் பெருமைகளை அறிந்து மகிழ்ச்சியடைந்தேன். வேம்பற்றூர் என்று அப்போது வழங்கப்பட்ட இவ்வூர், தற்போது வேப்பத்தூர் என்று வழங்கப்படுகிறது.

பக்கம் ஏழில் 'வீரதுங்கப் பல்லவரையன் நந்தாவிளக்கு' என்று உள்ளது. ஆனால் பக்கம் எட்டில் 'நம்பிராட்டியார் திருநொந்தா விளக்கு' என்று உள்ளது. (இரண்டு சொல்லாட்சிகளும் இருவேறு கல்வெட்டுகளில் வருவதறிக – ஆர்.) தளிச்சேரிக் கல்வெட்டு வரலாறு ஐந்திற்கு மகுடமாக விளங்குகிறது. 'தளி' என்னும் சொல்லாட்சி யையும், தளிச்சேரி அமைப்பையும், தளிச்சேரிப் பெண்களின் நிலையைப்பற்றியும், அவர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகை, செல்வாக்கு, வாழ்க்கைத் தரம், சமுதாயத்தில் அவர்கள் பெற்றிருந்த மதிப்பையும் நன்கு அறியமுடிகிறது. பணியாளர் யாரேனும் இறந்தால், அவர்களுடைய நெருங்கிய உறவினர் யாரேனும் அப்பணிக்குரிய தகுதி பெற்றிருப்பின், அவர்கள் அப்பணியில் அமர்த்தப்படுவதைக் கல்வெட்டு தெரிவிக்கிறது. ஆனால் இன்று அரசுப் பணியில் இருக்கும்போது ஒருவர் இறக்க நேரிட்டால், அவரது மனைவி, மகன், மகள் ஆகிய யாரேனும் ஒருவருக்கு அரசுப் பணி கிடைக்க விதிமுறையில் இடமிருந்தும் நடைமுறையில் அவர்கள் நீண்ட நாட்கள் போராடவேண்டியுள்ளது. சீராளன் என்னும் பெயர் தற்போதும் தஞ்சாவூர் மாவட்டங்களில் வழங்கப்பட்டு வருவதைக் காணமுடிகிறது. காசுகள் கட்டுரை, பி.லிட். பயிலும் மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

அ. சம்பத்குமார்
நூலகர், எஸ்.கே.எஸ்.எஸ். கலைக்கல்லூரி,
திருப்பனந்தாள் – 612 504.

வரலாறு 5 படித்தேன். கல்வெட்டுகளைக் கண்டுபிடிப்பதிலும் அவற்றை முனைந்து ஆராய்வதிலும் அரிய உழைப்பு புலனாயிற்று. அச்சும் அருமை; பிழையற்றிருப்பதும் பெருமை. திருவதிகை வீரட்டானம் நூல் மதிப்புரையைப் படித்தேன். அழகிய ஆராய்ச்சியே புலப்பட்டது. கருத்துப் பிழைகளைக் காட்டி, நிறைந்த சான்றுகளைத் தந்து நிறுவியிருப்பது பாராட்டிற்குரியது. மிகச்சிலரே இத்துறையில் ஈடுபட்டிருப்பினும் அவர் பிழையைத் தயங்காமல் சுட்டுவதே நல்லது. டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தின் பணிகளை மனமாரப் பாராட்டுகிறேன். 'வரலாறு' நெடிய வரலாற்றினைப் படைக்க வாழ்த்துகிறேன்.

பேரா. முனைவர் சா. வளவன்
தமிழ் விரிவுரையாளர்
பச்சையப்பன் கல்லூரி, சென்னை – 600 030.

வரலாறு இதழ் 5 படித்தேன். சிறப்பாக உள்ளது. அரிய முயற்சி தொடர்வதற்குப் பாராட்டும் வாழ்த்தும் கூறுகின்றேன். தளிச்சேரிக் கல்வெட்டு எனும் நெடிய ஆய்வுக் கட்டுரையினை ஆழ்ந்து படித்தேன். அஃதொரு சிறந்த பகுப்பாய்வு முறைக் கட்டுரை. சிந்தனைக்கு நல்ல விருந்து. மொழிப்பிழையில்லாத கருத்துப் பேழை. வங்காரம் – இப்பெயர் அரிய பெயர்களுள் ஒன்றாகக் காட்டப்பட்டுள்ளது.

இப்பெயரில் ஊர் இருந்தமையினைப் பாண்டியகுலாசனி வளநாட்டு மீய்செங்கிளி நாட்டு வங்காரமான திருநாராயண சதுர்வேதிமங்கலம் என்று பக்.78இல் காட்டியுள்ளீர்கள். திருச்சிராப்பள்ளி மாவட்டம் மண்ணச்சநல்லூருக்கு வடக்கே வங்காரம் என்னும் பெயரில் ஓர் ஊர் இன்றுமுளது. வங்காரம் என்பதற்குப் பொன் என்பது பொருள். பக். 79இல், 'கோயிற் பண்டாரம் சார்ந்த இராசகேசரி என்னும் பெயருடைய மரக்காலை ஒத்தது' என்னும் வாசகத்தில் உள்ள 'கோயில்', அரண்மனையைக் குறித்து வழங்கப்பட்டதாகலாம். 'வாயில் வந்து கோயில் காட்ட' என்பது சிலப்பதிகாரம். இப்பெருங் கட்டுரையின் பிற பல இடங்கள் எங்கிலும், கோயில் ஆலயத்தைக் குறிப்பதாக அமைவதால் இங்குக் கோயில் என்பதனை அரண்மனை என்று பொருள் கொள்ளச் சில வாசகர்கள் தயங்கலாம். அரண்மனை மரக்காலுக்கு இராசகேசரி என்பது பெயர். அளவில் அதனையே ஒத்துப் பெரிய கோயில் (ராஜராஜீசுவரம்) பண்டாரத்தில் வழங்கிய மரக்காலுக்கு, ஆடவல்லான் என்னும் பெயர் வழங்கியதாகக் கேட்டிருக்கின்றேன்.

பேரா. முனைவர் அ.மா. பரிமணம்
C 151, நகராட்சிக் குடியிருப்பு,
தஞ்சாவூர் – 613 007.

வரலாறு 5 வந்தவுடன், தளிச்சேரிக் கல்வெட்டுக் கட்டுரையை வாய்விட்டுப் படித்தேன். வாக்கியங்களைச் சிறிதாக அமைத் திருக்கலாம். கல்வெட்டில் ஒவ்வொரு செய்தியின் முடிவைக் குறிக்கும் குறிகளைப் பற்றிப் புதிதாகத் தெரிந்துகொண்டேன். வேறு கல்வெட்டுகளிலும் இதுபோல் உண்டா? 'தமர்தம் அறியாச் சேரியும் உடைத்தே' இதன் சிறப்பு புரியவில்லை. அடிக்குறிப்புகள் 42, 51A, 69 நன்றாக இருந்தன. 42இல் எடுத்துக்காட்டுகளையும் சில சான்று களையும் காட்டியிருப்பது ஏன்? கல்வெட்டில் இருப்பது காந்தர்ப்பரில்/ காந்தர்வ்வரில், மும்மடிச்சோழன்/ மும்முடிச்சோழன் எது சரி?

படைகளில் இருந்தவர் நுண்கலைஞராகப் பணியில் அமர்த்தப் படும் செய்தியும் எனக்குப் புதியது. முதலாம் இராசராசர் காலத் திலிருந்த தெரிந்த வலங்கை வேளைக்காரர் படைப்பிரிவுகள் பத்தின் பெயர்கள் கிடைத்துள்ளன. கிடைத்ததை அடிக்குறிப்பில் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டுமா? கல்வெட்டு வழி அறிந்து கொண்டவைக்கே முதலிடம் தேவை. சன்னாலியள், காவிதிமை, கோயின்மை பற்றிய அடிக்குறிப்புகள் கட்டுரையிலேயே இடம் பெற்றிருக்கலாம். கல்வெட்டில் தவறாக வெட்டிப் பிறகு சரி செய்வார்கள் என்னும் செய்தியும் எனக்குப் புதியது.

வாணி செங்குட்டுவன்
3/231, வ.உ. சிதம்பரனார் குறுக்குத் தெரு,
வங்கிக் குடியிருப்பு, நாராயணபுரம்,
மதுரை – 625 014.

பொறுப்பாசிரியராயிருந்து வரலாறு 5 படைத்து எனக்கு அனுப்பியுள்ளமைக்காக நன்றி தெரிவிக்கின்றேன். தமிழ் மற்றும் வரலாற்று உலகத்தில் வரலாறு படைத்துள்ள உங்களுக்கு எங்களது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேஜர். மூ. அரவாண்டி
முதல்வர்
குறிஞ்சி கலை, அறிவியல் கல்லூரி,
மணப்பாறை – 621 307.

வரலாறு சில கட்டுரைகள் படித்தேன். பயனுள்ளவை. டாக்டர் மா. இராசமாணிக்கனார் பெயர் என் தமிழுணர்வோடு கலந்தது.

பேரா. முனைவர் இராம. சுந்தரம்
தலைவர் – தமிழ் வளர்ச்சித்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் – 613 005.

வரலாறு 5 இதழை அமைதியான திருமலைச் சூழலில் மிகவும் கவனமாகப் படித்தேன். தளிச்சேரிக் கல்வெட்டு பற்றிய கட்டுரையை இரண்டு முறை கவனமாகப் படித்தேன். இந்தக் கல்வெட்டை முதன்முதலில் படி எடுத்தவர் என் பாட்டனார் தஞ்சாவூர் வெங்கடராம சாஸ்திரிகள். இவர் 1881–1900 வரை சரஸ்வதி மகால் நூலகத்தில் பணிபுரிந்தவர். ஹுல்ஷ் உடன் 10 ஆண்டுகள் இருந்தவர். உங்கள் கட்டுரை முழுமையாகவும் ஆழத்தோடும் மிகவும் நாகரிகமாகவும் எழுதப்பட்டிருக்கிறது.

சுட. வேங்கடராமன்
4, தேசிகாச்சாரி தெரு சந்து,
மயிலாப்பூர், சென்னை – 600 004.

தளிச்சேரிக் கல்வெட்டுக் கட்டுரை மிக நுணுக்கமாக எழுதப்பட்டுள்ள ஆய்வுக்கட்டுரையாகும். 'கோயின்மை' என்ற தங்கள் வாசிப்புதான் பொருத்தமாகத் தெரிகிறது. அகக்கோய்மா, புறக்கோய்மா என்ற பதவிகள் சுசீந்திரம் கோயிலில் உள்ளன எனத் திரு. கே.கே. பிள்ளை அவர்களின் நூலில் படித்த நினைவு உள்ளது. பராசவர் என்பது பாரசவர் என இருக்கலாம். சாதி நூல்களில் அநுலோமப் பிரிவினராகக் கூறப்படும் இவர்கள் பற்றி அவசியம் ஆராயப்பட வேண்டும். வட இந்தியச் சிற்றரச குலங்களுள் ஒன்று பாரசைவர் என அழைக்கப்பட்டது. திருவிசலூர்க் கல்வெட்டில் (பக். 8) 'தென்கரைப் புறத்துக் காமவை நாட்டுப் புலையூர் வாழ்க்கை', எனப் படிக்கப் பட்டுள்ளது. 'புறத்துக் கரம்பை நாட்டு', என இருக்கலாமோ என ஐயுறுகிறேன். புறங்கரம்பை நாடு (திருத்துறைப்பூண்டிப் பகுதி),

புறத்துக் கரம்பை நாடு எனக் குறிப்பிடப்பட்டிருக்கலாம் அல்லவா? இப்பகுதியில் இருந்த புலையூர் வாழ்க்கைச் சிங்களாந்தகநல்லூர் என்ற ஊர் கங்கை கொண்ட சோழபுரம் கல்வெட்டில் குறிப்பிடப் படுகிறது.

சிங்களாந்தி என்ற ஊர் திருத்துறைப்பூண்டி வட்டத்தில் உள்ளது. புலையூரும் இருக்கக்கூடும். பெருமுடி ஈசுவரர் கோயிற் கல்வெட்டுப் பாடத்தில் (பக். 24 க.எண் 396/1939–40) வரி 2இல் 'திருவதிட்டாச்சிராமம்' என்று இருக்க வேண்டுமென எண்ணுகிறேன். திருமழபாடிக் கல்வெட்டு ஒன்றில் பிடாகை திருவதிட்டாச்சிராமம் எனப் படித்துள்ள நினைவு உள்ளது.

எஸ். இராமச்சந்திரன்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
10A, ரகு பில்டிங், ஏரல் – 628 801.

நான் ஓர் உல்லாசப்பயணி, ஆட்சியர் மற்றும் தொல்பொருள் ஆய்வாளர். சமீபத்தில் தங்களது வரலாறு இதழ் வெளியீட்டைப் பார்க்க நேர்ந்தது. மிகவும் நன்றாக ஆக்கப்பட்டிருந்தது. ஆதார பூர்வத்துடன் ஆர்வமுள்ளவர்களால் வெளியிடப்பட்டிருந்தன கட்டுரைகள். பாராட்டுக்கள்!

சுந்தரவேலு
7/141, அரவிந்தன் நகர்,
அம்மாசத்திரம் அஞ்சல்,
திருபுவனம் – 612 103.

தங்களது வரலாறு இதழைச் சமீபத்தில் படித்து இன்புற்றேன். என் அலுவலக வேலை காரணமாக நான் தஞ்சாவூர் மற்றும் நாகை காயிதேமில்லத் மாவட்டங்களிலுள்ள கோயில்களைக் கிராம வாரியாகப் பார்வையிடும்போது அழியும் நிலையிலுள்ள பழைய கோயில்களைக் (கல்வெட்டுகள் உள்ளன) கண்டு வேதனையுற்றேன். (உதாரணம்: கும்பகோணத்திற்கு அருகிலுள்ள கொற்கை பிரமபுரீசுவரர் கோயில், திருத்தேவன்குடி மருந்தீசுவரர், திருமண்டங்குடி திரிபுவன ஈசுவரர் கோயில்) அழிந்து கொண்டிருக்கும் கல்வெட்டுகள், அவை தரும் செய்திகள் ஆகியவற்றை மக்களுக்குத் தெரிவிக்கும் தங்கள் மையத்தின் பணி என் போன்ற வாடும் உள்ளங்களுக்குத் தேனாக இனிக்கின்றது.

B. பத்மநாபன்
கண்மணி இல்லம்
6F, சத்தியசாயி மடம் தெரு,
கும்பகோணம் – 612 001.

'அமனி கல்வெட்டும் அறிஞர் கருத்துரையும்' என்ற தலைப்பில் வரலாறு நான்காம் இதழில் வெளியாகியுள்ள செய்திகளைப் படித்தேன். மைய ஆய்வர்களின் கருத்தாகக் கருதப்படும் "கறையூரைச் சேர்ந்த ஆலங்காரி என்பார்க்குப் பித்தும் அச்சமுமே வழியாக உள்ளன" என்பது அவர்களுக்கே மனநிறைவைத் தரும் பொருள் தருவதாக இல்லை என்று கூறப்பட்டுள்ளது. இது போற்றுதலுக்குரிய பண்பாடாகும். இக்கல்வெட்டு குறித்துப் பல அறிஞர்களின் கருத்துகளைக் கேட்டறிந்து அவற்றையும் வெளியிட்டிருப்பது மேலும் பாராட்டுதற்குரிய செயலாகும்.

இக்கல்வெட்டிலுள்ள பிச்சும், பிராந்தும், 'மயக்கம்' என்ற ஒரே பொருளைக் குறிக்கும் என்று நாமதீப நிகண்டு கூறுகிறது. இதன் அடிப்படையில் கறையூர் ஆலங்காரி என்ற ஓர் உயர் அதிகாரி, மலையடிப்பட்டிக் குன்றில் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள இடத்தில், மயக்கமுற்ற நிலையில் இருந்து அவ்விடத்திலேயே (அமனி – முடிந்து) மடிந்திருக்க வேண்டும். இதன் நினைவாகவே கல்வெட்டு ஆங்குப் பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

மு.ம. கோபாலன்
24, பஞ்சவர்ண சுவாமி கோயில் தெரு,
உறையூர், திருச்சிராப்பள்ளி – 620 003.

எண்ணங்களை எழுதுங்கள்

வரலாறு ஆறாம் இதழைப் படிக்கும் அன்பர்கள் இந்த இதழின் அமைப்பு, இடம்பெற்றிருக்கும் செய்திகள், கட்டுரைகள் ஆகியவற்றைப் பற்றித் தத்தம் கருத்துகளை எழுதுமாறு வேண்டுகிறோம். புதியனவாகவும், பயனுள்ளவையாகவும் எவ்வெப் பகுதிகளைச் சேர்க்கலாம் என்பதற்கும் வழிகாட்டுங்கள். இவ்விதழில் வெளியாகியுள்ள ஆய்வுக்கருத்துகளுக்கு மாறுபட்ட கருத்துகள் இருந்தாலும் தெரிவித்தருள்க. வரலாறு உரியவற்றை வெளியிட்டு மகிழும்.

நன்றி: மரு அ. ஜமீர் பாஷா M.S., F.I.C.S., F.A.I.S., F.I.A.M.S.,
மரு. திருமதி. ஷகிலா ஜமீர் M.B.B.S., D.G.O., F.I.A.M.S.,
ஷாநவாஸ் மருத்துவமனை, A-20, முதன்மைச் சாலை,
தில்லைநகர், திருச்சிராப்பள்ளி – 620 018.

5. அங்கும் இங்கும் – 1996

1. திருச்சிராப்பள்ளி நாணயவியல் கழகம்

4.2.96 ஞாயிறன்று திருச்சிராப்பள்ளி நாணயவியல் கழகத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவுவிழாவும் நாணயக் கண்காட்சியும் ஓட்டல் பெமினாவில் நிகழ்ந்தேறின. கழகத்தின் துணைத்தலைவர் மு.ம. கோபாலன் வரவேற்புரை நிகழ்த்த, கழகத் தலைவர் எம். கந்தசாமி தலைமையுரையாற்றினார். சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட திருச்சிராப்பள்ளி வானொலி நிலைய இயக்குனர் த. கணேசனும் வாழ்த்துரை வழங்கிய டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மைய இயக்குநர் டாக்டர் இரா. கலைக்கோவனும் கழகத்தின் வளர்ச்சியையும், பணிகளையும் பாராட்டினர்.

இரண்டு அமர்வுகளாக நடந்த கருத்தரங்கில் ஏழு கட்டுரைகள் வாசிக்கப்பெற்றன. முதல் அமர்விற்குப் பேரா.ம.இராசசேகர தங்க மணியும் இரண்டாம் அமர்விற்கு மு.நளினியும் தலைமையேற்றனர். நிறைவு விழாவில் பேரா.கே.ஏ.திருஞானசம்பந்தம் உறுப்பினர் களுக்குச் சான்றிதழ்கள் வழங்கிப் பாராட்டினார்.

கண்காட்சியில் கழகத்தின் பல உறுப்பினர்கள் தங்களுடைய நாணயத் தொகுப்புகளைப் பார்வைக்கு வைத்திருந்தனர்.

2. கொங்கு நாடும் சமண சமயமும் – கருத்தரங்கு

பெரியார் மாவட்ட வரலாற்றுப் பண்பாட்டு மையம், அரசு அருங்காட்சியகம், ஜெயின் சமாஜம், கொங்கு ஆய்வு மையம் ஆகிய நிறுவனங்கள் இணைந்து நிகழ்த்திய இக்கருத்தரங்கு 25.2.96 அன்று ஈரோட்டில் நடைபெற்றது. முனைவர் செ. இராசு இயக்கத்தில் அமைந்த இரண்டு அமர்வுகளில் பல ஆய்வுக்கட்டுரைகள் வழங்கப்பட்டன.

3. தாய்நாட்டிலும் மேலைநாடுகளிலும் தமிழியல் ஆய்வு கருத்தரங்கம்

புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனமும் சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் இணைந்து நடத்திய இக்கருத்தரங்கு மார்ச்சு 1–3, சென்னையில் நிகழ்ந்தேறியது. பல ஆய்வு நிறுவனங்களைச் சேர்ந்த ஆய்வறிஞர்கள் இக்கருத்தரங்கில் கட்டுரைகளை வழங்கினர். இரண்டாம் நாள் கருத்தரங்கில் டாக்டர் இரா.கலைக்கோவன், 'தமிழ்நாட்டில் கோயிற்கலை ஆய்வுகள் – இன்றைய நிலை' என்ற தலைப்பிலமைந்த ஆய்வுக்கட்டுரையை வழங்கினார்.

4. கல்வெட்டாய்வும் தமிழக வரலாறும் – கருத்தரங்கு

தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல்துறை மார்ச்சு 11,12இல் கல்வெட்டாய்வும் தமிழக வரலாறும் எனும் கருத்தரங்கை நடத்தியது. இக்கருத்தரங்கின் ஆறு அமர்வுகளில் 18 கட்டுரைகள் படிக்கப்பெற்றன. புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகள், நாணயங்கள், செப்பேடுகள், எழுத்து வளர்ச்சி, நிலவியல் வரலாறு, சமூகம், பொருளாதாரம் தொடர்பாக இக்கட்டுரைகள் இருந்தன.

5. தென்னிந்தியக் கலையில் கோபுரங்கள் – கருத்தரங்கம்

மார்ச்சு 15–16இல் பல்கலைக்கழக மானியக் குழுவின் சார்பில் தமிழ்ப் பல்கலைக்கழகச் சிற்பத்துறையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் கலந்துகொண்ட மையக் கல்வெட்டாய்வர் அர. அகிலா 'திருச்செந்துறைக் கோபுரச் சுதையுருவம் – புதிய கலைவடிவம்' என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை வழங்கினார்.

6. புதுக்கோட்டை மாவட்ட வரலாறு – கருத்தரங்கம்

புதுக்கோட்டை அரசு அருங்காட்சியகம் 17.3.96 அன்று நடத்திய இக்கருத்தரங்கைத் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டுத்துறைப் பேராசிரியர் எ. சுப்பராயலு தொடங்கிவைத்தார். காலையும் மாலையும் நடந்த இரண்டு அமர்வுகளில் புதுக்கோட்டை தொடர்பான பல ஆய்வுக்கட்டுரைகள் வாசிக்கப்பெற்றன. காலை அமர்விற்கு மன்னர் கல்லூரிப் பேராசிரியர் முனைவர் ஏ.பி. பெருமாள் இயக்குநராக அமைய, மாலை அமர்விற்குக் கரூர் அரசு கலைக்கல்லூரிப் பேராசிரியர் ம. இராசசேகர தங்கமணி இயக்குநராக இருந்தார். காப்பாட்சியர் ஜெ.ராஜாமுகமது அனைவரையும் வரவேற்றார்.

7. தமிழ்ச் சான்றுகள் ஒரு வரலாற்றாய்வு – கருத்தரங்கம்

மார்ச்சு 22ஆம் நாள் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கின் தொடக்கவிழாவில் பேரா.பா.சுப்ரமணியன் வரவேற்புரை நிகழ்த்தினார். தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சி. கருணாகரன் தலைமையேற்றார். காலை அமர்விற்குத் தலைமையேற்ற டாக்டர் இரா. கலைக்கோவன் தளிச்சேரிக் கல்வெட்டு குறித்த ஆய்வுக்கட்டுரையொன்றினை வழங்கினார். பிற்பகல் அமர்வுக்குச் சிற்பத்துறைத் தலைவர் பேரா.ராஜு காளிதாஸ் தலைமை யேற்றார். இரு அமர்வுகளிலுமாய்த் தமிழ்ச் சான்றுகள் குறித்த பல ஆய்வுக்கட்டுரைகள் வாசிக்கப்பெற்றன.

8. ஆனந்தரங்கர் அறக்கட்டளைக் கருத்தரங்கம்

புதுச்சேரிப் பல்கலைக்கழக சுப்பிரமணிய பாரதி தமிழ்மொழி இலக்கிய உயராய்வு நிறுவனத்தால் 30.3.96 அன்று நடத்தப்பெற்ற இக்கருத்தரங்கிற்குப் புதுச்சேரிப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ஆ.ஞானம் தலைமையேற்றார். மூன்று அமர்வுகளாக நிகழ்ந்தேறிய இக்கருத்தரங்கின் முதல் அமர்வில் டாக்டர் இரா.கலைக்கோவன் ஆனந்தரங்கர் நாட்குறிப்பு இரண்டாம் தொகுதியில் காணப்படும் வரலாற்றுத் தரவுகள் பற்றிய ஆய்வுக் கட்டுரையினை வழங்கினார்.

9. பண்பாட்டுப் பலகணி

திருச்சிராப்பள்ளி வானொலி நிலையம் தஞ்சாவூர் ராஜராஜீசுவரம் திருக்கோயில் வளாகத்தில் ஏப்ரல் 9,10 இரு நாட்களும் பண்பாட்டுப் பலகணி என்னும் அரிய நிகழ்ச்சியை நடத்தியது. இதில் இளைஞர் கலந்துரையாடல், தெருக்கூத்து, இசைச்சங்கமம் ஆகிய நிகழ்ச்சிகள் அமைந்தன. 9.4.96 மாலை நடந்த தமிழ்க் கலைகளும் பண்பாடுகளும் பற்றிய இளைஞர் கலந்துரைக்கு டாக்டர் இரா.கலைக்கோவன் நெறியாளராக இருந்தார். இளைஞர்களின் பல்வேறு கேள்விகளுக்கு விடையளிக்கும் நிகழ்ச்சியாக இது அமைந்தது. வானொலி நிலைய இயக்குநர் த.கணேசன் தலைமையேற்றார்.

10. இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்கம்

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் மே 25, 26, 27 ஆகிய நாட்களில் நடைபெற்ற இக்கருத்தரங்கின் முதல் நாள் பிற்பகல் அமர்வில் 'மூன்று இசைக்கருவிகள்' என்ற தலைப்பில் டாக்டர் இரா.கலைக்கோவனும், 'மூவேந்தன் என்னும் பசாசின் பேர்' என்ற தலைப்பில் மு. நளினியும் ஆய்வுக்கட்டுரைகளை வழங்கினர்.

11. வரலாற்றுப் பயிற்சி முகாம்

சீதாலட்சுமி ராமசாமி தன்னாட்சிக் கல்லூரியின் வரலாற்றுத் துறை, கல்லூரி நிறுவனர் பத்மபூஷன் திரு. என். ராமசாமி அய்யர் நூற்றாண்டு விழாவையொட்டி, மேனிலைப்பள்ளி வரலாற்றாசிரியர் களுக்காகப் பயிற்சி முகாமொன்றை சூலைத் திங்கள் 6–9 நடத்தியது. பேரா. லோ. மணிமேகலை ஒருங்கிணைப்பாளராக அமைந்த இம்முகாமில், டாக்டர் இரா.கலைக்கோவன், கல்வெட்டாய்வாளர் அர.அகிலா ஆகியோர் கலந்துகொண்டு பயிற்சியளித்தனர். பதினோராம் வகுப்பு வரலாற்றுப் பாடநூலில் கருத்துப் பிழைகள் மலிந்திருப்பதை நான்கு பாடங்களின் துணை கொண்டு விளக்கிய

இரா.கலைக்கோவன், இதை அரசின் கவனத்திற்குக் கொண்டுசெல்ல வேண்டுமென்று குறிப்பிட்டார். மதுரையைச் சேர்ந்த வாணி செங்குட்டுவன் கலந்துரை முறையில், பயிற்றுவித்தல் குறித்துக் கருத்துரைத்தார். பேராசிரியர்கள் கோ.வேணிதேவி, சே.விஜயா, சீ.கீதா, மு.நளினி, லோ.மணிமேகலை ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் உரையாற்றினர்.

12. மூலங்களும் வரலாற்று மீட்டுருவாக்கமும் – கருத்தரங்கு

திருச்சிராப்பள்ளி சீதாலட்சுமி ராமசாமி தன்னாட்சிக் கல்லூரியின் வரலாற்றுத்துறை 18.7.96 அன்று நிகழ்த்திய இக்கருத்தரங்கிற்குக் கல்லூரி முதல்வர் மா.கற்பகம் தலைமையேற்றார். டாக்டர் இரா.கலைக்கோவன் தொடக்கவுரை நிகழ்த்த, முனைவர் பி.பி.கோபாலகிருஷ்ணன் நிறைவுரையாற்றினார். பேராசிரியர்கள் சீ.கீதா, மு.நளினி ஆகியோர் 'வரலாறும் நினைவுச் சின்னங்களும்' என்ற தலைப்பில் கட்டுரை வாசித்தனர். தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல்துறைப் பேராசிரியர் எ. சுப்பராயலு 'வரலாற்றின் மூலமாகக் கல்வெட்டு' என்ற தலைப்பிலும், தேசியக் கல்லூரியின் வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் கே. அய்யம்பெருமாள் 'வரலாற்று மூலமாக அயல்நாட்டுத் தரவுகள்' என்ற தலைப்பிலும், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகப் பேராசிரியர் பி.பி.கோபால கிருஷ்ணன் 'பதிவேடுகளும் ஆவணங்களும்' என்ற தலைப்பிலும், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் கண்காணிப்புத் தொல்லியல் அலுவலர் அ. அப்துல் மஜீது 'வரலாற்று மூலமாகத் தொல்லியல்' என்ற தலைப்பிலும், டாக்டர் இரா.கலைக்கோவன் 'இலக்கியத்தில் வரலாறா?' என்ற தலைப்பிலும் கட்டுரைகள் வழங்கினர்.

கருத்தரங்க முடிவில் டாக்டர்மா.இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், சீதாலட்சுமி ராமசாமி தன்னாட்சிக் கல்லூரியின் முதுகலை வரலாறு முதலாண்டு மாணவியர்க்கு நடத்திய கல்வெட்டியல் மற்றும் கட்டடக்கலை தொடர்பான வினாடிவினாவில் பரிசு பெற்றவர்க்குச் சென்னை துகில் இண்டர்நேஷனல் உரிமையாளர் திரு. தே. ரஃபேல் பரிசுகள் வழங்கிப் பாராட்டினார்.

துறைத்தலைவர் பேரா. கோ.வேணிதேவி வரவேற்கப் பேரா. லோ. மணிமேகலை நன்றி கூறினார்.

13. முனைவர் வ.சு.ப. மாணிக்கனார் நினைவு அறக்கட்டளைப் பொழிவுகள்

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை 12.8.96 அன்று காலை, மாலை இரு வேளைகளிலும் அமைத்திருந்த

அறக்கட்டளைப் பொழிவுகளில் டாக்டர் இரா. கலைக்கோவன் பங்கேற்றுப் 'பல்லவர் காலக் கோயிற் கட்டடக்கலை', 'ஆய்வுகளின் போக்குகளும் தீர்வுகளும்' என்னும் தலைப்புகளில் உரையாற்றினார்.

14. தமிழ்நாடு வரலாற்றுப் பேரவை மூன்றாம் கருத்தரங்கு

பாரதிதாசன் பல்கலைக்கழகம் செப்டம்பர் 7,8இல் நடத்திய இக்கருத்தரங்கில் பல வரலாற்றறிஞர்கள் பங்கேற்றனர். டாக்டர் மா.இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தின் சார்பில் ஐந்து கட்டுரைகளும் சீதாலட்சுமி ராமசாமி தன்னாட்சிக் கல்லூரி வரலாற்றுத் துறையின் சார்பில் இரண்டு கட்டுரைகளும் படிக்கப்பட்டன.

அர. அகிலா	–	ஆறங்கச் சாலைகள்
இரா. கலைக்கோவன்	–	பாடத்திலிருந்து பாடம்
மு. நளினி	–	திருப்புத்தூர்க் கல்வெட்டுகள் – சில புதிய செய்திகள்
தி. சுமிதா	–	திருப்புத்தூர்த் திருத்தளிநாதர் கோயிலில் முற்பாண்டியர் சிற்பங்கள்
சீ. கீதா	–	திருப்பட்டூர்க் கயிலாசநாதர் கோயிலின் கட்டட அமைவு
கோ. வேணிதேவி	–	மணிமேகலையில் கட்டடக்கலைச் சொற்கள்
மா.ரா. அரசு	–	வ.உ. சிதம்பரனாரின் தமிழ்ப் பணிகள்

15. உலகச் சுற்றுலாத் திருவிழா – கருத்தரங்கம்

தமிழ்நாடு அரசின் சுற்றுலாத்துறை 26.9.96 அன்று நடத்திய சுற்றுலாக் கருத்தரங்கில் அறுவர் உரை நிகழ்த்தினர். டாக்டர் இரா.கலைக்கோவன் சுற்றுலா முன்னேற்றத்தில் இந்தியக் கலைகளின் பங்கு என்ற தலைப்பில் படவில்லைகளின் உதவியுடன் பொழிவாற்றினார். புதுக்கோட்டை அருங்காட்சியகக் காப்பாட்சியர் ஜெ. ராஜா முகமது, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் திருச்சிராப்பள்ளிப் பதிவு அலுவலர் கி. ஸ்ரீதரன், தேசியக் கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியர் என். சேஷாத்திரி, மாவட்டச் சுற்றுலா அலுவலர் தா. இராதாகிருஷ்ணன், திரு. எம். பொன்னிளங்கோ ஆகியோர் பிற பொழிஞர்கள்.

6. உண்டாலம்ம இவ்வுலகம்!

இந்தியன் எக்ஸ்பிரஸ் கோபாலன்

1982ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9ஆம் நாள் மையத்தின் வரலாற்றில் மறக்கமுடியாத ஒரு நாளாகும். அன்றுதான் எங்கள் முதற் கண்டுபிடிப்பான 'குழுமணி புத்தர் சிற்பம்' பற்றிய செய்தி மாலைமுரசு நாளிதழில் வெளியாகியிருந்தது. இந்தத் தகவலைத் தொலைபேசி வழி தந்ததுடன் 'இந்தியன் எக்ஸ்பிரஸில் வெளியிட்டால் இச்செய்தி பல்லாயிரம் பேரைச் சென்றடையும்' என்று கூறி, உடன் திரு. பரமானந்தத்தை எங்கள் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்த திரு. ஆ. கோபாலன், அப்போது இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி நாளிதழ்களுக்கான திருச்சிராப்பள்ளி மாவட்டச் செய்தி யாளராகப் பணியிலிருந்தார். தமிழகத்தின் மிகச்சிறந்த நாளிதழ் களின் மாவட்டச் செய்தியாளராக இருந்தும், அவரே தொலைபேசி செய்து, செய்தி பெற்றுக்கொண்ட பெருந்தன்மை ஆய்வின் தொடக்க நிலையிலிருந்த எங்கள் நெஞ்சைத் தொட்டது. 'ஒரு வரலாற்றுக் கண்டுபிடிப்பு அந்த வரலாற்றுக்கு உரியவர்களான மக்களைச் சென்றடையவேண்டும். அப்போதுதான் இதுபோன்ற பொருட்களின் சிறப்பும், இவற்றைப் பாதுகாக்கவேண்டுவதன் முக்கியத்துவமும் மக்களுக்குப் புரியும்' என்று பின்னாளில் அடிக்கடி கோபாலன் கூறியிருக்கிறார்.

எங்கள் கண்டுபிடிப்புகளைத் தொடர்ந்து தினமணியிலும், எக்ஸ்பிரஸிலும் வெளியிட்டுக்கொண்டிருந்த கோபாலன், எக்ஸ்பிரஸில் புதிதாகத் தொடங்கப்பட்ட 'Tamil Nadu Notes' என்ற பகுதிக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களைப் படங்களுடன் தருமாறு ஒருமுறை கேட்டார். அவருடைய அந்த அன்பான வேண்டு கோளே, பல ஆண்டுகள் தொடர்ந்து எக்ஸ்பிரஸின் 'Tamil Nadu Notes' பகுதியில் எழுதும் வாய்ப்பை மையத்திற்குப் பெற்றுத்தந்தது. நாங்கள் எழுதித்தரும் வரலாற்றுத் தகவல்களை அவற்றின் உண்மைத்தன்மை கெடாமல், படிப்போரை ஈர்ப்பது போல் அங்குமிங்கும் சில வரிகளை மாற்றி அல்லது சேர்த்துச் செய்திகளைச் சுவையோடு படைப்பதில் அவருக்கு நிகர் அவரே. திருச்சென்னம்பூண்டித் திருக்கோயில் பற்றிய தகவலொன்றை வெளியிட்டபோது, 'இவ்வூர் மக்கள் சிவபெருமானைக் கூட அவ்வப்போது பார்த்திருப்பதாகவும், ஆனால் இந்தக் கோயிலை நினைவுச்சின்னமாக அறிவித்திருக்கும் தொல்

பொருள்துறையின் அலுவலரை மட்டும் இதுநாள்வரையிலும் பார்த்ததே இல்லையென்றும் கூறுகிறார்கள்' என்று அவர் சேர்த்திருந்த குறிப்பு இன்று நினைத்தாலும் இதழ்க்கடைகளில் முறுவலை வரவழைக்கிறது. அவருடைய எழுத்துகளில் யாரையும் புண்படுத்தாத மெலிதான நகைச்சுவையுணர்வு எப்போதும் இருக்கும்.

எக்ஸ்பிரஸில் சனிக்கிழமை தோறும் கலைக்கட்டுரைகள் வெளியாவதுண்டு. அந்தப் பகுதியில் எழுதுமாறு எங்களைத் தூண்டியவர் கோபாலன். முதற் கட்டுரை வெளியான பிறகு தொடர்ந்து எழுதுமாறு ஊக்குவித்தார். அவரது அன்பான அரவணைப்பு எக்ஸ்பிரஸில் தொடர்ந்து இருபத்தைந்து ஆய்வுக் கட்டுரைகள் எழுதும் நிலைக்கு எங்களை வளர்த்தது. ஒவ்வொரு கட்டுரையைத் தரும்போதும் அதை முழுவதுமாகப் படித்து 'படிப்பவர் நோக்கில்' ஆங்காங்கே சில திருத்தங்கள் செய்து, அவற்றை மீண்டும் எங்கட்குப் படித்துக்காட்டி, எங்கள் ஒப்புதலோடு வெளியிட்ட பெருந்தகை அவர். எந்தச் செய்தி அனுப்பினாலும் அதை முழுவதுமாய் ஒருமுறை படித்து, ஐயம் தோன்றும் இடங்களை உடன் தொலைபேசி செய்து சரிபார்த்துக்கொண்ட பிறகே வெளியிடும் நோக்குடையவர். அவருடன் அமைந்த கலந்துரைகள் நாளிதழ் படிப்பார்தம் எதிர்பார்ப்புகளையும் அவர்கட்கென்று எழுதும் முறையையும் நாங்கள் அறிய உதவின.

வானொலியில் எங்கள் பங்களிப்பு நிகழும்போதெல்லாம் ஒலி பரப்பு முடிந்ததும் வரும் முதல் தொலைபேசி அவருடையதாகத்தான் இருக்கும். கூர்மையாகக் கேட்டுத் திறனாய்வு செய்வார். உரையில் அவருக்கேற்பட்ட ஐயங்களை உடன் கேட்டுத் தெளிவுசெய்து கொள்வார். வரலாற்றில் அவருக்கிருந்த ஆர்வம் எல்லையற்றது. திருமங்கலம் சாமவேதீசுவரர் கோயில், சிறுவாச்சூர் காளிகோயில் போன்ற பல இடங்களை நாங்கள் ஆய்வு செய்ய அவரே தூண்டு கோலாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்க உண்மையாகும்.

எந்தக் கூட்டத்தில் பார்த்தாலும், அது எவ்வளவு பெரிய கூட்டமாக இருந்தாலும் உடன் வந்து உரையாடும் நட்புணர்வு அவருடைய தனித்தன்மையாகும். அங்கிருப்பவர்களுக்கு அறிமுகம் செய்யும் வாய்ப்பமைந்தால், தாராள மனப்பான்மையுடன் சிறிதும் தயக்கமின்றி மையத்தின் பணிகளைப் பெரிதும் பாராட்டிப் புகழ்ந்துரைப்பார். அந்தப் புகழ்ந்துரைகள் கேட்போர்க்கு மையத்தைப் பற்றிய மிகச்சிறந்த எண்ணங்களைத் தருமாறு அமைந்துவிடும். உண்மைகளைக் கூட எப்படித் தந்தால் போய்ச்சேரும் என்பதை அவர் மிக நன்றாக அறிந்து

வைத்திருந்தார். அவரால் கிடைத்த சில அறிமுகங்கள் எங்கள் ஆய்வுப் பயணத்தில் பேருதவியாய் அமைந்தன. அவருடன் பங்கேற்ற சில நிகழ்ச்சிகள் மறக்கமுடியாதவை. திருத்தவத்துறை நண்பர்கள் கழகக் கூட்டம், அரிமா பட்டாபிராமனின் பதவியேற்பு, கலைக்காவிரி நாட்டியப்பள்ளியில் நிகழ்ந்த பார்போசா நாட்டிய நிகழ்ச்சி முதலியன குறிப்பிடத்தக்கன.

டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தின் ஒரு பிரிவாக இயங்கும் திருமதி. கண்ணம்மாள் இராசமாணிக்கனார் நலவாழ்வு மையம் மக்களுக்கான மருத்துவப் பொழிவுகளைத் தமிழில் திங்கள்தோறும் நடத்திக்கொண்டிருந்தபோது, ஒரு கூட்டத்திற்குத் தலைமையேற்க அவரை அழைத்தோம். பிடிவாதமாக மறுத்தவர், நாங்கள் மிகவும் வலியுறுத்தியதால் ஒப்புக்கொண்டார். 'எனக்கு உரையாற்றவே தெரியாது' என்று கூறியவர் அந்தக் கூட்டத்தில் பதினைந்து நிமிடங்கள் 'மக்களுக்கான மருத்துவக் கல்வி' பற்றி மிக இயல்பாகப் பேசினார். அழகுபடுத்திப் பேசுவது அவருக்குத் தெரியாததுதான். ஆனால் யாருக்கு எது தேவையோ, அதை அவர்களுக்குப் புரியுமாறு சொல்லும் கலையை அவர் நன்கறிந்திருந்தார்.

எதையும் இலவசமாகப் பெறுவதில் அவருக்கு உடன்பாடில்லை. மருத்துவமனைக்கு வந்து கண்சோதனை செய்துகொண்ட போதெல்லாம் ஏதாவது அன்பளிப்புகள் தந்தே சோதனை மேற் கொள்வார். 'எங்கள் செய்திகளையெல்லாம் வெளியிடுகிறீர்கள். உங்களுக்கு நாங்கள் இதுகூட செய்யக்கூடாதா' என்று கேட்டு அன்பளிப்புகளை மறுத்தால், 'அது என் கடமை. அதை நான் உங்களுக்காகச் செய்யவில்லை. மக்களுக்காகச் செய்கிறேன். அதற்கு எங்கள் நிர்வாகம் ஊதியம் தருகிறது' என்று சிரித்தவாறு கூறி எங்களை வாயடைக்கச் செய்வார்.

அரசியல், இலக்கியம், வரலாறு மூன்றுமே அவருக்குப் பிடிக்கும். அரசியலில் சில குறிப்பிட்ட தலைவர்களிடம் அவர் பேரன்பு கொண்டிருந்தார். ஆனால் அதற்காக அரசியல் செய்திகளில் 'சார்பு' கொண்டதில்லை. அவருடன் பல ஆண்டுகள் பழகிய நிலையில் அதை எங்களால் உறுதியாகச் சொல்லமுடியும். நண்பர்களைப் போற்று வதிலும் அவர்தம் நட்புணர்வை நாளும் வளர்ப்பதிலும் அவருக்கு நிகர் அவரே.

உடல்நலம் குன்றியிருந்த நாட்களிலும் பணியை விடாது செய்து வந்தார். எக்ஸ்பிரஸில் இருந்து விலகிய பிறகும் எங்கள்

செய்திகளைத் தொடர்ந்து பெற்று முரசொலியிலும் சென்னை யிலிருந்து வெளியாகும் 'News Today' என்னும் ஆங்கில நாளிதழிலும் வெளியிட்டார். அச்செய்திகள் வெளியான இதழ்களை வீட்டிற்கே அனுப்பிவைப்பார். நண்பர்க்கும், நல்லது செய்வார்க்கும் அவர் காட்டிய மரியாதை அது.

அகஸ்தியர் புத்தக நிலைய அகராதி வெளியீட்டு விழாதான் அவர் முனைப்போடு கலந்துகொண்ட இறுதிவிழா. அதில் மையத்தின் சார்பில் என்னைக் கலந்துகொள்ளவைத்தார். அவரைப் பற்றி பேச அது எனக்கு வாய்ப்பானது. பேசி முடித்து வந்த என்னிடம் 'எத்தனை நாள் இதற்காகக் காத்துக்கொண்டிருந்தீர்கள்' என்று நெகிழ்ச்சியுடன் கேட்டவர், என் கைகளை அன்புடன் பற்றிக்கொண்டார். அந்தச் சில விநாடிகள் அவர் உள்ளத்தின் நன்றிப்பெருக்கை என் விரல்கள் உணர்ந்தன. நானாற்றிய நன்றிக்கடனுக்கு அவர் தந்த பதில் மரியாதை.

கோபாலன் எளிமையானவர்; இனிமையானவர்; பழகும் பாங்கறிந்தவர்; தவறுகளை உடன் சுட்டித் திருத்துபவர்; நட்பிற்கு இலக்கணமானவர். எந்தப் பிரதிபலனும் எதிர்பாராமல் நல்ல செயல்களுக்குத் துணைநிற்பவர். எங்கள் வரலாற்றாய்வு மையத்தின் வளர்ச்சிக்கும் பொலிவிற்கும் மூலகாரணராய் அமைந்தவர். உடல்நிலை பெரிதும் சீர்கேடுற்ற நிலையிலிருந்தபோதும் நேரில் சந்தித்தபோது மையத்தின் பணிகளைப் பற்றி அவர் கேட்டறிந்த விதமும், என்னிடத்து அவர் காட்டிய அன்பும், அந்தப் பரிவான பார்வைகளும் என்றும் என் நெஞ்சில் வாழும்.

எந்தப் பயணத்திலும் வழித்துணைகள் உண்டு. சில துணைகள் தொல்லையாகும். சில துணைகள் நெருடாது உடன் நடக்கும். சில துணைகளோ, 'நாம் மறக்க மாட்டேமால்' எனுமாறு நெஞ்சில் பதிவாகும். திரு. கோபாலன் இறுதிவகையினர். வரலாற்றாய்வு மையத்தின் நெடும்பயணப் பாதையில் மறக்கவே முடியாத மாபெரும் மனிதர் அவர்.

இரா. கலைக்கோவன்

நன்றி: ஸ்ரீதேவி மெடிக்கல்ஸ்
160, மெயின் ரோடு, பாலக்கரை,
திருச்சிராப்பள்ளி – 620 001.

தாமரை நயந்த வேழத்திரு

தமிழ்நாட்டு இறைத்தோற்ற வரலாற்றில் பழங்காலந்தொட்டே இடம்பெற்றிருக்கும் இறைவடிவங்கள் மிகச்சிலவே. அவற்றின் வரிசையில் வேழத்திருவைச் சேர்க்கிறது கலித்தொகையின் நாற்பத்து நான்காம் பாடல். சங்க இலக்கியங்களுள் ஒன்றான நெடுநல்வாடை திருவைக் குறிக்கிறது. ஆனால் வேழத்திரு கலித்தொகை வாயிலாகவே காட்சிக்கு வருகிறது.

ஆகமங்கள் போலவே இலக்கியங்களும் இறை அறிமுகத்துடன் அவற்றின் தோற்ற அமைப்பும் தருகின்றன. வேழத்திருவை இறையியல் வரலாற்றுக்கு வழங்கும் கலித்தொகையும் அம்மரபில் வழுவாது இரண்டரை அடிகளில் முழுமையான வண்ணிப்பை முன்வைக்கிறது.

"வரிநுதல் எழில்வேழம் பூநீர்மேல் சொரிதரப்
புரிநெகிழ் தாமரை மலரங்கண் வீறெய்தித்
திருநயந்து இருந்தன்ன"

இந்த வண்ணனையை உள்வாங்கிக்கொண்ட பல்லவச் சிற்பிகள் வேழத்திருவை மாமல்லபுரத்து வராகர் குடைவரையில் சுவர்க்காட்சியாய்ச் செதுக்கிவைத்தனர். 'புரிநெகிழ் தாமரை' என்ற சொல்லாட்சியின் விளக்கமாய் முறுக்கவிழ்ந்து இதழ் விரிந்து மலர்ந்த தாமரைப்பூ. அதன் மீது அமர்ந்த கோலத்தில் திருமகள். இந்த அமர்வை வீறெய்தி நயந்த அமர்வாய்க் கலித்தொகை காட்டுவதைச் சிற்பிகள் எப்படி வெளிப்படுத்தியுள்ளனர் என்றறிய ஒருமுறை மாமல்லைக்குச் சென்றுவாருங்கள். ஏனெனில் சொற்களால் விளக்க முடியாத சுந்தர வீறு இது.

'போதொடு நீர் சுமந்தேத்தி வருவார்' என்று அய்யாற்றில் அப்பர் பெருமான் பாடினாரே, அது போல் பூக்கள் இடப்பெற்ற நீர்க்குடங்களைச் சுமந்தவர்களாய்த் தேவியின் இருபுறத்தும் அழகியர் நால்வர். மேற்புறத்தே வரிகள் படர்ந்த நெற்றிப்பகுதியாம் மத்தகத்தை உடைய அழகிய வேழங்கள் பக்கத்திற்கொன்றாய்க் காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று நிற்கும் எழிலியர் கைக்குடங்களுள் ஒன்றைத் துதிக்கையில் வாங்கி, மேலே உயர்த்தித் தேவியின் மீது பூநீர் சொரிந்து களிக்கிறது. மற்றொன்று குடம் வாங்கும் முயற்சியில் முனைந்துள்ளது.

கலித்தொகை அடிகளூடே சிறிது கற்பனையும் கலந்ததொரு காட்சியைக் கண்முன் காட்டியிருக்கும் இந்தப் பல்லவச் சிற்பிகள் இலக்கியம் படிக்காதவரா?

7. கட்டுரையாளர்கள்

1. அர. அகிலா
முனைவர் ஆய்வர்
டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்
48, புத்தூர் நெடுஞ்சாலை, திருச்சிராப்பள்ளி – 620 017.

2. சு. அரங்கசாமி
தமிழ்க்குடில்
தெற்குக் கொண்டையம்பேட்டை
திருவானைக்காவல், திருச்சிராப்பள்ளி – 620 005.

3. எஸ். இராமச்சந்திரன்
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை,
10 A, ரகு பில்டிங், ஏரல் – 628 801.

4. இரா. கலைக்கோவன்
இயக்குநர்
டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்
48, புத்தூர் நெடுஞ்சாலை, திருச்சிராப்பள்ளி – 620 017.

5. சீ. கீதா
தேர்வுநிலை விரிவுரையாளர் – வரலாற்றுத்துறை
சீதாலட்சுமி ராமசாமி தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 620 002.

6. பூ.ர. குப்புசாமி
19, மேற்கு மடவளாகம், கரூர் – 639 001.

7. ஒர்சே. மா. கோபாலகிஷ்ணன்
22, வில்லா போய்சியெர்,
ஒர்சே, பிரான்ஸ்.

8. மு.ம. கோபாலன்
24, பஞ்சவர்ணசாமி கோயில் தெரு,
உறையூர், திருச்சிராப்பள்ளி – 620 003.

9. ஆறுமுக சீதாராமன்
11, உமாநகர், தஞ்சாவூர் – 613 007.

10. தி. சுமிதா
முதுநிறைஞர் ஆய்வு மாணவர்
டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்
48, புத்தூர் நெடுஞ்சாலை, திருச்சிராப்பள்ளி – 620 017.

11. மு. நளினி
மதிப்புறு கல்வெட்டாய்வர்
டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்
48, புத்தூர் நெடுஞ்சாலை, திருச்சிராப்பள்ளி – 620 017.

12. ஐராவதம் மகாதேவன்
18A, நான்காம் கடல் நோக்குச் சாலை,
வால்மீகி நகர், திருவான்மியூர், சென்னை – 600 041.

13. இரா. லலிதாம்பாள்
இசை ஆசிரியை
கோயிலூர் பெரியநாயகி மகளிர் மேனிலைப்பள்ளி
முத்துப்பேட்டை – 614 704.

14. கோ. வேணிதேவி
தலைவர் – வரலாற்றுத்துறை
சீதாலட்சுமி ராமசாமி தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 620 002.

15. ம. ஜான்சி ஜேக்கப்
விரிவுரையாளர் – வரலாற்றுத்துறை
எத்திராஜ் கல்லூரி, சென்னை.

With Best Compliments From

SUN TAILORS

TRUNK ROAD
THIRUVANAIKKOIL
THIRUCHIRAPALLI – 620 005.
Prop: Nagasundaram

வருந்துகிறோம்



இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி நாளிதழ்களின் செய்தியாளராகத் திருச்சிராப் பள்ளியில் பல ஆண்டுகள் பணியாற்றி ஓய்வுபெற்ற திரு.ஆ.கோபாலன் அமரரானார். டாக்டர். மா. இராசமாணிக்கனார் வரலாற் றாய்வு மையத்தின் வரலாற்றுக் கண்டு பிடிப்புகளையெல்லாம் உளமாரப் பாராட்டிய துடன், அப்புதிய செய்திகளைத் தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற உயரிய நோக்கோடு தொடர்ந்து தம் இதழ்களில் அவை இடம்பெறுமாறு பார்த்துக்கொண்ட பேரன்பாளர் திரு. கோபாலன். இதழியல், வரலாறு, நலக்கல்வி, கோயிற்கலைகள், தொல்லியல் போன்ற பல துறைகளிலும் ஈடுபாடு கொண்டிருந்த அவரது நட்புணர்வும், பரிவுணர்ச்சியும், மனிதநேயமும் அவருடன் பழகிய அனைவர் நெஞ்சிலும் என்றென்றும் நிலைத்திருக்கும்.

வருந்துகிறோம்

வரலாறு இதழ் தொடங்கிய காலத்திலிருந்து எங்கள் முயற்சி களுக்கு உறுதுணையாய் இருந்து ஊக்கமூட்டிவந்த அருமை நண்பர்களான பேராசிரியர் முனைவர். சி.மூக்கரெட்டி, வழக்கறிஞர் பா.இராமமூர்த்தி, சித்தமருத்துவர் மு.முத்துக்காளத்தி, பொறிஞர் ச.பாலமுத்துசாமி, ஓய்வுபெற்ற வருமானவரித்துறை ஆணையர் எம்.எஸ்.எம்.மரைக்காயர், கண்மருத்துவ வல்லுநர் ஆ.கோவிந்தராசன், திரு.வி.நடராசன் ஆகியோர் அண்மைக் காலத்தில் அஃமரர்களாகியுள்ளனர். நல்ல செயல்கள் வெற்றிபெற வேண்டுமென்பதில் உறுதியாக இருந்த அப்பெருமக்களின் குடும்பங்களுக்கு வரலாறு தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. உதவிக்கை நீட்டிய அப்பெருந்தகைகளின் எதிர் பார்ப்புகளை வரலாறு உறுதியாய் நினைவாக்கும்.

With Best Compliments From

Ph : 760530 p.p.

CAUVERY EDUCATIONERS / COMPUTERDROME

BUILDERS OF MODERN EDUCATION

4-A, WALAJA ROAD,
WORAIYUR,
THIRUCHIRAPALLI - 620 018.

M.M. GOPALAN
CORRESPONDENT

With Best Compliments From

Ph: 763681

SREE KRISHNA SWEETS

31A/2, MAIN ROAD,

THILLAINAGAR, THIRUCHIRAPALLI - 620 018.

A PLACE FOR QUALITY AND TASTE

With Best Compliments From Ph : 762469

NATIONAL PHARMACEUTICALS

A - 20, NORTH FIRST CROSS,

THILLAINAGAR, THIRUCHIRAPALLI - 620 018.

Ph: 31776

Beat the Heat with Photo Gray

SUN OPTICAL

Near Sagayamatha Medical

Thennur

THIRUCHIRAPALLI - 620 017.

அனைத்து வகை மருந்துகளும்

சகாயமான விலைக்குக் கிடைக்கும்

சிட்டி மெடிக்கல்ஸ்

அரசு பொது மருத்துவமனை எதிர்ப்புறம்

7, ஈ.வெ.ரா. சாலை, புத்தூர்,

திருச்சிராப்பள்ளி – 620 017.

வரலாறு இதழுக்கு வாழ்த்துக்கள்

திருமுருகன் மருந்துக்கடை
&
மகாலட்சுமி நிதிநிறுவனம்

18/1, கீழச்சத்திரம் சாலை,
தென்னூர், திருச்சிராப்பள்ளி – 620 017.

தொலைபேசி: 41626 நிறுவனத் தோற்றம்: 1892

நம்பிக்கை நாணயத்திற்குச் சிறந்த இடம்
தங்கமெடல் பரிசு பெற்ற நூற்றாண்டு விழாக் கடை

T.K. வீராசாமி நாயுடு
ஆப்டிகல்ஸ்

25 - A/2 மேலப்புதூர், திருச்சிராப்பள்ளி – 620 001.

எங்களிடம் எல்லாவிதமான கண் கண்ணாடிகளும், பிரேம் மற்றும் வெளிநாட்டுக் கண்ணாடிகளும் கண் மருத்துவர் சீட்டுக்கு ஏற்றபடி நல்ல முறையில் செய்துதரப்படும்.

நல்வாழ்த்துக்கள்

தொலைபேசி
அலுவலகம்: 31525
29355
தொழிலகம்: 622301

தரம், எண்ணிக்கை, அளவு

இவைகளைக் கருத்தில் கொண்டு
செங்கல் உற்பத்தி செய்து விநியோகிப்பது

ஸ்ரீ லெக்ஷ்மி செங்கல்
தொழிற்சாலை

டி–331, ஐந்தாவது குறுக்கு,
அண்ணா நகர் மேற்கு, தென்னூர்,
திருச்சிராப்பள்ளி – 620 017.

With Best Compliments From

Ph : 25986

Fax : 0091431 - 468688

❀

SHREE AKILA NURSING HOME

★ KIDNEY MEDICAL CENTRE

★ RESEARCH CENTRE FOR

HYPERTENSION

&

BONE MARROW TRANSPLANTATION

SALAI ROAD, THIRUCHIRAPALLI - 620 018.

Sri Maheswari Finance Corporation
Sri Nathan Finance &
NATHAN CHITS

Phone: 31642

HIGH RATE OF INTEREST FOR FIXED DEPOSITS

நிரந்தர வைப்பு நிதிகளுக்கு		FOR FIXED DEPOSITS	
காலம்	வட்டிவிகிதம்	Period	Rate of interest
கால் டெபாசிட்	12%	Call Deposits	12%
6 மாதங்கள்	15%	6 Months	15%
13 மாதங்கள்	18%	13 Months	18%
நான்கு வருடங்கள்	இரட்டிப்புத் தொகை	Four years	Double the Amount

ஏலச்சீட்டு				AUCTION CHITS			
குரூப்	தவணை	மாதம்	சீட்டுத் தொகை	Group	Instalment	Months	Chit Amount
A	5000	20	100000	A	5000	20	100000
B	2500	20	50000	B	2500	20	50000
C	1250	20	25000	C	1250	20	25000
D	500	20	10000	D	500	20	10000
E	250	20	5000	E	250	20	5000

எங்கள் நிறுவனங்களின் சிறப்பு அம்சங்கள்

1. வைப்பு நிதிகளுக்கு வட்டித்தொகை மாதாமாதம் உங்கள் வீடு தேடி வரும்.
2. ஏலம் எடுத்த மறு நிமிடமே சீட்டுத் தொகையைப் பெற்றுக் கொள்ளலாம்.
3. கடைசி மாதம் முழுத்தொகையும் எவ்விதப் பிடித்தமுமின்றிக் கொடுக்கப்படும்.
4. முதல் மாதமும் ஏலம் உண்டு. 2வது சீட்டைத்தான் கம்பெனி எடுத்துக் கொள்ளும்.
5. கம்பெனி கமிஷன் முதல் 15 மாதங்களுக்கு மட்டுமே 5% கமிஷன்
   16வது மாதம் 4% கமிஷன்
   17வது மாதம் 3% கமிஷன்
   18வது மாதம் 2% கமிஷன்
   19வது மாதம் 1% கமிஷன்
   20வது மாதம் (கடைசி) கமிஷன் இல்லை.
6. ஏலத் தேதிக்குள் சீட்டுப்பணம் செலுத்துபவர்களுக்குத் தவணைத் தொகையில் 1% ஊக்க போனஸாக வழங்கப்படும்.

நல்வாழ்த்துக்கள்

Ph: 701658

BEST SWEETS AND SAVOURIES
IN THE CITY

SRIRAM BHAVAN

VEGETARIAN RESTAURANT
CHINTHAMANI BUS STAND
THIRUCHIRAPALLI - 620 002.

நல்வாழ்த்துக்கள்

✆ 468131, 468582

எஸ்.எஸ். பாண்டியன்

அரிசி மண்டி

தஞ்சாவூர்ச் சாலை,
திருச்சிராப்பள்ளி – 620 008.

நல்வாழ்த்துக்கள்

தொ : 760752

ஸ்ரீமுருகன் மெடிக்கல்ஸ்

125/5, புத்தூர் நெடுஞ்சாலை,

திருச்சிராப்பள்ளி – 620 017.

With Best Compliments From

Off. 760154
Ⓒ Resi. 761596

Dealers for:

- ★ AVM, EXIDE, DAGENITE AUTOMOBILE BATTERIES
- ★ EXIDE FREEDOM BATTERIES
- ★ EXIDE MAINTENANCE FREE BATTERIES
- ★ EXIDE EL SERES STAND BY TUBULAR BATTERIES
- ★ EXIDE LIFE BATTERIES
- ★ UNION MAINTENANCE FREE BATTERIES

ROCKFORT BATTERY SERVICE

3, JAMAL BUILDING,
THILLAINAGAR, THIRUCHIRAPALLI - 620 018.

With Best Compliments From Ph : 701955

M/s. KALKI JEWELLERY

MALAIVASAL

43, CHINNAKKADAI STREET,

THIRUCHIRAPALLI - 620 002.

நல்வாழ்த்துக்கள்

WE ASSIST IN

- ★ PASSPORT
- ★ RENEWAL
- ★ PCC
- ★ NOC
- ★ VISA
- ★ AIR TICKETS

உல்லாசப் பயணங்களுக்கு
சொகுசு வேன் கிடைக்கும்

ஸ்ரீ சக்கரா டிராவல்ஸ்

(நடுவணரசின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்)
147, சூப்பர் பஜார், சிங்காரத்தோப்பு,
திருச்சிராப்பள்ளி – 620 008.

With Best Compliments From Ph: 702485

K. RAVICHANDRAN

Pragathambal Films
45, Babu Road,
Thiruchirapalli - 620 002.

வாழ்த்துக்கள்! தொலைபேசி: 27388

பிரைட் ஆப்டிகல்ஸ்

கண் கண்ணாடி மனை.

(தெப்பக்குளம் எதிர்ப்புறம்)

13, நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலை,

திருச்சிராப்பள்ளி – 620 002.

நல்வாழ்த்துக்கள் தொலைபேசி: 24211

திருச்சி எக்ஸ்ரேஸ்

தெப்பக்குளம் அஞ்சல் நிலையம் அருகில்

மெயின்கார்டுகேட்

திருச்சிராப்பள்ளி – 620 002.

With Best Compliments From Ph : 32749

UNITED LAPAROSCOPIC CENTRE

56, BISHOP ROAD, PUTHUR,

THIRUCHIRAPALLI - 620 017.

நல்வாழ்த்துக்கள்

தொலைபேசி
கடை: 24361
வீடு: 27161

மைசூர், பெங்களூர், பாண்டிச்சேரி
முதலிய நகரங்களில் தயாராகும்
மணம் மிக்க ஊதுபத்திகளை
வாங்கச் சிறந்த இடம்

ப. மூக்கப்பிள்ளை

பல்பொருள் அங்காடி
285, பெரிய கடைவீதி,
திருச்சிராப்பள்ளி - 620 008.

நல்வாழ்த்துக்கள்

தொலைபேசி : 460001

அபிராமி ஹோட்டல்

மத்திய பேருந்து நிலையம்

திருச்சிராப்பள்ளி - 620 001.

ஜோதி பிரிண்டர்ஸ், திருச்சிராப்பள்ளி-2. போன் : 700416.